திணைமாலை செட்டியார்க்கு
திரு செட்டியார் [illegible]

T.D.R.C. 2128
R.R. No. 30-3-1910

DIGITIZED

1211,219, M37
N08
119691

1 30

# Life

30
1910-III

of

## Raja Dharma Pravina

## T. R. A. Thumboo Chetty, C.I.E.

2 JUL 1910
MADRAS

1-2
7 JUL 1910
MADRAS
30 III-1910
2/6

இராஜ தர்மப் பிரவீணரும்,

C. I. E. என்னும் இந்திய இராஜாங்கத்தோழரும்,

மைசூர் சமஸ்தான மந்திரியுமாகிய,

திரிசிரபுரம்-இராயலு-ஆரோக்கியசாமி

# தம்புசெட்டியார் சரித்திரம்.

இஃது

மேற்படி செட்டியாரவர்களின்

இளைய சகோதரரும்,

மைசூர் சீப் கோர்ட் மாஜி அஸிஸ்டண்ட்

ரெஜிஸ்ட்ராருமாகிய

தி. இரா. தனசாமி செட்டியாரால்

எழுதப்பட்டு

சென்னை "ஹோ" அண்ட் கோ, அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

V211,2247M37
N08

-3-
30-III-1910

# முகவுரை.

இராஜ தர்மப் பிரவீண தி. இரா. ஆ. தம்புசெட்டியாரின் சம்பவச்சரிதம், "தம்பு சிந்தாமணி" யென்று பேர்கொண்ட செய்யுட் கிரந்தமூலமாக முன்னரே வெளிப்பட்டுள்ள தானாலும், அது தமிழ்ப்பாஷையிற் பாண்டித்ய மடைந்தோர்க்கன்றி சாமான்ய வித்தியார்த்திகட்குச் செவ்வையாய்ப் புலப்படுவதில்லை யென்று பலர் முறையிட்டு வந்ததை யறிந்து, சிறுவர்முதல் ஸ்திரீ புருஷாள் யாவரும் எளிதில் வாசித்தறியும்படி வெள்ளுரையான வசன நடையில் இச்சரித்திரத்தை யான் எழுதலானேன். அன்றியும் "தம்பு சிந்தாமணி" இயற்றி யச்சிட்டு வெளியாயின பின் நான்குவருஷகாலம் தம்புசெட்டியார் ஜீவந்தராக விருந்தனர். அக்காலத்தில் நடந்த சம்பவங்களும் செட்டியாரின் அந்தியகால வர்த்தமானமும் மேற்படி கிரந்தத்தில் சேராம லிருப்பதாலும், சரித்திரத்தின் முடிவையறிய சகஜமாயாவரும் விரும்புவார்களாதலாலும், இவ்வசனகாவியம் ஆதி தொடங்கி முடிவுவரையில் சம்பவித்த வர்த்தமானங்களைக் கொண்ட பூர்த்தியான வோர் புத்தகமாகக் கையாட உதவுமென்ற நோக்கத்தாலும், இதை யெழுதி அச்சிட்டுப் பிரசுரிக்கத் துணிந்தேன். சகோதர வாஞ்சைகொண்டு எனக்குப் பற்பலநன்மைகளைச் செய்த எனது அருமை சகோதரருக்கு என்னால் செய்யக்கூடுமான கடைசி கடமையாக விச்சரித்திரத்தை என் சக்திக்கியன்ற வரையில் எழுதி முடித்தேன். கல்விமான்களாகிய பெரியோர்கள் இதிலுள்ள பாஷாலங்க்ருதக் குறைகளைப் பாராது, சரித்திரத்தி லடங்கிய விஷயங்களின் அருமையைமட்டும் பாராட்டி இதனை யங்கீகரிக்கும்படி வேண்டுகிறேன்.

தி. இரா. தனசாமி.

922
2128



T. R. A. Thumboo Chetty

2 - JUL 1910
MADRAS.

# தம்பு செட்டியார் சரித்திரம்.

### காப்பு - கலிவிருத்தம்.

தம்பு சம்பவஞ் சாற்றுஞ் சரிதையை
அம்பு வியோ ரறியவ ரைந்திட
உம்பர் போற்று மொருதனி நாதனின்
செம்பொற் றுள்மலர் சென்னியிற் சூட்டுவோம்.

### எழுசீரடி ஆசிரிய விருத்தம்.

பார்முதல் யாவும் படைத்தளித் தழிக்கும் பரமனின் னருளினுற் கல்வி
சீர்முத லாய செல்வமுந் தூய்மை செறிந்தநன் னடையொடு திகழ் மை
சூர்முதல் நாற்பாங் கெல்லையுள் ளோரு மதித்திடு மந்திரியாப் பட்டப்
பேர்முத லாய்ப்பெற் றிலங்கிய தம்பு பெற்றியோன் சரிதையைப் புகல்வாம்.

## CHAPTER I.

## முதல் அதிகாரம்.

**தம்பு ஜெனனம் - பிதா மாதா - உடன்பிறந்தார் - தாய் தந்தையர் பிரிவு - மரணசாதன வேற்பாடு (1837-1851).**

சீருஞ் செல்வமு நிறைந்து செழிப்புற்றோங்கும் சென்னை மாநகரில் 1837-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில், இராஜதர்ம ப்ர வீண திரிபுரம் - இராயலு - ஆரோக்கியசாமி - தம்புசெட்டியார், C. I. E., அவர்கள் ஜெனனமாயினர். இவரது தந்தையார் இராயலு செட்டியார் மதராஸ் பிரஸிடென்ஸி என்னும் இராஜதானிக் குட்பட்ட பூர்வ சோழநாட்டுக்கு முக்கிய நதியாகிய காவிரியாற்று நீர்ப்பாய்ச்சலால் வளமிகுந்த கழனிகளாலும் சோலைகளாலுஞ் சூழ்ப்பட்ட திரிசிராப்பள்ளியில், கௌரிகுலத்தில், தேசாதி மரபில், உதித்து, மிக்க செல்வத்துடன் வளர்ந்து, அங்கு 12 வயதளவிருந்தனர். அதன்பின், சென்னைக் கடற் றுறைச்சுங்கசாலை மானேஜர் (Sea Customs Office Manager) உத்தியோகம் வகித்துச் செல்வவாளராயிருந்த தமது மைத்துனர் ஐயிலுசெட்டியாரிடஞ் சேர்ந்து, அங்கு அவருடைய கண்காணிப்பில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு

பாஷைகளைக் கற்றுத் தேர்ந்து, அக்காலத்தில் வர்த்தக சங்கங்களில் முதன்மையாய்ப் பேரோங்கிநின்ற கிரிபித்ஸ் அண்டு கோ. (Messrs. Griffiths & Co.) என்னும் ஆபீஸில் (Head Book-keeper) முக்கிய சம்பிரதியாயிருந்து சென்னையில் வாழ்ந்தனர். இவர் கண்ணிய முடையவராகவும், நீதிமானாகவும், எல்லோராலு மதிக்கப்பட்ட கல்விமானாகவும், புலவர்களின் புகழ்ப் பாமாலை யணிந்தவராகவும், சுதேசக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களால் மிகவுங் கொண்டாடப் பட்டவராகவும் இருந்து விளங்கினர்.

தம்பு செட்டியாரின் அன்னையார், கித்தேரியம்மாள், தெய்வ பக்தியும் புருஷபக்தியும் நிறைந்த மாது சிரோமணி; பொறுமைக் குணத்தை வகித்த சாந்த சொரூபி; குற்றஞ் செய்யுங் குணயீனர் களுக்குந் தீங்கு நினையாத குணவதி; தன்னை அடுத்த பந்து மித்திரர்களை ஆதரித்து உபசரிக்குந் தயாநிதி; மாமிநாத்திகள் மனமகிழ்ந்து மதித்த மகா உத்தமி. இத்தகை நற்குண நற்செய்கைகளுடைய இந்தப் பெண்மணி, தனது இனிய நாயகனின் மனமாகிய தாமரை யாசனத்தின் மீது வீற்றிருந்து பிரகாசிக்குந் திருமகளை யொத்து, அவருடன் கூடி இல்லறத்தி லொழுகி, ஒன்பது பிள்ளைகளைப் பெற்றனள். முதலைந்து குழந்தைகளும் பெண்மக்களாகவே, தாய் தந்தையர் மிகவும் வருந்திக் கருணா சாகரராகிய கடவுளடி பணிந்து, தங்கள் சந்ததி தழைத்தோங்க, ஒரு ஆண்குழந்தையாகிலும் கடாட்சித்தருள வேண்டுமென்று, பிரார்த்தித்தனர். தங்கள் மன்றாட்டின் பலனை யடைந்தார்கள். அரசலட்சணங்க ளமைந்த ஆண்குழந்தை ஆறாவது பேறாகப்பிறந்தது. இத்தவப்புத்திரனைத் தந்த சர்வதயாபரக்கடவுளுக்கு நன்றியறிந்த தோத்திரங்கள் செலுத்தித், தாய் தந்தையருஞ் சுற்றத்தவர்களு மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். "ஆறாவது ஆணானால் அரசாள்வன்" என்னும் உலகவழக்குச் சொல் இவனில் பலிதமாமென்றுணர்ந்த தாய், இக்குழந்தையைச் சீராட்டிப் பாராட்டிச் செல்வமாய் வளர்த்து வந்தனள்.

தம்புவுக்குப்பின் பிறந்த குழந்தைகள் மூவரில் கடைசியாகிய ஒன்பதாம் பேறாய், 1845-வருடம் மார்ச்சு மாதத்தில், ஓர் ஆண் பிள்ளை பிறந்தது. இவனுக்குத் தனசாமி யென்று பெயரிட்டனர். தம்புவுக்குச் சகோதரனும் துணையாயும் இன்னொரு புத்திரன் பிறந்ததால், தம்புவின் தாய் தந்தையர் பேரானந்தங்கொண்டு, கடவுளைத் தோத்திரித்துத், தங்களுடைய நன்றியறிதலுக் கறிகுறியாகவும் தங்களுக்குண்டாகிய சந்தோஷத்தைக் காட்டவும், கடவுள் திரு அவதாரத் திருநாளை வைபவத்துடன் வருஷந்தோறுங் கொண்டாடுவதென்று நிச்சயித்து, ஏராளமாய்ப் பொருள் செலவ



ழித்துக், திரு அவதாரமலை யொன்று அலங்காரமாய்த் தங்கள் மாளிகையில் அமைத்துத் திருநாளை அதே வருஷம் டிசம்பர் மாதம் ஆரம்பித்துக் கொண்டாடினர். அக்காலத்தில், இராயலு செட்டியாருடைய நண்பரும் வித்வ சிரோமணியுமாய்ச் சென்னையில் விளங்கிய விச்சூர் தாமோதர முதலியார், இத்திரு வைபவத்தின் சிறப்பை வர்ணித்துக் கற்பனை யலங்காரமாய், ஓர் ஓரடிப்பதம் பாடியச்சிட்டு அரங்கேற்றினர்.

கித்தேரியம்மாள் பெற்ற ஒன்பது பிள்ளைகளில், குழந்தைப் பருவத்திலேயே இறந்தவர்கள் போக, நின்றவர்கள் அறுவர். தம்புவின் மூத்த சகோதரிகள் மூவர்; சின்னம்மாயி என்று பேர் கொண்ட இளையசகோதரி ஒருத்தி; மேற் சொன்ன தனசாமியென்னும் இளைய சகோதரன் ஒருவன், மூத்த சகோதரிகளாகிய கோண்டம்மாள், சின்னம்மாள், பெரியம்மாயி, இவர்கள் மூவருக்குந் தக்க மணவாளர்களைத் தெரிந்து தாதை மணஞ்செய்து வைத்தனர்.

தம்புவின் பிதா, தமது ஜெனனதேசமாகிய திரிசிரபுரம் விட்டு வந்து நெடுங்காலமானதால், புதுவை, கூடலூர், தஞ்சை, திரிசிரபுரம், மதுரை முதலிய தென்னாட்டு நகரங்களிலும், அவைகளின் உள்ளூர்களிலும், வசித்திருந்த தமது நெருங்கிய பந்துக்கள் முதலியோரைக்காண அவாவுற்றும், அக்காலத்தில் தமக்கு நேர்ந்த தேக அசௌக்கியத்தை ஆகாயமாற்றத்தால் பரிகரிக்கும் பொருட்டும், ஆறுமாத ரஜாபெற்றுக்கொண்டு, சென்னையிலிருந்த தமது சுற்றத்தார், சிநேகிதர், வேலையாட்கள் முதலிய பரிவாரங்களுடன் தென் திசைநோக்கிப் பிரயாணமாயினர். அக்காலத்தில், ரெயில் மார்க்கமாய்ச் செல்லும் புகைவண்டிகள் கிடையா. ஆகையால் அப்போதைய நடையை யனுசரித்துச், செட்டியாரு மற்றவர்களும், பல்லக்கிலும் எருது வண்டிகளிலுமேறிச் சென்றார்கள். இராயலு செட்டியார் தம்மரபினருக்குள் ஜாதித் தலைமையை வகித்த தேசாதியாகையால், தாம் தங்கிய அந்தந்த ஊர்களிலிருந்த தம்முடைய சுற்றத்தார்களுக்குள் நேர்ந்த குடும்ப விவாதங்களைத் தீர்த்து சமரசப்படுத்தியும், அவர்களில் ஏழைகளாயிருந்தவர்கட் கேற்ற உதவிகள் புரிந்தும் வந்ததுமன்றி, திரிசிரபுரத்திலிருந்த ஏராளமான தமது பிதிரார்ஜித காணியாட்சிகளைத் தம்முடைய தாயாதிகளுக்கே இலவசமாய்ப் பிரதிபலன் பெறாமல் கையளித்துத் தமக் கவைகளிலுள்ள பாத்தியதை யாவும் விட்டுவிட்டனர். இத்தயாளச் செய்கைக்காக இக்காலத்திலும் திரிசிரபுரத்திலுள்ளோர் செட்டியாரைப் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். இப்படியாய் ஆறுமாதகாலஞ் சுற்றுப்

பிரயாணஞ் செய்து சென்னைக்குத் திரும்பிவந்தனர். சென்னை வந்துசேர்ந்த இரண்டு மூன்று வருஷங்களுக்குள், செட்டியாரின் தேக அசௌக்கிய மேலிட்டு எவ்வித சிகிச்சையாலுங் குணப்படாமல், 1851-ம் வருஷம் மே மாதம் முதற்றேதியன்று பரமபதஞ் சென்றனர்.

உடலுமுயிரும் போலும், மலருமணமும் போலுமருவி வாழ்ந்திருந்த தனது பர்த்தாவின் பிரிவாற்றாமையால் வருந்தி நொந்து புலம்பித் துக்கித்த தர்மபத்தினி யிவளுடைய தேகமெலிந்து, பர்த்தா இறந்த பதினாறும் நாள், தனக்கு மாங்கல்ய விசர்ச்சனமாயின அன்றைய தினமே, கபவாதஜ்வர நோய்க் கிலக்கானாள். இந்த நோயினால் ஒன்பது மாதம் பீடிக்கப்பட்டுத் தேக வியோகமாயினள். இந்தப்பதிவிரதாசிரோமணி, தன் நாயகன் தனக்குத்தரித்த மாங்கல்யமிழந்த கோலத்தோடு வீட்டைவிட்டு அப்புறஞ் செல்லவும், இதரர் முகநோக்கவும் வையாமல் தமது சமுகத்துக்கழைத்துக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தபடியே, கடவுள் அவளதுகோரிக்கையை நிறைவேற்றினார். இதுவல்லோ கற்பின்பயன்?—

தம்புவுக்குப் பன்னிரண்டாவது வயது நிரம்புவதற்கு முன், ஜனனகாலத்தில் ஆசீர்வதித்த அன்னையுடன் பிதாவும் பரலோகஞ் சென்றதினால், தம்மைத் தாங்கிக்கொண்டிருந்த பற்றுக்கோடாகிய கொழுகொம்பையிழந்த பூங்கொடி போலத், தம்புவும், அவனிளைய சகோதரியும் சகோதரனும் வருந்தி வாடினார்கள். இவர்களைச் சூழ்ந்த சுற்றத்தார் தம்புவைத்தேற்ற, அவனும் எவ்வுயிரும்வாட்டமடையாமல் இரட்சிக்கும் பராபரன் நம்மையுங்காத்து ஆதரிப்பாரெனத்தெளிந்து, தன் துக்கத்தையுஞ் சோகத்தையும் ஒழித்து, தான் விர்த்தியாகுமார்க்கத்தை நாடினான்.

மக்களைக்காப்பதில் அரணென்று சொல்லத்தக்க சித்தேரியம்மாள் விதித்துவைத்த மரண சாதன வேற்பாட்டின்படி, ஆதினைச் சொத்துக்களைப் பரிபாலனஞ் செய்து நடத்தும்படியாய் நியமித்த ஐந்து பேர்க்குச், சென்னை ஹைகோர்ட்டென்னும் பெரிய நியாயஸ்தலத்து நீதியதிபர்கள் அதிகார மளித்தனர். இந்த ஐந்து விசாரணைகர்த்தருள், தலைமையதிகாரியான பொன்னுசெட்டியார், பிற்காலத்தில், தம்புவின் மாமனாராகிப் பெரிய உறவின் சம்பந்தத்தைப் பெற்றவராயினர்.



# CHAPTER II.

## இரண்டாம் அதிகாரம்.

### பாலபருவம் - கல்விப்பேறு (1842 - 1854).

இளம் பிறைபோல வளர்கின்ற பாலனாகிய தம்புவுக்கு ஐந்தாம் வயது வரவே, இரண்டு கண்களாகிய எண்ணுமெழுத்துங் கொண்டு விளங்கும்படிச் செய்யத் தாய்தந்தையர் கருதினர். இக்காலத்திலுள்ள பாடசாலைகளும், சர்வ கலாசங்கங்களும், அக்காலத்தவர்களுக்கு இருந்தனவல்ல. ஆதலால் தம்பு தெருத்திண்ணைப் பள்ளிக்கூடமொன்றினுக்குத் தன் தாய்ப்பாஷையாகிய தெலுங்கைக் கற்கும்படி யனுப்பப்பட்டான். தெருத்திண்ணைப் பள்ளிக்கூடமுறைமைக்கொத்து ஆசிரியர் முதல் முதலில் யாவருக்கும் ஓதும் குணிதமாகிய நெடுங்கணக்கை யுணர்த்தத், தம்புவும் ஓதி, இதனை வரிவடிவிலெழுதி, மனது தெளியும் பொருட்டு மணல்மீது கைவிரல் நுனியால் எழுதும்போது, இப்பழக்கத்தை வெறுத்து ஆ! ஆ! இது கொடிதெனச் சிவந்த விரல் நுனியைப்பார்த்துப் பார்த்து உள்ள முருகுவான்; முகஞ்சுளிப்பான்; அழுது கண்சிவப்பத் தளர்வான். எழுதுதற்கு இக்காலத்துள்ள கற்பலகைகள் கிடையாத அக்காலத்தில், தாய் தந்தையர் கொடுத்த மரப்பலகையிற் பல[illegible]லைக்கொண்டு, குணித முழுவதும் எழுதுவதில் நேரும் பிரயாசையைச் சகிக்க மாட்டாது சலிப்படைவான். இதுவுமன்றி, இரும்பினாற் செய்த எழுத்தாணியைக் கையிலேந்திப் பனையேட்டில் சு[illegible]ங்கள் எழுத நேர்ந்த விதியை நொந்துகொள்வான். இனிமேல் யான் [illegible]ப் பள்ளிக்கூடத்துக்குச் செல்லேனென்று நறுமுறுப்பான். இவ்வளவு துன்பத்தைத் தொடக்கத்திலே தந்த கல்வி, தன[illegible] அறியாமையை நீக்கி அறிவை விசாலப்படுத்து முறைமையைப் பின்னாளில் தம்பு கண்டு மனமகிழ்ந்தான். தன்னுடன் கல்வி பயின்ற சிறுவர்களெல்லாரிலும், தானே தனது புத்தி கூர்மையாலும் ஜாக்கிரதையாலும் நன்னடையாலும் உபாத்தியாயருடைய அன்புக்கும் விஸ்வாசத்துக்கும் அதிபாத்திரனானான்.

ஆந்திர எழுத்துக்களைச் சந்தேகமறத்தெளிந்து, எழுத்துக்களாலாய சொற்களையுணர்ந்து, படிப்படியாய் வாசகநூல்களும், நீதிமார்க்கத்தையுணர்த்தும் நூல்கள் பலவும் படித்தறிந்தான். உபாத்தியாயரின் நல்லெண்ணத்தைப்பெற்ற தம்பு, நல்ல பிள்ளையாகவே கல்வியிலும் ஒழுக்கத்திலும் நாளுக்கு நாள் அதிகமதிகமாக விளங்கிவந்தனன். தனது இளமையிலே படித்த ஏடுகள் பலவேயாயினும்,

அவைகளில் தம்புவுக்குப் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமிர்தமாயிருந்தது வேமனசதகம் ஒன்றே. இவன் நல்ல ஞாபக சக்தியுடையவனாதலால், தான் கற்ற நூல்களையுங் கவிகளையு மறவாமல் மனதிலிருத்தி எந்த வேளையில் எவர் கேட்டபோதிலும் பாராயணஞ்செய்த நூல்முழுதுங் கேட்போர் மகிழ்ந்து வாழ்த்தும்படிச் சந்தவோசையுடன் சொல்லுவான். வேதாகமத்தில் சலமோன் போதிக்கும் பழமொழிகளும், வேமனயோகி இயற்றியருளிய வேமன சதகத்தின் பத்தியங்கள் முழுது மனப்பாடமாயொப்பிப்பான். சலமோனின் நீதியொழுக்க ஞான பொக்கிஷத்தைத் தன் மனதில் பொருந்தவைத்து, வீட்டில், வேதமந்திரங்கள், கற்பனைகள், ஞானோபதேச முதலியவை கற்றுப் பாராயணஞ் செய்யுந்தோறும், அவைகளைச்சிரவணஞ்செய்து, அவைகள் கற்பிக்கும்வழியே நடக்கமுயலுவான். இளமையிலேயே, தேவதாபக்தி, நீதிநெறி, சன்மார்க்கஞானம் உண்டாகப்பழகிய பழக்கமானது, பாலசந்திரனிடத்திற் கூடுகின்ற வளர்ச்சிபோல் வளர்ந்து, தம்புவினிடத்தில் பிரகாசித்து வந்ததால், இவனை உலகத்தவர் பலபேர் புகழ்ந்தார்கள்; இவனது பிதா நடுவு நிலைமையுடையவரென்று கூறி, இல்லொழுக்கப்பயிற்சியை மிகவும் வியந்து பாராட்டினார்கள்.

மேற்படி தெருத்திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே தாய்ப்பாஷையாகிய ஆந்திரபாஷையோடு இனிய தமிழ்ப்பாஷையைக் கற்க விருப்பமுற்று, அதையுங் கற்றுக்கொண்ட பின்பு, ஆங்கில பாஷையுங் கற்கவேண்டுமென்னுங்கருத்து தம்புவுக்குண்டாகியது. அதனைக் கண்டபெரியோர், அவனது குடும்பப்பாதுகாப்புக்கென வைத்திருந்த பிதிரார்ஜித நிதியினின்று, ஆங்கில வித்தையைக் கற்கச்செல்லும் பொருளை அவ்வித்தைக்காக உபயோகிக்க வகுத்துவைத்தனர்.

ஆந்திரமுந் தமிழுங்கற்ற பள்ளிக்கூடத்தை விட்டு, இப்போது (Christian College) கிறிஸ்டியன் காலேஜ் என்று வழங்கும் ப்ரீசர்ச் மிஷன் கலாசாலையைத் தம்பு அடைந்தான். இந்த வித்தியாசாலையைச் சென்னபட்டணத்தில் முதலில் ஸ்தாபித்தவர்கள் ரெவரெண்ட் ஜான் ஆண்டர்சன் (Rev. John Anderson) ரெவரெண்ட் ஜான்சன் (Rev. Johnson) ரெவரெண்ட் பிரெட்யிட்வூட் (Rev. J. Braidwood, M.A.) என்னும் இம்மூவர். இவர்களுக்கு உதவியாக ரெவரெண்ட் வேங்கடராமய்யா, ரெவரெண்ட் இராஜகோபால், ரெவரெண்ட் எதிராஜலு, என்னும் மூன்று சுதேச மிஷனெரிகள் சேர்ந்து, இக்கலாசாலையின் மாணுக்கர்களுக்குக் கல்வியைத் திறமையாய்ப் போதித்து, மாணுக்கருக்கும் வித்தியாசாலைக்கும் நல்ல விளக்கத்தை உண்டு பண்ணினார்கள். இவர்கள் தம்புவின்மேல்



நோக்கம்வைத்து இவன் வித்தியாபிவிர்த்தியை மிக்க கவனத்துடன் விசாரித்து வந்தார்கள்.

அக்காலத்தில், பொழிப்புரையும், பதவுரையும், விருத்தியுரையும் பொருந்த அச்சிற்பதிப்பித்த நூல்கள் வெளிப்படாதிருந்தமையால், மாணுக்கர்கள், பாடநூல்களின் நுட்பமான பொருள்களைத் தாமே பிரயாசைப்பட்டு ஆராய்ந்தறிந்து உணர்ந்த பயிற்சியால், விவேகத்தில் வளர்ந்துதேறினார்கள். பகற்காலத்தில் இக்கல்விச்சாலையில் தம்பு கல்வி கற்றுவந்ததல்லாது, தனது வாசஸ்தானத்திற்குச் சமீபமான ஒருவீதியில் வசித்த அக்கலாசாலை ஆசிரியரொருவருடைய உதவி பெற்றுத் தினந்தோறுங் காலையிலும் மாலையிலும் பாடப் புத்தகங்களை நன்றாகப்படித்துப் பள்ளிக்கூடத்தேயன்றி வீட்டிலேயுந் தெளிவடையக்கூடிய லாபங்களைப் பெற்றான். கல்விச் சாலைக்குப் போக வேண்டிய காலந்தவறுமற்போய், முயற்சிப் பிடிவாதத்துடன் கலா ஞானபாடங்களை ஒருமையுடன் கற்றுணர்ந்து வந்தான். திருத்தமோடு வார்த்தைகளைத் தெளிவாக உச்சரித்திடவும், முற்றுப்புள்ளி முதலிய குறிப்புகளைக் கவனித்து ஒழுங்காய் வாசிப்பதிலு மனஞ் செலுத்துவான். பதவுச்சரிப்பில் சந்தேக முண்டானால், வாக்கர் (Walker) துரை வகுத்த உச்சாரண அகராதி வழுத்து முறையைப் பார்ப்பான்; அதிலும் சந்தேகம் நீங்காதெனில், ஜான்ஸன் (Johnson) அகராதியை ஆராய்ந்து அப்பதத்தின் சரியான உச்சரிப்பையும் அதன் பொருளையும் அறிந்து தெளிவான். யாவரும் பிரயாசையின்றிப் படிக்கும் வகையாய்த் தன் கையெழுத்தை நன்றாக வரிகோணாமல் எழுதும்படி கவனஞ் செலுத்தி வருவான்.

தம்பு மாணுக்கனாகப் பிரகாசித்த நாளில், மர்ரே (Murray) லென்னி (Lennie) என்பவர்களாற் செய்யப்பட்ட இலக்கணங்கள் அவற்றின் பயிற்சி திறவுகோலுடன் கற்பிக்கப்பட்டதனால் அவைகளைத் தான் கற்றதல்லாது, ஆங்கிலப்பதங்களுக்கு லத்தீன் கிரேக்கு பாஷைகளின் தாதுக்களை யுணர்த்துகின்ற ஒரு சிறு நூலைப்படித்துத் தன்னுள்ளத்திலிருக்க வைப்பான். இலக்கண நூல்களைக் கற்ற பின்பு, காம்பெல் (Campbell) என்பவராற் செய்யப்பட்ட அலங்கார நூலையும், டாக்டர் வாட்ஸ் (Dr. Watts) செய்த தருக்க விலக்கண நூலையுங்கற்று, கணித முழுதுங் கற்பதற்கு வழிகாட்டுவதாகிய போனிகாசில் (Bonnycastle) என்பவர் செய்த கணித நூலையும், (Simson) சிம்சன் செய்த இரேகா கணித நூலையும், சிம்சன் என்பவர் செய்தருளிய க்ஷேத்திர கணிதமும், அன்றியும், அளவுநூல் என்னப்படும் (Mensuration) மென்சுரேஷனுக்கு போனிகாசில் (Bonnycastle) என்பவர் எழுதிய பாயிரமும், அநுபவக்ஷேத்திர

கணிதமும், ஆகிய இவை மூன்றும், முற்காலத்தில் மிக்க மேன்மை யடைந்திருந்தமையால், இவற்றைத் தம்பு மிகவும் விரும்பிக் கற்றான்.

அந்நாளில் வித்தியார்த்திகள் கைகளில் விளங்கிய நூல்கள் கிளிப்ட் (Clift) என்பவர் செய்த பூகோள நூலும் (Bonnyastle), போனிகாசில் அருளிய ககோள சாஸ்திரமுமாம். அவைகளைத் தம்பு நன்றாய்ப் படித்தறிந்தான். அன்றியும் மார்ஷ்மன் (Marshman) செய்த பொது தேசசரித்திரமும், கோல்டஸ்மித் (Goldsmith) செய்த உரோமாபுரி சரித்திரமும், மொர்ரெல் (Morrell) என்பவர் செய்த கிரீஸ், உரோம், இங்கிலாந்தின்சரித்திரமும், மக்காலே, (Maccaulay) மர்ரே (Murray), டிட்லர் (Tytler), ஆகிய மூவரும் செய்த தேச சரித்திரங்களையும், உரோமாபுரியை யாண்ட ஜூலியஸ்ஸீஸர் (Julius Caesar) முதலிய பன்னிரண்டு சக்ரவர்த்திகளின் வாழ்நாளிற் றோன்றிய சரித்திரத்தையும், இயற்கையிலுள்ள தாபரசங்கமப் பொருட் குணகுணங்களை யெடுத்துக்கூறும் பதார்த்த ஞானத்தை விளக்கும் சாத்திரத்தையும், தம்பு படித்துணர்ந்தான். அதனால் முற்கால பிற்கால சரித்திரங்களின் பொதுஞானம் தன்னிடத்தில் விளங்கப் பெற்றுக்கொண்டான்.

பூமியினிடத்தும், நீருடனே அக்கினி காற்று ஆகாசமாகிய பஞ்சபூதங்களிடத்தும், மலைகளிடத்தும், பூஞ்சோலை களிடத்தும் பொருந்திய இயற்கை யழகையும், செயற்கையழகினையும், பிறவளங்களையும் வியந்து பலர் சரித்திரங்களைப் பாடி, அப்பாடல்களிலே தங்கள் உச்சிதக் கருத்தை யமைத்த ஷேக்ஸ்பியர் (Shakespear) மில்டன் (Milton) முதலிய கீர்த்தி பெற்ற பாவலோர் பாடிய காவியங்கள் பலபடித்து, அவைகளின் சொற்சுவையும் பொருட்சுவையும் நன்றாய் மனதிற் பதிய வைத்தான். க்ஷேத்திர கணித சாஸ்திரத்தில் வல்லவனாய்த் தன் வகுப்பில் எப்படிப்பட்டவர்க்கு முன்பாகத் தானிருந்தான். இதுவுமன்றி, வாரந்தோறும், மாதந்தோறும், செய்யப்படும் பரிட்சைகளிலும், கல்விகற்கும் மாணுக்கர்களின் அறிவு வளரும்படிச் செய்யப்படுகிற தருக்கசபையிலும், தம்பு, முதல்வனாக நின்றுவிளங்கினன். இந்தப் பிரகாரம் எட்டுவருஷம் வித்தியாசாலையில் நல்லொழுக்கத்துடன் தம்பு அமைந்திருந்தனன்.

இவ்வித்தியாசாலையின் போதகர்கள், மாணுக்கர்களுக்கு விவிதிய கலைஞானத்தையும் படிப்பித்தார்கள். கிறிஸ்து வேதத்துக்குடைய இத்திவ்விய நூலிலடங்கிய பழய ஆகமத்திற்கும் புதிய ஆகமத்திற்கும் பெரியோர் செய்துள்ள விரித்தியுரையிற் பொலிந்த



ஞானச்சுவை பொருந்திய பயனிறைந்த உணர்வைத் தம்பு தன் மனத்திற் பதியவைத்தான். அன்றியும், வீட்டில் தனக்கவகாசமான நேரங்களில் ராபின்ஸன் குருசோ (Robinson Crusoe) வென்னும் சரிதத்தையும், சீனக்கதை, அராபிக்கதை, பெரூவியன் விநோதக்கதை முதலியவைகளோடு, பனியன் (Bunnyan) செய்த பரலோக யாத்திரைக் (Pilgrim's Progress) கதையையும் மிக்க மகிழ்வோடு வாசிப்பான். தெலிமாகஸ் (Telemachus) கற்பனைக்கதையையும், கார்டினல் வொயிஸ்மன் (Cardinal Wiseman) செய்த தர்க்கவாதப் பிரசங்கங்களையும், யோசபாஸ் (Josephus) செய்த யூத சரித்திரத்தையும் படித்துணர்வான். சிறந்த ஜில்பிளாஸ் (Gilblas), பெலிசாரியஸ் (Belisarius), கதைகளையும் விரும்பிப் படிப்பான். பலதேச சரித்திரங்கள் மூன்றுகாலங்களின் நிலைமைகளை யறிவிக்கும் சாட்சியென்றும், சொல்லப்பட்ட உண்மை விளக்க மென்றும், ஞாபகத்திற்குப் பிராணனென்றும், வாழ் நாட்களின் வித்தியாசாலையென்றும், கிரேக்கு வித்வசிரோமணியான ஸிஸரோ (Cicero) பகர்ந்த அநுபவ வாக்கியத்தைத் தெளிந்தறிந்த தம்பு, பெருமைமிக்க ராபர்ட்சன் (Robertson) எழுதிய தேசசரித்திரக் கோவைகளையும் விரும்பிக்கற்று, ஆங்கில பாஷா நூற்கடலில் நீந்தி, அமுதத்தையுண்டு, அறிவோங்கிப்; பூரண சந்திரனை யொப்ப விளங்கினான்.

இவ்விதமாய் இளமைப் பருவத்தில் முழு மதியைப்போலப் பிரகாசித்த தம்புவின் பெருமையைத் தோழர்கள் கண்டு மகிழ்ந்தார்கள். அவனைப் புகழ்ந்தார்கள். இவனோ இறுமாப்புக்கிடங்கொடாமல் அடக்கத்தை யாபரணமாய்க் கொண்டு, தருமமும் வணக்கமுமே ஒருவனைப் பெருமைப்படுத்து மென்னும் அறிவினால், தான் என்னும் அகந்தை நீங்கியிருந்தனன்.

1854-ம் ஆண்டில், கலாசாலையை விட்டுத் தம்பு நீங்குவதற்கு முன், கலைஞானங்களை யாராய்ந்தறிந்த வித்தையினிறைவினால் முதல்வனாகப் புகழப்பட்டு, அக்காலத்தில் நடந்த வருஷாந்தரப்பரிட்சையில், அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்த சென்னை இராஜதானியின் கவர்னராது கரத்தால், வெகுமதியளிக்கப் பெற்றான்.

கல்விவளம் பெற்ற அந்நாளில், தம்பு அழகினையுடைய வாலிபனாயும், தன்பால் வந்து சேர்கின்ற தோழர்களுக்குச் சிரேஷ்டமிகுந்த தோழனாயும், களங்கமில்லாத யோக்கியதை நிறைந்த சுந்தர முகம் படைத்த அரசகுமாரன் போலவும், காணப்பட்டனன். எத்தகைய நுண்பொருளையும் எளிதாக வுணர்கின்ற சூக்கும புத்தியும், ஞாபகச் சக்தியு முடையவனாய் விளங்கினன். தம்பு வித்தியாசாலை

யை விட்டு நீங்கியபோது வயதினாற் சிறியவனேயாயினும், விவேகத்தினால் பெரியதேரைச் செலுத்தத்தக்க அச்சாணிபோல விளங்கினான்.

பொதுவான காரியங்களில் அநீதியான நடத்தையைத் தம்பு காணுந்தோறுங் கண்டனஞ் செய்வதிற் கருத்துற்று, யாவரும் விரும்பி யேற்றுக் கொள்ளத்தக்கதான விஷயதானங்களை ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு வழங்குவான். வளர்பிறை (The Crescent), உதயபானு (Rising Sun), பிரசித்தஞ் செய்வோன் (Circulator), பொது விர்த்தாந்த விளம்பரஞ் செய்வோன் (The General Advertiser), என்று அக்காலத்தில் விளங்கிய நான்கு பத்திரிகைகளுக்கு, ஆங்கிலபாஷையில் முக்கியக் குறிப்புகளும் விஷயங்களும் (Notes and Articles) எழுதிக்கொடுப்பான். சுகாதார (Sanitation) வழியின் மேன்மையும், அதனைக் காக்கத்தக்கவர்களான அதிகாரஸ்தர்கள் தங்கள் கடமையைச் செய்யாததால் ஜனங்களுக்கு நேரிடுகிற சுகவீனத்தையுந் துன்பத்தையும் எடுத்துக் காட்டுவான். கல்வியானது யாவருக்கும் கண்ணாவதென்று கற்றமேலோர் பொதுவாக உரைத்துள்ளதை உணராதவர்களாய்க், கல்வி ஆண்மக்களுக்கே பொருத்தமுடையதெனத் தாங்கள்மாத்திரங் கற்றுப், பெண்மக்களை மடமைஸ்திதியில் வைப்பது தகாதென்று பல நியாயங்களால் எடுத்துக்காட்டி, அறிவூட்டும் நிருபங்களை யெழுதிப் பிரசுரப்படுத்தி மாதர்களுக்கு உபகாரியாய் நின்றான். பூர்வகாலத்தில், ஆரியாவர்த்த பூமியில் முளைத்து வுருவுகொண்டுயர்ந்து, பரதகண்டதேசங்களெல்லாந் தழைத்துப், புருடர்களுக்குப் பெண்சாதிகளாகும் பருவமும் பெண்களுக்குக் கணவர்களாகும் பருவமும் இல்லாத மக்களை வளைத்துக்கொண்டு, அவர்கள் வீரியத்தைக் குலைத்துத் தீங்கு விளைவிக்கும் பாலவிவாகத்தைத் தம்பு வெறுப்பான். முதற் பருவமாகிய பேதைப் பருவத்தினையுடைய சிறு பெண்கள், தமது விளையாட்டுக் கருவிகளென விரும்பிய பொம்மைகட்குக் கல்யாணஞ் செய்யும் அறிவின்மையை யொக்குமென்று இகழ்ச்சி கூற, மனிதர்கள் தமது மக்கட்குப் பாலியவிவாகத்தை நடத்துதலானது, அவர்களை வேதனையாகிய கடலில் வீழ்த்துகின்ற தொழிலாகுமென்று இகழ்வான். இளம்பிராயத்தில் வைதவ்வியம் அடைந்த மாதர்கள் படுந்துன்பம் இவ்வளவென்று சொல்லி முடியாததாகும் பாலவிவாகத்தினுங் கொடியது வேறியாது என்று மனமடிவான். மாங்கல்ய மிழந்த இளம்பெண்களைக் காணும்படி நேர்கின்றபோது, தம்பு, உள்ளம் பதைபதைத்துத் துக்கிப்பான். இத்தகைய பாலவிவாகத்தீங்கு என்று நீங்க யான் காண்பேனென்று நினைப்பான்; தனதுதோழரோடும் இதைப்பேசுவான். பாலவிவாகத்தால்



விளையுங்கெடுதிகளை நியாயத்தா லெடுத்துக்காட்டிப் பத்திரிகைகளைக் கொண்டு பிரசித்தப்படுத்தி, அவ்விவாகம் நடைபெறாது தடுக்க முயலுங்களென்று கூறுவான். எல்லா வருணத்தார்க்கும் பொதுவான கல்வியை வழங்க வெளிவந்த லோகோபகாரிகள், சில வருணத்தாரை மட்டுங் கல்வி பெறக்கூடாதவர்களாய் நிர்ப்பந்தஞ் செய்யும் நடை தகாதென்றும், உலகநீதிக்குப் பொருந்தாதென்றும், ஜாதியால் அல்லது மதத்தால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று சொல்லப்பட்ட பேதத்தை நீக்கிக் கல்வியைக்கற்க விரும்பும் எல்லோர்க்கும் பயனுண்டாகும் படிச்செய்யும் கல்விச்சாலைகள் நாட்டினுக்கு இதம்புரிந்து வெற்றியை யடையுமென்றும், சபைகளில் வாதிப்பான். பலபத்திரிகைகளுக்கும் எழுதித் தன்கருத்தை யறிவிப்பான். சுகாதாரவழிப்பாடுகள், பெண்கல்வி, பாலவிவாக மறுப்பு, பஞ்சமர்களுக்குக் கல்விச்சாலை முதலியவைகள், இந்நாட்டில் அதிகமாகத் தழையச் செய்வித்தல் வேண்டுமென, இளம்பருவத்திலேயே தம்பு கருதிய பரோபகாரக்கருத்து, தனது பிற்காலத்தில் முடிவுறக் கண்டனன்.

இந்நாட்டில் பிரசுரமாகும் இங்கிலீஷ் பத்திரிகைகள் பல படித்து வந்ததோடு, இங்கிலாந்தில் பிரசுரிக்கப்படும் உதாரணப் படங்களுடன் விவரிக்கும் லண்டன் சமாசாரப்பத்திரிகை (The Illustrated London News), டப்ளின் பட்டணத்தின் விவேசனி (The Dublin Review), விளக்கு என்னும் (The Lamp) பத்திரிகையும், குடும்பக் கட்டியக்காரன் என்னும் பெயருடைய (The Family Herald) பத்திரிகையும், தம்பு வாசித்து, இரண்டுதேசப் பத்திரிகைகளில் பாஷை நடையாலும் கருத்தாலுமுள்ள பேதாபேதங்களை யுணர்ந்து, தனக்குள்ள அபிப்பிராயத்தைத் தனது தோழனாகிய கொண்டசாமிக்கு, 1851-ம் வருடம் மார்ச்சு மாதம் முதற்றேதியில், எழுதிய கடிதத்தால் வெளியிட்டான். அக்கடிதம் வருமாறு :—

“நேசனே! இங்கிலாந்து தேசத்தில் ஒருவன் மற்றொருவனைச் சைகையால் அவமதிப்பானாயினும், அவமதிக்கப் பட்டவன் அதனைப் பொறுக்கமாட்டான். இந்து தேசத்தில் உலாவுகின்ற சில விர்த்தாந்தப் பத்திரிகைகள் கொடிய தூஷணை வார்த்தைகளால் வைது சீர்திருத்தமுள்ள வார்த்தைகளுக்கும் நியாயங்களுக்கும் இரண்டகஞ் செய்கின்றன. இது கலிகால மகிமையோ அறியேன்! வலிவுடைய வாதங்களைக்கொண்டு நிறையவேண்டிய பத்திரிகையின் இடங்களை வன்மொழிகள் நிறைந்த தூஷணைங்கள் கவர்ந்து கொண்டன. ஐயோ! பொது நன்மையைக் குறித்த முக்கியமான காரியங்களை நினைந்து பத்திராதியர்கள் பேசுமிடங்களில், தாம் எடுத்துப் பேசப்புகும் விஷயங்கட்குப் போதுமான பேரறிவும் வாதவலிவும் தங்களில் இல்லாமையையே அப்பத்திரிகைகள் வெளியிடுகின்றன. மேலும், இந்தியாவில் பத்திரிகையின் விலை மிகவுமெளிது. பொருள் அதிகம் படைத்திராதவர்களும் கொஞ்சம் அச்செழுத்துக்களையும்

ஒரு யந்திரத்தையும் சம்பாதித்து அவைகளைக்கொண்டு ஒரு பத்திரிகையை நடத்தி லாபத்தைப் பெறுகிறார்கள். ஒரு பத்திரிகையைத் தக்கவிதத்தில் நடத்தி எல்லோருடைய மதிப்பையும் நம்பிக்கையையும் அடைதற்கு அநேக சீர்திருத்தங்கள் அவசியமாயிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட மதிப்பும் நம்பிக்கையுமே பத்திரிகையைத்தாங்கி நிலைநிற்கச்செய்யு மூலைக்கல்லென்னலாம்."

—※※※—

# CHAPTER III.

## மூன்றும் அதிகாரம்.

### உத்தியோகமுயற்சி - கிரிபிந்ஸ் அண்ட் கோ வென்னும் அவுஸ்-குவார்டர் மாஸ்டர் ஜெனரல் உத்தியோகசாலை (Quarter Master General's Office)—(1854 - 1859).

கல்வியைக்கற்க வேண்டிய காலத்தை முடித்தபின்பு, உயிர் வாழும் பொருட்டு, எந்தத் தொழிலிற் பிரவேசிக்கலாமென்று யோசித்து மனத்தடுமாற்றமுற்றிருக்குங்கால், பிராஞ்சு லத்தீன் பாஷைகளைச் சிறிது கற்று உணர்ச்சியால், புதுவையிலுள்ள மடத்திற் சேர்ந்து குருப்பட்டம் பெறலாமென்னும் ஆசை தம்புசெட்டியாருக்குண்டாகியது. இவர் இவ்வண்ணம் நினைந்து மனமகிழ்ச்சி கொண்டபோது, இவருக்கு முக்கிய காவலராயிருந்த பொன்னு செட்டியார், தாம் பெற்ற முதற்பெண்ணை இவருக்குக் கல்யாணஞ் செய்துக் கொடுக்க வேண்டுமென்னும் விருப்பத்தை யுடையவராயிருக்கிறாரென்று அறிந்து மனமயங்கி, ஒன்றும் நினையாதவராயினார். தம்மனதிற் பட்ட மயக்கத்தை நீக்கும்படி நெடுநேரம் பல விஷயங்களையும் நினைந்தாச்செய்யத்தக்கதின்னதென்று தேர்ந்தறியாதவராகித் தமது ஆத்தும குருவும் தவச்சிரேஷ்டருமாகிய பீலிக்ஸ் பெர்னாண்டிஸ், (Rev. Father Felix Fernandez) என்னும் பாக்கியநாதஸ்வாமிகளிடம் அண்டி அவருடைய ஆலோசனையைக் கேட்க, அவர் களங்கநீங்கச்சொல்லிய சில புத்திமதிகளைக் கொண்டு, தம் மனதிற்கொண்ட குருத்தொழில் பூண்பதாகிய நினைவினைத் தம்பு செட்டியார் விட்டுவிட்டனர். பரமபிதாவாகிய கடவுளின் திருவருள் எந்த மார்க்கத்தில் தம்மை நடத்தும்படி எண்ணியதோ, அதுவே தமக்குக் கைகூடுமென்று நம்பி, எண்ணிய கல்யாண காரியமானது உண்டாக்கிய நினைப்பைப் பின்னாளில் யோசிப்போமென நிறுத்திவிட்டுத், தமது தகப்பனார் முக்கிய சம்பிரதி (Head - Book-keeper) யாக விருந்து கீர்த்திபெற்ற விடமாகிய (Griffiths & Co.) என்னும் அவுசில், 1854-ம் ஆண்டில் சேர்ந்து, வர்த்தகத்தொழிலிற் பயிற்சியுறத் தொடங்கினர். அங்கு, தமது பிதாவைப்போல், தம்பு



செட்டியாரும் கையெழுத்திலும் கணக்கிலும் வல்லமையுள்ளோரென்று பேர்கொண்டு நின்று, வர்த்தகசங்கத் தெஜமானர்களின் மதிப்புக்குரியவரானார். ஒரு வருஷத்தில் வர்த்தகர்க்குரிய வேலைகளை நன்றாய்க் கற்றுக்கொண்டு, வியாபார உளவுகளிலும் அதற்குரிய கணக்கு முறைகளிலுந் தேர்ந்தவரானார். ஆனால் இவ்வர்த்தகசங்கத்து உத்தியோகத்தில் தம்புசெட்டியார் நெடுநாள் இருக்கவில்லை.

1855-ம் வருடம் டிசம்பர் மாதத்தில், இராணுவமிருக்குந் தலங்கட்கெல்லாம் பெரிய அதிகாரியாகிய குவார்டர் மாஸ்டர் ஜெனரல் (Quartermaster-General's Office) உத்தியோக சாலையில் மூன்று ரைட்டர்கள் வேலையை விட்டு நீங்கினார்கள். இம்மூன்றிடங்களுக்கு மூன்றுபேர் தேவையெனச்செய்த விளம்பரத்தைக் கண்ட மாணாக்கர்களில் 150 பேர் விண்ணப்பஞ் செய்தார்கள். இவர்களில் தம்பு செட்டியாரும் ஒருவர். இவர்களில் தகுதி யுடையவர்களைக் கண்டெடுக்க அதிகாரிகள் செய்த போட்டிப் பரீட்சையில் Precis-writing என்னும் அடக்கப் பொருளைச் சங்கிரகமாக எழுதுவதிலும், ஒருவர் சொல்லக்கேட்டு வாசக நடையெழுதுவதிலும், தம்பு செட்டியார் மற்றவர்களுக்கு மேலாக நின்றதனால், அம்மூன்று வேலைகளில் அதிகச்சம்பளமுள்ள உத்தியோகம் இவருக்கே கொடுக்கப்பட்டது. இந்த உத்தியோகத்திற் பிரவேசித்த பின், தமது வேலைத்திறமையாலும் ஒழுக்கத்தாலும் உத்தியோகசாலையின் அதிபர்கள் மனதைச் சந்தோஷிப்பிக்கச்செய்து அவர்கள் மதிக்கத்தக்கவராயினதால், நான்கு வருஷத்தில் படிப்படியாய் மேலேறி அவ்வாபீஸ்மானேஜருக்கு இரண்டாவதான பெருத்த உத்தரவாதமுள்ள வேலையைப் பெற்றனர். இவர் திறமையை யறிவிக்கும் நற்சாட்சிப்பத்திரங்கள் எஜமானர்களால் கொடுக்கப்பட்டன. இவைகள் தம்பு செட்டியாரைப் பின்னாளில் அதிக உயர்ந்த அந்தஸ்துக்குக் கொண்டுவருவதற்குக் காரணமாயின. கர்னல் ரீட் (Col. F. Read) என்பவர் கொடுத்த சாட்சிப் பத்திரத்தில், "விஸ்தாரமாகக் கல்வி கற்றிருக்கிறான்; உயர்பதவியடையப் பாத்திரன்;" என்று எழுதினார். ஜெனரல் ஸ்காட் (General Scott) துரை "மிஸ்டர் தம்பு செட்டிக்கு உத்தியோகசாலையில் கொடுக்கப்படாதிருந்த வேலை யொன்றுமில்லை, அவர் அவற்றை நன்றாகச் செய்யாதிருந்ததுமில்லை;" என்றார். இதே ஸ்காட் துரை 1866-வது ஆண்டில் இங்கிலாந்துக்குப் போகு முன்னர் தம்பு செட்டியாருக் கெழுதிய ஒரு கடிதத்தில்,

"எல்லாக்காரிய சித்தியும் உமக்குண்டாக யான் மனப்பூர்வமாக விரும்புகின்றேன். நான் இந்த வருஷக்கடையில் என் ஜெனன தேசத்திற்குச்

செல்ல நேரிடுமென நினைக்கிறேன். நானெத்தன ஊழியத்தில் நான் பார்த்தவர்களுக்குள் நீர் மிகவும் சிறந்த ஆண் மகன் என உம்மை நினைத்திருப்பேன். நீர் இப்போதுள்ள நிலைமை நீங்காமல் ஆரம்பமுதலிருப்பது போல இருப்பீரானல், ஒரு சுதேசி எவ்வளவு உயர்வடையக் கூடுமோ அவ்வளவு நீரும் உயர்வடைகுவீர்."

என்று வரைந்தனர்.

காப்டன் சுல்டாம் (Captain J. A. Shuldam) எழுதித் தந்த பத்திரத்தில்,

"இச்சாலை (Office) யில் உள்ள உத்தியோகஸ்தர்கள் யாருக்காயினும் நற்சாட்சிப் பத்திரங்கொடுத்து நீதி செய்யும் மேன்மையை நான் அடைவேனாகில், தம்பு செட்டியினுடைய வல்லமையையும் நம்பிக்கையும் உபயோகத்தையும் பற்றி நான் கொண்டமேலான அபிப்பிராயத்தையும், உத்தியோகசாலையில் அபாராமாய்க்குவிந்து பாக்கியாயிருந்த வேலைகளை யெல்லாம் சலிப்படையாத முயற்சியோடுந் தவிப்பில்லாப் பிரயாசையோடும் உழைத்துச் சொற்ப காலத்தில் முடித்த சாதுரியத்தையும், தேகவன்மை கொண்டு சலியாதுழைப்பதிலும் புத்தி கூர்மையிலும் மேன்மை படைத்திருப்பதையும், உத்தியோகசாலைக்குரிய எத்தரத்து வேலைகளையுஞ் செய்யக் கொண்டிருக்குந் திறத்தையும், நன்றாக ஞாபக சாதனப் பத்திரத்தில் நான் பதிப்பேன்."

என்று கூறினர். இவ்விதமாய்த் தம்மைப்பற்றி எழுதிய எஜமானர்களை அன்போடும் நன்றியறிதலோடும் எப்போதும் தம்பு செட்டியார் தம்மனதில் வைத்திருந்தனர்.

—✻✻✻—

# CHAPTER IV.

## நான்காம் அதிகாரம்.

### திருமணப்பேறு - நீலகிரியாத்திரை - (1860 1861).

இராணுவ அதிகாரிகளின் உத்தியோகசாலையைச் சேர்ந்திருந்த காலையில், தம்புசெட்டியார் விவாகமாகாதவராகவேயிருந்தார். பாலிய விவாகத்தால் நேருவது முற்றிலுங் கேடேயெனப் பல பிரசங்கங்கள் செய்தும், பத்திரிகைகளுக்குப் பல வியாசங்களெழுதியும் தமது அபிப்பிராயத்தை உலகோர் அறிய வெளியிட்ட இவர், இருபத்து மூன்றுவது வயதையடைந்தும் கலியாணஞ் செய்துக்கொள்ளக் கருதினவரல்லர். தக்கவயது வந்தபிறகே விவாகஞ்செய்வதெனத் தீர்மானித்திருந்தனர். தக்கவயது வந்தகாலத்தில் தனக்குத் தகுந்த மனையாட்டியைக் கொடுத்தருளல் வேண்டுமென எல்லாம்

2 JUL 1910 MADRAS



MRS. THUMBOO CHETTY

வல்ல கடவுளை விடாது பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். "உலக
முதல்வனே! எனது விவாகத்துக்குத் தக்கதுணைவியாய் வாய்க்
கப் பிறந்து வளர்கின்ற பெண்மணி எவளோ அவள் வந்து கூடவும்,
கற்பு முதலிய மாட்சிமையுள்ள குணங்களைப் பொருந்தவும், திருக்
கண்ணோக்கியருள் வாயாக" வென்று மன்றுவோர். இங்ஙனஞ்
சிலகாலஞ் செல்லத், தம்புசெட்டியாரின் பிராண சிநேகிதரான
ஒருவர், "தம்புசெட்டியாரே! சந்திர மண்டலத்தை யொத்த முக
மும் மெல்லியலுமுடைய மடமங்கையை மணம் புரியத்தக்க வயது
ள்ளவனாகியும் இன்னுமதில் மனஞ் செலுத்தாதிருப்பதென்ன"
வெனக்கேட்கத், தம்புசெட்டியார் மறுமொழியாகத் "தோழனே,
நீ மணம்புரிந்தவனானாய்; யான் அதற்காகச் சந்தோஷிக்கின்றேன்.
அவ்வாறு எளிதாக மணம்புரிதற்கு நான் இசையமாட்டேன். சில
நாட்கள் வரையில் காத்திருந்து பின்னால் மணஞ்செய்வதென நினைக்
கின்றேன். எனது நாயகியாகவும் என் உயிர்த்துணையாகவும் அமைய
ப்பட்டவளது குணநிசயங்க ளத்தன்மையவாயிருக்குமோவென்று
யோசிக்கிறேன். என்னை மணம் புரியவரும் பெண், அழகுஞ்
செல்வமும் நிறைந்தவளாயிருக்கினும், அவளை யான் மதியேன்.
தெய்வபக்தி யுள்ளவளாய்ப், பதிவிருதாதருமத்தை யனுசரிப்பவ
ளாய், அன்பு அடக்கமுதலிய நற்குணங்கள் அமைந்தவளாயிருப்ப
ளேயாமாகில், அவள் இந்தவுலகில் வறுமையாற் சிறுமையடைந்த
குலத்திற் பிறந்தவளாயினும், அவளே என் மனதுக்குரியவள். ஏவா
ளென்னும் ஆதித்தாய் தன்னாயகனாகிய ஆதித் தகப்பனைக் குற்றமு
ள்ள மார்க்கத்திற் புகச்செய்வித்தாள். டலிலா என்னும் ஓர்பூங்குழல்
மாது சம்சோன் என்பவன் மனம் வருந்திச் சாதற்குக் காரணமாக
இரண்டகஞ் செய்தாள். மகா ஞானியாய் மேன்மை பெற்ற சல
மோன் இராஜாவை, அவனுடைய மனைவியர்கள் அன்னிய மதத்
தேவர்களை வணங்கச்செய்யும் படியான துற்போதனைகளால் அவன்
மனதைக் கலைத்தார்கள். இவை போன்ற பல எண்ணங்கள் என்
மனதிற்குவிந்து தூண்டுதலால், நான் மணஞ்செய்ய விரும்பும் பெண்,
தேகாரோக்கியமும், வன்மையுள்ள சரீரமும், நல்லறிவு நல்லொழு
க்கங்கள் பொருந்தியவளாயும், இல்லற வேலைகளிற் பழகினவளாயும்,
மாசற்ற குடியிற் பிறந்தவளாயும், இவையாவையினும் மேலாகத்தெய்
வபக்தியுள்ளவளுமா யிருக்கவேண்டும். இங்குசொல்லப்பட்ட குண
ங்களுடன் அழகும் செல்வமும் கூடியிருக்குமேயாகில், அது உத்தம
மாகும்; என்றாலும், இவ்விரண்டு மில்லாதிருக்கினும் பாதகமில்லை;
ஏனெனில், அழகானது, இளமைகழியும்போது தானும் குறைவு
படும்; செல்வமானது ஒருவரிடத்திலும் நிலையாக நிலைத்திருக்க
மாட்டாது" என்றுரைத்தனர்.

தம்புசெட்டியார் இவ்வபிப்பிராயங்களைத் தம்தோழனுக்குத் தெரிவித்த சிலநாள்களுக்குப் பின், கடவுளின் திருவருளால் வடிவழகும் குணவழகும் அமைந்த ஒரு பெண்மணியை விவாகஞ் செய்துக்கொள்வதற்குத் தெரிந்தெடுத்தனர். இப்பெண்மணி தமது மூத்த சகோதரியாகிய சின்னம்மாள் பெற்றெடுத்த கண்மணிபோன்ற மகள். இரத்தக்கலப்புள்ள நெருங்கிய பந்துவினுடைய பெண்ணை மணம்புரியக்கூடாதென்பது கத்தோலிக்குத் திருச்சபையின் ஓர் விதியாயிருப்பினும், இந்துதேசக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் இந்துமதக் கொள்கையை யறவிட்டவர்களாயினுங், தங்கள் பூர்வீகந்தொட்டு அனுசரித்துவந்த தங்கள் ஜாதிக்குரிய முறைமை ஒழுக்கங்களைக் கைவிடாது ஆசரித்து வருவதால், இவர்களுக்கு விவாகஞ் செய்யுந் தருணங்களில், தங்கள் ஜாதியிலே பெண் கொடுக்கத்தக்க தூர பந்துக்கள் இல்லாத காலத்தில், நெருங்கிய சுற்றத்தார்களுள்ளும், பாந்தவ்ய நீங்காது மணஞ் செய்யும்படி (ஒரு வரம்புக்குட்பட்டு) கத்தோலிக்குத் திருச்சபைக் குருக்கள் உத்தாரங் கொடுப்பார்கள். இவ்வழக்கத்தை யனுசரித்துத், தம்புசெட்டியார் தாம் தெரிந்த குணவதியை விவாகஞ் செய்யத் திருச்சபைக் குருக்கள் உத்தரவளித்தனர். இவ்வுத்தரவைப் பெற்றபின், மணத்துக்குரிய காரியங்களைத் தம்புசெட்டியாரின் சுற்றத்தார்கள் ஒன்றுகூடி யாராய்ந் தமைத்தார்கள்.

தம்புசெட்டியாரின் திருமணச்சடங்கு, 1860-ம் ஆண்டு ஆனி மாதத்தில், சென்னை பாப்பம்ஸ் ரோட்டிலுள்ள அர்ச்: அடைக்கல நாயகியாலயத்தில் நிறைவேறியது. மணவாளன் மணவாளிக்கும், தங்கள் இளமைப் பருவத்திலே, ஆன்மபோஜனமாகிய திவ்ய நற்கருணையென்னும் சற்பிரசாதத்தை முதல் முதல் அனுக்கிரகித்த குருப்பிரசாதியாகிய சங்கைக்குரிய அமராந்தி ஸ்வாமிகளாலேயே, அதே ஆலயத்தில், இவர்களின் திருமணம் நிறைவேறும்படி தெய்வ திருவுளமாயினது. இக்குருஸ்வாமிகள் திருவாய் மலர்ந்து "முன்னாளில் ஆபிரகாம், ஈசாக்கு, இயாக்கோபென்ற பிதாப்பிதாக்கள், உண்மைப் பொருளென்று அறிந்து வழிப்பட்டு வணங்கிய பராபரவஸ்துவாகிய கடவுள், உங்களுக்குத் துணையாக உங்களுடனிருப்பாராக. நீங்கள், நெடுநாள் உலகில் ஜீவித்து உடலுயிர்போல் ஒன்றித்து வாழ்ந்து, உங்கள் மக்களையும் பேரர்களையும் அவர்களுடைய புத்திர பௌத்திராதிகளையும் மூன்று நான்கு தலைமுறைவரையும் பார்த்து மகிழும்படிச், சந்தான பாக்கியத்தைப் பரமன் உங்கட்கருள்வாராக. இந்த வாழ்வினை நீங்கள் அடைந்த பின்பு, நமது கர்த்தரும் இரக்ஷகரும், எங்குமுள்ளவரும், பூமியுள்ள



ளவும் அரசாள்பவருமாகிய சேசுக்கிறிஸ்து நாதரின் கிருபையினால், நித்யானந்த மோட்சத்தை யடைவீர்களாக" வென்று ஆசீர்வதித்தருளினார். அப்போதங்கு கூடியிருந்த ஜனங்கள் மனமகிழ்ச்சிகொண்டு, வதூவரர்கள்மீது மலர்மாரி சொரிந்து அவர்களை வாழ்த்தினார்கள்.

தமக்கு விவாகம் நடந்த இக்கோவிலுக்கு நன்கொடையாக மகா விசித்திராலங்காரமுள்ள பொன்னாற் சமைக்கப்பட்ட பலிபீட சிங்காதன மொன்று செய்வித்துத் தம்புசெட்டியார் தந்தனர். அதன் வேலைத்திறமைக்காக இப்பொழுதும் அது எவரும் புகழ அங்கே விளங்குவதைக் காணலாம்.

இந்தப் பிரகாரம் தம்புசெட்டியாரின் திருமண முடிந்த ஒரு வருஷத்துக்குள் இவர் நீலகிரிக்குப் போகும்படி நேரிட்டது. தமது உத்தியோகசாலைக் கதிகாரியாகிய கர்னல் ஸ்காட் (Col. Scott) துரை, தம்புசெட்டியார் மீதுள்ள மதிப்பினாலும் நம்பிக்கையினாலும் தனக்குதவி செய்யத் தக்கவரிவரென்று மதித்து, இவரே தன்னுடன் நீலகிரிக்குப் போக வேண்டுமென்று கோரினர். உஷ்ணமிகுந்த சென்னையை விட்டுக் குளிர்ச்சியுள்ள மலைவாசஞ் செய்தற்குச் செட்டியார் பிரியப்பட்ட போதிலும், தம்மைப் பிரியாதிருந்த சுற்றத்தாரையும் நேசர்களையும் விட்டுப் பிரிந்து, ஒருவருஷகாலம் அன்னிய தேசத்தில் வசித்தலைக் குறித்துச் சிறிது கலக்கமுற்றவரானார். 1861-ம் ஆண்டில் திருப்பத்தூர் மட்டுமே புகைரத இருப்புப்பாதை யுண்டாயிருந்தது. அந்த ஊரடையுமட்டும் எங்குந் தங்காமல் தம்புசெட்டியார் மகிழ்ச்சியோடு யாத்திரை செய்தனர். திருப்பத்தூரிலிருந்து பெங்களூர் மார்க்கமாக உதகமண்டலத்துக்கு ஐந்துநாழிகைவழிக் கொருதரம் எருதுகளை வேறுவேறு மாற்றிக்கொண்டு வண்டியில் ஏறிப்போக வேண்டியதாயிருந்தது. சிகர் என்னப்பட்ட கணவாய்ச்சேர்கின்ற மலைப்பாதை உயர்ந்த மலைமீதேறிப் போகும் வழியாதலால், நான்கு எருதுகள் ஒரு வண்டியிற் பூட்டி வண்டியை மெதுவாய் அடியோடடிவைக்க நடத்துவார்கள். இவ்வண்ணம் விடாமல் மூன்று நாள் யாத்திரைசெய்து, ஒத்தை யென்னும் உதகமண்டலம் (Ootacamund) போய்ச் சேர்ந்தார். அங்கு, முன்னமே நியமித்தனுப்பப்பட்டிருந்த வேலைக்காரன் சித்தப்படுத்தியிருந்த உணவைப் புசித்து, அமைத்திருந்த சயனத்திற் படுத்து, மூன்றுநாள் பட்ட சிரமந் தீர அன்றிரவு முழுதும் அயர்ந்து நித்திரை செய்தனர்.

நீலகிரியைச் சேர்ந்தபின் அங்கு தன்னெஜமானரிட்ட தொழில்களை மிக்க கவனத்துடனுஞ் சுறுசுறுப்புடனுஞ் செய்து அவ

ருடைய மனதைச் சந்தோஷிப்பித்து வந்தார். அம்மலையினிடத்து ஒருவருஷகாலமிருந்து, ஏழாயிரம் அடியோடு உயர்ந்து நீண்ட அப்பருவதத்தின் வளங்களையும் காட்சிகளையுங் கண்டு மகிழ்வடைந்தனர். அங்குத் தமது நீடிய அனுபவத்தாலறிந்த விசேஷங்களைப் பற்றிப் பின்வருமாறு, தம்முடைய நேசராகிய கிருஷ்ணராஜ் என்பவருக்கு, ஓர் கடிதமெழுதித் தெரிவித்தனர்:—

"நேசனாகிய கிருஷ்ணராஜனே! நீலகிரி குளிர்ந்த காற்றும் இறுகலான வலியபூமியுமுடையது. தேகாப்பியாசஞ் சிறிதுஞ்செய்யாதவர்களும் நடை, குதிரைச்சவாரி, முதலிய சரீரப்பயிற்சி செய்து உஷ்ணத்தை யுண்டாக்கித், தங்கள் சரீரத்தைப் பாதுகாக்க வேண்டும். இவ்விடத்தில் வசிப்பவன் யாவனாயினும், தனதுபடுக்கையிலும் கம்பல முதலிய போர்வைத்துகில்களிலும், மலைக்கொசுவென்கிற தெள்ளுப் பூச்சிகள் சேராதபடிக்குச் செய்வதோடு, நித்திரைசெய்கையில் அந்தப்பூச்சிகள் தன்னை வருத்தாதபடி பாதுகாத்துக் கொள்வதில் கவலைகொண்டிருப்பது அவசியமாகும். இவ்விடத்தில் ஓராண்டளவிருந்து மேகங்கள் படர்கின்ற மந்தாரக் காலமும், சூரியன்மிக்க வெப்பமுள்ள பகற்காலமும், வேகமாகக்காற்று வீசுகின்ற காலமும், காற்றில்லாமல் ஆகாயம் அமைதி கொண்டிருக்குங்காலமும், நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்ற இராக்காலமும், பூரண சந்திரோதயப் பிரகாசமுள்ள நிலவுகாலமு முதலிய எல்லாக்கால பேதக்காட்சிகளையுங்கண்டு அனுபவமுற்றதினால், தென்னாட்டிலுள்ள எந்த மலையும் இப்பர்வதத்திற்கு நிகராகாதென்னும் அபிப்பிராயமுடையவனாயினேன். இன்னும் இம்மலையில் செயற்கையழகுகளால் விரும்பத்தக்க இயற்கையழகின் தன்மை யிவ்வளவென்று சொல்லப்படுமோ! நினைப்பதற் கினிதாய் இடங்கள் தோறும் பற்பலகாட்சிகள் குலவி, வருடந்தோறும் உஷ்ணகாலத்தில் இங்கு வந்து வசிப்பவர்களுடைய மனதைக்கவர்கின்ற முக்கியமான மலையிதுவாகும். விரிவுபடுத்தாமல் சுருக்கிக்கூறில், மொழிவதற் கெட்டாத பெருமையுடைய காட்சிகளும், செவிக்கினிய பல ஓசைகளும், நாவலர்கள் பாடல்களைப் பாடுதற்கேற்ற கற்பனைகளை எடுத்துதவத்தக்கனவாயிருக்கின்றன"

# CHAPTER V.

## ஐந்தாம் அதிகாரம்.

சட்டநிருபணச் சங்க இலாகா - ஜேஷ்டபுத்திரோற்பத்தி - லா காலேஜில் படித்தடைந்த வெற்றி (1862-1865).

நீலகிரியை விட்டுச் சென்னைக்கு வந்து சில வாரங்களாகவே, 1862-ம் வருஷம் ஜனவரி மாதத்தில், சென்னைக் கவர்ன்மெண்டுக்குச் சட்ட நிருபணச் சபை யொன்று ஏற்படுத்தப்பட்டது. இச்சபைக்கு, இந்தியாவெங்குங் கீர்த்திபெற்று இந்து சட்டத்தில் (Hindu Law) விசேஷப்பயிற்சி யடைந்திருந்த ஜான்டாசன் மெயின்



(John Dawson Mayne) பாரிஸ்டர் (Barrister), காரியதரிசியாக நியமனமடைந்தனர். அவருக்குத்தக்கதோர் உதவியாகத் தம்பு செட்டியார் அவ்விலாகா மானேஜராக நியமிக்கப்பட்டனர். இச்சபையின் அக்கிராசனாதிபதி, சென்னை இராஜதானியை ஆளுங் கவர்னர்; ஆங்கில சேனாதிபதியும், தேசாதிகார சிவில் உத்தியோகஸ்தர்களாகிய கவர்ன்மெண்ட் மெம்பர்கள் (Executive Members) இருவர்களும், துரைத்தன பாரி உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகப்ரயுக்தமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட (Ex-Officio Members) நால்வர்களும், சுதேசிகளில் தெரிந்துக்கொள்ளப்பட்ட மூன்று கனவான்களும், இச்சட்ட நிருபணச் சங்கத்தினர்கள். சுதேசிகளில் இச்சங்க அங்கத்தினர்க்குள் ஒருவராக வீற்றிருக்க முதல் முதலில் கௌரவம் பெற்றவர், ஹானரெபில் சடகோபாசார்லு என்பவர். இவரே சென்னைநகர் நீதி விசாரணைத்தலத்து நியாயவாதிகள் கூட்டத்துக்கு முதல்வராய் அக்காலத்திலிருந்தவர். இவர் சுயார்ச்சித உரிமையைப் பற்றிய இஷ்டசாதனமாகிய (Hindu Will's Bill) என்னும் மசோதா சட்டம் ஒன்று எழுதினார். சடகோபாசார்லு எழுதிய இச்சட்டத்தை அக்காலத்திருந்தவர்கள் வெறுத்துக் குறைகூறினார்கள். அவரும் அகஸ்மாத்தாய் இறந்த காரணத்தால் அவரெழுதிய சாதனம் சட்ட நிருபணச்சபையில் அரங்கேற்றி யங்கீகரிக்கப்படவில்லை. இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்தபின்னர், 1897-ம் ஆண்டில், மேற்படி சடகோபாசார்லுவின் இனத்தவராகத் தோன்றிய, நூல்கள் ஓதியுணர்ந்தவல்லவரும், நீதி யதிபருமாகிய, ஹானரெபில் பாஷியம் ஐயங்கார், இந்த மசோதாவின் கருத்தை யொட்டிப் புதுமசோதா ஒன்று செய்தளித்தனர். இது சட்டமாக வேற்பட்டது. மிக்க பொருளாழமுள்ளதும் சுயார்ச்சிதர்களுக்கு அனுகூலஞ் செய்யத்தக்கதாயுள்ளதுமான இச்சட்டத்தை எல்லோரு மதித்துப் புகழ்வார்கள். மேற்படி சடகோபாசார்லுவோடு இச்சட்ட நிருபணச் சபையின் அங்கத்தினருள் ஒருவராக கர்னாடக தேச நபாபுவின் குடும்பத்திற் பிறந்து கீர்த்திபெற்ற (Shurfool Oomra Bahadur) ஷர்புல் உம்ரா பஹதூர் நியமிக்கப்பட்டனர். இவர் இச்சட்டச் சங்கத்தின் அங்கியாகவிருந்த நாளில், இந்தியன் பீனல்கோட் (Indian Penal Code) என்னும் குற்றங்களுக்கு தண்டனை விதிக்குஞ் சட்டத்தின் 497-வது பிரிவைச் சீர்திருத்தி, வியப்சாரக் குற்றஞ்செய்யும் ஆண்மகனைத் தண்டிப்பதுபோல வியபசாரத்துக்குடன்படும் பெண்மகளையுந் தண்டனைக்குட்படுத்த வேண்டுமென்று, சட்ட நிருபணச் சங்கத்தினர்முன் பிரேரேபித்தனர். இந்தியன் பீனல்கோட் என்னும் சட்டம் இந்தியதேச முழுவதுஞ் செல்லத்தக்கச் சட்டமாயிருக்க, இந்தச் சட்டத்திலுள்ள எந்தப் பிரி

வினைச் சீர்திருத்த வேண்டுமென்றாலும், இந்து தேசாதிபதியால் செய்யப்படவேண்டியதாகையாலும், குறித்த 497-வது பிரிவின் சீர்திருத்தத்தால், வங்காள மாகாணத்திலும் பம்பாய் மாகாணத்திலுமுள்ள வியபசார மாதர்களை விட்டு, சென்னை மாகாணத்தினவர்களை மாத்திரம் தண்டிப்பது கூடாதாகையாலும், இந்திய தேசாதிபதியே தம்முடைய மந்திரிகளுடன் ஆலோசித்து மேற்படி விதியைச் சீர்திருத்தும்படி விண்ணப்பஞ் செய்துக்கொள்வது சரியென்று தீர்மானித்து, இக்காரியத்தை நிறுத்திவைத்தார்கள். செய்த தீர்மானப்படி இதுவரையில் இவ்விஷயத்தைபற்றிக் கவனித்தவர்கள் ஒருவருமில்லை. மேற்படி சட்ட நிரூபணச்சபையில் சுதேசிகளில் ஒரு கௌரவ அங்கியாகப் பின்பு தோன்றியவர் தம்புசெட்டியாரின் சுற்றத்தாரான காஜுலு லக்ஷ்மிநரசுசெட்டியார். இவர் தேர்ந்த கல்விமான்; கிரேஸெண்ட் (The Crescent) என்னும் இங்கிலீஷ் பத்திரிகையை நடத்தியவர்; பொது நலங்கட்காக உழைக்குந் தேசாபிமானியெனப் புகழ்பெற்றவர்; சென்னைச் சுதேசிகள் சங்கத்திற்கு உயிரும் ஆன்மாவும்போலிருந்து இங்கிலாந்தில் முதன்மையுற்ற பார்லியமெண்ட் மஹாசபைக்குப் பல விண்ணப்பங்களையனுப்பிப் பலபேர்களின் துன்பங்களைத்தீர்த்துச், சுதேசிகள் ஆங்கில துரைத்தனத்தில் உயருத்தியோகங்களையடையும்படியாக முயற்சித்தவர்.

தம்புசெட்டியார் இச்சட்ட நிரூபணச் சபையிலாக்காவின் மானேஜராக நாலரை வருஷங்கள் வரையிலிருந்து, அவ்விலாக்காவின் வேலைகளை மிக்க சாமார்த்தியத்துடன் எஜமானர்கள் மெச்சும்படி நடத்திவந்ததால், இவருடைய மாதச் சம்பளத்தை அதிகப்படுத்தியதல்லாது, சபையின் முதற் காரியதரிசியாகிய மிஸ்டர் மெயின் (Mr. J. D. Mayne) துரையும், பின்வந்த காரியதரிசிகளாகிய மிஸ்டர் பஸ்ட்டீட் (Mr. Busteed) துரையும், மிஸ்டர் பாட்ரிக் ஓ-சலிவன் (Patrick O'Sullivan) துரையும் தம்புசெட்டியாரின் வேலைத்திறத்தைக்கண்டு மெச்சிப் புகழ்ந்து நற்சாட்சிப் பத்திரங்கள் எழுதித்தந்தனர்:—

"தம்புசெட்டியார் தமது உத்தியோக காரியத்தைச் சுத்தமாயும், நேர்த்தியாயும், ஒழுங்கோடும், துரிதமாயும் நடத்தவல்லவர். அன்றியும் கூர்மை புத்தியுடையவர், ஐரோப்பியனைப்போல இங்கிலீஷ்பாஷையைப் பேசவும் எழுதவும் தேர்ந்தவர்"

என்று மேற்படி மெயின் துரையும், பஸ்ட்டீட் துரையும் வரைந்தனர். பாட்ரிக் ஓ-சலிவன் துரை,

"தம்புசெட்டியார் இளைப்புஞ் சலிப்பும் உறாது வேலைகளை நடத்துவதிற் சமர்த்துடையவர்; ஐரோப்பியன்போல ஆங்கிலக்கல்வியில் மிகவும் விளக்கம் பெற்றிருக்கிறார்"



என்று எழுதினர். இவ்விலாக்காவில் தம்புசெட்டியார் உத்தியோகஞ் செய்திருந்த காலையில், துரைத்தன நிருமாணம் பெற்ற அநேக சட்டங்கள் ஜாரிக்குக் கொண்டு வரப்பட்டன. செட்டியார் தமது எஜமானராகிய காரியதரிசிக்கு உதவி செய்வதில் துணைக் கருவியாக விருந்து விசேஷமாய் மதிக்கப்பட்டனர்.

1864-ம் வருஷம் மார்ச்சுமாதம் 18௳ செட்டியாருக்கு மகிழ்ச்சி பெருக, வலம்புரிச்சங் கீன்றமுத்துபோல, ஜேஷ்ட புத்திரன் பிறந்தான். இவன் தனது பாட்டனாகிய இராயலு செட்டியாரது பெயரைத் தனது பெயராகப் பெற்றனன். இந்தக் குழந்தையின் நாமகரணச் சடங்கு வெகு ஆடம்பரமாய்க் கொண்டாடப்பட்டது.

மிஸ்டர் மெயின்துரை, சட்ட நிரூபணச்சங்க காரியதரிசி உத்தியோகத்துடன், சென்னை இராஜதானியின் சட்ட காலாசாலைப் (Law College) பண்டிதராக நியமனம் பெற்றிருந்தனர். இத்துரைமகனின் ஏவுதலால் தம்புசெட்டியார் அக்கலாசாலையைச் சேர்ந்தனர். அங்கு மூன்றுவருடங்களிருந்து மெயின் துரையால் செய்யப்பட்ட வியாசங்களைக் கேட்டுணர்ந்து புலமையடைந்து, நடத்திய பரீட்சைகளில் ஒன்றிலுந்தவராமல் ஜெயம்பெற்று, மூன்றுவது வருஷமுடிவில், 1865-ம் ஆண்டில் நடத்திய கடைசி பரீட்சையில் முதலாகத்தேறி, முதன்மையான வெகுமதி பெற்றனர். தம்புசெட்டியாரது சட்டஞான பாண்டித்தியத்தைத் தெரிந்து மெயின் துரை,

"சில நாள்களுக்குள் நியாயாதிபதிகளின் கூட்டத்தில் விசேஷ மதிப்புள்ள ஓர் உறுப்பாவார் தம்புசெட்டியார்"

என்று, வருங்காரியத்தை முன்னே உரைத்தனர். இந்தப் பயனிறைந்த சொல் பின்னாளிற் பலிதமாயிற்று.

# CHAPTER VI.

## ஆரும் அதிகாரம்.

### முன்சீப் உத்தியோகம் - அக்ஷய வருஷப் பஞ்சம் (1866).

நியாயஸ்தலத்தில் மேன்பாட்டைத் தரத்தக்கதான துரைத்தனத்தார் நிரூபித்த பரீட்சைகளில் தேறி, யாவருக்கும் இனியராய்த் தம்புசெட்டியாரிருந்த காலத்தில், 1866-ம் வருஷத்தில், பல்லாரி ஜில்லா ஜட்ஜாகவிருந்த கிண்டர்ஸ்லி (Mr. J. R. Kindersley)

தாரை இவரைத் தெரிந்தெடுத்துச் சிபாரிசு செய்யச், சென்னை ஹைகோர்ட்டு நியாயாதிபதிகள் அதனை அங்கீகரித்து, ஷை ஜில்லாவைச் சார்ந்த பர்க்கி டிஸ்ட்ரிக்ட் முன்சீபாகத் தம்புசெட்டியாரை நியமித்தார்கள். இந்த உத்தியோகத்தில் இவரிருந்தகாலையில், சரிநிறையாய் நீதி செலுத்திக் கீர்த்திபெற்றார். நீதியை அநீதியாகவும் அநீதியை நீதியாகவுமாற்ற உடன்படார். வாதிகள் கொண்டுவரும் வழக்கில் குற்றத்தை விலக்கி உண்மை யிஃதென்று கண்டு தெளிவார். குற்றத்தைக் குற்றமாகவே கண்டும், குணத்தைக் குணமாகவே கொண்டும், தீயநெறிகளை வெறுத்தும், நடுவு நிலைமை பேராது நிற்பார். தாம் முன்சீப் வேலையில் பிரவேசிக்குமுன் செய்த சத்தியப்படி நின்று, நிந்தைக்குப் பாத்திரமான இலஞ்சம் பரம அணுப்பொருளாயினுங் கொள்ளார். நியாயத்தை யறிந்து தீர்மானம் வழங்குவதில் பயமில்லாமலும், தயை தாட்சண்ய மில்லாமலும், தம்முடைய அறிவையும் மனோதிடனையுங் கொண்டு வழக்குகளை ஆராய்ந்து நீதிசெய்வார்.

இவ்வண்ணம் தம்புசெட்டியார் நீதிசெலுத்தி வருங்காலமாகிய அக்ஷய வருஷத்தில், பஞ்சந்தோன்றியது. பர்க்கி தாலுக்கா முழுதும் பஞ்சத்தினால் வாடியது. எளியோர்கள், உண்ணத் தானியங் கிடையாததால், புளியம்விதை, பருத்திவிதைகள் முதலியதுகளைக் கூழ் செய்துண்டார்கள். பலவகைப் பூண்டுகளையுங் கிழங்குகளையுந் தின்று பசியாறினார்கள். அநேகர் தமக்குக் கிடைத்த காய் கனிகளைத்தின்று பலவியாதிகளால் சரீரமெலிந்தார்கள். சிலர் தங்கள் பிள்ளைகளை விற்றும் ஊரூராய்த்திரிந்து யாசித்தும் பிழைக்க வழி தேடினார்கள். இக்காட்சிகளைக்கண்ட பொருளாளிகள், தங்கள் பொருளைக் கொடுத்துத் தானியம் வாங்கி யேழைகளுக்கு வழங்கியும், உணவு தந்தும் காப்பாற்றினர். பஞ்சம் அதிகமாய் மீறிவந்த காலத்தி லோர்நாள் பர்க்கிநகரத்து வர்த்தகர்களாகிய கோமுட்டிச் செட்டிகள் தானியக் கொள்ளை நேரிடுமென்று பயந்து தங்கள் கடைகளை மூடி விட்டதால் தானியங் கிடைக்காமல் அவ்வூர் ஜனங்கள் மிகவும் நொந்து வருந்தினார்கள். தம்புசெட்டியாரதைக்கண்டு அவ்வூர் சுற்றுப்புரத்தில் வசித்திருந்த ரெட்டிச்சாதிப் பட்டேல்களை வரவழைத்து, அவர்களிடத்திலிருந்த தானியங்களை அதிகவிலை கொடுத்து வாங்கித் தமது கோர்ட்டு உத்தியோகஸ்தர்களுக்கும், சொற்ப வரும்படியால் காலக்ஷேபஞ் செய்வோருக்கும், ஏழைகளுக்கும், கொடுத்து உதவி செய்து அவர்களை வாழ்வித்தனர். தம்புசெட்டியாரின் பரோபகாரச் செய்கை தானியக் கொள்ளையை விலக்கி, வர்த்தகர் முதலிய யாவருக்கும் சுகத்தைத் தந்தது. சிலநாள் கழிந்தபின் பெய்த நல்ல மழையால் பஞ்சந் தெளிந்து ஊர் க்ஷேமப்பட்டது.



தம்புசெட்டியார் முன்சீபாக பர்க்கியிலிருந்து உத்தியோகஞ் செய்த காலம் எட்டுமாதமே யென்கிலும், அங்கு செட்டியார் பட்ட நிர்ப்பந்தம் அதிகம். அவ்வளவு நிர்ப்பந்தத்தையும் மனமொறுத்தனுபவித்துத் தம்முடைய உத்தியோகக் கடமைகளைச் சரியாய் நடத்தினாரென்பது, அவர் தமது மாமனாருக்கெழுதிய ஒரு கடிதத்தால் விளங்கும். அக்கடிதத்தின் கருத்தையிங்கு சுருக்கிச் சொல்லுவோம்:—

“ பர்க்கி யென்னும் [illegible]ப்பழந்தமுள்ள ஸ்தலம். அதன் முன்னாளின் ஸ்திதியையிழந்து சீர்குலைந்த [illegible]ன் தோற்றத்தை இப்போது காட்டா நிற்கின்றது. அங்கே முக்கியஸ்[illegible]ளாக வாழ்வோர் பிராமணர்கள். ஊருக்கு மத்தியில் மகம்மதியரும் கோமுட்டிகளும் [illegible]ட்டவரா லமைத்த, காற்று நுழையப் பலகணிவாசலில்லாத, சிறுவீடுகளில் வசிக்கிறார்கள். இத்தன்மைய வீடுகளில் ஒன்றைப் பிரயாசத்துடன் வாடகைக்குப்பெற்று, அதனை யொருவாறு சீர்திருத்திப் புதுப்பித்துக்கொண்டு, அதில் நான் வசித்து வருகிறேன். ஊரிலுள்ள நீர் உவர் நீர். உண்பதற்கு [illegible]ரண்டம் நல்ல ஜலம் மூன்று நாழிகை தூரஞ்சென்று கொண்டுவரவேண்டும். ஆசைப்பட்ட பண்டங்கள் வாங்குவதற்குக் கடைகள் கிடையா. வாரந்தோறுங் கூடும் சந்தைக் கடைகளுமில்லை. இவ்வூருக்கு ஐந்து நாழிகைவழி தூரத்தில் இந்துபூர் என்னும் ஒரு நகரம் உளது; அது தாசில்தாரிருக்குமிடமாகும். வேண்டிய பண்டங்கள் அவ்வூரில் எட்டு நாட்கொருக்கால் கூடும் சந்தைக்கடைகளில் வாங்கிக்கொண்டு வந்து பர்க்கியில் வாசஞ்செய்வோர் வாழ்தல் வேண்டும். நியாயஸ்தல மாளிகை (Court House) 50-வருஷங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட பழயவீடு. மேற்கூரை நொறுக்குண்டு ஒழுக்கல் உடையதாயிருத்தலால், குடிக்கூலிக்கு ஒரு தகுதியற்ற வீட்டை வாங்கிக்கொண்டு அதில் என்னுடைய கோர்ட்டு விசாரணை நடத்தப்படுகிறது. இந்த நியாயஸ்தலத்தைப் பென்னகொண்டா வென்னுமூரில் ஸ்தாபித்தல் நலமாயிருக்குமென்று மேல் அதிகாரிகட்கு மனுச் செய்துக் கொண்டிருக்கிறேன். சென்னை நகரில் பலவகை சௌக்கியங்களை இன்பமாயனுபவித்த ஒருவன் அந்நகரத்தை விட்டு இப்பர்க்கியில் வசித்தலானது, துரைத்தனத்தாரால் அன்னிய தேசவாசஞ் செய்யத் தண்டனைப்பட்டுப் புறதேசவாசஞ் செய்யப் போனதை யொக்கும்.”

மேற்சொல்லிய கடிதத்தில் சொல்லியபடி, தம்புசெட்டியார் பர்க்கியில் பட்டசிரமைகள் கொஞ்சமல்ல. சென்னையிலே கூடப்பட்ட கல்விச்சங்கங்களையும் அங்கு அனுபவித்த சுகங்களையும் விட்டுப் பர்க்கியிற்சேர்ந்து பாரமான தொழிலை வகித்துப் பலசிக்கான நிலவழக்குகளை மிக்க அமைதியுடன் விசாரணை நடத்திவந்தார். ஆயிரத்தைந்நூற்றுக்குமேல் இரண்டாயிரம் வரையில் சேர்ந்திருந்த வழக்குகளில், பிரதிவாதிகளால் முறையிடப்பட்ட சிக்குள்ள நிலவழக்குகள் பலவாகவும், உரிமையையுஞ் சுதந்தரத்தையுமறுத்து வழக்காடும் எல்லை வியாச்சியங்கள் பலவாகவும், சுலுவில் தீர்மானஞ் சொல்லக் கூடியதாயிராமல் நியாயாதிபதியின் மனதை வருத்துந் தன்மையுடைய வழக்குகள் பலவாகவுமிருந்தன. இவ்வித வழக்கு

களை விசாரித்துத் தீர்மானஞ்செய்யும் உழைப்போடு, தமககு உத வியாக அந்நாளில் கொடுக்கப்பட்டிருந்த முனிஷிகள் இங்கிலீஷ் பாஷையில் சிறிதும் பயிற்சியில்லாதவர்களாதலால், வழக்கு விசாரணையை முடித்த பின்னர், தாம் எழுதுந் தீர்மானங்களை யெல்லாம் தாமே பதிலேட்டில் பதிவுசெய்தும், அவற்றை யத்தேசபாஷையாகிய தெலுங்கில் மொழிபெயர்த்துத்தரும் வேலையுஞ் செய்ய வேண்டியிருந்தது. இவ்விதமாய் இரவும் பகலும் ஓய்வில்லாமல் கஷ்டப்பட்டுத் தமது உத்தியோகத்தை நடத்தி, பார்க்கியில் வாழ்வோர் மதிப்பும் அன்பும் பெற்றனர்.

சட்ட நிரூபண இலாக்காவினின்று முன்சீப் வேலை பெறுவதன் முன், இரண்டு வருஷ ஓய்வுநாள் (Leave) பெற்று வந்த தம்பு செட்டியார், பட்டின வாசத்தை விட்டுப் பாழடைந்தக் கிராமத்தைப் போன்ற பார்க்கியில் சுற்றத்தோர் முதலியோரில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க மனமில்லாதவராகிச், சென்னைக்குத் திரும்பச் செல்லவேண்டுமென்று கருதினர். ஆனல், கடவுள் தமது அளவற்ற மெய்ஞ்ஞானத்தினல் எல்லாக் காரியங்களையும் ஒழுங்கு படுத்துதலால், தம்புசெட்டியார் பார்க்கியில் வசிப்பது சிலகாலமட்டுமென்று தீர்மானிக்க உத்தியோகமாறுதல் உடனே அடுத்தது.

—✳✳✳—

# CHAPTER VII.

## ஏழாம் அதிகாரம்.

பெங்களூருக்கு மாற்றம் - பெங்களூர் ஜுடிஷியல் கமிஷனர் கோர்ட்டு ஹெட்சிரஸ்ததார் - முதற்புத்திரி ஜெனனம் - பெங்களூர் ஸ்மால்காஸ் கோர்ட் பதில் ஜட்ஜி - மகாராஜா கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் மரணம் (1867 - 1868).

பல்லாரியில் சிவில் ஜட்ஜாக விருந்து கீர்த்திபெற்ற மிஸ்டர் கிண்டர்ஸ்லிதுரை, அப்பொழுது பிரிடிஷ் கவர்ன்மெண்டாரின் ஸ்வாதீனத்திலிருந்த மைசூர் சமஸ்தான தலைமை நியாயத்தலத்தின் நியாயாதிபதி (Judicial Commissioner) யாக நியமிக்கப்பட்டுப் பெங்களூருக்குச் சென்றார். ஏற்கனவே, தம்புசெட்டியாரின் வல்லமையையும் யோக்கிதையையுங் கண்டுகொண்டகிண்டர்ஸ்லிதுரை தம்முடைய கோர்ட்டில் காலியாயின ஹெட்சிரஸ்ததார் உத்தியோகத்தைத் தம்புசெட்டியாருக்குக் கொடுக்க வேற்பாடு செய்து, அவருக்குத் தலைவரான பெல்லாரி நீதிபதி (District Judge)



OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2-JUL 1910 MADRAS.

மிஸ்டர் சலிவன் துரையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அவ்வுண்மையைத் தம்புசெட்டியாருக்கு அடியிற் குறித்த கடித மூலமாக அறிவித்தனர்:—

"அன்புள்ள ஐயா! மைசூர் ராஜாங்கத்து ஜுடிஷியல் கமிஷனர் ஆபீ
ஸின் ஹெட்சிரஸ்ததார் மேலான உத்தியோகத்துக்கு மாற்றப் பெற்றமை
யால், அவருக்குப்பதிலாக உம்மை நியமித்த நியமனம், மைசூர் கெஜட்டில்
(பிரசித்தப் பத்திரிகையில்) அடுத்த சனிவாரத்தில் தோன்று மென்பதையறி
விக்க உமக்கு இக்கடிதத்தை எழுதலானேன். இந்த நியமனத்துக்கு, மிஸ்டர்
சலிவன் துரையின் சம்மதியை நான் முன்னமே பெற்றுக்கொண்டிருப்பதனல்,
இது அவர்க்கோர் புதிய சமாசாரமாகாது. இங்குள்ள வேலையை அங்கீகரிக்கவும்
அங்குள்ள டிஸ்ட்ரிக்ட் முன்சீப் வேலையை விட்டுவரவும், நீர் அவருடைய
அனுமதியைப் பெறுவது ஆவசியமாகும். நான் தத்காலம் சிரஸ்ததாரின்றி
யிருப்பதால், நீர் கூடிய சீக்கிரத்தில் என்னிடம் வந்து சேர்வீராயின் நான்
மிகவுங்கடமைப்பட்டவனக இருப்பேன்."

தமது முயற்சி சிறிதுமின்றிக் கடவுள் கிருபையால் வலியக் கிடைத்த இந்த உத்தியோகத்தை யேற்றுக்கொள்ளும் பொருட்டு உத்தரவு கொடுக்கவேண்டுமென்று, சலிவன் துரையைத் தம்பு செட்டியார் கேட்க, அதற்கு மறுமொழியாகச் சலிவன் துரை,

"என் இனிய நேசரே! மைசூர் ஜுடிஷியல் கமிஷனராபீஸ் ஹெட்
சிரஸ்ததார் உத்தியோகத்தை உமக்குக்கொடுத்து அவ்விடத்துக்கு மாற்றுவிக்கக்
கிண்டர்ஸ்லி துரை கொண்ட கருத்தை அவர் அறிவிக்க நான் முன்னமே
அறிந்தேன்; நீர் இந்த உயர்ந்த உத்தியோகத்துக்குத் தெரிந்தெடுத்துக் கொள்
ளப்பட்டதற்காக உம்மையும், நியாயாதிபதித் தொழிற்குரிய கல்வியும் பயிற்சி
யும் யோக்கியதாபட்சமு முள்ள உம்மைப்போன்ற ஓர் புருஷனின் ஊழிய
ங்களை யடையப்பெற்ற கிண்டர்ஸ்லி துரையையும், யான் வாழ்த்துகின்றேன்.
உம்முடைய லாபம் என்னுடைய நஷ்டம். உம்முடைய முன்சீப் உத்தியோ
கத்தை எவ்வகையாய் நிரப்புவேன் என்பதை நானறிகிலேன். உம்மை நேரிற்
காணும் சமயம் வாய்க்காமற் போனதற்காக நான் அதிக விசன முறுகிறேன்.
உம்மைக் காண்பதாலுண்டாகுஞ் சந்தோஷம் என்றாவது ஒரு நாள் எனக்குக்
கிடைக்கு மெனக்கோருகிறேன். உம்முடைய கோர்ட்டின் பொறுப்பை முதற்
குமாஸ்தாவினிடம் ஒப்பிவித்துப்போக என் முழு அனுமதி கொடுத்திருக்கின்
றேன். உம்முடைய காரியசித்தியை நிரம்பவும் விரும்புகிறேன்"

என்றெழுதினர்.

தம்பு செட்டியார் பார்க்கியைவிட்டுப் பெங்களூருக்குப் பிரயாணஞ் செய்ய ஆயத்தமானரெனத் தெரிந்து, அவ்வூர் ஜனங்களும், வக்கீல்களும், கோர்ட்டு உத்தியோகஸ்தர்களும், பெருங்கூட்டமாய்ச்சேர்ந்து செட்டியாரைச் சூழ்ந்துக்கொண்டு, பிரிவாற்றமையால், நிறைந்த அன்பினேடு ஆநந்தக்கண்ணீர் பொழிந்து, இந்நீதிமானை என்று காண்போமென ஏங்கினர்கள். உத்தியோகத்தில் மேன்மேலு

முயர்ந்து பல்லாண்டுகள் வரையும் பலபேறுகளை யடைந்து நீர் வாழக்கடவது என்பனமுதலிய ஆசீர்வாதச் சொற்களைக் கூறிக் கொண்டு, ஐந்துமைல்கள் தூரத்திலுள்ள இந்துபுரி வரையுந் தொடர்ந்து போய்நின்ற உத்தியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் முதலி யோரை, நீங்கள் போய் வாருங்களென உபசரித்துச் சொல்லித் தம்புசெட்டியார் அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டுத் தம் பிரயாணத்தைத் தொடர்ந்தனர். நீதியைச் செலுத்து முறைமையில் ஏழைகளுக்குஞ் செல்வர்களுக்கும் எல்லார்க்கும் நடுவு நிலைமை தவ றாது தராசு முள் போலப் பொதுவாகவிருந்து அதிகாரஞ்செலுத்திய நீதிமானென்று விளங்கிய இவர்; பெங்களூரென்னும் பெயர்பெற்ற கல்யாணபுரியை வந்தடைந்தனர்.

1867-ம் வருடம் பிப்ரவரிமீ 1தேதி யன்று, மைசூர் கோர்ட்டு களின் வழக்காளிகள் புறமிருந்து வாதிக்க வக்கீல்களாவதற்குரிய வேற்பாடு, ஜாரிக்குக் கொண்டுவரப்பட்டது. இத்தினமே தம்பு செட்டியார் ஜூடிஷியல் கமிஷனர் கோர்ட்டு ஹெட் சிரஸ்ததார் உத்தியோகத்தைக் கைக்கொண்டனர். இந்தச்சுபதினத்திலேயே தம்புசெட்டியாருக்கு ஜேஷ்ட புத்திரியாகத் தாயின் சாயலும் அழ கும் அமைந்த பெண்மகவொன்று பிறந்தது. இக்குழந்தைக்கு அமராவதி யென்னும் அரிய நாமத்தைச் சூட்டினர்.

தம்புசெட்டியாருக்கு இவ்வுத்தியோகத்தைக் கிண்டர்ஸ்லி துரை கொடுத்ததைப்பற்றி, மைசூரிலுள்ள உத்தியோகஸ்தர்கள் உள்ளஞ்சகியாராய் ஏமாந்து புலம்பிப் பொறாமைக் கடலுக்குள் மூழ்கினார்கள். அயலூரிலிருந்து வந்தவற்கு இவ்வுத்தியோகங் கொடுத்தது தகாதெனப் பிரசித்தப் பத்திரிகைகள் பல கூச்சலிட் டன. அப்போது மைசூராட்சியை நடத்திவந்த சிப் கமிஷனர் (Chief Commissioner) பவுரிங்துரை (Mr. Bowring) ரஜா பெற்று இங்கிலாந்துக்குப் போயிருந்தனர். தம்புசெட்டியாரை ஜூடிஷியல் கமிஷனரின் சிரஸ்ததாராக நியமித்ததை அந்துரை யறிந்து தம்முடைய ஆபீஸ் (Chief Commissioner's Office) ஹெட் சிரஸ்ததாராகிய அருணசல முதலியாருக்குப் பின்வருமாறு ஓர் கடிதம் எழுதினர்:—

"ஜூடிஷியல் கமிஷனர் ஆபீஸ் சிரஸ்ததாராகத் தம்புசெட்டியை நியமனஞ்செய்தது,நீர்சொல்வதுபோல அவர் கிறிஸ்துவராயிருப்பதால்,முன்னு க்கு அனுகூல முள்ளதாக வாகலாம் என்று நான் நம்புகிறேன். பொதுவாய் நோக்கில், இவ்வித முக்கியமான அலுவலுக்கு மைசூரிலுள்ள உத்தியோகஸ்த ரில் ஒருவரைநியமிப்பதையே நான்விரும்புவேன். இவ்விஷயத்தில் மைசூராரின் உள்ளம் புண்படாதிருக்கும் வண்ணம் வெளியூராரை இங்குகொண்டுவந்து சேர்



ப்பதற்கு நான்மனம் வையேன். ஆகிலும், தம்புசெட்டி மிக்க சமர்த்தராகவே
நாமெடுத்துக் கொண்டாலும், இவர்எந்தப்பிழையில் அகப்படுவாரோ வென்று
அவருடைய விரோதிகள் சமயம்பார்த் திருப்பார்களாகையால், இவர் சர்வ ஜாக்
கிரதையோடும் சரிநடத்தையாலும் தம்மைக் காத்துக் கொள்ளவேண்டிய
ஆவசிகமிருப்பதால், இந்நியமனம் திருப்திகரமுள்ளதாகுமெனச் சொல்லவே
ண்டிய தாயிருக்கிறது. தாம் அனுசரித்து வருகிற வேதநெறிப்படி நடந்துக்
கொண்டு வருகிறவரானால்,மேலேநான் சொன்னபடி, தம்புசெட்டியார் யோக்கி
யதா பட்சத்தையே கைக்கொண்டு எச்சரிக்கையுடன் நடப்பார் என்று கோரு
கிறேன்."

தம்பு செட்டியார் தமது சிரஸ்ததார் உத்தியோகத்தை நட
த்துவதில் மிக்க எச்சரிக்கையுடையவராயும் ஒழுக்கநெறி வில
காமலுமிருக்க வேண்டுமென்று கோரி, பவுரிங்துரை எழுதியது
சரியேயாகும். பவுரிங்துரை கோரியபடியே தம்புசெட்டியாரிடத்
தில் திறமும் ஒழுக்கமும் ஒன்றுசேர்ந்திருந்ததால், அவர் அதிசீக்கி
ரத்தில் மைசூர் சமஸ்தானத்தில் உயர்வும் உத்தரவாதமும் பொருந்
திய அலுவல்களுக்குரியவராகிப் பேர்பெற்று விளங்கினர். 1867-ம்
வருஷம் நவம்பர்மாதம் 20உ, கிண்டர்ஸ்லி துரைஎழுதிக்கொடுத்த
அடியிற்கண்ட நற்சாட்சிப்பத்திரமே, அதற்குச் சாட்சி சொல்வதா
யிருக்கிறது:—

"T.R.A. தம்புசெட்டியார் பல்லாரிஜில்லா, பார்க்கி தாலுக்கா டிஸ்ட்ரிக்ட்
முன்சீபாக என்கீழிருந்து துரைத்தன ஊழியஞ்செய்தனர். பின்பு அவ
ரைப் பெங்களூர் ஜூடிஷியல் கமிஷனர் ஆபீஸ் சிரஸ்ததாராக நான் நிய
மித்தேன். எப்போதும் என்மனதுக்கு மிகப்பூரணமான திருத்தியைத் தந்தார்.
எவரிடத்தும் ஒன்றுபடப் பொருந்தற்கரிய வேலைகளைத் திறமையோடுநடத்தும்
கூரியபுத்தியும், சாமார்த்தியமும், இனியசற்குணமும், நல்லொழுக்க நடையும்
உடையவராயிருக்கிறார். இவரடைந்துள்ள இந்த உயர்வுடைய ஒழுக்க நெறி
யினையெப்போதுங் காத்துக்கொள்வாரென நம்புகிறேன்."

தம்புசெட்டியார் பெங்களூரில் வந்துசேர்ந்த சில வாரங்களுக்
குள்; பெரிய ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையர் பஹதூர் மஹாராஜா (தத்
கால மஹாராஜாவின் பாட்டனார்) அவர்களுக்குத் தமது வணக்க
முள்ள மரியாதைகளைச்செலுத்தும் பொருட்டு மைசூருக்குச்சென்
றனர். அவ்வூரிலிருந்து செட்டியார் எழுதிய கடிதத்தில்,
"மிக்க சந்தோஷத்தோடு எனக்கு மஹாராஜா பேட்டிதந்தனர். மைசூர்
அரசாட்சியில் நான் உத்தியோகம் பெற்றுவந்த சந்தர்ப்பங்களை மகாராஜா
அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். சற்றுநேரம் அவருடன் உரையாடிக்
கொண்டிருந்தபின், செலவு பெற்றுக்கொள்ள உத்தரவு செய்யவேண்டு
மென்று எழுந்து நின்று மரியாதையுடன் வேண்டினேன். அப்போது மஹா
ராஜா அவர்கள் கெம்பீர முகத்தோடு என்னைப்பார்த்துத் தமது கரத்தால் என்
புஜத்தைத்தட்டித் தெளிவான ஓசையுடன், 'நீர் கொஞ்சவயதுள்ள வாலிபரா
யிருக்கிறீர். நெடுநாள் மைசூர் துரைத்தன சேவகத்திலிருந்து இவ்வரசாங்க

விருத்திக்குரிய காரியங்களை நீர் செய்ய வேண்டியதாயிருக்கும். இந்தச்சமஸ்தானத்துக்குள் இப்போது நீர் புதிதாய் வந்து சேர்ந்திருந்த போதிலும், மைசூர்ப் பிரஜைகளை உம்முடைய சொந்த தேசத்தாரைப்போல் பாவித்து, அவர்களைப் பட்சத்தோடும் இரக்கத்தோடும் நடத்தி வருவீரென்று நாம் நிச்சயமாய் நம்புகிறோம்,' என்றுரைத்தனர். இப்படி மகாராஜா அவர்கள் சொல்லியது, தமது பிரஜைகளின் க்ஷேமத்தைப் பற்றி அவர் எவ்வளவு கவலையுள்ளவராயிருந்தாரென்றும், அப்பிரஜைகளை எவ்வளவு அன்போடு அதிகாரிகள் நடத்தவேண்டிய கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்களென்னும் உணர்வுடையவராயிருந்தாரென்றுங், குறிப்பிட்டுக் காட்டத்தக்கதான ஓர் பொன் போன்ற எச்சரிக்கையென என் மனதிலுறுத்தியது"

என்று வரைந்தனர்.

மைசூரில் மகாராஜாவைத் தம்புசெட்டியார் சந்தித்துப் பெங்களூருக்குத் திரும்பிவந்த இரண்டொரு மாதங்களுக்குள், மேற்படி மகாராஜா அவர்களது அரசுக்கு உரிமையுடையவராகத் தோன்றிய ஸ்வீகாரப் புத்திரனுக்கு மைசூர் அரசாட்சியை ஒப்பிவிக்க ஆங்கிலேய துரைத்தனத்தார் தீர்மானித்தனர். இதன் விஷயமாக இந்திய காரியதரிசி (Secretary of State) எழுதிய இராஜபத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு, 1867-ம் வருஷம் எப்பிரல் மாதம் 16 ௳ தேதி, ஆங்கிலேய இராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட கரீத்தா என்னும் நிருபம், மைசூர் மகுட மன்னர் தமது சமுகத்தில் வரப்பெற்றனர். இந்தச் சமஸ்தான அரசாட்சியில் உயர்வு பெற்ற உத்தியோகங்கள் பெரும்பாகம் சுதேசிகளுக்குக் கொடுத்துப் பலப்படுத்த வேண்டுமென்று ஆங்கிலேய துரைத்தனத்தார் விருப்பங்கொண்டனர். ஆகையால், தம்புசெட்டியார் தமக்குப் பயனைக் கொடுக்கத்தக்க நல்லதோர் எதிர்காலம் வந்ததெனஎண்ணினார்.

ஜுடிஷியல் கமிஷனர் கோர்ட்டுச் சிரஸ்ததாராக உத்தியோகஞ்செய்த முதல் வருஷத்திலேயே தம்புசெட்டியாரின் திறத்தை நன்குமதித்து வருடாந்தர அரசாட்சி அறிக்கைப் பத்திரத்தில்,

"தம்புசெட்டியின் உதவியின்றி நான் என் அதிக உத்தரவாதமுள்ள கடமைகளைச் சரிவர நடத்தி யிருக்க மாட்டேன்"

என்று, ஸௌண்டர்ஸ்வி துரை பதிந்தனர்.

மைசூர் ஜுடிஷியல் கமிஷனருக்குக் கொடகுதேச நியாயவிசாரணையதிகாரமுங் கொடுக்கப்பட்டிருந்ததால், அத்தேசத்தின் சிவில், கிரிமினல், நியாயாதி பதித்துவ எல்லைகளைவரையறுத்து ஒழுங்குபடுத்துவதைப்பற்றியும், பழய தரியாப்த் கச்சேரியின் முறைமைகளையொழித்துப் புதிய நடவடிக்கைகளை யேற்பாடு செய்வதைப்



பற்றியும், செய்யப்பட்ட 1868-வது வருஷத்து 25-வது சட்டத்தைத் தம்புசெட்டியார், சென்னையில் சட்டநிரூபண இலாக்காவிலடைந்த பழக்கத்தைக்கொண்டு, எழுதிக்கொடுத்துத் தமது எஜமானருக்குதவி செய்தனர். இந்தியதுரைத்தனத்தார் இதனை அங்கீகரித்துச் சட்டமாக்கி ஜாரிக்குக்கொண்டுவந்தனர். இதற்காகவும் தம்புசெட்டியார் தம்முடைய மேலதிகாரிகளால் மிகவும் புகழ்ந்து கொண்டாடப்பட்டனர்.

சென்னையில் செட்டியார் வகித்திருந்த சட்டநிரூபண விலாக்கா மானேஜர் வேலையின் மீதுள்ள தமது பாத்தியதையை இன்னுஞ் சிலகாலம் நீடிக்க வைத்திருக்க வேண்டுமென்று கருதி, லீவு நாள்களை அதிகரித்துக்கொள்ள முயன்றார். லீவு கிடைக்காமையினால் தமது பழய வேலையில் போய்ச் சேர்ந்துக்கொள்ளத் தீர்மானித்தார். அப்போது தம்புசெட்டியாரின் சிநேகராகிய மெயின் துரை, அங்ஙனஞ் செய்யாமற் றடுத்து, மைசூர் உத்தியோகத்திலேயே நிலைத்திருக்கும்படி வற்புறுத்தி,

"என் பிரிய தம்பு செட்டியாரே! நானித்துட னனுப்பியிருக்கிற மதராஸ் கவர்ன்மெண்ட் சீப் செக்ரிடெரியாகிய மிஸ்டர் எல்லிஸ் (Mr. R. S. Ellis) எழுதிய கடிதத்தைப் பார்க்க மிக்கத் திருத்தியடைவீர் தைரியமாயிரும். உம்முடைய உத்யோகக் கடமைகளை நெறியாய்ச் செய்துவாரும். யாருக்கும் பயப்பட வேண்டாம்"

என்றெழுதினர்.

## எல்லிஸ்துரையின் கடிதம்.

1867-ம் ௵ டிசம்பர் ௴ 24௳.

எனது பிரியமுள்ள மெயின் !

தம்பு செட்டியாரைப் பற்றிப் பவுரிங் பின்வருமாறு எனக்கு எழுதுகிறார் :—

"தம்புசெட்டிக்கு ஏற்கனவே கொடுத்திருக்கிற ஓய்வுநாளை (Leave) அதிகரிக்கும்படிச் சிபாரிசு செய்திருப்பதாக எழுதியிருக்கிறீர்கள். இவர் இப்போது மைசூர் ஜுடிஷியல் கமிஷனர் ஆபீஸ் சிரஸ்ததாராக விருக்கிறார். மிஸ்டர் ஸாண்டர்ஸ் (Mr. Saunders) துரை இவரை எங்கள் ஸ்மால்காஸ் கோர்ட்டு (Small Causes, Court) இரண்டாவது பதில் ஜட்ஜாக நியமிக்கும்படி சிபாரிசு செய்திருக்கிறார். இவரைப்பற்றி எல்லோரும் நல்ல அபிப்பிராயங் கொண்டிருக்கிறதாக நான் அறிந்து சந்தோஷிக்கிறேன். அன்றியும் கை சுத்தமுடையவராக விருக்கிறாரென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அப்படியாகில், இவருடைய பரிசுத்தத்தனத்தைப் பரிட்சிக்கும்படியான வெத்தனங்கள் நடந்திருக்கவேண்டுமென்று யூகிக்கிறேன். பின்னுக்கு இவர் உதவிக்கமிஷனர் (Assistant Commissioner) ஆவாரானால், ஜுடிஷியல் கமிஷனரின் சிரஸ்-

தாவாயிருந்துக் கொண்டிருப்பதை மனம் பொறுமலிருப்பவர்களின் தந்திரோபாய சாதுரியங்களின்மீது எதிர்த்துப் போராடவேண்டியிருக்குமென்று, சற்று மனந்தளர்ந்து, அதைரியப்படுகிறார் போல் காண்கிறது. தம்புசெட்டியின் உத்தியோகவாழ்வின் கடை இவரை முன்னுக்கு அதிகமேலான பதவிக்குரித்தானவராய்க் கொண்டுவருமெனக்காணாது. அவர் மனந்தளர்ச்சியுறாது தைரியங்கொள்ளும்படி நீர்செய்யக்கூடும்.

இங்ஙனம்,

உமது உண்மையுள்ள,

**R. S. எல்லிஸ்."**

எல்லிஸ்துரையின் கடிதத்தையுணர்ந்தும், மெயின்துரையை நேரே போய்க்கண்டு பேசி அவருரைத்த புத்திகளைக் கேட்டும், தம்புசெட்டியார் சென்னைக்குத் திரும்பிப்போகும் எண்ணத்தையகற்றி மைசூர் உத்தியோகத்தை விட்டு நீங்காமலிருந்தனர்.

தம்புசெட்டியார் சட்டஞானத்தில் மிகத்தேர்ந்தவராயும், அனுபவ சாலியாயுமிருப்பதோடு யோக்கியதா பட்சமு முடையவராதலால், இவரை மூன்று மாத ரஜா பெற்றுப்போகும் வெங்கடவரதய்யங்காருக்குப் பதிலாக, ஸ்மால்காஸ் கோர்ட்டு 2-வது ஜட்ஜாக நியமிக்கும்படி ஜூடிஷியல் கமிஷனர் மிஸ்டர் ஸான்டர்ஸ் துரை சிபாரிஸ் செய்ததைச், சீப் கமிஷனர் பவுரிங்துரை ஒப்புக்கொண்டு, தம்புசெட்டியாருக்கு அவ்வுத்தியோகத்தைத் தந்தனர். அந்த நியமனத்தை யறிந்த கிண்டர்ஸ்லி துரை மிக்க மகிழ்ச்சியடைந்து, தம்புசெட்டியாருக்கு நிருபம் ஒன்றுவரைந்து, அதில்,

"நீர் சிரஸ்ததார் உத்தியோகத்தைச் செய்துப் பெற்ற புகழ்போல் இந்தப் பதவியிலும் கீர்த்தி பெறுவீரென்று நான் நம்புகிறேன். இவ்வேலையிலுள்ளளவும், யாதொருகாரண முன்னிலையாக ஒருவருக்குந் தயவு காட்டாமலும், பிறரிடத்தில் யாதொரு பொருளையும் ஆசிக்காமலுமிருந்து, மைசூரில் எல்லோரும் விரும்பத்தக்க தீபம் போலப் பிரகாசிக்கக்கடவீர். நீரிப்போதடைந்த உயர்வு, நான் உம்மைச் சிரஸ்ததாராக நியமித்தபோது, அந்தநியமனஞ் சரியானதல்லவென்று, உம்மையும் என்னையும் சரியாயறியாதவர்கள் கண்டித்து வாதித்த புத்தியற்றதன்மையை விளக்கி, நான்செய்த நியமனம் தக்கதென என்னைக்கவுரவப்படுத்தியதாகக் காட்டுகிறதென்று எண்ணுகிறேன்"

என்றெழுதினர்.

இந்த நீதிபதி வேலையைத் தம்புசெட்டியார் நடத்துங்காலையில் கடன்பத்திர வழக்கொன்று அவர்முன் கொண்டுவரப்பட்டது. அதனைத் தாம் விசாரணை செய்கையில், வழக்கை எதிர்த்தப் பிரதிவாதிகள், இந்தப்பத்திரம் எழுதப்பட்டு ரிஜிஸ்ட்ராரால்பதியப்பெற்றாலும், பணம் பெறவில்லையென்று வாதித்தார்கள். பத்திரத்தைப் பதிவு



செய்தபோது ரிஜிஸ்ட்ராரால் பணம் பெற்றீர்களோவென்று கேட்கப்பட்டு, அவர்கள் பெறவில்லையென்றுசொன்ன வார்த்தைகளைப் பத்திரத்தின் மேலெழுதியிருந்ததால், அதையே தங்கள் வாதத்துக்கு ஆதாரவாகக் கொண்டார்கள். நீதிபதியாகிய தம்புசெட்டியார் Registration Act என்னும் பத்திரப் பதிப்புச்சட்டம் 66-வது உட்பிரிவின் விதியை அனுசரித்து, அவ்வாறு பத்திரத்தின்மேல் எழுத ரிஜிஸ்ட்ராருக்கெவ்வளவும் அதிகாரமில்லையென்று கண்டு, விரிவான ஒருதீர்மானமெழுதி வாதிபுறம் அனுகூலமாகத் தீர்ப்புச் செப்பினர். மதராசில் வெளியாகும் ஜூரிஸ்ட் (Jurist) என்னும் பத்திரிகை இந்தத் தீர்மானத்தைக்குறித்து வியாக்கியானம்பண்ணி, முதலில் குற்றங்கூறியது; பின்னர், மேற்படி தீர்மானத்தை நன்றாய்ப் படித்துணர்ந்து, பத்திரத்தைப்பதிவுசெய்யும் ரிஜிஸ்ட்ராருக்குக் கடன் பத்திரத்தின்மேல் பிரதிவாதிகள் பணம்பெற்றதை எழுதும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கவில்லையாகையால், பணம் பெற்றுக்கொள்ளவில்லையென்று அவரெழுதிவைத்தது சட்டத்தின் எல்லையைக்கடந்து செய்ததாகுமென்று ஒப்பி, மேற்படி ஜூரிஸ்ட்டின் பத்திராதிபர் தம்புசெட்டியார் செய்த தீர்மானமே சரியென்று, அதைச்சிலாகித்துப்பேசினார். இப்படியே இந்தக் கோர்ட்டில் வந்த அநேகவழக்குகளைச் செட்டியார் விமரிசையோடு தீர்மானஞ்செய்துவந்தமையைக் கண்டவர்கள் இவருடைய திறமையையும் நடுவுநிலைமையையும் பற்றி மிகவும் புகழ்ந்தார்கள்.

1867-ம் வருஷம் மார்ச்சுமாதம் 27-தேதி தம்புசெட்டியார் தமது கோர்ட்டுக்குப்போகப் புறப்படுகையில், மஹாராஜா கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் G.C.S.I. அவர்கள் தேகவியோகமாயினரென்ற துக்கசமாசாரத்தை யறிந்தனர். மைசூர் சமஸ்தானமுழுவதும் இதைக்கேட்டுத் துயருற்று, நெஞ்சுகலங்கி, நெடுங்காலமாகவுள்ள இந்தச்சுதேசராஜாங்கநிலைமை யாதாகுமோவெனப்பயந்தது. இந்தத் துக்க சம்பவத்தையுணர்ந்து இந்தியதுரைத்தனத்தார், மைசூர் அரசாங்கத்துள்ள பிரஜைகள் உள்ளம் வாட்டமடையாமல், கீழேசொல்லப்பட்ட பிரகாரம் அனைவருமறியப் பிரசித்தப் பத்திரிகையொன்று வெளியிட்டனர். அதனைக்கண்டு உலகமுழுதும் வியந்தது :—

"இந்தியதேசத்தில் ஆங்கில ராஜாங்கத்துடன் இளமைதொட்டுச் சம்பந்தமும், சிநேகஒருமையும் பெற்றிருந்த மைசூர் மகாராஜா, கிருஷ்ணராஜ உடையர் பஹதூர் G.C.S.I. அவர்கள், நிகழும் மார்ச்சுமாதம் 27-ம் தேதி இறந்த செய்தியை, இந்திய தேசாதிபதியான இராஜப்பிரதிநிதியவர்கள், தமது மந்திரசபையிலிருந்து யாவருமுணர விசனத்துடன் அறிவிக்கின்றனர். மாட்சிமைபடைத்த விக்டோரியா மஹாராணி துரைத்தனத்தின் அனுமதிபெற்ற, இதனுடன் சேர்த்திருக்கும், இராஜகட்டளைப் பத்திரத்துக்கிணங்கக், காலஞ்சென்ற

மகாராஜா அவர்களின் ஸ்வீகார புத்திரராகிய ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் பஹதூர் மகாராஜா அவர்கள், இவ்வரசுக்கு உரியரெனத் தெரிவு செய்யப் பெற்று மைசூர் மகாராஜா என அறிவிக்கப் படுகின்றார். இவருக்கு இளமை நீங்கி வயசு வருமளவும், மைசூர் இராச்சியம் இதற்கு முன் ஆளப்பட்டது போல், சீப் கமிஷனருடைய அதிகாரத்தின்கீழ் ஆளப்படும். அரமனையைச் சேர்ந்த எல்லாச் செய்திகளுக்கும், சுகத்திலுங், கௌரவத்திலுங் குறைவில்லாத இராஜ குடும்பப் பாதுகாப்புக்கும், அவ்வதிகாரியே ஒழுங்குகளைச் செய்வர். மகாராஜாவுக்கு வயது வரும்போது, அரசாட்சி அவருக்கு ஒப்பிவிக்கப்படும். அக்காலத்தில் அதற்கான நிபந்தனைகள் யோசிக்கப்படும்."

இந்தப் பிரசித்தப்பத்திரிகை போல்வதொன்றாகிய அறிக்கைப் பத்திரம் இளைய மகாராஜாவுக்கும், சிற்றரசர்கட்கும், ஏனையப் பிரஜைகட்கும், இந்து தேசாதிபதியால், அனுப்பப்பட்டு, இளவரசர், இவ்விராஜங்கத்துக் குரியவரென மதித்துப், பாதுகாக்கப்பட்டு வந்தனர்.

இப்படி யிருக்கத் தம்புசெட்டியார் பெங்களூர் ஸ்மால்காஸ் கோர்ட்டில் மூன்றுமாத பரியந்தம் இரண்டாவது நீதியதிபதி வேலையைச் சிறப்பாக நடத்தி, அதனோடு, டிப்டி ரிஜிஸ்ட்ரார் ஜெனரலுக் (Deputy Registrar General) குரிய கடமையும்பூண்டு, மிகவும் பிரசித்தியடைந்தனர்.

—※※※—

# CHAPTER VIII.

## எட்டாம் அதிகாரம்.

இரண்டாவது புத்திரன் ஜெனனம் - அசிஸ்டண்ட் சூபரின்டேண்ட் உத்தியோகத்துடன் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் - ஜுடிஷியல் அசிஸ்டண்டாகக் கோலாருக்கு மாற்றம் - கோலார் நகர்வளம் - மூன்றவது புத்திரன் ஜெனனம் (1868 - 1871).

மூன்று மாதங்கள் லீவு பெற்றிருந்த வெங்கட வரதையங்கார், தமது ஸ்மால்காஸ் கோர்ட்டு நீதியதிபதித் தொழிலைத் தம்புசெட்டியாரிடமிருந்து கைக்கொள்ளவே, செட்டியார் தமது சிரஸ்ததார் உத்தியோகத்தைச் சேர்ந்தார். இவ்வுத்தியோகத்தில் சில காலமட்டும் இருக்கும்படியாயிற்று.

1868-ம் வருஷம் ஜுன் மாதம் 6-ம்தேதி, தர்மராஜ் என்னும் பெயரைத்தரித்த இரண்டாவது புத்திரன் பிறந்தனன். பெண் மக்கள் அதிகமாய்க் குடும்பத்தில் பிறக்கிறதைவிட, ஆண்மக்கள்



அதிகரிப்பது எல்லோருக்குந் திருப்தியளிக்கத் தக்கதாதலால், இந்த இரண்டாவது புத்திரன் ஜனனம் தாய் தந்தையர்க்கும், சுற்றத்தார்க்கு மிக்க மகிட்சியை விளைவித்தது.

1868-ம் ஆண்டு ஜுலை மாதம் 6-ம் தேதி, தம்புசெட்டியார் உதவிமேல்விசாரணைக்கர்த்தர் என்னப்படும் அசிஸ்டண்ட் சூபரின்டெண்ட் (Assistant Superintendent) உத்தியோகத்தை யடைந்து, அவ்வாண்டு டிசம்பர் மாதம் 29-ம் தேதியில், அவ்வுத்தியோகத்தில் 3-ம் தரத்துக்கு உயர்த்தப் பெற்றார். அன்றியும், முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அதிகாரத்தை யடைந்து, குடிகளிடத்திலிருந்து நிலத்தீர்வை வசூலித்தல், தேசவிசாரணைச் செய்தலாகிய இரண்டு கடமைகளுடன், தம் கீழுள்ள இரண்டாவது மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் செய்யும் தீர்ப்புகளை விசாரிக்க வேண்டுமென விண்ணப்பஞ் செய்யப்படும்போது, அவற்றைப் பரிசோதித்து, அவர்கள் செய்த தீர்மானத்தை மாற்ற, அல்லது உறுதிப்படுத்தத் தக்க, அப்பீல் அதிகாரமும் பெற்றிருந்தனர்.

அந்நாளில் ஜில்லாவின் தலைமை யதிகாரிகளும், அசிஸ்டண்ட் சூபரின்டெண்டுகளும், தாசில்தார்கள் என்று சொல்லப்பட்ட அமுல்தார்களும், ஜுடிஷியல், ரெவினியு (Judicial and Revenue) இலாக்காக்களுக்குச் சம்மந்தப்பட்ட இரண்டுவிதக் கடமைகளைச் சேர்ந்த அதிக ஜவாப்தாரியுள்ள அரசிறைத்தொழிலையும் நீதி விசாரணைத்தொழிலையும், சரிவர நிறைவேற்றக் கூடாதவர்களாயினார்களென்று இந்திய துரைத்தனத்தார் கண்டு, இத்தீங்கு நீங்கும்படி, நீதி விசாரணை நெறியிலும், அமுல்தார் உத்தியோக அதிகாரங்களிலும், அசிஸ்டண்ட் சூபரின்டெண்டண்ட், டிப்டி சூபரின்டெண்டண்ட், சூபரின்டெண்டண்டுகளாகிய மூவரிலும், கடைசியாக ஜுடிஷியல் அசிஸ்டண்ட் கமிஷனர்களிலும், சில வேறுபாடுகள் செய்ய அநுமதி யளித்தார்கள். அதனால், எட்டு ஜில்லாக்கள் மீது, ஒவ்வொன்றுக்கு ஒருவராக எட்டுப்பேர் ஜுடிஷியல் அசிஸ்டண்ட் உத்தியோக நியமனம் பெற்றார்கள். அவருள் தம்புசெட்டியார் ஒருவரானார். இவ்வுத்தியோகம் பெற்ற இவர் 1869-ம் ஆண்டில் மே மாசத்தில், கோலாருக்கு மாற்றப்பட்டனர். இச்செய்தியைத் தம்புசெட்டியாருக்கு நேயரும், உபகாரியுமாகிய கிண்டர்ஸிலி துரையறிந்து சந்தோஷித்து,

"உமது உயர்ந்த ஒழுக்கத்தாலும், முயற்சியினாலும் இவ்வுயர்ந்த வேலையை நீர் பெற்றீரேயன்றி என்னாலல்ல. மைசூர் தேசத்தில் என்னென்ன மாற்றங்கள் நேரிட்டாலும், நீர் உம்முடைய குணநடைகளில் வேறுபாடடையாமல் இன்னு மேலான பதவியை யடைவதை யான் கேட்க விரும்புவேன்"

என்று தம் நிருபத்தில் கூறினார்.

கோலார் நகரமானது கோலார் ஜில்லாவிற்குப் பிரதான தலைநகராயிருந்தபோதிலும், அது பர்க்கியைப் போலொத்த காட்சியினை யுடையதாயிருந்தது. மட்கூறை வீடுகளில் மிக்க விஷமுள்ள தேள்கள் அதிகமாய்ச் சேர்ந்திருப்பன. விஷபேதி முதலிய கொள்ளை நோய்களால் பீடிக்கப்பட்டது. உண்ணுஞ் சலம் கைப்புள்ளதாய் அருசியையும், அசௌக்கியத்தையுந் தருவதாகும். இவ்வூரில் நான்கு பக்கங்களிலும், இடிந்து விளங்கிய மட்சுவர்களால் வளைக்கப்பட்டிருந்ததாகிய ஒரு சிறிய மட்கூறை வீட்டைத் தமக்கு வாசஸ்தானமாகத் தெரிந்துகொண்டு, தம்புசெட்டியார் அதிலிருந்து வந்தார். குடிபுகுந்த இச்சிறிய மட்குடிலை அடிக்கடி பழுதுபார்த்துப் புதுப்பிப்பதனால் மிகுதியான பொருட்செலவு நேர்ந்தது. கோலார் ஜில்லாவில் மூன்றாண்டு வரையும் வசித்து, நீதிவிசாரணைகளை நடத்தும் பொருட்டு, வியர்ச்சியங்கள் அதிகமாகக் குவிந்து கிடந்த சிக்கபல்லாபுரி முதலிய வெளியூர்களுக்கு மூன்று மாதங்களுக்கொருவிசை போவதாகிய கடமையை உடையவராகவுமிருந்தனர். சிக்கபல்லாபுரம் வழக்குகளுக்கு உறைவிடமானாலும், நந்தி மலையினடிவாரத்தில் வெகுகாலமாய் அழிவுற்ற பூர்வீக சைன்யந் தங்கிய இடத்துக்கருகாமையிலிருந்ததால், அது ஆரோக்கியந்தரத்தக்கதான வூராகும். பவுரிங் துரையியற்றிய கீழ்த்திசை அனுபவங்கள் என்று பேர்கொண்ட கிரந்தத்திற் செப்பியபடி, சிக்கபல்லாபுரமென்னு மிவ்வூர் மைசூர் மாகாணத்திலுள்ள எல்லா தேசங்களைவிட அதிக சௌக்கியமுள்ள இடமென்னலாம். 36-ம் மதராஸ் சுதேசகாலாட்படை (Madras Native Infantry) 1800-ம் வருஷத்தில் இந்த நந்திகிரி சமீபத்தில் சேர்க்கப்பட்டதால் நந்திபட்டாளம் (Nandy Battalion) என்னும் பெயரைக்கொண்டது. இப்பட்டாளந் தங்கியிருந்த விட்டும், அதிலழிவுற்றிருக்கும் வீடுகளும், மசானமும், இந்த நந்தி மலையடிவாரத்தில் இன்றுங்காணலாம். இம்மலையின் உச்சியில் மதுரமான நீரூற்றும், நந்தி தேவதையின் பேராலுள்ள ஒரு கோவிலு மிருக்கின்றன. கோலார் நகரத்துள் ஐதர்ஆலியின் பிதாவாகிய பட்டிமகமத் என்பவரது கோரி அல்லது சமாதிப்பள்ளிவாயில் பொருந்தி யிருக்கின்றது. இந்த நகரத்துக்கு மூன்று மைல்கள் தூரத்தில் சதசிருங்கரி அல்லது நூறுதலைக்குன்றும், அந்தரகங்கைக் கோவிலிலிருந்து புறப்படும் ஒரு ஊற்றுமுள்ளன. இந்த ஊற்றுநீர், அக்கோவில் தேவதையின் பக்தனொருவனுக்குக் காசிக்குப்போய் கங்காநதியில் மூழ்கும் சிரமையைக் கொடுக்காதிருக்கும்படி, அப்பக்தனுக்காக, காசியின் கங்காநதியிலிருந்து அத்தேவதையால் கொண்டுவரப்பட்ட நீர் என்று ஓர்



வதந்தி பரவியுள்ளது. இந்நகருக்கு 12 மைல் தூரத்தில் புகைரதம் ஓடும் இருப்புப்பாதை (ரெயில்வே) ஸ்டேஷனும், 7 மைல் தூரத்தில் பொன்விளைகின்ற பொற்சுரங்கங்களும் உள்ளன. இந்தப் பொற் சுரங்கங்களில் இங்கிலாந்திலுள்ள பெரும்பணக்காரர் பெரும் பொருளைச் செலவழித்து முயற்சித்து வேலையாட்களால் வேலையை நடத்தித், தகுதியான லாபத்தை யடைவார்கள். இவைகளால் மைசூர் ராஜாங்கத்துக்கும் நல்ல வருமானங்கிடைத்து வருகின்றது. தம்புசெட்டியார் கோலாரிலிருக்கிறபோது 1869-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி, அவருக்குச் சத்தியராஜ் என்னும் பேர்கொண்ட மூன்றாவது புத்திரன் உத்தம குணங்களெல்லாந் திரண்டு ஒருருவெடுத்தாப்போலப் பிறந்தான்.

# CHAPTER IX.

## ஒன்பதாம் அதிகாரம்.

பெங்களூருக்கு மாற்றம் - ரேவினியூ சப்டிவிஷன் ஆபீசர் (**Sub-Division Officer**) - ஜூடிஷியல் அசிஸ்டெண்டாக மறுபடி நியமனம் - இரண்டாவது மூன்றாவது புத்திரிகள் ஜெனனம் - பெங்களூர் ஸ்மால்காஸ் கோர்ட்டு முதல் ஜட்ஜ் (1872-1876).

தம்புசெட்டியார் ஜூடிஷியல் அசிஸ்டெண்டாக விளங்கிக் கோலாரில் இருந்த மூன்று வருடங்களில், தமது உத்தியோகத்தை நடத்திய விதத்தை அங்குற்ற பிரஜைகள் உணர்ந்து, இவர் மஹா கல்விமான், நீதி செலுத்துவதில் சிறிதும் பாரபட்சமில்லாத நீதிமான், என்று ஒருவாய்ப்பட்டது போலப் புகழ்ந்தனர். இப்புகழுரைகளெல்லாம் பிரதான கமிஷனராகிய சர் - ரிச்சர்ட் - மீட் (Sir Richard Meade) துரையின் செவிகளிற் புகவே, செட்டியாரை ஜில்லா டிப்டி கமிஷனர் (Deputy Commissioner) அல்லது கலெக்டர் அதிகாரத்திற் சேர்த்தற்குத் தகுந்த அனுபவமுடையவராக்கும்படி எண்ணி, பெங்களூர், கோலார், தும்கூர், இம்மூன்று தாலூக்காக்களின் சப்டிவிஷன் ஆபீசராக நியமித்து, கோலாரினின்று பெங்களூருக்கு மாற்றினர். செட்டியார் ரெவினியு வேலைகளிலிப்போதே புதிதாய் நுழைந்தபோதிலும், கொஞ்சகாலத்துக்குள் அவ்வேலைகளை முற்றுமுணர்ந்து தேர்ந்து, ஒஸ்கோட்டாவென்னுந் தாலுக்காவில் முதன்முதலாக ஜமாபந்தி நடத்துகையில், தாலுக்கா உத்தியோகஸ்தர்கள் வைத்திருந்த கணக்கு

களைப் பரிசோதித்து, மோசக்கணக்குகளைக்காட்டி அரசிறைப் பொருள்களைக் கொள்ளையாடி யிருக்கிறார்களெனவறிந்து, களவிட்ட குற்றவாளியையுங் கண்டுபிடித்தனர். இராஜத் துரோகஞ்செய்த குற்றவாளியும், நீதித்தலத்திற் குற்றஞ் சாட்டப்பட்டுக் கடுங்காவற் றண்டனை யடைந்தனன். இப்படிச் செய்ததால், மற்ற உத்தியோகஸ்தர்கள் இனி அக்கிரமத்துக்குப் பாத்தியப்படாமலிருக்கும்படி பயத்தை யுண்டாக்கி, இவ்வகை குற்றங்கள் நடப்பதையுந் தடுத்தது. இச்செய்கையைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்த எழுதிய தம்புசெட்டியாரது (Report) அறிக்கைப் பத்திரத்தில், தாலுக்கா, ஜில்லா முதலியவைகளைச் சேர்ந்த கணக்குகளைப் பரிசோதிக்கும் முறைமையிலுள்ள குறையுகளை இன்னின்னதென வெடுத்துக் காட்டி, அவைகள் இனி நேராமலிருப்பதற்கான பாதுகாப்பும், கணக்குகளின் முறைகளை விர்த்திக்க வேண்டிய விதங்களையும் குறித்துக் காட்டினர். இதற்காகத் தம்புசெட்டியாருக்கு கவர்ன்மெண்டார் வந்தன மளித்தனர். இவ்வுத்தியோக விஷயமாய்க் காட்டிலும், நாட்டிலும், சஞ்சரிக்கவேண்டியிருந்தமையால், வெளியே செல்லும் அந்தந்த சமயங்களுக்கு வேண்டிய குதிரை யேற்றமும், பாதுகாவலுக்கு அவசியமாகிய துப்பாக்கிச் சுடுதலும், இவ்விரண்டு வித்தையுந் தம்புசெட்டியார் கற்றுக்கொண்டனர்.

1872-ம் வருஷம் நவம்பர் மாதம்-17 ம் தேதி, சத்தியவதியென்னும் இரண்டாவது புத்திரியும் 1873-ம் ஆண்டு டிசம்பர் மாதம் -ம் தேதியில் தனவதி யென்று பேர்கொண்ட மூன்றாவது புத்திரியும் பிறந்தனர்.

ரெவினியு இலாக்காவில் தம்புசெட்டியார் நெடுங்கால மிருந்துழைக்க விதிக்கப்பெற்றிலர். நீதி விசாரணைத் துறையைச்சேர்ந்த வேலைகளைத் திறமையாய் நடத்தத்தக்க வொருவர் வேண்டியிருந்த அவசியத்தால், ஜுடிஷியல் அசிஸ்டண்டாகத் தம்புசெட்டியாரைத் தும்கூருக்கு அனுப்பவும், அங்கிருந்து மறுபடியும் காப்டன் ஷா (Captain Shaw) என்பவரை விடுவிக்க பெங்களூர் சபார்டினெட் கோர்ட்டுக்கு ஜுடிஷியல் அசிஸ்டண்டாக மாற்றவும், வேண்டியதாய் நேர்ந்தது. இந்த நீதிபதியின் ஸ்தானம் ஆங்கில நியாயாதிபதிகளுக்கென்றே விதித்திருந்தாலும், அவ்விதியைக் கடந்து தம்புசெட்டியாருக்குக் கொடுக்கத் துரைத்தனத்தார் உடன்பட்டனர். அன்றியும் அந்த ஸ்தானத்தில் வீற்றிருக்கும் ஆங்கிலநியாயாதிபதிகளுக்குக் கொடுத்த விசேஷ படிச்சம்பளம், (Special Allowance) ரூபா 200, தம்புசெட்டியாருடைய மாதச்சம்பளத்துடன் சேர்த்



துக் கொடுக்கும்படித் தலைமைக் கமிஷனராகிய சர்-ரிச்சர்ட்-மீட் (Sir Richard Meade) உத்தரவளித்தனர். சட்டங்களின் பரிபாஷைகளை யுணர்ந்து சட்ட ஞானமடைந்த நியாயவாதிகள் (Advocates and Pleaders) கூட்டத்தினரோடு, விசித்திரமும், சிக்குமுடைய அநேக வழக்குகளை விசாரித்துத் தீர்மானஞ்செய்யும் வேலை லேசானதல்லவாயினும், இந்தஉத்தியோகத்தை வகித்த தம்புசெட்டியார் தமது கடமைகளைச் செலுத்தப் பின்னிட்டவரல்ல. சளையாமல் உழைத்து வேலைகளைக் கிஞ்சித்தும் பாக்கிவையாமல் எல்லோரும் அதிசயிக்கத்தக்கதாய் நடத்தி வெற்றிபெற்றனர். இதனிலும் உயர்வுள்ள பதவிக்கு நியமிக்கப்படப் பாத்திரரானார்.

1875-ம் ஆண்டில், நமது இராஜசக்கிரவர்த்தியாகிய ஏழாவது எட்வர்ட் அவர்கள், வேல்ஸின் இளவரசராக அப்போதிருந்த நிலைமையில், இந்தியதேசமுழுவதுஞ் சுற்றுப் பிரயாணஞ்செய்து காண்பதற்காக வந்தனர். அவரை எதிர்கொண்டு உபசரித்துக்காண, மைசூரினின்று ஒரு இராஜ்யபாரதானுபத்தியம் சென்னைமாநகர்க்குச் சென்றது. அதில் தம்புசெட்டியாரும் ஒருவராகநின்றனர். அச்சமயம் இளவரசரை நேரில்போய்த் தரிசிக்கும் பாக்கியமும் பெற்றனர். இங்ஙனம் தரிசித்தனர் என்றதில் மகிழ்வடைந்த மிஸ்டர் மெயின் துரை, தம்புசெட்டியாருக்கு ஒரு நிருபம் வரைந்து, அதில்

"வேல்ஸ் இளவரசர், நேர்த்தியும் ஆண்மையும் அமைந்தவர். இந்திய நாட்டை அவ்வரசர் கண்டதனால் அவருக்கு மிகுந்த நன்மைவிளைவதோடு சுதேச இராஜாக்களுக்கும் காரியசித்தியுண்டாகும்,"

என்று கூறினர்.

பெங்களூர் ஸ்மால்காஸ் கோர்ட்டு முதல் ஜட்ஜி மேஜர் லின்ட்ஸே (Major Lindsay) 1876-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ரஜா பெற்றுப் போயினர். இந்த ஸ்தானம் இக்கோர்ட்டுண்டாயின 1862 ம் ஆண்டு முதலிதுவரையில் ஐரோப்பியருக்கே கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்நாளில் சீப் கமிஷனராயிருந்த ஹானரெபில் மிஸ்டர் டாலியல் (Hon'ble Mr. Dalyell) துரைமேற்படி லின்ட்ஸே துரைக்குப் பதிலாக முதல் ஜட்ஜாகத் தம்புசெட்டியாரை நியமித்தனர். இந்த ஸ்தானத்திலும் வீற்றிருந்து நியாயவாதிகளாலும் பிரஜைகளாலும் வெகுவாய்ப் புகழப்படுங் கீர்த்தியை யடைந்தனர். விசேஷமாய் இந்த நியாயஸ்தலத்தில் இவர் செய்த தீர்மானங்களின்பேரில் அப்பீல் இல்லாமலிருந்ததால், அவைகள் மறுக்கக்கூடாதவகையில் நியாயத்துக்கும் சட்டத்துக்கும் பொருந்தி யிருந்தமைகண்டு, எல்லோருந் திருத்தி யடைந்தார்கள்.

# CHAPTER X.

## பத்தாம் அதிகாரம்.

---

**சீப் கமிஷனராபீஸ் ஹெட் சிரஸ்ததார் - நான்காவது புத்திரன் ஜெனனம் (1876-1879).**

தம்புசெட்டியார் பெங்களூர் ஸ்மால்காஸ் கோர்ட்டில் முதல் நீதிபதியாக வீற்றிருக்கையில், இதனைவிட்டு வேறே உத்தியோகத்துக்குப் போகவேண்டியதான சம்பவம் திடீரென நேர்ந்தது. மைசூரின் முதற் கமிஷனருடைய ஆபீஸ் ஹெட் சிரஸ்ததார் (அல்லது தீவானென்று யாவராலும் வழங்கப்பட்ட) உத்தியோகத்தை வகித்திருந்த மிஸ்டர் கோபாலையர் என்பவர் திடீரென மரணமடைந்தனர். இவரது இடத்துக்குத் தக்க ஒருவரைத் தெரிந்துகொள்ளச் சீப்கமிஷனர் டாலியல்துரை தம்முடன் தேசவரசாட்சியிற் சம்பந்தமுடைய ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொள்ள வினவினர். அவர்கள் எல்லோரும் ஒரே வாக்காய்த் தம்புசெட்டியாருக்கே இப்பதவி தகும் தகுமென்றார்கள். அதனால் ஹெட் சிரஸ்ததாரென்னும் தீவான் உத்தியோகபதவி தம்புசெட்டியாருக்குக் கொடுக்கப்பட்டது. இதற்காகத் தம்புசெட்டியாரை அப்போது ஐதராபாத் ரெசிடெண்டாயிருந்த சர்-ரிச்சர்ட் - மீட் (Sir Richard Meade) துரை வாழ்த்திப் பின்வருமாறு ஒரு கடிதம் வரைந்தனர்:—

"அன்புள்ள தம்புசெட்டியாரே, விசனிக்க[illegible]க கோபாலையர் மரணத்தினால் காலியாயின ஹெட் சிரஸ்ததார் வேலைக்கு [illegible]ஸ்டர் டாலியல் உம்மைத் தெரிந்தெடுத்தமை எனக்கு முன்னுதாகத் தெரிவிக்க, மே மாதம் 29-ம் தேதியில் நீர் எழுதிய கடிதம் இன்றுகாலையில் கிடைக்கப்பெற்று, நான் சந்தோஷமுற்றேன். இவ்வலுவலுக்கு உம்மைத்தெரிந்தெடுக்க மிஸ்டர் டாலியல் என்னுடன் ஆலோசித்தார். உமக்கு அனுகூலமாக எழுத மனக்களிப்புற்றேன். இவ்வுயர்வான அந்தஸ்துக்குடைய கடமையை நீர் செவ்வையாகச் செய்வீரென்னும் நம்பிக்கையுடையேன். நீரிப்பதவியை யடைந்ததற்காக நான் உம்மை மனதார வாழ்த்துகிறேன். உமதுநிலைமையிற் பொறுமைப்படுவோர் பலர் உம்மைச்சூழ்ந்திருப்பார்கள். இதனால் அதிகரிக்கக் கூடிய கவலையை மாற்றிக்கொள்ள நீர்புத்தியோடும் தளர்வுறாத எச்சரிக்கையோடும் நடந்துகொள்ளுதல் உமது கடனாகும். மிஸ்டர் கோபாலையர் இறந்தமை யான்கேட்டு மிகவும் வருந்தினேன். அவருடைய குடும்பத்தோர்க்கு நேர்ந்த நஷ்டத்தைக் குறித்து நான் அதிக விசனமுற்றேனென, அவர்களுக்கு என்பரிதாப உணர்ச்சியைத் தெரிவிக்கவேண்டுகின்றேன். லேடி மீட்துரைமகள் நீரடைந்த இந்த உயர் பதவியில் வெற்றியுண்டாக வேண்டுமென்று என்னுடன் சேர்ந்து விரும்புகின்றனள்."



இக்கடிதத்திற் சொல்லிய மேன்மையுள்ள புத்திகளுக் கிணங்கி நின்று, திறமும் கண்ணியமும் பெற்ற செக்ரிடெரியாகிய கர்னல் ட்ரெட்வே கிளார்க் (Col. Treadway Clarke) துரையோடு சேர்ந்து, அதிக பிரயாசைப்பட்டுப் பல வேலைகளைச் சரியாய்ச் செய்து, மிஸ்டர் R. A. டாலியல் (Mr. R. A. Dalyell) மிஸ்டர் ஸாண்டர்ஸ் (Mr. C. B. Saunders, C.B.) மிஸ்டர் ஜேம்ஸ் கார்டன் (Mr. James Gordon) ஆகிய இம்மூன்று சீப்கமிஷனர்களின் மதிப்புக் குரியவராகித் தம்புசெட்டியார் விளங்கினர்.

பூர்வத்தி லிவ்வுத்தியோகத்திலிருந்த சிரஸ்ததார்கள் ரெவினியு ரிகார்டுக ளென்னப்படும் அரசிறைக்குரிய சாதனங்களைப் பாதுகாக்கும் உத்தரவாத முடையவர்களாய், தேசவள முதலிய விர்த்தாந்தங்களை யறிவிக்குஞ் சாதனங்களை விரும்பிய வண்ணமெல்லாம் கீழ்வுத்தியோகஸ்தர்கள் அனுப்ப, அவற்றை யெல்லாம் ஒன்றுபடத்திரட்டித் தங்கள் அபிப்பிராயங்களையுங் குறித்துக், காரியதரிசி (Secretary) மூலமாகச் சீப்கமிஷனருக்கனுப்பி அவருடைய கட்டளைகளைப் பெறுவார்கள். அவர்கள் செய்த வேலையி துவாகும்.

தம்புசெட்டியார் இவ்வுத்தியோகத்தை வகித்திருந்த காலத்தில், இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதி பெற்று, அசிஸ்டண்ட் செக்ரிடெரியென்னும் பேரும், அதற்குடைய அதிக கடமைகளையும் வேலைகளையுஞ் செய்யும்படி அவருக்கு அதிகாரமுங் கொடுக்கப் பட்டிருந்தன. செட்டியார் இந்நிலைமையிலிருந்துக் கொண்டு, நிபுணர்களான கர்னல் கிளார்க் (Col. Clarke), கர்னல் பக்கில் (Col. Puckle), கர்னல் கோல் (Col. Cole), மிஸ்டர் கந்நிங்காம் (Mr. Cunningham). இந்நான்கு செக்ரிடெரிகளுடன் சேர்ந்து வேலைசெய்யும் கவுரவம் கிடைத்தது. லோகல் பண்ட் (Local Fund), காட்டிலாகா (Forests), முனிசிபல் இலாகா (Municipal), தேவஸ்தான முதலிய விசாரணையுடைய முஸ்ராய (Muzroi) யிலாகா முதலியவற்றைத் தம்வசங்கொண்டு விசாரணை செய்யும் மேலதிகாரியாய் அவைகளுக்குடைய வேலைகளெல்லாம் தாமே செய்துவந்தார். இவ்வேலைகள் முற்காலத்தில் முதற் காரியதரிசியாயிருந்தவர்மீது சுமந்தவைகளாயிருந்து இப்போது அவரை விட்டு நீங்கியதால், அவருக்கு அவகாசம் கொடுத்து இளைப்பாறச் செய்தது.

கர்நாடகதேச முழுதும் கடுங்கத் துன்பஞ்செய்த 1876-1877, தாது, ஈஸ்வர வருஷத்திய டஞ்சந்தோன்றிய போது, இந்தியகவர்ன்மெண்டாருக்கு அனுப்ப வேண்டியதாயிருந்த வாராந்த அறிக்

கைப் பத்திரங்களையும் (Reports), அதனைப் பற்றிய கணக்குகளையும் சாதனங்களையும் தயாரிக்கும் வேலைகளும் தம்புசெட்டியாருக்குக் கொடுக்கப்பட்டன. பஞ்சத்துக்குரிய வேலைகள் பார்க்கும்படி யேற்படுத்தப்பட்ட கமிஷனர் எல்லியட் (Mr. Elliot) துரை மைசூருக்கு வரும் வரையில், அவ் வேலைகளைத் தம்புசெட்டியார் நடத்திவந்தனர். இப்பஞ்சமானது, மைசூர் அரசாட்சிக்குட்பட்ட நாடுகளில் விளைத்திட்ட பெருந்துன்பம் அத்தேசங்களது முற்பட்ட பல துன்ப சரித்திரங்களில் நினைக்கிணையில்லாத தன்மையதெனச் சொல்லத்தக்கதாம். இராஜாங்கத்தாரும் அச்சமயத்தில் பெரும் பொருளைச் செலவிட்டுப், பஞ்சந்தணிவதற்காக முயற்சித்தனர். ஆனபோதிலும் அந்நாட்டின் பிரஜைகள் மொத்தத்தில் நாலில் ஒரு பாகம் உயிர் துறந்தனர். பஞ்சங்கொலையும் வரையில், அதன் நிவர்த்திக்குரிய வேலைகளை அதியூக்கமுடன் தம்புசெட்டியார் நடத்திய அவரது அபாரசக்தியைக் காரியதரிசியாகிய கிளார்க்கு துரை மிகவுங் கொண்டாடினர். அவரெழுதிய கடிதத்தில்,

"நண்பரே! நீர்ஹெட் சிரஸ்ததாராகவும் உதவிக்காரியதரிசியாகவு மிருந்து நாம் இருவரும் இணங்கித் தொழில்நடத்திய இரண்டரை வருஷத்தும் பஞ்ச காலத்தில் நீர் உதவிசெய்த இனிய ஞாபகத்தை நான் எந்நாளு மறவேன். அக்காலத்தில் நாமிருவருஞ் செய்த துன்பமிருந்தவேலையைக் கவனிக்கும்போது திரும்பவும் அப்பேர்கொத்த வேலையைச் செய்யக்கூடுமென யான் உத்தேசிக்க வில்லை"

என்று கூறினர்.

இக்கொடிய பஞ்சத்தினால், இராஜாங்கக்கஜானாவில் கையிருப்பி லிருந்த ஒருகோடியே அறுபதுலட்சம் ரூபாக்கள் செலவானதுமல்லாமல் 80-லட்சம் ரூபா கடனுமேற்பட்டது. இக்கடனைச் செலுத்துவதற்காக, அரசாங்கத்தில் எந்தவகையால் எந்தச்செலவைக் குறைக்கலாமென்கிற நினைவு உண்டாயது. இதுவிஷயத்தில் செய்யவேண்டிய காரியங்களை விசாரித்துத் திருத்தமாகச் செய்வதற்காக ஓர் விசாரணைச் சபை (Committee) கூடியது. அச்சபையின் ஒரு அங்கியாகத் தம்புசெட்டியாரும் சேர்க்கப்பட்டனர். வித்தை இலாகா, நியாயஸ்தல விசாரணை இலாகா, இராணுவ இலாகா, போலீஸ்இலாகா முதலியவைகளின் செலவுகளைச் சுருக்கும்படி யேற்பாடு செய்து மைசூர் துரைத்தனப் பொருட் செலவில் 10-லட்சம் ரூபா குறைக்கப்பட்டது.

பஞ்சத்தின் சம்பந்தமாக வந்த அபார வேலையினால், விக்டோரியா மஹாராணியார் இந்துதேசச் சக்ரவர்த்தினி. யென்னும் பட்டப் பெயர் பெற்ற பட்டாபிஷேக மகோற்சவத்தை, டில்லிதேசத்தில்



1877-ம் வருஷம் ஜனவரி மாதம் கொண்டாடியபோது, தம்புசெட்டியார் அங்கு சென்று அம்மகோற்சவ வைபவத்தைத் தரிசிக்கக் கூடாதவராயினர். ஆயினும் அந்த மகோற்சவதினத்தில் விக்டோரியா சக்ரவர்த்தினியார் தந்தருளிய சம்மானமாகிய கீர்த்திப் பத்திரத்தைப், பெங்களூரில் சர் ஜேம்ஸ் கார்டன் துரையது கரத்தால் வழங்கப் பெற்றனர்.

"தம்பு செட்டியாரே, நீர் இருபத்திரண்டு ஆண்டுகள் அரசாங்க ஊழியத்தினை நன்முக நிறைவேற்றினீர். உமது சாமர்த்தியத்தோடு பொருந்திய உயர்ந்த ஒழுக்கத்தினால் இப்போதுள்ள இந்தச்சிரேஷ்ட கௌரவ உத்தியோகங் கிடைக்கப்பெற்றீர். பிறர் உதவியின்றியே மேன்மையை அடைந்தீர்; உத்தியோகத்தின் கடமையைப் புத்தியோடும், பூரணத்திருப்தி தரத்தக்க விதமாயும், நிறைவேற்றிச் சக்ரவர்த்தினியால் தெரிவுற்று இப்பத்திரம் பெற்றீர்,"

என்றுரைத்து, சர்-ஜேம்ஸ் கார்டன்துரை பத்திரத்தைத் தம்புசெட்டியாருக்கு அளித்தனர். சில நாள்களுக்குப்பின், டில்லி பதக்கம் இந்திய ராஜப்ரதிநிதியாகிய (Lord Ripon) (லார்ட் ரிப்பன்) கரத்தால் கொடுக்கத் தம்புசெட்டியார் பெற்றனர்.

தம்புசெட்டியார் இவ்வுத்தியோகத்தினைப் பெற்றபின், 1877-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 18-ம் தேதி, இவருக்கு நான்காவதுபுத்திரன் பிறந்தனன். இந்தப் புத்திரனுக்குப் பிதா தமது பெயரையே தந்தனர்.

சர்-ரிச்சர்ட்-மீட் (Sir Richard Meade) துரை மைசூர் தலைமைக் கமிஷனராகவிருந்த காலத்தில், மைசூர் அரசாங்கத்து ஊழியத்தினால் மாட்சிமைப்பெற்ற உத்தியோகஸ்தர்களின் குடும்பத்துப் பொருந்திய கல்வி தேர்ச்சியடைந்த இளைஞர்கள், கமிஷனர் முதலாகச் சொல்லப்பட்ட மேலான உத்தியோகங்களைப் பெறும்பொருட்டு, அவர்களைச் சேவகத்துறையில், "Attaches," அடுத்தவர்களாகச் சேர்த்துத் தொழில்களைக் கற்பிக்க வேண்டுமென்னும் ஏற்பாடாயிற்று. தக்காலத்தில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜிகளாகவும், கலெக்டர்களாகவும், கவுன்ஸிலர்களாகவும் பெரியபதவியிலிருப்பவர்களிற் சிலர், மேற்படி ஏற்பாட்டின்படி தெரிந்தெடுக்கப்பட்டுத் தம்புசெட்டியார் ஹெட்சிரஸ்தாராகவும் உதவி காரியதரிசியாகவு மிருந்தபோது, அவர் கீழிருந்து சீப்கமிஷனர் ஆபீசில் வேலைகளைக் கற்றுத் தயாராயினர். 1891-ம் வருஷம் ஜாரிக்குக் கொண்டுவரப்பட்ட மைசூர் சிவில் செர்விஸ் பரிட்சை (Mysore Civil Service Examination) மேற்படி "Attaches" ஏற்பாட்டினது கருத்துக்கொத்தே, பரிட்சையால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோடு சிலரை மஹாராஜா அவர்

கள் தமது சுயேச்சையாய் நியமனஞ்செய்யும் ஸ்வதந்தர அதிகாரத்தைத் தமக்குரியதாக வைத்துக்கொண்டனர்.

மைசூர் துரைத்தன வித்தையிலாகாவின் பூர்வஒழுங்குகளை மாற்ற, 1879-ம் ஆண்டு முயன்றபோது, தம்புசெட்டியார், அடியிற் காட்டிய மாற்றங்கள் செய்வது உசிதமென அபிப்பிராயங் கொடுத்தனர் :—

1-வது—நான்காவது பாரம் (4th Form) தரத்தினது கல்விக்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளை, ஹைஸ்கூல் (High School) காலேஜ் (College) பங்குகளினின்று பிரித்து, அவைகளை ஆங்கில சுதேசபாஷைக் கல்விச் சாலைகளாகப் பிரத்தியேகப் படுத்துதல்.

2-வது—B. A. பரிட்சையின் சாஸ்திரவகுப்பைச் சேர்ந்த பாடங்களை மைசூர் மாணாக்கர்கள் சென்னைக்குப்போய்க் கற்கும் அவசியத்தை விலக்கி அச்சாஸ்திர பாடங்களைப் பெங்களூர் சென்ட்ரல் காலேஜிலேயே (Central Col-lege) கற்பிக்கப் பண்டிதர்களை நியமித்தல்.

3-வது—சிறிய மாகாணமாகிய மைசூருக்கு அவசியகமில்லாத இஞ்சினீரிங் காலேஜை (Engineering College) எடுத்துவிட்டு, இஞ்சினீர் வேலைக்குரிய படிப்பைக்கற்றுக் கொள்ளவிரும்பும் மைசூர் மாணாக்கர்களுக்கு, உபகாரச் சம்பளங் கொடுத்துச் சென்னை இஞ்சினீரிங் காலேஜுக்கு அனுப்பிப் படிக்கச் செய்தல்.

4-வது—வித்தியா இலாக்காவின்மேல் அதிகாரி (Director of Public Instruction) யாகத் தகுந்த ஒருசுதேசியை நியமித்தல்.

தம்புசெட்டியார் உதவிக்காரியதரிசியாக இருந்து சீப் கமிஷனருடைய ஆலோசனைக்குக் கொண்டுவந்த மேற்சொல்லிய விஷயங்களில் பெரும்பாலும் ஒன்றொன்றாகப் பின்னாளில் நடந்தேறியது.

# CHAPTER XI.

## பதினோராம் அதிகாரம்.

ஜில்லா நியாயாதிபதி (District and Sessions Judge.) ஜேஷ்டபுத்திரியின் விவாகம் - மைசூர் அரசரின் சுயஆளுகை - மந்திராலோசனைச் சங்கத்தின் தலைமைமெம்பர் - ஜேஷ்டகுமாரனின் திருமணம் - நான்காவது புத்திரி ஜெனனம் (1879 - 1884).

மைசூர் அரசாங்கத்தை ஸ்ரீ சாமராஜேந்திர உடையர் பஹதூர் மகாராஜா அவர்களுக்கு ஒப்பிவிக்குங்காலம் சமீபித்துவந்ததால், பஞ்சம் நீங்கியவுடனே, ஆங்கில அதிகாரிகளின் ஆளுகையைச்



சுதேச அதிகாரிகளின் ஆளுகையாகச் செய்தற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய ஆங்கிலேய துரைத்தனத்தார் கவனஞ் செலுத்தினர். அதுகளில் முதன் முதலாக, அரண்மனை விசாரணைக் கர்த்தரும் எதிர்கால திவானாகத் தெரிந்தெடுக்கப்பட்டுப் போகிறவருமாகிய இரங்காசார்லுவைச் சீப் கமிஷனரின் அரசிறை யிலாகா காரியதரிசி (Revenue Secretary) யாக நியமித்தனர். இந்த நியமனத்தைப்பற்றிய உத்தியோக மாற்றங்கள் சீப் கமிஷனர் ஆபிசில் செய்யப்பட்டதனால், தம்புசெட்டியாரை ஜில்லா நியாயாதிபதி (District and Sessions Judge) யாக நியமித்தனர். இவ்வுத்தியோகம் தம்புசெட்டியாருக்குக் கொடுக்கவேண்டியதற்காக, இந்தியா கவர்ன்மெண்டாருக்கு 1879-ம் வருஷம் எப்பிரல் மாதம் 21உயில், சர் ஜேம்ஸ் கார்டன் என்னுந் தலைமைக் கமிஷனர் எழுதிய நிருபத்தில்,

"மைசூருக்குத் தலைமைக்கமிஷனரின் ஹெட் சிரஸ்ததாராகவும், உதவிக் காரியதரிசியாகவும், உத்தியோகஞ் செய்யும் தம்புசெட்டியார், இந்த மைசூர் மகாணத்துக்கு வந்தபிறகும், அதற்குமுன் சென்னை இராஜதானியில் உத்தியோகஞ் செய்தகாலத்தும், நியாயஸ்தலத்துக்குரிய வேலைகள் மிக நன்றாக உணர்ந்து அநுபவசாலியாயினர். இவர் தெளிந்த திறமையும், மிக்க முயற்சியும், மேன்பட்ட குணமுடைய அதிகாரி. இவ்விடத்தில் இருபது வருஷமாகச் செய்த துரைத்தன ஊழியத்தால் இவர் அடைந்துள்ள யோக்கியதாபட்சத்தாலும், நியாயஸ்தல விசாரணையிலாகாவின் இணக்கமும் அநுபவமும் பொருந்திய தன்மையாலும், ஜில்லாநியாயாதிபதியாக உயர்வடையத்தக்கவர்,"

என்று வரைந்தனர்.

முன்னாளில் ஐரோப்பிய டிவிஜன் கமிஷனர் (Division Commissioner) களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த உயர்வான முக்கியமான வேலையை, முதல் முதலில் சுதேசிகளில் பெற்றவர் தம்புசெட்டியார்தாம். கொலைபாதகக் குற்றவாளிகளுக்கு மரணதண்டனைவிதிக்கும், இப்பெரிய அதிகாரத்தை முதல் முதலில் தென்னிந்தியாவில் அடைந்த இந்தியரிவரே. சுமார் ஐந்து வருஷகாலம் இவ்வுத்தியோகத்தைப் புகழத்தக்க சாமர்த்தியத்தோடும் நடுவுநிலைமைகுன்றாதும் தம்புசெட்டியார் செய்துவந்தனர். சமயம் நேரிடும்போது, நியாய ஸ்தலங்களின் விசாரணைத் தலைவரும் தலைமை நீதியதிபதியுமாகிய ஜூடிஷியல் கமிஷனர் கோர்ட்டில் அவருடன் வீற்றிருந்து முக்கியமான பலச் சிக்குடைய அப்பீல் வியாச்சியங்களைக் கேட்டு ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும்படி, இந்திய துரைத்தனத்தார் விதித்த சிலவிதிகளை யநுசரித்துத், தம்புசெட்டியார் பலகால் அழைக்கப்பட்டனர். அவ்வண்ணஞ்சென்று செய்த இவரது தீர்மானங்களினால் விளக்கிய சட்டஞான உணர்வும் நியாயமும், மேலோர்கண்டு வியந்து கொள்ளவும், இவரை இன்னுமேலான பத

விக்கு உயர்த்தவும் காரணமாயின. டிஸ்டிரிக்ட் செஷன்ஸ் ஜட்ஜாகத் தம்புசெட்டியார் நியமிக்கப்பெற்றதன்பொருட்டு அவருடைய சிநேகர்கள் பலபேர் அவரை வாழ்த்தினர்கள். அவர்கள் பலருள்ளும், தம்கூர் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாக விளங்கிய (பின்னர் திவானை) சேஷாத்திரி ஐயரவர்கள், 1879-ம் வருடம் மே மாதம் 27உ எழுதியனுப்பிய நிருபம் முக்கியமானதும் நல்ல கருத்தினைக் கொண்டதாயுமிருந்தது. அதில்,

"நேயரே! நீர் உன்னதஸ்தானத்திற்கு உயர்த்தப் பட்டதனைக்குறித்து உம்மை மனதார யான்வாழ்த்துதற்கும், இன்னும் நீர் உயர்வடைந்து, இந்த மைசூர் சமஸ்தானத்தில் அதிகமேட்டிமையுடைய பிரதம நியாய ஸிங்காசனாதிபதியாக வீற்றிருந்து பிரகாசிப்பதைக்காண விரும்பும் என் மனக்கருத்தினை விளம்புதற்கும், இடந்தரல் வேண்டும்"

என்று கூறினர்.

ஜூடிஷியல் கமிஷனருடன் தம்புசெட்டியார் வீற்றிருந்து விசாரித்து ஆலோசித்துத் தீர்ப்பளித்த முக்கியமான வழக்குகளில் எளந்தூர் ஜாகீரைச் சேர்ந்த வழக்கு ஒன்றாகும். இந்வியாச்சியத்தில் செய்த தீர்மானம், மைசூர் லாரிபோர்ட் (Mysore Law Reports) இரண்டாம்புத்தகம் 210-ம் ஏட்டில் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றது. இத்தீர்மானத்தில் தம்புசெட்டியார் கொடுத்த நல்ல அபிப்பிராயமானது, எளந்தூர் ஜாகீருக்குரிய 1885-ம் வருடத்திய 1-வது சட்டம் நிரூபணஞ்செய்வதற்கு இடந்தந்து, மைசூர் அரசின் முற்கால திவானாக விருந்த பூரணையாருடைய ஞாபகம் நீடிக்கவும், அவருக்குக் கொடுத்த எளந்தூர் ஜாகீர் அவருடைய வம்சத்தினரைவிட்டு வேறொருவருடைய ஸ்வாதீனத்துக்குப் போகாமற் காப்பாற்றப்படவும், அவ்வமிசத்தினரைச் சுகத்துடனும் கௌரவத்தன்மையினும் நிலைநிற்கவுஞ்செய்தது. மேற்படிசட்டத்தை நிரூபணஞ்செய்யத் தம்புசெட்டியாரது அபிப்பிராயமே மேற்கொள்ளப்பட்டதென்று, சர். கே. சேஷாத்திரி ஐயர் தம்புசெட்டியாருக்கெழுதிய அடியிற்கண்ட நிருபத்தால் விளங்கும்:—

"என் பிரிய ஐயா! எளந்தூர் ஜாகீர் சட்டத்தின் 2-வது பிரிவில், ஜாகீர் சுதந்தரத்தைப் பற்றிய விஷயத்தில் தான் செய்திருக்கிற மசோதாவை உமக்குக் காண்பித்து உம்முடன் கலந்துபேச மிஸ்டர் - கிருஷ்ணமூர்த்தி விரும்புகிறார். அவரோடு தாங்கள் தயைசெய்து தர்க்கித்ததிருந்தால் இப்பிரிவின் அம்சத்தைப்பூர்த்திசெய்துபடுத்த நம்மால் கூடுமாயிருக்கும். தங்களுண்மையுள்ள, K. சேஷாத்திரி ஐயர்." —

கிர்ஷ்ண மூர்த்தியோடு தம்புசெட்டியார் ஆலோசித்துப் பேசியபின், ஷை மசோதா செட்டியாரின் அபிப்பிராயங்களுக்கொத்து அநேகமாய் மாற்றப்பட்டது.



ஜில்லாநியாயாதிபதியாகச் செட்டியாரிருந்தகாலத்தில், அதாவது 1880-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 22உ, அவருடைய ஜேஷ்ட புத்திரி அமராபதியம்மாளின் திருமணம் சென்னையில் மிகச் சிறப்பாய் நிறைவேறியது.

வளமிகுந்த மைசூர் இராச்சியத்தை 1830-ம் ஆண்டு தொடங்கி 1880-ம் ஆண்டுவரையாண்டிருந்த ஆங்கிலதுரைத்தனத்தார் அவ்வரசாட்சியை மைசூர் மகாராஜா ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் பஹதூர் அவர்களுக்கு, 1881-ம் வருஷம் மார்ச்சுமாதம் 25உயில், ஒப்பிவித்தபிறகு, குடிகளிடத்தில் ப்ரீதியுடையவராக மகாராஜா அரசாட்சி செய்வதற்கு அனுகூலமாக வகுத்த மந்திரசபையுள், தம்புசெட்டியார் தமது நியாயாதிபதித் தொழிலுடன், பிரதம கௌன்ஸிலர் வேலையும் பெற்றனர்.

ஆங்கில துரைத்தனத்தார் மைசூரை ஐம்பது வருடம் அரசாட்சி செய்து, அந்த இராஜ்ஜியத்துக்குரிய மஹாராஜருக்கு அதனையாளும்படி ஒப்புவிக்கும் விர்த்தாந்தம் மிகவும் அதிசயிக்கத்தக்க தொன்றும். அதனைக்குறித்து தம்பு செட்டியாருக்கு மிஸ்டர் கிண்டர்ஸ்லிதுரை 1881-ம் வருஷம் ஜனவரிமாதம் 1உ எழுதிய கடிதத்தில்,

"இராச்சியத்தை சுதேசிகளுடைய ஆளுகையில் ஒப்பிவித்த ஆங்கில துரைத்தனத்தார், அவ்வாளுகைவிர்த்தியுற்று விளங்குவதைக் காணவிரும்புவது சகஜமே. ஆட்சியை நடத்தும் சுதேசாதிகாரிகள், இந்துதேசமுழுதும் உள்ளவர்களின் பார்வை தங்கள்மேலிருந்துக் கொண்டேயிருக்குமென்பதை, யுணரத்தக்கவர்களாவார்கள். இராஜ விஸ்வாசத்தைக் காப்பாற்றிக்கொண்டிருத்தலில் எல்லா நன்மையுமுண்டாகும். மைசூரையாளும் சுதேசாதிகாரிகள் அதிக சக்தியில்லாதவர்களல்ல,"

வென்று கூறினர்.—

நீதி விசாரணைத் தலைமையதிபதியாய் முன் மைசூர் அரசாட்சியில் வீற்றிருந்த ஒருவரின் மேலான அபிப்பிராயமும் உணர்ச்சியுமிதுவாகும்.

1881-ம் ஆண்டில் மார்ச்சுமாதம் 25உயன்று, ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் பஹதூர் சிம்மாசனாதிபதியாய் வீற்றிருந்தபோது, பலவகுப்பினரும் மகாராஜாவின் சமுகமடைந்து பலவாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தனர். அவ்வாழ்த்துக்களை யெல்லாங்கேட்டு மகாராஜா அவர்கள் அவைகட்குத்தக்க மறுமொழி கொடுத்தனர். கத்தோலிக்குக் கிறிஸ்துவக் கூட்டத்தின் சார்பில் டாக்டர் கோதோவென்னும் மேற்றிராணியார் (Bishop) மஹாராஜாவுக்கு ஒரு வாழ்த்துப்பத்திரம் வழங்கினர். அப்பத்திரம் இலத்தீன் பாஷையிலெழுதப்பட்டது. அது பொருள் நிறைந்ததும் நல்ல அபிப்பிராயங்கொண்

டாகி யாவராலும் அதிசயிக்கப் பெற்றுச்சிறந்தது. அதன் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பைப் பின்வருமாறு தம்புசெட்டியார் மகாராஜா சந்நிதானத்தில் வாசித்தனர் :—

“ மஹா மேன்மைதங்கிய இராஜப்பிரபுவே! இந்தச்சுபதினத்தில், உம்முடைய இராஜாங்க செங்கோலை யேந்தி இராஜாங்க ஆளுகையென்னும் அசுவத்தினது கடிவாளத்தை இளந்தைப் பருவத்திலேயுடைய உமது கரத்தில் பிடித்திருக்கும் இந்தச்சமயத்தில், உம்மைப் புடைசூழ்ந்திருக்கும் உமது திரண்ட பிரஜைகளின் இருதயங்கள் எவ்வளவோ மகிட்சியோடும் இராஜ விஸ்வாசத்தோடும் உம்மை வாழ்த்துகின்றன. எண்ணில் சொற்பமாகாததும், இராஜ விஸ்வாசத்தில் தடையாகாததுமான கத்தோலிக்கு வேதத்தை யநுசரிக்குங் கூட்டத்தைச் சேர்ந்த நாங்களும், எங்கள் இராஜாவும் அதிபதியுமாகிய உம்மை மிக்க மரியாதையோடும் மனக்களிப்போடும் வாழ்த்துகிறோம். உமது ஆளுகை திருத்தியைத் தரத்தக்கதும் பாக்கியமுள்ளதுமா யிருக்குமென்பதை யாங்கள் முன்னறிந்துரைக்கின்றோம். எல்லாக் காரியசித்தியும் விருத்தியு முடையதாக்க ஆளுகையாயிருக்க வேண்டுமென்றுங் கோருகிறோம். எங்கள் வேதக்கட்டளையின்படி, இராஜாதிராஜனும் எல்லா அரசர்களின் இருதயங்களை நடத்துபவருமான அந்த ஏகடவுளை நோக்கி உமக்கு எல்லா நன்மைகளுமுண்டாகப் பிரார்த்திக்கின்றோம். இந்தச் சிங்காதனத்தில் வீற்றிருக்க நாங்களும்மை இன்று முதல் முதலாகத் தரிசிக்கும்போது, முன்னாளில் ஓர் பெரிய இராஜ்ஜியத்தின் ஆளுகையைக் கைப்பற்றிய சலமோன் இராஜனின் ஞாபகம் எங்களுக்குண்டாகின்றது. இந்தச் சலமோன் அரசன் அநுபவமில்லாத சிறு பிராயத்திலே மிக்க கவலையோடும் பயத்தோடும் இராஜசெங்கோலைக் கைக்கொண்டதால் கடவுளை நோக்கித் தன் அச்சத்தை நீக்க உதவிசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவ்வரசனின் மன்றாட்டுக்கிரங்கச் சித்தமாகிக், கடவுள் அவன் சொற்பனத்திற்றோன்றி 'நாம் உனக் கென்ன கொடுக்கவேண்டுமென்று கோரினையோ அதைக்கேள்' என்றார். 'ஓ கர்த்தாவே உம்முடைய ஊழியனாகிய என்னை என்பிதாவுக்குப் பதிலாக அரசனாக்கினீர். நானோ சிறுகுழந்தை; ஆகையால் உம்முடைய ஜனங்களின் தன்மையைக் கண்டறியவும், நன்மையிது தீமையிது வென்னப் பகுத்தறியவும், உம்முடைய ஊழியனுக்கு ஞானவுணர்வை அநுக்கிரகித்தருளும்' என்று சலமோன் சொல்லக் கடவுள் சந்தோஷித்து 'நீ நீளிய ஆயுள், செல்வம், மகிமை இதுகளைக் கேளாமல் ஞானத்தைக் கேட்டபடியால் உனக்கு ஞான உணர்ச்சியுள்ள இருதயத்தைத் தந்தோம்; இதுவுமல்லாமல் நீ கேளாத ஆயுள், செல்வம், மகிமை இதுகளையும், உனக்கு முன்னிருந்த அரசர்கள்யாவருக்கு மிருந்திராவகையில் தந்தோம்,' என்று கடவுள் கூறினார். சலமோன் இராஜனின் இருதயத்தை விளக்கிய அந்த ஞானஉணர்வின் வரப்பிரசாதத்தை உமக்கும் கொடுக்கும்படியாய்க் கடவுளை எங்கள் முழுமனதோடு பிரார்த்திக்கின்றோம். உம்முடைய அரசாட்சி நீதியும் சமாதானமுள்ள அரசாட்சியா யோங்கவும், இந்த உம்முடைய அரசாட்சியில் நல்லோர் நன்னெறியில் பயமில்லாமல் நடக்கவும், தீயோர் இராஜபயத்தால் தீங்கினைச் செய்யாமலிருக்கவுங் கடவார்களாக! நீர் வீற்றிருக்கும் சிங்காதனம் பொன்மயமாய்க் கதிர்விட்டு ஜொலிப்பதுபோல உம்முடைய அரசாட்சி இராஜனுக்குரிய தான புண்ய இலட்சணங்களைக்கொண்டு பிரகாசிக்கக்கடவதாக! உம்முடைய சிங்காதனத்தைச் சூழ்ந்துத் தங்கள் ஆலோசனைகளால் உதவிசெய்யும் உமது



மந்திரிகள், நீதிநெறியில்நின்று, உம்முடைய செங்கோலுக்கமைந்த பிரஜைகளைச் சமாதானத்திலும் சந்தோஷத்திலு நிலை கொண்டவர்களாய் வாழச் செய்வார்களாக.”

இந்த வாழ்த்துப் பத்திரத்துக்கு மஹாராஜா அவர்கள் கூறிய மறுமொழியாவது :—

“ நல்ல கத்தோலிக்க வேதத்தின் அத்தியட்சத் தலைமைக் குருவாகிய லார்ட் பிஷப்புவே! கத்தோலிக்க வேதத்தினரான மக்களே! வேதாபிவிர்த்திக்காகப் பாடுபடுவோர் எப்போதுந் துரைத்தனத்தாருக்குச் சகாயஞ்செய்பவர்களாக விருக்கின்றனர். பிரஜைகளின் உள்ளத்தில் அமரிக்கையையும் இராஜவிஸ்வாசத்தையும் அளிப்பதற்கான உபதேசங்களைக் கத்தோலிக்கு வேதம் உணர்த்திவருவதினால், அது குற்ற மற்ற நம்பிக்கையுள்ள தன்மையை உடையதாகும். எமது இராஜ்ஜியத்திலுள்ள இருபத்தாறாயிரம் கன்னடக் கிறிஸ்தவர்கள் அமரிக்கையுங் கனிவுமுடையவர்களாய்ச், சிறிதேனும் விரோதமில்லாமல் அன்னியமார்க்கத்துள்ள சுதேசத் தோழர்களுடன் கூடித் தங்கள் உழைப்புக்குரிய குற்றமற்ற தொழில்களைச் செய்பவர்களாயிருக்கிறதே, உங்கள் வேதத்தைப் பரம்பச்செய்வதில் நீங்கள் ஜாதியாசாரக்கொள்கைகளைக் கலைத்து அழித்துவிடாமலும் அவர்களுக்குரிய அன்னியோன்ய நல்லெண்ணங்களைப் பங்கப்படுத்தாமலு மிருக்கிறீர்களென விளக்கிக்காட்டுகின்றது. பிரதிப்பிரயோஜனத்தைக் கருதாமல் தெய்வீகத் தொழிலை நீங்கள் நடத்திவருவதில் யாம் அநுதாபமுடையவராய்ச் சகாயஞ்செய்து வருவோமென்னும் உறுதியை உங்களுக்கு அறிவிக்கிறோம். உங்கள் வாழ்த்துப் பத்திரத்திற் செப்பிய யூதஜாதியாரின் சரித்திரம் எமதுள்ளத்தைக் கசிந்துருகச் செய்தது. கடவுளின்மீது விஸ்வாசமும், அவருடைய திருவுளக்கருத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்குந்தாட்சியும், எமது குடும்ப ஒழுக்கத்தையும் எம்முடைய ஒழுக்கத்தையும், இதுவரையில் ஆண்டதுபோல இனியும் ஆளும் என்பதை யாம் நிச்சயமாகக் கூறுவோம். அந்தப் பெருவல்லபமுடைய கடவுளை, எம்முடைய உதவிக்காகவும், எம்மைநடத்தும் வழிகாட்டியாகவும் முன்வைத்து எமது நாட்டையும் குடிப்பிரஜைகளையுஞ் சீராக ஆளும்படிச் செய்யும் எமது முயற்சி சித்தியடையவும் நாடுவோம்.”

மன்னவன் தொடுத்துக்கூறிய இம்மறுமொழிக்கு யாவருமகிழ்ந்தனர்.

மைசூர் அரசாட்சியை ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் பஹதூர், அவர்களுக்குக் கையளிக்கப்பட்ட தினத்தில் நடத்துஞ்சடங்குகளை நடப்பிக்கும் பொருட்டு இந்திய தேசாதிபதியான ஆங்கில இராஜப் பிரதிநிதிக்குப் பதிலாகச் சென்னை மாகாணத்துக் கவர்னராயிருந்த ஆதம்துரை மைசூருக்கு விஜயஞ் செய்தனர். அவர் சில நாட்களுக்குப்பின் இப்பூலோக வாழ்வை விட்டு நீங்கினர். கவர்னர் ஆதம் இறந்தபின்னர், மைசூரில் முதன்மை நீதிபதியாக விருந்து மிக்க கீர்த்தி பெற்ற, சான்ட்பர்ட் (Mr. Sandford) துரை தமது உத்தியோகத்தைவிட்டு நீங்கினர். இவ்விரண்டு செய்திகளும் கேள்வியுற்றவர்கள் மிகவும் விசனித்தனர்.

1882-ம௵ ஜூன் மாதம் 27௳ தம்புசெட்டியாரின் மூத்த குமாரன் இராயலுசெட்டிக்குத் திருமணம் மிகச்சிறப்பாகச் சென்னையில் நிறைவேறியது. இதையறிந்த தம்புசெட்டியாரின் நண்பர் கிளார்க்கு துரை சுபவாழ்த்துக் கூறியெழுதிய கடிதத்தில்,

"உமது குடும்பம் ஓர் விந்தையான நிலைமையில் வைக்கப்பட்டிருந்ததலால், உம்முடைய குமாரனுக்கேற்ற நல்ல மணவாட்டியைத் தெரிந்தெடுக்கும் காரியம் ஒருசமயம் உம்முடைய மனதுக்குப் பிரயாசையைத்தந்ததென்பது நீர் எனக்கு முன்பு சொல்ல அறிந்திருக்கிறேன். இந்தவருத்தமுழுது நீங்கி உமக்கும், இவ் விவாக காரியத்திற் சம்பந்தப்பட்ட மற்றவர்களுக்கும், பூரண திருத்தியைக் கொடுத்திருக்குமென்று எண்ணுகிறேன்"

என்றுரைத்தனர்.

தென்னிந்திய தேசங்களில் வாழ்கின்ற கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள், தங்கள் தங்களுக்குரிய வருணாச்சிரம தருமங்களைத் தொன்று தொட்டு விடாமல் அனுசரித்துக் கொண்டு வருவோர்களாகையால், அவர்களுக்குள் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும், தங்கள் தங்கள் மரபிலேயே பெண்களைக் கொடுத்தும் கொண்டும், மணம்புரிய வேண்டியவர்களா யிருத்தலைப்பற்றியும், கத்தோலிக்கு வேதத்தையனுசரித்த இவர்கள் கூட்டத்தின் தொகையதிகமாயில்லாததாலும், சரியான பெண்கள் கிடைப்பது பிரயாசமென்பது மேற்படி கிளார்க்குதுரை அறிந்திருந்தார்; ஆகையால், தம்புசெட்டியாரின் குமாரனுக்கு மணம் புரியத்தக்க பெண்ணைத் தெரிந்தெடுக்கும் பிரயாசை நீங்கியிருக்குமென எண்ணுகிறேனென்றவர் கடிதத்தில் குறிப்பிட்டனர்.

தம்புசெட்டியார் நியாயாதிபதியாகவும் மந்திராலோசனைச் சங்கத்தின் மெம்பராகவு மிருந்து இவ்விரண்டு தொழில்களுக்குரிய பாரமானவேலைகளை இரவும்பகலும் ஓய்வில்லாது செய்யப்பின்வாங்கியவரல்ல. இளைப்பாற்றியையும், காலப் போக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும், நாடும் விளையாட்டு முதலியவை விரும்பும் இயல்புடையவரல்லர். "மிகவும் நாம் வேலைசெய்யில், அதனினும் அதிக வேலை நாம் செய்யக்கூடும். அதிகமாக நாம் வேலைசெய்திருப்போமாயின், அதிகமான ஓய்வை நாம் பெறலாம்." இவ்வுலகத்தின் விளக்கத்தை யடைவதற்கு இதுவே தக்கவழி யென்று எண்ணி மேற்சொன்ன பிரமாண வாக்கியங்களையே உறுதியாகக் கைப்பிடித்துத் தம்புசெட்டியார் நடந்துவந்ததுமன்றி, "என்னுடைய மனமானது எனக்கோரு அரசாங்கமாக விருக்கின்றது; யான் அவ்விடத்தில் பூரண இன்பத்தைக்காண்கிறேன்" என்று கூறியபழய ஆங்கிலேய வித்வானை யொத்திருந்தனர்.



தம்புசெட்டியார் மந்திராலோசனைச் சங்கத்துள் ஒரு மெம்பரா யிருந்தபடியால், இவ்வுத்யோக சம்பந்தமாய் மைசூர்ப் பிரஜைகளை அடிக்கடி சந்தித்து அவர்களின் நோக்கத்தை யறிந்துகொள்ள வேண்டியதாயிருந்தது. மைசூர் பலவித கொள்கைகளுக்கும் முற்றிய சண்டைகளுக்கும் உறைவிடமாயிருந்தாலும், அவ்வூர் ஜனங்கள் தம்புசெட்டியார்மீது யாதோர் குறையுங் கூறவிடந்தராமல், தம்முடைய உண்மை விஸ்வாசத்தாலும், நீதிநெறிக்குங் காருண்யத்துக்கும் எதிராகிய கொடியகாரியங்களைச் செய்தற்கு இணங்காத நடையாலும், தம்மைக் காத்துக்கொண்டு தம்முடைய தொழில்களைச் செவ்வையாய் நடத்தி வந்தனர். அதிக வயதுடையவர்களும், அநுபவசாலிகளும் தெளிந்த யோசனையுடையவர்களாகவுமிருந்த சபாபதி முதலியார், கிருஷ்ணராவ், இவ்விருமெம்பர்கள் தம்புசெட்டியாரின் சகபாடிகளாக விருந்ததால், செட்டியாருக்கு மிக்க திருப்தியையும் பெருமையையுந்தந்தது.

1882-ம் வருடம் ஜனவரிமாதம் 24-ம் தேதி தம்புசெட்டியாருடைய **பகவதீ** யென்று நாமங்கொண்ட நாலாவது புத்திரி ஜெனனமாயினள்.

இரங்காசார்லு மைசூர் இராஜாங்கத்து முதல் மந்திரியாகவிருந்து அரசாட்சியை நடத்திவந்த கொஞ்சகாலத்துக்குள், வியாதியினால், பெங்களூரைவிட்டுச் சென்னைக்குப்போகும்படி நேர்ந்தது. இவர் 1882-ம் வருஷம் டிசம்பர்மாதம் 26௳ மாலையில் தம்புசெட்டியாருக்குப் பின்வருமாறு ஒரு நிருபமெழுதியனுப்பினர். அந்தக்கடிதமே தம்புசெட்டியாருக்கு அத்திவானிடத்திலிருந்துவந்த பலகடிதங்களுக்குள் கடைசியாக எழுதப்பட்டது.

"அன்புள்ள தம்புசெட்டியாரே! கடைசியாய் இன்றிரவு யான் செல்கின்றேன்: மஹாராஜா அவர்களுடைய அநுமதியின்பேரில் இராஜாங்க விஷயத்தைச் சேர்ந்த முக்கியமான பத்திரங்களை ஒழுங்குசெய்திடத் தங்களுக்கு அனுப்பும்படி விஜயேந்திரராவைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவ்விஷயங்களைக்குறித்து அவகாசமாக அப்போதைக்கப்போது மகாராஜா அவர்களைத் தாங்கள் போய்த்தரிசிக்கலாம். நான் 10-நாள்கள் அல்லது ஒரு பக்ஷம் சென்னையில் தங்கி வரும்படிப் போகின்றேன்."

சென்னைக்குப்போயின திவான் இரங்காசார்லு பெங்களூருக்குத் திரும்பி வரவில்லை. வியாதி மேலிட்டுத் தீராததாகி அவ்விடத்திலேயே 1883-ம் வருஷம் ஜனவரிமாதம் 20௳யில் காலமாயினர். இதைக்கேள்விப்பட்ட மைசூர்மகாராஜா அவர்கள் அதிகவிசனமடைந்து மனக்கவலையுற்றனர். மற்றயாவரும் மிகவும் மனம்வருந்தினார்கள். உடனே அதுகுறித்து ஒரு பெருஞ்சபை கூட்டப்பட்டது

அச்சபையில் பிரதான நீதிபதியாகிய பிளம்மர் (C. G. Plumer) துரை சபாநாயகராக வீற்றிருந்து, கூடியிருந்த கனவான்கள், தீவான் இரங்காசார்லு மரணத்தினால் தங்களுக் குண்டான அனுதாபத்தைத் துன்பத்திலாழ்ந்திய அத்தீவான் குடும்பத்தோர்க்கு உணர்த்தும்படித் தீர்மானித்தனர். அக்காலையில் தம்புசெட்டியார், அச்சபையார்செய்த தீர்மானத்தில் அன்புபாராட்டி வியந்து, இரங்காசார்லுவின் மேன்மையையும் இராஜதந்திர நிபுணத்துவத்தையும், வித்தை, மதியூகமுதலிய குணவிசேஷங்களையும் பற்றி விரித்துப் பிரசங்கித்தனர்.

காலஞ்சென்ற இரங்காசார்லுவால் காலியாயின மந்திரி உத்யோகஸ்தானம், மூன்று வாரங்கள் வரையும் நிரப்பப்படாமல் இருந்தமையால், பலர் பற்பலவாறு யோசிப்பதற்கும், சிக்ஷைமுரணர்வுதியங்கும்படி பலபத்திரிகைகள் எழுதுவதற்கும், இடங்கொடுத்தது.

சென்னையில் பிரசுரமாகும் மெயில் (Mail) என்னும் பத்திரிகைக்கு ஒரு ஐரோப்பிய உத்தியோகஸ்தர் ஒருகடிதமெழுதிப் பிரசுரஞ்செய்தனர். அதில் மைசூர் தீவான் வேலையைப்பெற எதிர்பார்க்கும் சிலரைக் கூறி, அவர்களில் ஒவ்வொருவருக்குள்ள உரிமையை எடுத்துரைத்தனர். அக்கடிதத்தின் அம்ஸங்களை இங்கு சொல்லிக்காட்டுவோம்.

"தீவான் உத்தியோகத்தைப் பெற எதிர்பார்த்திருப்பவர்களில், மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி மைசூரின் பழயகட்சியாரால் கோரப்பட்ட ஒருவர். மிஸ்டர் சேஷாத்திரி ஐயர் சென்னையிலிருந்து இங்குவந்து உத்தியோகப் பிரபலமடைந்துவல்லமை பெற்றிருக்கும் கட்சியாரைச் சேர்ந்தவர். இவ்விருவரும் திறவான்களே. காலஞ்சென்ற தீவான் கொண்டிருந்த இராச்சிய விர்த்திக் குரிய எண்ணங்களைக் கொண்டவர்களாயும், விடாமுயற்சி கொண்டு உழைப்பதில் விசேஷப்பட்டவர்களாயுமுள்ளவர்கள். சேஷாத்திரி ஐயர் மேலான சக்திவந்தர். தமக்கிணையுள்ள வேறொருவரின்விடமில்லாமல் தமக்குத்தாமாக இருக்கப்பட்டவர். இங்கிலீஷ் பாஷையை நன்றாய்ப் பேசுவதிலும், எழுதுவதிலும், ஒருகாரியத்தின் நுட்பங்களை யதிசீக்கிரத்தில் கிரகிப்பதிலும், சக்திமான். தீவான் இரங்காசார்லு அதிகமாய்ப்பேசும் வழக்கத்தையுடைய வராதலால், அவர் அரைமணிநேரத்தில்முடிவு செய்கிற வேலையை, சேஷாத்திரி ஐயர் 10 நிமிஷத்தில் தீர்த்து விடுவார் என்று சொல்லிக் கொள்ளப்படுகிறது. கீர்த்தியுள்ள விருத்தாப்பியர் போய்விட்டார்; அவருடைய ஆத்மம் நித்தியத்தில் இளைப்பாறட்டும்; ஆனால், அவர் சீவித்திருக்கையில் போராடவேண்டியதாயிருந்த ஆழ்ந்து வேரூன்றிய மைசூர் ஜனங்களின் அசமாதனம், மேற்படியாரின் ஸ்தானத்தை உடனே கைக்கொள்ளச் சேஷாத்திரி ஐயருக்கு நேருமாகில், இவரைச் சாருமென்று நான் எண்ணுகிறேன். கிருஷ்ணமூர்த்தி, மைசூர் பழய கட்சியாரால் குறிக்கப் பட்டவரென்றாலும், அக்கட்சியாரால் ஆட்டத்தக்க பம்பரமாயிருக்க இடங்கொடாத குணநிசயமுடைத்தானவர்; மிகவும் பூஜிக்கத்தக்க குடும்பத்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2 - JUL 1910
MADRAS.

தினர். மைசூர் அரச குடும்பங்கள் நீங்கலாகத் [illegible]மையாகவும் மேலாகவுநிற்பது இவரது குடும்பமே. இக்குலத்தில் [illegible]யஸ்தருமிவரே. இவருடைய குணநிசயங்களைப்பற்றிச் சொல்லப்பட்ட விஷயங்கள் உண்மையுள்ளவைகளாக விருக்குமாகில், இவருடைய சொந்த சகோதரரே ஓர் குற்றத்தைச் செய்வாராகில், அவரைக் கடினமாய்ச் சிட்சைசெய்ய அஞ்சாத யோக்யதாபட்ச முடையவரென்னலாம். மேலும், கிருஷ்ணமூர்த்தியின் முன்னோரில் ஒருவராகிய பூரணையருக்கு ஆங்கிலேய துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்ட செல்வமுள்ள எளந்தூர் ஜாகீரின் தற்கால அதிபதியுமிவரே.

சேஷாத்திரி ஐயர் இப்போது வல்லமைக்கொண்டிருக்கிற கக்ஷியாரில் ஒருவராக, கவர்னர் ஜெனரலுக்கு மெத்த அருகினராயிருக்கும் சர்-ஜேம்ஸ்-கார்டன் துரையின் அபிமானம்பெற்றவர். ஆகையினால், மேற்சொல்லிய இருவரிலொருவருக்குத் தீவான் உத்தியோகங் கிடைக்கத்தக்கதான சந்தர்ப்பங்களிருக்கின்றன. இவ்விருவரும் பிராமணர்கள்.

தீவான் வேலையைப்பெற உரித்தான இன்னொருவர் தம்புசெட்டியார். மைசூரில் அதிக மேன்மையான உத்தியோகத்தை மிக்க கௌரவத்தோடு வகித்தவரிவர். இனிமேல் இவரடையத்தக்க உயர்வானஸ்தானம் தீவான் ஸ்தானமொன்றே. இவர் எந்தக் கக்ஷியிலுஞ் சேர்ந்தவரல்ல வென்று சொல்லலாம். எந்தக்கக்ஷியாராலும் கோரப்பட்டவரல்லர்; ஆகிலும், எல்லோராலும் மதிக்கப்பட்டுள்ளவர். தம்முடைய சொந்த உழைப்பினாலும் சரிநடையுள்ள யோக்கியதாபட்சத்தாலும், தம் ஜாதி மதம் இவ்விரண்டினாலுள்ள அனுகூலங்களோடு தற்கால உயர்பதவிக்குவந்த மேலான நீதிபதி (Judge). இவர் ரோமான் கத்தோலிக்கு வேதத்தை யனுசரிப்பவர். இந்த வேதக்கொள்கையின்படிப் பொதுவாய் மைசூரிலுள்ள எல்லாப் பிரஜைகளின் விருத்தியையும் க்ஷேமத்தையுங் கோரியவர் இவராகும்."

இந்தியன் மிர்ரர் (கண்ணாடி) என்னும் ஆங்கிலப் பத்திரிகை,

"காலஞ்சென்ற தீவான் இரங்காசார்லுவின் பின், சிறந்தவராகிய ஒருவரை மைசூர் இராஜா தெரிந்துக்கொள்வாரென யாம் கோருகின்றோம். அங்ஙனந் தெரிவு செய்யப்பட்டவர் சரியான ஸ்தானத்துக்குச் சரியானவராக இருக்கும்பட்சத்தில், அவர் மைசூர் வாசியாயினும், சென்னை வாசியாயினும், பார்ஸியாயினும், வங்காள தேசத்தாராயினும், பாதகமொன்றில்லை"

யென்று கூறியது.

யாவரைத் தெரிந்தெடுக்கலா மென்பதில் உண்டாகிய தாமதமும் தியக்கமும் நீங்கியபின், சேஷாத்திரி ஐயரைப் பிரதான மந்திரியாக மைசூர் மகாராஜா நியமனஞ் செய்தனர். மந்திரி நியமனம் வாய்க்கப் பெற்ற சேஷாத்திரி ஐயரை வாழ்த்துதற்குத் தம்புசெட்டியார் மற்றவர்களுக்கு முந்தினர். அவ்வாழ்த்துதலுக்கு மந்திரியனுப்பிய மறுமொழி, தம்புசெட்டியாரின் மதமும் ஜாதியுமாகிய இவ்விரண்டும், மந்திரி உத்தியோகத்தை அவரடையாத வண்ணந் தடைசெய்தன வென்று ஊரிற் பரவிய வதந்தி யுரைகளைக் குறிப்பிட்ட கருத்

றினைக் கொண்டிருந்தது. அந்தக்குறிப்பு மொழிகளைப்பார்த்து உள்ளத்தில் வெறுப்புங் கவலையுந் தம்புசெட்டியார் அடைந்தனர். அந்தக் கடிதத்தின் மொழிபெயர்ப்பை இவ்விடத்தில் எழுதுகிறோம்.

"அன்புள்ள ஐயா! தங்களுடைய அன்புள்ள வாழ்த்துதலுக்காகவும் நல்ல எண்ணங்களுக்காகவும், போதுமானமட்டும் தங்களுக்கு வந்தனை செய்ய என்னால் முடியாது; தங்கள் மனக்கருத்தையறிந்து யான் கவுரவித்தல் போலப் பிறர் செய்ய இயலாதவர்களாவார். இதனை முன்னமே தங்களுக்கு யானும் மற்றவர்களும் சொல்லிய வார்த்தைகளினின்றும், இவ்விஷயத்தில் என்செய்கையினின்றும் தாங்கள் ஒருவேளை நன்றாக அறியக்கூடுமாயிருக்கும். இதனைக் குறித்தும் மற்ற விர்த்தாந்தங்களைக் குறித்தும், பெரியதோர் சம்பாஷணை செய்யும்படி உண்மையாக மிகவுஞ் சந்தோஷமுடையவனாயிருப்பேன். என்னை நம்புங்கள்."

மேற்கண்ட சேஷாத்திரி ஐயரின் நிருபமானது, மிக அன்பும், அனுதாபமுங் கொண்டதாகி அவரிடத்துள்ள பரிசுத்தக்கருத்தையும், அறிவின் உயர்வையும், உணர்த்துகின்றது. அக்குணத்தைத் தம்மிடத்தில் சிறக்கும்படிப் பெற்ற மந்திரி, தமது துரைத்தன உத்தியோக சம்பந்தத்திலும், அந்தரங்க ஸ்நேகமாட்சிமையிலும், சத்தியத்திலும், ஓரவாரமில்லாத நடுவு நிலைமையிலும் கோணாமல் தமது உத்தியோகக் கடமைகளை நிறைவேற்றினர். மந்திரியின் நண்பராகவும், மந்திர சபையின் முதல் மெம்பராகவுமிருந்து தம்புசெட்டியார் கொடுத்த ஆலோசனைகளாலும், கூடித்தொழில் நடத்தலாலும், தெளிவடைந்து பிரகாசிக்குமந்திரி யென்னப்பட்ட இந்திய தேசமளித்த வல்லமையுடைய சேஷாத்திரி ஐயரது நீண்ட தொடர்ச்சியுள்ள அதிகாரத்தில் விளைந்த பெரும்பயன் அரசாங்கத்தை யடையும்படி தம்புசெட்டியார் உதவினர்.

கர்னல் கிளார்க்கு துரை தம்புசெட்டியாருக்கு எழுதிய கடிதங்களொன்றில்,

"நீர் சீப்கமிஷனர் ஆபீஸ் ஹெட்சிரஸ்ததார் உத்தியோகத்தை நெடுநாள் கீர்த்தியோடு வகித்திருந்ததால், திவான் உத்தியோகத்தைப் பெறுவதற்கு உமக்கே வலிவான பாத்தியதையிருந்தது. அந்த உத்தியோகத்தில் நீர் அமர்ந்திருக்கப் பார்த்து யான் மெய்யாகவே சந்தோஷித்திருக்கவேண்டும். ஆனால் அப்படி நடக்காததைப்பற்றி உமக்குண்டான மனக்கிலேசத்தை மாற்றி ஆறுதல் கொள்ளத்தக்க காரணத்தை நீர் கண்டுபிடித்திருக்கக்கூடும். இவ்வுயர்ந்த பதவியைப்பெற்றவன் எவ்வளவு யோக்கியதா பட்சத்துடனும் மனசாட்சிக்கு ஒத்தும் நடந்தாலும், பொறாமையினால் எதிர்க்கப்படாமலும், சிலரின் கபடச் செயல்களுக்கு விலகியுமிருப்பது கூடுமானகாரியமல்ல. மதிப்புள்ள கௌரவங்களைச் சம்பாதிக்கக் கூடுமாயினும், அவைகளினும் விலையேறப்பெற்ற மனச்சமாதானத்தை அக்கௌரவங்களுக்காக இழத்தல் வேண்டும்"

என்று கூறினர்.



சேஷாத்திரி ஐயருக்கு மாதச்சம்பளம் மூவாயிரத்தினின்று ஐயாயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டபோது, தம்புசெட்டியார் வாழ்த்தியதற்கு ஐயர் எழுதிய மறுமொழி நிருபமானது, தம்புசெட்டியார், மைசூர் அரசாட்சியடைந்த வெற்றிக்கு எவ்வளவுமட்டும் காரணஸ்தராக விருந்தாரென்று காட்டத்தக்க நல்ல சாட்சியாயிருக்கின்றது. அக்கடிதத்தை யிங்கெழுதுகிறோம்.

"தங்களுடைய வாழ்த்துதலுக்காக என் நன்றியறிந்த வந்தனங்களைச் செலுத்தக்கடமைப் பட்டவனாயிருக்கிறேன். மகாராஜாவின் அறிவிப்புக்குரிய இந்த அடையாளம், அவருடைய ஆலோசனைச் சங்கத்தவர்களைத் தாக்கவருகின்ற நானாவகைத் துன்பங்களுக்கும், மனத்தைரியத்தை தளர்த்துகின்ற வார்த்தைகளுக்குமுன் நமக்கெல்லாம் மகிழ்வைத்தருவதாக விருக்கின்றது; மேலும், மகாராஜா கருணை கூர்ந்து மதித்த அரசாட்சியின் வெற்றியால் வந்த கீர்த்தியில், மந்திர சபையில் தாங்கள் முதல் மெம்பராக விருந்து காரியங்களை நடத்தினமையால், பெரும்பாகத்தையடைவதற்கு நீதியாகத் தாங்கள் உரியவராக இருக்கின்றீர்கள்."

தம்புசெட்டியார் மந்திர சங்கத்தின் பிரதான மெம்பராக முதலாசனத்து வீற்றிருந்து முக்கியமான அடியிற்கண்ட இராஜாங்க விஷயங்களில் தம்முடைய அபிப்பிராயங்களைக் குற்றமற்ற மனசாட்சிக் கொத்தும் அச்சமில்லாமலும் கொடுத்து வந்தனர்:—

(1) வரிவிதித்தல்.

(2) சட்ட நிருபணஞ் செய்தல்.

(3) அரசாங்கத்தின் பொருள் வரவு செலவு காட்டும் கணக்குகள்.

(4) பல இலாக்காக்களின் நடபடி அறிக்கைப் பத்திரங்கள்.

(5) ஜில்லா அதிகாரிகள், ஜில்லாவின் பிரிவதிகாரிகள், இவர்களின் மேலதிகாரிகள், இவர்களைப் புதிதாய் நியமித்தல்; வேலையை விட்டு நீக்குதல்.

(6) நீதிபதிகள் விதித்த தண்டனைகளைக் குறைத்தல்.

(7) துரைத்தன உத்தியோகஸ்தர்மேல் வழக்கு தொடர்தல்.

(8) மராமத்திலாக்காவின் வருஷாந்தர வரவு செலவு கணக்குகள். இவ்விலாக்காவை ஒழுங்கு படுத்துதல்.

(9) இராணுவச் சேவக முறைகளைக் குறித்த கேள்விகள்.

(10) அரசாள்வதில் இந்திய துரைத்தன அனுமதி முன்பெற்றுச் செய்ய வேண்டிய முக்கிய காரியங்கள்.

(11) மஹாராஜா மந்திரசபையோருடைய ஆலோசனையைக் கேட்க விரும்பும் விஷயங்கள்.

இராஜாங்க காரியங்களை நடத்துதற்கு உதவியாக ஒரு மந்திர சங்க மேற்படுத்துவது உசிதமென்று, இவ்வரசாங்கத்தை மஹா

ராஜாவுக்குக் கையளிக்குமுன் முதன் முதலில் பிரேரேபித்தது, தம்புசெட்டியார்தாம். 1877-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 16ந்தேதியில் செட்டியார் எழுதிய குறிப்பில் சொல்லியதாவது:—

"இந்தச் சுதேச ஆளுகையை நீளிக்கச் செய்யவும், பலப்படுத்தவும், வேண்டுமாகில், பற்பல துரைத்தன இலாகாவிலிருந்து மதம், ஜாதியென்றும் பேதம் பாராமல், மதிக்கத்தக்க புத்திமான்களாகிய உத்தியோகஸ்தர்கள் சிலரைத் தெரிந்தெடுத்து, ஒரு மந்திர சபையுண்டாக்கி, அச்சபையின் உதவிகொண்டு மஹாராஜா அவர்கள் தமது அரசாங்கத்தை நடப்பிக்க வேண்டும். பல விஷயங்களிற்றேர்ந்த அநுபவசாலிகளாகவும், சரி நீதிநெறியில் நிற்கும் யோக்கியதா பட்சமுடையவர்களாகவும், திறவான்களாகவு முள்ளவர்களால் சேர்க்கப்பட்ட அச்சங்கத்தினால் மஹாராஜா அவர்கள் பிரயோஜனத்தை யடைவர். மஹாராஜா அவர்களே அச்சங்கத்தின் சபாநாயகராகவும் அச்சங்கத்தை நடத்துங் கருவியாகவுமிருப்பர். மைசூர் ராஜ்ஜியத்தின் அதிபதியென்னு முறையில் அவருக்கே உரியவைகளான சில சுதந்தரங்கள் இருக்கவேண்டும்; ஆனால், அரசாங்கப் பொது விஷயங்களில் அநுபவசாலிகளாகிய மந்திர சங்கத்தினர் முதிர்ந்த ஆலோசனை செய்து சொல்லும் அபிப்பிராயங்களுக்கு மகாராஜா இணங்கவேண்டும். ஏனெனில், பலபேருடைய அபிப்பிராயங்களில் அறிவு விளங்குமென்பது உலக அநுபவ உண்மைச் சொல்லாகும்."

1886-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 14ல் தம்புசெட்டியார் சேஷாத்திரி ஐயருக்குப் பின்வருமாறு எழுதினர்:—

"என் பிரியமுள்ள ஐயா! இரண்டொரு தினத்துக்கு முன் தற்காலத்திலிருக்கும் மந்திர சங்கத்தினது ஏற்பாட்டைக் குறித்து நாம் கலந்து பேசினோம். நான் எழுதிய 1877-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 16-ம் தேதியுடைய பழைய குறிப்பொன்று என் கைக்குச் சிக்கியது. அதின் 6-வது பிரிவைத் தாங்கள் வாசிக்கப் பிரியப்படுவீர்கள். அதில் மகாராஜாவின் மந்திர சபையொன்று ஏற்பாடு செய்யும்படி வற்புறுத்தி யிருக்கின்றேன். இப்போதிருக்கும் மந்திர சங்கம் சரியானபடிக்கு உபயோகமுள்ளதாக விருக்கும் பொருட்டு அதனை விருத்திப்படுத்துதற்கு வேண்டிய வேற்பாட்டை எவ்வளவு துரிதமாய்ச் செய்வோமோ அவ்வளவும் நலமாயிருக்கும். அரசாங்க காரியங்களை நடத்துவதற்கு திவானல்லாமல் மூன்று கவுன்சிலர்கள் கூடிய ஒரு சங்கமல்லாது, இதனுடன் சேர்க்கையாய்ச் சட்டநிரூபணஞ் செய்யும் விஷயங்களுக்காகத் துரைத்தன உத்தியோகஸ்தர்களல்லாதவர்களாயிருப்பவர்களிலிருந்து ஆறுபேரைப் பிரஜைகளின் பற்பல வகுப்பார்களின் பிரதிநிதிகளாக ஏற்படுத்தலாம்."

இக்கடிதத்துக்கு மறுமொழியாகச் சேஷாத்திரி ஐயர் •

"எனது பிரியமுள்ள ஐயா! தாங்கள் அனுப்பிய குறிப்பை என் வந்தனத்துடன் திரும்பத் தங்களுக்கு அனுப்புகிறேன். இது விஷயத்தில் நமக்கிருக்கும் பிரயாசையெல்லாங்கூடித் தக்கபேர்வழிகள் கிடைப்பதைப் பற்றியே. தங்களுடைய குறிப்பில் சொல்லிய அரசாங்க காரியங்களை நடத்தும் மந்திர சங்கம் உண்டாயின் மெய்யாகவே நான் சந்தோஷிப்பேன். அதற்கு மனு



ஷாள் எங்கே? அதனாலுண்டாகும் செலவைப் பற்றிக் கவனிக்கவேண்டியதில்லை. செலவு விஷயம் பெரிய காரியமல்ல" வென்று கூறினர்.

இவ்விஷயத்தைப்பற்றிப் பின்னும் நடந்த கடிதப் பிரதி கடிதங்களின் முடிவாக மந்திரசங்கத்தைக் குறித்த இன்னுஞ் சில நிபந்தனைகள் ஜாரிக்குக்கொண்டுவரப்பட்டன. அந்நிபந்தனைகளை யனுசரித்து, கவர்ன்மெண்டுக்கு ரெவினியு தாப்பில்வரப்பட்ட அப்பீல்களை மந்திரசங்கத்தின் இரண்டு மெம்பர்கள், அல்லது திவானுடன் ஒரு மெம்பர் சேர்ந்து, பைசல் செய்யவேண்டுமென்றும்; இருவரும் ஒன்று சேராமல் வேறு வேறு அபிப்பிராயங்கொள்ளுகையில், இவர்களில் திவான் ஒருவராயில்லாதபோது, திவான் சொல்லும் தீர்மானத்தை நிறைவேற்றுவதுஎன்றும்; திவான் சேர்ந்திருந்தால் மூன்றாவது மெம்பரின் அபிப்பிராயங்கொண்டு தீர்மானிக்கிறதென்றும் உத்தரவு பிறந்தது. இந்த ஏற்பாடு பிரஜைகளின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றுச் செவ்வையாக நடந்து வந்தது. பெரும்பாலும் இத்தொழிலை நடத்திவந்தவர்கள் தம்புசெட்டியாரும் மிஸ்டர் சென்ஸ்லராவ் என்பவருமே. சட்ட நிரூபணச்சபை யேற்பாட்டை அப்போதே செய்யாமல் பின்னால் யோசிக்கலாமென்று விட்டுவிட்டார்கள். ஆனாலும் தம்புசெட்டியாரின் அபிப்பிராயப்படி 1907-ம் வருஷத்தில் சட்ட நிர்மாணச்சங்கம் ஒன்று மைசூருக் கேற்பட்டது.

மைசூர் மந்திரசங்கத்தினது இயல்பையும் உபயோகத்தையும் பற்றித் தம்புசெட்டியார் தம்முடைய அநுபவக் காட்சியிலறிந்த விஷயங்களைத் தமது பற்பல விஷயக் குறிப்புப் புத்தகத்தில் வரைந்திருப்பதை இங்கு குறிப்போம் :—

"மந்திராலோசனைச் சபை கூடுஞ் சமயத்தில் இரைச்சலுடைய சொற்சண்டைகளின்றிச் சங்கம் அமைதிபெற்று விளங்கியது. சிலசமயங்களில் வலிமையுடையதர்க்கவாதங்கள் உரத்துப் பேசும்படி நேர்ந்தபோதிலும், அதுகள் செல்கின்ற நடை யுக்கிரத்தை யடைந்ததில்லை. மந்திர சபையின் தோற்றமானது எப்போதும் மாட்சிமையும் கெம்பீரமுமுடையதாக விளங்கிற்று. சபையில் எல்லா விஷயத்தைக் குறித்தும் ஆலோசனை யதிகமாய்ச் செய்யப்பட்டது; முடிவான அபிப்பிராயங்கள் முதிர்ந்த விசாரணைமதியுடன் முதன்மையுள்ள பல அநுபவங்களின் பயனாகத் தோன்றுவன."

திவான் இரங்காசார்லும் சேஷாத்திரி ஐயரும், தங்கள் அதிர்ஷ்டவலியால், உலகானுபவங்களை விரிவாகவும் நன்றாகவும் உற்றுப் பார்த்துணர்ந்த தம்புசெட்டியாரைப் போலொத்தவர்களைத் தங்கள் சகபாடிகளாகப் பெற்றதனால், அவர்களுடைய உதவியை யடைந்து மிக்க கீர்த்தி பெற்றார்கள்.

# CHAPTER XII.

## பன்னிரண்டாம் அதிகாரம்.

மைசூர் சீப்கோர்ட்டின் இரண்டாவது ஜட்ஜ்-இரண்டாவது மூன்றாவது புத்திரிகளின் விவாகம்-சீப் கோர்ட்டுத் தலைமை நீதிபதி (Chief Judge)-இரண்டாவது குமாரன், நான்காவது குமாரத்தியின் திருமணம்

(1884-1895.)

1884-ம் வருஷத்திய முதல் சட்டம் மைசூர் சமஸ்தானத்தில் உண்டாகி அது ஜாரிக்குக்கொண்டுவந்தபோது, மூன்று நியாயாதிபதிகளுடன் மைசூர் சீப்கோர்ட்டு விளக்கமுற்றது. மிஸ்டர் C. G. ப்ளம்மர்துரை (Mr. C. G. Plummer) தலைமை ஜட்ஜாகவும், தம்புசெட்டியார் 2-வது ஜட்ஜாகவும், A. இராமசந்திர ஐயர் மூன்றாவது ஜட்ஜாகவும், நியமனம் பெற்றனர். இந்தச் சட்டத்தின் 11-வது பிரிவில், சந்ததி, உரிமை, மாமூல், ஜாதியாசாரம், மதாசார முதலியவைகளை யொட்டிய வழக்குகளின் கட்சிக்காரர் இந்துக்களாகில், மனுதர்ம சாஸ்திரமும், இஸ்லாம் மதத்தராகில் முகம்மதீய சட்டமும், அனுசரிக்கும், சட்டத்தின் விதியைப் போன்ற வலிமையுடையதாகிக் கட்சிக்காரர்கள் அல்லது வழக்குக்குரித்தான சொத்துகளைத் தழுவியிருக்கும் வழக்கம் சட்ட நிர்மாணத்தால் ரத்து செய்யப்படாமலிருக்குமாகில், அவ்வழக்கத்தை யனுசரித்துத் தீர்மானஞ் செய்யவேண்டுமென்றும்; சில வழக்குகளில் பொருத்தமுடைய விதிகள் காணப்படாதபோது நடு நிலைமையும் மனசாக்ஷியும் நீதியும் பொருத்த முடையவாகக்கண்டு தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும் விதித்திருந்தது. 18-வது பிரிவின்படி, ஒரு நீதிபதியின்முன் வந்த வழக்கில் அந்நீதிபதி தானொரு கட்சிக்காரனாகவும் அல்லது யாதொரு சம்பந்த முடையவனாகவு முன்னர் இருந்திருக்கும் பட்சத்தில், அவ்வழக்கை அந்த நீதிபதி விசாரிக்கக் கூடாது என்னும் நிபந்தனை இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டதற்குக் காரணம், தம்புசெட்டியாரென்பது, அவர் எழுதிய குறிப்புகள் ஒன்றில் சொல்லிய நியாயங்களால் விசிதமாகும். அக்குறிப்பின் கருத்தென்னவெனில்:—

“மைசூர் சமஸ்தான, ஜூடிஷியல், ரெவின்யு, இலாக்கா உத்தியோகஸ்தர்களான உயர்ந்த வகுப்பினர்கள், தங்கள் பேராலாகிலும், அல்லது தங்கள் உறவினர் சிநேகிதர் அடுத்தோர் பேராலாகிலும் நிலங்களை வாங்கி வைத்துக்கொள்ளும்படி (அரசாங்கத்தாரால்) முன்னர் விடப்பட்டிருந்தபடியால், ரயிதாள் ஒருவரொருவருக்குள்ளும், அன்றியும், நிலத்தெஜமான்களுக்கும் ரயிதாளு



க்கும், சிவில் கிரிமினல் சச்சரவுகள் அடிக்கடி நேர்வது சகஜமாயிருந்தன. அத்தகைய வழக்குகள், நேராகவாகிலும் மறைவாகவாகிலும் சம்பந்தப்பட்டிருக்கும் அதிகாரிகள்முன் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டன. மேற்சொல்லிய விதி, ஒரு அதிகாரி தான் சம்பந்தப்பட்ட வழக்கினுக்குத் தானே நீதிபதியாகவிருந்து தீர்மானிப்பதைத் தடுக்கும் இயல்பைக் கொண்டிருக்கிறது. சுயநலத்தை நாடும் சுபாவ உணர்வின் தன்மையால் பிறர்நலத்தை நாடும் உணர்வு ஒருவனுக்குண்டாவது மிக்க அரிது என்பது அங்கீகரிக்கத்தக்க ஓர் உண்மை. தன்னலத்தையே நாடுந்தன்மையுடையவன் நீதிநெறியில் தனக்கிருக்கும் கடமையைச் சரியாய்ச் செய்யான்”

என்பதே.

பயிர் செய்யும் நிலத்தின் மேல் விதிக்கப்பட்ட தீர்வையை ஒருவன் செலுத்தத்தவறுவானாயின், அவன் கைதியாய்ச் சிறைச்சாலையடைதற்குரியவனாகின்றான் என்பது மைசூர் அரசாங்கத்தின் அரசிறைச் சட்டத்தின் ஓர் விதியாக விருந்தது. இந்த விதியினாலாய பயனொன்றுமில்லையென்றும், நிலத்தின் கந்தாய பாக்கியை வசூல் செய்வதற்கு அந்த நிலமே போதுமான ஆதாரமாயிருக்க, நிலத்தினாலும், நிலத்தின் மீதுள்ள பயிராலும், குடியானவனின் ஜங்கம சொத்துக்களாலும் பாக்கியை வசூல் செய்துக் கொள்ளலாமென்றும், நிலத்தீர்வை பாக்கிக்காகப் பிடிபட்ட ஒருவன், தன்னுடைய கடன்களைத் தீர்க்கச் சக்தியற்றவனாயினனென்று கோர்ட்டார் முன் ஸ்தாபித்துக் காவல் தண்டனையை நீக்கிக்கொள்ளக் கூடுமாதலையால், மேற்படி விதியால் பிரயோஜனமில்லையென்பது, தம்முடைய அபிப்பிராயமென்றுந், தம்புசெட்டியார் தெரிவித்து, அந்த நிர்ப்பந்தமுள்ள விதியை அரசிறைச் சட்டத்தினின்று களைய வற்புறுத்தினர்:—

அரசிறைக் கட்டளைப்பற்றி அரசாங்கத்தில் வாதம் நேர்ந்த போது, தம்புசெட்டியார் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கத் தாலோசனைத்தார் அந்த அபிப்பிராயத்தை யொட்டி மைசூர் அரசிறைச்சட்டம் (Mysore Land Revenue Code) 143-வது பிரிவில் விதித்தனர்.

தம்புசெட்டியார் மைசூரின் பிரதான நியாயசபையில் இரண்டாவது நீதிபதி ஸ்தானத்திலிருந்து சூரியனைப்போல் பிரகாசித்தார். நியாயவாதிகள் சொல்வதைப் பொறுமையோடு கேட்டு, யார்க்கும் பாரபட்சமின்றி நீதி வழங்கி வழக்காளிகளின் உயிராயினர். இவரால் தீர்மானஞ் சொல்லப்பட்ட வழக்கினுக்குடைய இருதரக் கட்சிக்காரர்களும் (வாதிப் பிரதிவாதிகளும்) திருப்திக்கொண்டு இவரை மெச்சுவார்களேயன்றி நிந்தை கூறவறியார்கள். உலகோர்கள் உயர்த்திப் பேசும் ஆளாயினர்.

1886-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இரண்டாவது புத்திரியின் திருமணம் நிறைவேறியது.

1888-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் தலைமை நீதிபதியான பிளம்மர் துரை ஒரு வருஷ ரஜா பெற்றுக்கொண்டு இங்கிலாந்துக்குப் போயினர். தம்புசெட்டியார் மேற்படி துரைக்குப் பதிலாகத், தலைமை நீதிபதியாகவும், சிறைச்சாலைகளின் மேல்விசாரணைக் கர்த்தர் (Inspector-General of Prisons) ஆகவும் நியமிக்கப்பட்டனர். இதுவரையும் ஐரோப்பியர்களால் நிரப்பப்பட்ட இந்த உன்னதஸ்தானம் சுதேச உத்தியோகஸ்தரில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது, இதுவே முதல்விசையாகும்.

1888-ம் வருஷம் மேமாதம் 2வ தம்புசெட்டியாரின் மூன்றாவது புத்திரியின் விவாகம் நிறைவேறியது.

1890-ம் வருஷம் ஜூலை மாதத்தில் மேற்படி பிளம்மர் துரை உபகாரச்சம்பளம் பெற்றுத் தமது உத்தியோகத்தை விட்டு நீங்கிய போது, மைசூர் பிரதான நியாயஸ்தலத்துப் பிரதான நீதிபதியாகவும், சிறைச்சாலைகளின் மேல்விசாரணைக் கர்த்தராகவும், காயமாகத் தம்புசெட்டியார் நியமிக்கப்பெற்றனர். மைசூர் இராச்சியத்திலுள்ளோர் அனைவரும் இந்நியமனம் சரியானதென்று கூறி மனமகிழ்ச்சியுற்றனர். பெங்களூரில் பிரசுரமாகும் பிரதிதினத் தபால் ("Daily Post") என்னும் ஆங்கிலப்பத்திரிகை 1890-ம் வருஷம் ஜூலை மாதம் 6வ பின்வருமாறு கூறியது:—

"மகாராஜா அவர்கள் தம்புசெட்டியாரைச் சீப்கோர்ட்டுத்தலைமைஜட்ஜாகக் காயஞ்செய்யச் சித்தமானார் என்பது சென்ற சனிவாரம் பிரசுரமாயின மைசூர் கெஜட்டிலுள்ள முதல் விளம்பரமாக எமது கண்ணிற்பட்டது. எல்லா தரத்தினரான இந்துக்களாலும், ஐரோப்பிய கூட்டத்தாராலும், இந்நியமனம் மனக்களிப்போடு அங்கீகரிக்கப்படுமென்பதை யாம் சொல்லவேண்டியதில்லை. சில தினங்களுக்குமுன் வெளியார்களில் ஒருவர் இவ்வுயர்ந்த பதவிக்கு நியமிக்கப்படுவதாய் இவ்வூரில் பரவிய வதந்தி உண்மையற்றதென்றிப்போது தெரியலாச்சுது. மிஸ்டர் தம்புசெட்டியார் மைசூர் கவர்ன்மெண்டில் செய்த பற்பல உத்தியோகச் சரிதையைப் பார்வையிடுங்கால், கல்வி அறிவின் சக்தியோடு இடைவிடா ஊக்கமும் சலியா உழைப்பும் ஒருவனிடத்தில் பொருந்துமாகில், நீளத்தில் அவன் அதுகளுக்குடைய சம்பாவனை யடைவான் என்னும் உண்மையை விளக்கிக்காட்டுகின்றது. தங்கள் சுயப்பிரயாசையால் அடியிலிருந்து ஓர் மரத்தின் உச்சியிற் சென்று மேன்மை யடைந்தவர்களின் சரிதங்களால் பயன் பெறும்படி உற்றுணர்வோர்கள், தம்புசெட்டியாரைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்று இப்பத்திரிகையை வாசிப்போர்களை யாம் வற்புறுத்துவோம். தாம் கோரத்தக்க உயர்ந்த மேலானபதவி தம்புசெட்டியாருக்கிப்போது கிடைத்தது. இவ்வுயர்வான பதவியைப் பெற்றதற்காக அவரை மனப்பூர்வமாய் வாழ்த்துகிறோம். தம்புசெட்டியார் சட்ட முறைமையை விளக்



கத்தோடும் அமரிக்கையோடும் எடுத்துரைக்கத் தேர்ந்த வல்லவரென்று எல்லோராலும் முன்னமே மதிக்கப் பெற்றுள்ளார். ஒரு நியாயவாதியின் வாதங்களிலுள்ள பலயீனத்தை புத்தி கூர்மையோடு வெகு சீக்கிரத்தில் அறியுஞ் சக்தியுடையவர். அவரைக்கண்டு உரையாட அவரிடம் போவோரைத் தாரதம்மியமறிந்து மரியாதையோடு நடத்தும் அவரது பெருந்தன்மை; இந்தச் சமஸ்தான முழுவதிலு முள்ளவர்களின் மதிப்பையும் சிநேகத்தையும் கவர்ந்து கொண்டது. அவரின் கீழுள்ள உத்தியோகஸ்தரைக் கண்டிதமாய் நிஷ்பட்சபாதமாய் நடத்துந் தன்மையுடையவர். தாம் எப்படி வேளை தவறாது உத்தியோகத்துக்குச் செல்கிறாரோ அப்படியே தன் கீழுள்ளோரும் நடக்க எதிர்பார்ப்பார். அப்படி நடவாதவர்களுக்குத் தங்களந்தஸ்தில் கடமைகளின்னதென்று எடுத்துக்காட்டி இனியப்படிச் செய்யாதிருக்கும்படியான விதத்தில் கண்டிப்பார். ஆகையால் கீழுத்தியோகஸ்தர்கள் தங்கள் மீதுள்ள குறையைத் தங்கள் நீதிபதி அறியவும் அதற்காகத் தாங்கள் கண்டிக்கவும்படும் சமயங்கள் வாய்க்காமலிருக்கும்படியான ஜாக்கிரதையுடன் நடக்கப் பார்ப்பார்கள். இப்போது தம்புசெட்டியாருக்குக் கொடுக்கப்பட்ட இந்த உயர்ந்த பதவியில் கவுரவத்தோடு அனேக வருஷங்கள் ஜீவித்திருந்து அதன்பயனை யடைவாராக! இந்தமைசூர் சமஸ்தான விருத்திக்குக் காரணஸ்தர்களாக விருக்கும் திவான் சேஷாத்திரி ஐயரும் தலைமை நீதிபதி தம்புசெட்டியாரும், தங்களுடைய மேன்மையான நீளித்த ஊழியத்துக்காக, இந்தியா கவர்ன்மெண்டாரால் இன்னும் மேன்மையான சம்பாவனையடைந்து கவுரவிக்கப்படுவதைப் பற்றி, இன்னுஞ் சில மாதங்களுக்குள், அவ்விருவரையும் யாம் மறுபடி வாழ்த்தும்படியான சந்தர்ப்பம் வாய்க்குமெனக் கோருகிறோம்."

கீழ்க்கோர்ட்டுகளைப் பரிசோதிக்கும் பொருட்டு அடிக்கடி தம்புசெட்டியார் தம்வருகையைத் தெரிவிக்காமல் திடீரெனப் போவார். இப்படிச் செய்துவந்ததால் அக்கோர்ட்டுகளின் நீதிபதிகளும் உத்தியோகஸ்தர்களும் காலந்தவறாமல் தங்கள் அலுவல்களுக்குப் போய் ஜாக்கிரதையோடும் அச்சத்தோடும் அவரவர்கள் வேலையைப் பாக்கி வையாமல் செய்து வந்தார்கள். செட்டியார் தாமே கோர்ட்டுக்கு யாவருக்கும் முன் வந்து தம்முடைய வேலையைப் பாக்கியின்றி முடித்து, எல்லோருக்குங் கடைசியாக வீட்டுக்குப் போகும் வழக்கம், மற்றவர்கள் அவரைப் பின்பற்றி நடக்கும்படிச் செய்தது. கீழ்க்கோர்ட்டுப் பரிசோதனைக் குறிப்புகளைப் பார்வையிடுகையில், நுணுக்கமாய் இவரால் பரிசோதிக்கப்படாமல் விடுபட்ட கீழ்க்கோர்ட்டு ஒன்றேனுமில்லை யென்று காட்டுகிறதுமன்றி, பரிசோதனைப் பூர்த்தியாயும் நுணு நுணுக்கமாகவுஞ் செய்து அனேக குறைகளைக் கண்டுபிடித்துச் சீர்திருத்தியும், கணக்கிலுள்ள மோசங்களைக் கண்டறிந்தும் அக்குற்றஞ் செய்தோர்களைத் தண்டனைக்குள்ளாக்கினர் என்றுந் தெரியவருகிறது:—

உயர்ந்த உத்தியோகஸ்தர்களாகிய திவான், தலைமை நியாயாதிபதி, ஜில்லா ஜட்ஜுகள், டிப்டி கமிஷனர்கள் முதலியோர், ஜமாபந்தி

கார்யோஜனை முதலியவைகட்காக வெளியூர்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்யும்போது, பிரஜைகள் அதிகப் பொருள் செலவு செய்து பந்தல்கள், தோரணங்கள் முதலிய சிங்காரங்களமைத்து, மேளவாத்திய ஆடம்பரங்களுடன் எதிர் கொண்டுபோய் உபசரிப்பது வழக்கமாயிருந்தது. தம்புசெட்டியார் தலைமை நியாயாதிபதியாயிருக்கையில், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜிகளுக்கும் டிப்டி கமிஷனர்களுக்கும், அடியிற்கண்ட ஒரு Circular தாக்கீது அனுப்பி, மேற்சொல்லிய வழக்கத்தைத் தடுத்தார்.—

"பெங்களூர் சீப்கோர்ட்டு. 1893-ம் வருடம் டிசம்பர் 1உ. பிரியமுள்ள ஐயா! தலைமை நியாயாதிபதி கோர்ட்டுகளின் பரிசோதனை விஷயமாய், இதனுள்ளடக்கிய பட்டியிற்கண்ட தங்கள் ஜில்லாவுக்குட்பட்ட சில ஊர்களைத் தரிசிப்பதற்கு, உத்தேசித்திருக்கின்றனர். இச்செய்தியைத் தங்களுக்கு எழுதித் தெரிவிக்கவும், எந்த ஊரிலும், பந்தல் முதலிய தோரணங்கள் அமைப்பதற்கும், மற்ற ஆடம்பரங்கள் செய்வதற்கும், வேண்டிய ஏற்பாடு யாதொன்றுஞ் செய்யவேண்டாமென்று முனிசிபல்களுக்கும், அமுல்தார்களுக்கும், உத்தரவு செய்யும்படித் தங்களை முக்கியமாய்க் கேட்டுக்கொள்ளும்படிச் சொல்லியிருக்கின்றனர். யாதொன்றையும் அதனதன் சுபாவ நிலைமையிற் காணுவதே அவருக்குச் சந்தோஷமாகும்.

இங்ஙனம்:
தங்கள் விஸ்வாசமுள்ள,
**S. R. சுப்பராய ஐயர்,**
சீப்கோர்ட் ரெஜிஸ்ட்ரார்."

சீப் கோர்ட்டில் பைசலாகிற முக்கியமான தீர்மானங்களையும் நிபந்தனைகளையுந் திரட்டி அதுகளில் அடங்கிய சாராம்சங்களை (Notes of Cases) ஒருவாரத்துக் கொருமுறை அச்சிட்டுப் பிரசுரமாகும்படியான ஏற்பாட்டை நியாயவாதிகளின் விருப்பத்துக் கிணங்கத் தம்புசெட்டியார் செய்தனர்.

மைசூர் லா ரிபோர்ட் (Mysore Law Reports) என்னும் தீர்ப்புகளின் விவர சட்ட அறிக்கைப் பத்திரங்களின் கோர்வை முழுவதும் தம்புசெட்டியார் மெயின் (Mr. J. D. Mayne) துரைக்கு அனுப்பியதால், அத்துரையால் இயற்றப்பட்ட கீர்த்திபெற்ற இந்து மநுதருமச் சட்ட நூலிலும் (Mayne's Hindu Law and Usage) குற்றங்களுக்காக விதித்த இந்திய சட்ட நூலிலும் (Indian Criminal Law) மைசூர் சீப் கோர்ட்டிலாகிய சில விசேஷ தீர்மானங்களையும் குறித்து எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அதனால், மேற்படி மைசூர் லா ரிபோர்ட்டுகள் பிரசித்தியடைந்து மேன்மை பெற்றன.

மைசூர் சீப் கோர்ட்டுத் தலைமை நீதிபதிக்கு இரண்டாயிரமான மாத நிவேதனம் இந்திய துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டது.



ஐரோப்பியராயிருக்கில் மாதச் சம்பளம் 2,500 ரூபா எனவும், சுதேசிகளாகில் 2,000 ரூபா எனவும் விதித்திருந்தனர். தம்புசெட்டியார் விஷயத்தில் ஐரோப்பியர் சுதேசிகளென்னும் வித்தியாசத்தை நீக்கி, மகாராஜா அவர்கள் கருணைகூர்ந்து 2,500 ரூபா சம்பளம் பெறும்படி உத்தரவளித்தனர்.

தம்புசெட்டியாரின் சம்பளம் 2,500 ரூபாவாக உயர்த்தப்பட்டபோது, அக்காலத்தில் சீப் கோர்ட்டு மூன்றாவது ஜட்ஜாக விருந்து பிற்காலத்தில் திவானாகிய கிருஷ்ணமூர்த்தி, தம்புசெட்டியாரை வாழ்த்தி எழுதியதாவது:—

"எனது பிரியமுள்ள ஐயா, தங்கள் சம்பளம் 2,500 ரூபாவாக உயர்த்தப்பட்டதென்னுஞ் செய்தி நேற்றுதான் ரிஜிஸ்ட்ரார் சொல்லத் தெரியவந்தது. மகாராஜா தங்கள்மீது இன்னுமதிகமாக வைத்த தயையின் இந்த அடையாளத்தை யுணர்ந்து தங்களை யான் மனதாரவும் உண்மையாகவும் வாழ்த்துகிறேன். குறிக்கொள்ளத்தக்கதான தங்களுடைய சேவகத்தின் மாட்சிமையை அரசர் அறிந்துகாட்டிய இத்தயவுடைய செய்கைக்காக யான் மிக மகிழ்ச்சியுற்றனன். தாங்கள் நெடுங்காலம் இக்கவுரவத்தை அனுபவிக்கவும், தங்களுடைய நன்மையைக் கோருபவர்களாகிய எண்ணம் சீக்கிரம் நிறைவேறவும், இவ்விராச்சியத்தின் அரசூழியத்தில் உயர்ந்த நிலைமையடைந்து தாங்கள் சிறந்தோங்கவும், கடவுள் அருள்செய்வாராக!

1894ளு ஜனவரி மீ 28உ.

தங்களுண்மையுள்ள,
**P. N. கிருஷ்ணமூர்த்தி."**

தம்புசெட்டியார் செய்துவந்த மந்திராலோசனைச் சங்கவேலைக்கு 8 வருஷங்கள் வரையில் அதிகப்படி (allowance) யாதொன்றும் பெறவில்லை. ஒன்பதாவது வருஷமுதல் இந்த வேலைக்காக, மாதம் ஒன்றுக்கு 250 ரூபா கொடுக்கப்பட்டது. இந்தத் தொகையைத் தலைமை நீதிபதிக்குரிய சம்பளத்துடன் பெற்றுவந்தனர்:—

ஆங்கிலேய துரைத்தன ஊழியத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தராய் மைசூர் சமஸ்தான சேவகத்துக்கு மாற்றப் பெற்றதன்மையில் தம்புசெட்டியாரிருந்தமையால், 30 வருஷச்சேவக முடிந்த பிறகு, அதற்காக ஆங்கிலேய துரைத்தன உபகாரச்சம்பளம் (Pension) பெற்றுக்கொண்டு, மைசூர் சமஸ்தானத் தலைமை நீதிபதியாகவும், மந்திராலோசனையின் பிரதான மெம்பராகவு மிருந்து ஊழியஞ் செய்துவந்தனர்.

1894-ம்வருஷம் எப்பிரல் மாதத்தில், மைசூர் சேவகத்தினின்று நீங்கும்படி உத்தேசித்தனர். இவ்விஷயத்தைக் குறித்து சேஷாத்திரி ஐயருடன் பேசியபோது, ஐயர் மகாராஜாவின் கருத்தை யறிவதற்குமுன் முடிவு சொல்லக்கூடாதவராகி, மகாராஜாவின் சித்தத்

தைத் தெரிந்து அறிவிக்கும் வரையில் உத்தியோகத்தைவிட்டு நீங்கும் யோசனையைத் தவிர்த்திருக்க வேண்டுமென்று தம்புசெட்டியாரைக் கேட்டுக்கொண்டு, இவ்விஷயமாக 1894-ம் ஆண்டு எப்பிரல் 9-ம் தேதி அடியிற்கண்ட நிருப மனுப்பினர் :—

"என் பிரியமுள்ள தம்புசெட்டியாரே! தங்களை உத்தியோகத்தில் நிறுத்தி வைத்துக்கொள்ளுதலைக் குறித்து மஹாராஜா அவர்களுடன் பலநாளும் நான் சம்பாஷணைபுரிந்தேன். தங்கள் விருப்பப்படிக்கும் தங்களுடைய அனுகூலத்துக் கொத்தபடிக்குஞ் செய்ய மஹாராஜா அவர்கள் இஷ்டப்படுகிறார். ஆனாலும், தாங்கள் இன்னும் நெடுநாள்வரையில் உத்தியோகத்தினின்று நீங்காமல் இருப்பது அவர் சொந்த அபேட்சையாகும். தாங்கள் இவ்வளவு காலம்வரையில் தான் உத்தியோகஞ் செய்தல் வேண்டுமென்று நான் குறிக்கவில்லை. அவ்விஷயத்தைத் தங்கள் மனதுப்படித் தீர்மானித்துக்கொள்ள தங்களுக்கே அதை யான் யோசிக்கவிட்டிருக்கிறேன். தங்களுண்மையுள்ள K. சேஷாத்திரி ஐயர்."

இக்கடிதத்துக்குத் தம்புசெட்டியார் பின்வருமாறு மறுமொழி வரைந்தனர் :—

"தாங்கள் எனக்கு எழுதிய நிகழும் 9வ திருபத்தைக் குறித்துத் தங்களுக்கும், தங்கள் மூலமாக, ஸ்ரீ சாமராஜேந்திர உடையர் பஹதூர் மகாராஜா அவர்களுக்கும், எனது மனப்பூர்வமான வந்தனம் தந்தனன். மகாராஜா அவர்கள் கருத்தையே ராஜகட்டளையாக நான் மதிக்கின்றமையால், எனது தேகதிடமும் நல்ல சுகாதார நிலையும் எவ்வளவு காலம் வேலைசெய்ய இடந்தருமோ அதுவரையில் யான் மைசூர் அரசாங்கத்திலிருந்து என் தாழ்மையுள்ள ஊழியத்தால் உதவிசெய்யத் தீர்மானித்திருக்கிறேன். முன்னரே, முக்கியவிதியாக, மகாராஜாவினால் அனுமதி தரப்பட்டபடி, வேலையிலிருந்து நான் நீங்குமுன் பாதிசம்பளம் பெற்று பர்லோ (Furlough)என்னும் விடுதலை நாள் எனக்குக் கொடுக்கப்பட்டதாக நான் எண்ணுவேன்.

தங்கள் உண்மையுள்ள,

தி. இரா. தம்புசெட்டி."

1894-ம் வரு எப்பிரல் மாதம் 27வ தம்புசெட்டியாரின் நான்காவது புத்திரி பகவதியம்மாளுக்கும், அதே மாதம் 30வயில் இரண்டாவது புத்திரன் தர்மராஜ் செட்டிக்குந், திருமணம் நிறைவேறியது.

1894-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28வ ஸ்ரீ சாமராஜேந்திர உடையர் பஹதூர், G.C.S.I., அவர்கள் கல்குத்தாவில் திடீரென மரணமடைந்த துக்கசமாசாரம் பெங்களுருக்கெட்டியுவுடனே, ரெசிடண்ட் கர்னல்-ஹெண்டர்சன் (Col. G. N. Henderson) தம்புசெட்டியாருடன் மைசூருக்குச் சென்று, மஹாராஜா அவர்களின் பிரிவைப்பற்றி மைசூர் பிரஜைகளுக் கறிவித்து, இத்துக்க சம்பவத்திற்காகக் கலங்காதிருக்கும்படித் தேறுதலைச் செய்து, இந்த மைசூர் அரசாட்சிக்கு இளவரசர் இந்திய துரைத்தனத்தாரால் ஏற்



படுத்தப் பெறுவர் என்று கூறினர். இது நடந்த இரண்டு தினங்களுக்குப் பின்னர் (டிசம்பர் 30வ.) தம்புசெட்டியாரின் கையொப்பத்துடன் பிரசித்தஞ் செய்யப்பட்ட மைசூர் செஜட் அபூர்வ விளம்பரப் பத்திரத்தில் "(Mysore Gazette Extraordinary)."

"காலஞ்சென்ற மகாராஜா ஸ்ரீ சாமராஜேந்திர உடையர் பஹதூர் அவர்களின் ஜேஷ்டபுத்திரராகிய கிருஷ்ணராஜ உடையர் பஹதூர் இராஜ பட்டத்துக்குரியவராக இந்திய துரைத்தனத்தாரால் ஏந்துக்கொள்ளப்பட்டனர். இவ் விளவரசருக்கு அரசாளும் பருவம் வருமளவும், எவ்விதமான ஏற்பாடுடன் அரசாட்சி நடத்தப்பட வேண்டுமோ அதைக்குறித்துத் தீர்மானமுள்ள உத்தரவு பின்னால் அனுப்பப் படுகிறவரையில், இப்போது நடத்திவருவதுபோல அரசாங்க காரியங்களைத் திவான் சேஷாத்திரி ஐயர் கௌன்ஸிலர்களுடன் நடத்திவரக் கடவர். முக்கியமான விஷயங்களில் பிரிட்டிஷ் ரெஸிடெண்டை யனுசரித்து அவர் சொல்லும் யோசனைக்கிணங்கியும், ஸ்ரீ வாணிவிலாச சந்நிதான மஹாராணி யவர்களுடைய இஷ்டத்துக்கொத்தும், நடத்தக்கடவர்" என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட அபூர்வ விளம்பரப்பத்திரம் வெளியான சில தினங்களுக்குள், ஆங்கில ராஜப்பிரதிநிதியாகிய லார்ட் எல்ஜின், மைசூர் இளவரசர் கிருஷ்ணராஜ உடையர் பஹதூர் அவர்களுக்கு 1895-ம் ஆண்டு ஜனவரிமீ 25வ ஒரு நிருபமனுப்பினர். அதில்,

"ஸ்ரீ சாமராஜேந்திர உடையர் பஹதூர் மஹாராஜா அவர்களின் மரணத் தைக் குறித்த தமது அனுதாப உணர்ச்சிகளைத் தெரிவித்தபின்னர், இளவரசர் மைசூர் அரசனுக்கு அதிபதியாக இராஜபட்டத்தைப் பெற உரியவராக இந்திய துரைத்தனத்தார் ஒப்புக்கொண்டதை தாம் ஊர்ஜிதப் படுத்துவதாகவும்; இளவரசருக்குத் தக்கபருவம் வந்தபோது, அரசியலை நடத்தத்தக்க யோக்கியதையும் திறமும் உள்ளவராய்த் தோன்றில், இவருடைய பிதா நன்றாக நடத்திய இராஜ அதிகாரங்கள் இவருக்குங் கொடுக்கப்படுமென்றும்; அதுவரையில் இளவரசரின் கல்வி விஷயத்தையும் மைசூர் ஆட்சியின் அதிகார நிலைமையையும் பராமரித்து வரும் பெரிய உத்தரவாதம் ஆங்கில துரைத்தனத்தாரைப் பொறுத்ததாயிருக்கிறதென்றும், இவ்விஷயத்தைப்பற்றி ஆங்கிலப் பிரதிநிதி மிக்க கவலையோடு ஆழ்ந்து யோசிக்கலாயினரென்றும்; இப்போதுள்ள சந்தர்ப்பங்கள் அனுகூலமுள்ளவைகளாயிருக்கின்றமையால் இளவரசருக்கு வயது வருந்தனையும் ஒரு மத்திய ஆட்சியை ஏற்பாடு செய்யும்பொருட்டு இந்திய கவர்னமெண்டார் மஹாராணியார் வாணிவிலாச சந்நிதான மாதரசிக்கு ரீஜெண்ட் என்னும் கௌரவப் பட்டத்தைத் தரச் சித்தமாகினர் என்றும்; இப்பட்டத்தை யளிப்பதில், மகாராணியும், திவானும், கௌன்ஸிலர்களும், இதுபரியந்தம் நடத்திவந்ததுபோல் இனிமேலும் தங்கள் சொந்தப் பொருப்புகொண்டு ஜாக்கிரதையுடன் மைசூர் ஆட்சியை நடத்தி வருவார்களென்னும் நம்பிக்கையை இந்திய துரைத்தனத்தார் கொண்டிருக்கிறார்களென்றும், கடைசியாய் இளவரசரின் விருத்தியையும் மைசூர் அரசாங்கத்தின் விருத்தியையும் கோரி இவைகளை மிக்க கவலைகொண்டு கண்காணித்து வருவார்களென்றும்; ஆங்கில துரைத்தனத்தாரின் நம்பிக்கையைப் பெற்றவரும், மைசூர் ஆட்சிக்கு உதவிசெய்யத்தக்க வருமான ரெஸிடெ

ண்ட் அவர்கள், இளவரசரின் நேராக அருகிருந்து தக்க ஆலோசனை கொடுக்கக் கூடியவருமாக விருப்பரென்றும்; எல்லோராலுந் துக்கிக்கப்பெற்றத் தமது தந்தையின் உயர்ந்த ஸ்தானத்தை இளவரசர் பெறத் தகுதியுள்ளவராவாரென்று மனப்பூர்வமாய் நம்பியிருக்கிறதாகவும்”

தெரிவித்தனர்.

இப்புதிய அரசாட்சியை நடத்துவதற்குத் திவான் சர்-சேஷாத்திரி ஐயருக்குதவியாக ஏற்பட்ட மூன்று கௌன்ஸிலர்களில், தம்பு செட்டியார் மந்திராலோசனைச் சங்கத்தின் முதல் மெம்பராக நியமிக்கப் பெற்றதல்லாமல், சீப்கோர்ட்டினின்று நீங்குமளவும் கௌன்ஸில் வேலையுடன் தலைமை நியாயாதிபதித் தொழிலையும் நடத்திவரும்படி மஹாராணி ரீஜெண்டினது உத்தரவாயிற்று.

மஹாராணி ரீஜெண்டாக விருந்து அரசாட்சியை நடத்தும்படி தீர்மானித்தபோது, இந்திய கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கவேலை முறைமையில் மந்திராலோசனைச் சங்கத்தின் ஒவ்வொரு மெம்பருக்கும் அதிக வேலைகள் கொடுக்கப்பட்டதனால், தம்புசெட்டியாருக்கு நேர்ந்த அபாரமான வேலைகளில் சிலதுகளைக் குறைத்து அவருக்குக் கொஞ்சம் இளைப்பாற்றியைத் தருவது நியாயமெனக் கருதப்பட்டது. 1895-ம் வருஷம் ஜூலைமாதம் 7வ. திவான் சேஷாத்திரி ஐயர் தம்புசெட்டியாருக்கு ஒரு கடித மெழுதித்,

“தலைமை நீதிபதியாகவும் மந்திராலோசனைச் சங்கத்தின் தலைமை மெம்பராகவுமிருந்து, இந்த விரண்டு ஸ்தானங்களையும் வகித்திருக்க உமக்குப் பிரியமிருக்குமாகில் அப்படியே செய்யலாம், ஆனால் கௌன்ஸில் வேலைகளில் சிலதுகளைக் குறைத்து தங்களுக்கு இளைப்பாற்றியைத் தரவேண்டியதாயிருக்குமென நினைக்கிறேன்”

என்று தெரிவித்தார்.

மந்திரி வினவியதற்கு விடையாகச் செட்டியார்,

“எனக்கு இது தக்கது, அது தக்கது என்று, என் சுயேச்சையின்படி யாதொன்றும் எண்ணவில்லை. மைசூர் சமஸ்தானத்துக்கு என் எந்த ஊழியத்தால் நன்மையுண்டாமெனத் தீர்மானிக்கப்படுமோ அதுவே என் மனதுக்கு ஒத்ததாகும்”

என்று தெரிவித்தனர். தம்புசெட்டியாரைப் போலொத்த உத்தியோகஸ்தரொருவரிடமிருந்து இவ்வித மறுமொழியைப் பார்க்கிலும் மேலானதொன்று பெற எண்ணக்கூடியதல்ல.

1895-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னை நகரில் பிரதான நியாயஸ்தலத்து (High Court) நியாயாதிபதிகளில் ஒருவராயிருந்து வேலையினின்று நீங்கிய மெஸ்தர்-பெஸ்ட் (J. W. Best)



தாரை மைசூர் சீப் கோர்ட்டின் பிரதான நியாயாதிபதியாக நியமனம் பெற்றனர். தம்புசெட்டியார் மேற்படி உத்தியோகத்தை பெஸ்ட்தாரைக்கு ஒப்புவித்து மந்திராலோசனைச் சங்கத்தின் முதன் மெம்பர் வேலையிலேயே நின்று முன்போலவே 2,750 ரூபா சம்பளம் பெற்று வந்தனர்.

தம்புசெட்டியார் தலைமை நியாயாதிபதி வேலையை விட்டுக் கவுன்ஸிலர் வேலையை மாத்திரம் வகித்த ஸந்தர்ப்பங்களைப் பற்றி நேர்ந்த மேற் சொல்லிய கடிதப் பிரதி கடிதங்களின் கருத்துகளையறியாதவர்கள். திவான் அந்தஸ்துக்குப் பக்கத்து அந்தஸ்துடையதான சீப் ஜட்ஜ் வேலையை விட்டுக் கவுன்ஸிலராக விருக்கச் சம்மதித்ததால், செட்டியார் தம்முடைய மேல் அந்தஸ்தினின்று கீழ் இறங்கும்படிச் செய்துக்கொண்டார் என்று சிலர் தப்பு அபிப்பிராயத்தைக் கொண்டார்கள். அந்தஸ்தின் படியைக் குறித்த இவ்விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் சர்ச்சை நடந்தபின், தம்புசெட்டியாருக்கநுகூலமாகவே தீர்மானிக்கப்பட்டது. அரமனைத்தர்பார்களில், இராஜசிம்மாசனத்துக் கருகில் முதல்வரிசையில், திவான், மஹாராணியாரின் மருகர் மூன்றுபேர், தம்புசெட்டியார், ஆக ஐந்து பேர்களுக்கு புஷ்பஹாரம் சந்தனந் தாம்பூலம் பன்னீர் முதலியவை முதலில் கொடுத்து மரியாதை செய்புமுறை இப்போதும் வழங்கிவருகின்றது.

தம்புசெட்டியார் சீப் கோர்ட்டு நியாயாசனத்தில் வீற்றிருந்து தமது தொழில்களைச் செய்த கடைசிநாளில், இக்கோர்ட்டை விட்டுப்போக விருக்கும் செட்டியாருக்குத் தங்கள் கடைசி மரியாதைகளைச் செலுத்த அவல்கொண்டு பெருங் கூட்டமாய் நியாயவாதிகளும் மற்றவர்களும் வந்து நிறைந்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் திவான் சேஷாத்திரி ஐயரிடமிருந்து தம்புசெட்டியாருக்கு ஒரு கடிதம் வந்தது; அது பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

“என் பிரியமுள்ள மிஸ்டர் தம்புசெட்டியாரே! நாளையதினம், தாங்கள் நீதியாசனத்தில் கடைசியாக வீற்றிருப்பதைத் தெரிந்துக்கொண்டிருக்கும் நியாயவாதிகளொன்றுசேர்ந்து, தங்கள்மட்டில் அவர்களுக்குள்ள நல்லுணர்ச்சிகளை வெளியிடுவதற்கும், தங்களுடைய உருவமைந்த புகையுருவப் படமொன்று எடுக்கக் கொள்ளவுந், தீர்மானித்திருக்கிறார்களென்று அறிந்து நான் மிகவுஞ் சந்தோஷிக்கின்றேன். நாளையதினம் சீப் கோர்ட்டில் தாங்கள் கடைசியாக வீற்றிருக்கும் நாளாகையால், இவ்வளவு காலமாய் நிறைந்த வெற்றியோடு வீற்றிருந்து தங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த ஸ்தானத்தை விட்டு நீங்கும் இத்தகுதியான சமயத்தில், அவர்கள் செய்யும் உபசார மரியாதைகளைத் தாங்கள் பெறவேண்டியது நியாயமென்றே எண்ணுகிறேன். நியாயாதிபதித் தொழில் சீக்கிரத்தில் முடிவுபெறுவதாயினும், தாங்கள் இன்னு மேலானபதவிகளிலிருந்து,

இந்தச் சமஸ்தானத்துக்காக நம்முடைய மகாராஜாவினுடைய சேவகத்தில் உழைத்து மேன்மேலுங் கீர்த்திபெற்று விளங்கும்படித், தங்களுடைய ஆயுள் பெருகிச்சுகமாகவிருக்கவேண்டுமென்பதைக்கோரி, மனப்பூர்வமாய்ப் பகவானைப் பிரார்த்திக்கும்,

தங்கள் உண்மையுள்ள,

**K. சேஷாத்திரி ஐயர்."**

அன்றையதினம் கோர்ட்டில் நடந்த விசேஷங்களைப்பற்றி, 1895-ம் வருஷம் அக்டோபர்மாதம் 30உயில் பிரசுரமாயின பெங்களூர் பிரதிதினத் தபால் (*The Daily Post*) பத்திரிகையில், அடியிற் கண்டவாறு வரையப்பட்டது :—

"இன்றையதினம் சீப் கோர்ட்டில் மிஸ்டர் தம்புசெட்டியார் தமது நியாயாதிபதி ஸ்தானத்தில் கடைசியாக வீற்றிருந்து, குறிக்கப்பட்டிருந்தசில முக்கியமான அப்பீல் வழக்குகளைப் பைசல் செய்தனர். கோர்ட்டு வேலை தீர்ந்தவுடன், நியாயவாதிகள், கவர்ன்மெண்ட் நியாயவாதி (Government Advocate) யாகிய மிஸ்டர் இராமசாமி ஐயர் மூலமாகத், தம்பு செட்டியார் தலைமைநீதிபதியாக விருந்து திறத்தோடும், நிஷ்பட்சபாதமாகவும்,மெத்தவும் உத்தரவாத நிறைந்த அதிவருத்தமான தமது கடமைகளை நிறைவேற்றியதற்காக மிக்கப் புகழ்ந்து உபசார வந்தனங்களைக் கூறினார்கள். மிஸ்டர் தம்புசெட்டியார், 25 வருஷங்களாக நியாயாதிபதித் துறையில் சேர்ந்து உத்தியோகஞ் செய்து வந்தனர். அதில் கடைசி ஐந்து வருஷங்களில், தலைமை நியாயாதிபதிக் கடமைகளுடன் மந்திராலோசனை மெம்பராகவும்,சிறைச்சாலைகளின் மேல் விசாரணைக் கர்த்தராகவும், சுதேச துரைத்தன உத்தியோகங்களுக் குரியவர்களாக்கும் பரிட்சைகளை (Mysore Local Service Examinations) நடத்தும் அதிகாரிகளின் சங்கத்து அக்கிராசனாதிபதியாகவும், மைசூர் இன்சுரன்ஸ் சங்கத்தின் அதிபதியாகவுமிருந்து வேலைகளை நடத்திவந்தனர். தமது மனசாட்சிக் கொத்து நடந்து எல்லோராலும் நேசிக்கப்பட்ட நீதிபதியாயிருந்தனர். அமோகமான தமது வேலைகளை நடத்துவதில் மிக்க திறமுடையவராக விளங்கினார். இப்போது கோர்ட்டு வேலையை விட்டு நீங்கியபடியால், தமது முழுக்கவனத்தையும் கவுன்சில் வேலையிற் செலுத்தி மைசூருக்கும் அச்சமஸ்தானப் பிரஜைகளுக்கும் அநேக நன்மைகளைச் செய்வாரென்று கோருகிறோம். இந்தத்தலைமை நியாயாதிபதியின் ஞாபகம் நிலைநிற்கச்செய்ய, இவரையும் இவரைச் சூழ மற்ற ஜட்ஜிகளையும், நியாயவாதிகளாகிய அட்வொகேட்டுகளையுஞ் சேர்த்து, ஒரு புகையுருவப் படம் பிடிக்க ஏற்பாடு செய்திருக்கிறதாய்த் தெரிய வருகிறது."

"மிஸ்டர் இராமசாமி ஐயர் சொல்லியதாவது":—

"கௌரவம்பொருந்திய தங்கள் சமுகத்துக்கு வந்தனம். "இன்றையதினம் தாங்கள் கடைசியாக இக் கோர்ட்டில் வீற்றிருப்பதென்றறிந்து, தாங்கள் சென்ற 25 வருஷகாலம் இந்தச் சமஸ்தானத்தின் நியாயாதிபதித் துறையில் சேர்ந்திருந்து தொழில்களை நடத்திவந்ததைப் பற்றி எங்களுக்குண்டாகிய நல்லுணர்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும், நியாயவாதிகளாகிய எங்கள் கூட்டத்தாரின் புறமாய், நான் வெளியிட்டுச்சொல்லத் தங்கள் உத்தரவை வேண்டுகிறேன். இந்த மைசூர் இராச்சியத்தின் நியாயாதிபதித் துறையின் சேவக முறைமைகளில்



ஒழுங்கான ஏற்பாடுகளில்லாமலும், எந்தச் சட்டங்களை உபயோகிக்கிறதென்றும், எந்த முறைமைகளை அநுசரித்து வேலைகளைச் செய்வதென்றும், தெரியாமல் சந்தேகாஸ்பதத்தில் மூழ்கியிருந்த காலத்தில், ஜுடிஷியல் கமிஷனர் கோர்ட்டில் தாங்கள் ஹெட் சிரஸ்ததாராகச் சேர்ந்து தொழில் நடத்த ஆரம்பித்தீர்கள். அப்போது வழக்குகளை நடத்துவதற்கு நியாயாதிபதிகளின் ஏற்பாடுகளும் நிபந்தனைகளு மில்லாமலிருந்தன. கக்ஷிக்காரர்களின் புறமாக எந்த மனிதனாகிலும் நீதிபதி முன்பாகப் பேசலாமென்று உத்தரவு செய்தால் அவன் பேசுகிற வழக்கமொன்றிருந்தது. ஆங்கிலேய துரைத்தன உத்தியோகஸ்தராய் தாங்களிருந்து அடைந்த அனுபவத்தைக்கொண்டு, நியாயவாதிகளின் ஏற்பாட்டைப் பற்றிய திருத்தங்களைச் செய்யத்தக்க அபிப்பிராயங்களைச் சொல்லச் சக்தியுள்ளவராயிருந்தீர்கள். பின்பு தாங்கள் ஜுடிஷியல் அசிஸ்டெண்ட் உத்தியோகம் பெற்று நடத்தி வந்தபோது, குழந்தைப் பருவத்திலிருந்த நியாயவாதிகளின் கூட்டத்தை உச்சாகப்படுத்திப் பலப் படுத்தினீர்கள். 1884-ம் ஆண்டில் சீப் கோர்ட் உண்டானபோது, தங்களுடைய விசேஷித்த நெடுநாள் ஊழியத்தைக் கவர்ன்மென்டார் நன்கு மதித்து, அக்கோர்ட்டில் ஒரு ஜட்ஜாகவும், 1890-ம் ஆண்டில் அக்கோர்ட்டின தலைமை ஜட்ஜாகவும், தங்களை நியமித்தனர். அதுமுதல் இதுபரியந்தம் நியாயவாதிகளின் கூட்டத்தாரை மிகவும் அன்போடு நடத்திவந்தீர்கள். நீதிபதியாயிருந்த தங்கள உத்தியோகத்தின் நடவடிக்கை நியாயங்குன்றாத சரி நிறையோடு பிரகாசித்து விளங்குகிறது. நியாயவாதிகளின் கூட்டத்திற்கும் நியாயாதிபதியின் ஸ்தானத்திற்கும் அன்னியோன்னிய ஸ்நேகமிருந்து வந்தது என்று மிக்க களிப்போடு கூறுவோம். தாங்கள் தலைமை நீதிபதியாகவும், மிஸ்டர். இராமசந்திர ஐயர், மிஸ்டர். கிருஷ்ணமூர்த்தி, தங்களுக்குதவியாகவுமிருந்து எங்களுடைய சுதந்தரங்களையும் பாத்தியதைகளையும் பாதுகாத்துவந்தீர்கள். இவ்வூரின் மாமூல் நடவடிக்கைகளையும் சட்ட நிபந்தனைகளையும் நன்றாயுணர்ந்து தாங்கள் நீதிசெலுத்திவந்ததை நாங்களும் மற்ற ஜனங்களுங்கண்டு மெச்சத்தக்கதா யிருந்ததென்பதிற் சந்தேகமில்லை. நம்முடைய அதிர்ஷ்டத்துக்குரிய தயாளநிறைந்த காலஞ்சென்ற மஹாராஜா அவர்கள தங்களுடைய யோக்கியதைநிறைந்த ஊழியத்தைமதித்து, இராஜதர்ம ப்ரவீணரென்னும் பட்டத்தைத் தங்களுக்களித்தனர். அன்றியும் தங்களுடைய மேன்மையான ஊழியத்துக்காக விக்டோரியா சக்ரவர்த்தினியால் மதிக்கப்பெற்று C. I. E. என்னும் பட்டத்தைத் தரப் பெற்றீர்கள். இப்போது தங்களுக்குச் சீப் கோர்ட்டிலுள்ள நெருங்கிய தொந்தார்த்தம் நீங்குவதால், எங்களெல்லோர் மீதும் தாங்கள பாராட்டிய அன்பினுக்காகவும் பராமரிப்புக்காகவும் மனப்பூர்வமாய் எங்கள் வந்தனங்களைச் செலுத்துகிறோம். கடைசியாய் மஹாராணியாரது மந்திராலோசனைச் சங்கத்து மெம்பராக வீற்றிருந்து தங்களுடைய புதிய அனுபவத்தினால் விளையும் நன்மைகளை ஜனங்களுக்குத் தருமபடி, எல்லாம் வல்லகடவுள தங்களுக்கு நீளிய ஆயுளைத் தந்தருளும்படி பிரார்த்திக்கின்றோம்."

"இவ்வாழ்த்துக்குத் தம்புசெட்டியார் பின்வருமாறு விடையளித்தனர்":—

"குணவான்களே! என்மட்டில் நீங்கள் கொண்ட நல்லுணர்ச்சிக்காகவும், கடந்த எனது நியாயாதிபதித்துறைச்சேவகத்தைப் பட்சத்துடனும் அலங்காரமாகவும் புகழ்ந்துசொல்லிய வார்த்தைகளுக்காகவுஞ் சரியானபடி என் வந்தனஞ் செலுத்தத்தக்கச் சொற்களைத் தேடிச்சொல்லச் சக்தியற்றவனா யிருக்கிறேன்.

நெடுங்காலமாய்ச் சுறுசுறுப்போடு உழைத்த துறையினின்று நீங்குமிந்த சமயத்திலேதாகிலுஞ் சொல்வது மிக்க துக்கத்தையும் பிரயாசையையும் வருவிக்கத்தக்க காரியமாகும். நீங்கள் சொல்லியசொற்கள் என்மனதில் அதிக உருக்கமாய்ப் பதிந்தன. அநேக வருஷங்களாகப் பிரதி யொருநாளும் சந்தித்தும், என்னால் விசேஷமாய் மதிக்கப்பட்டும், நான் நீதி செலுத்துவதற்கு மிக்க உதவியைத் தந்து மிருக்கிற நியாயவாதிகள் கூட்டத்தின் பிரதிநிதிகளாகிய உங்களுக்குக், கடைசிவிசையாக இன்று இந்த நீதியாசனத்தைவிட்டு நீங்குஞ்சமயத்தில், என்னிலுண்டாகும் உணர்ச்சியைச் சரியாயெடுத்துக் கூறுவது மெத்தப் பிரயாசையைத் தருகின்றது. நீங்கள் பிரியத்துடன் கூறிய புகழ்ச்சிகளுக்கு நான் தகுதியுடையவனல்லன். என்னைக்குறித்து நீங்கள் சொல்லிய பட்சமுள்ள வார்த்தைகள் யாவும் என்மீதுள்ள அன்பினால் சொன்னவைகளேயன்றி என்னிலுள்ள யோக்கியதாபட்சத்தைப் பற்றியல்லவென வைத்துக் கொள்வேன். எப்படியாயினும், மெத்த உருக்கத்தோடும் உபசாரத்தோடும் என்னைப் புகழ்ந்துகூறிய வியாசத்திற்காக என் முழுமனதோடு என் வந்தனங்களைச் செலுத்தும்படிச் சம்மதியுங்கள். யான் மைசூர் துரைத்தன உத்தியோகத்திற் பிரவேசித்து இப்போது 28 வருஷங்களுக்கு மேலாயின. அப்போது ஜூடிஷியல் கமிஷனர் கோர்ட் என்று அழைக்கப்பட்ட இந்தக் கோர்ட்டின் ஹெட்சிரஸ்ததார், அல்லது ரிஜிஸ்டிராராக, இந்தச் சமஸ்தானத்தை யான் அடைந்தநாளாகிய 1867-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1உ யிலேயே Mysore Bar என்னும் நியாயவாதிகளின் கூட்டம் உண்டாவதற்குச் சந்தர்ப்பம் ஒத்துவந்ததை என் ஞாபகத்தில் வருவித்துப்பார்க்க எனக்குச் சந்தோஷத்தையும் பெருமையையுந் தருகின்றது. நம்மெல்லோருக்கும் சாதாரணமாய்த் தெரிந்த மிஸ்டர். கெண்டர்ஸ்லி என்னும் பெயருடைய மிக்க கீர்த்தியும், பிரஜைகளின் அன்பையும் பெற்று விளங்கிய நீதிபதி, மேற்படியேற்பாட்டைச் செய்து முன்னுக்கு கொண்டுவந்ததற்காக நாம் எல்லோரும் அவருக்கு நிரந்தரம் நன்றியுள்ளவர்களா யிருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எவ்விடத்திலும் நியாயவாதிகள் கூட்டமே மிக்க வலிமையுடையதாய்ப் பிரகாசிக்கின்றது. துரைத்தனத்தின் அதிகார உத்தியோகங்களுக்கு இக்கூட்டத்தினர்களே தெரிந்தெடுக்கப் படுகிறார்கள். பிற அரசாங்கத்திலுள்ளதுபோல மைசூர் அரசாங்கத்தின் நீதியிலாகாவில் திறமை யிருந்த அதிகாரிகளாய்ப் பிரகாசித்து உத்தியோகஞ் செய்கிறவர்களும், மற்ற வெவ்வேறு இலாகா அதிகாரிகளாக விளங்குபவர்களும், ஓர்காலத்தில் இந்த Bar என்னும் நியாயவாதிகள் கூட்டத்திற் சேர்ந்து அட்வொகேட் (Advocate) தொழில் செய்தவர்களே. இக்காலத்தில் சாமான்ய கல்வியுடையவர்களாய்த் தொழில்கள் செய்யத்தக்கச் சக்தியில்லாதவர்களா யிருக்கிறவர்களைத் துரைத்தனச் சேவகத்தில் சேர்ப்பதில்லையாகையாலும், துரைத்தனத்தைச் சேர்ந்த பெரிய அலுவல்களைத் திறமையோடும் ஊக்கத்தோடும் செய்யத்தக்க கல்வித்திறமும் யோக்கியதாபட்சமும் உள்ளவர்களே தெரிந்தெடுக்கப் படுவதாலும், அப்போதைக்கப்போது நியாயவாதிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களையே அவ்வுத்தியோகங்களுக்குத் தெரிந்தெடுக்கும்படி யாகுது. உலகினிடத்துள்ள எல்லா சாஸ்திரங்களின் மாதிரிகள், Law என்னும் சட்டநூற்றியால் விழுந்த ஆசிரியசாயல்களினின்று மேலெழுந்தவைகளாம் என்பது உண்மையான ஓர் பழமொழி. நியாயவாதத் தொழில் நம்பிக்கையும் கவுரவமும் பொருந்தியதோர் தொழிலாகும். இத்தொழிலின் கடமைகளைச் சரியாய் நிறைவேற்றுவோர்க்கு, வெளிக்கத் துறையைச் சேர்ந்த எல்லா ஞானமும் எளிதில் உண்டாகும். ஆகையால் உங்கள் தொழில் மெய்யாகவே மேன்



மையான அறிவுடைய தொழிலாகும். நீங்கள் ஒன்றுபடக்கூடியிருக்கும் கோர்ட்டானது, ஒரு பெரிய ஞானி சொல்லுமாப்போல், நீதியைக்கொண்டிருக்கும் ஓர் கோவில் என்னலாம். நியாயவாதம்புரியும் சனவான்களாகிய நீங்களும், நியாய சிங்காதனத்தில் வீற்றிருக்கும் ஜட்ஜிகளாகிய நாங்களும், இந்த நீதியென்னும் கோவிலின் பணிவிடைக்காரர்களாயிருக்கின்றோம். எந்தவகையிலும் உண்மையைத்தெரிந்து நீதியைக்கைப்பிடிக்குந் தன்மையால் நம்மிருதரத்தாருக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கின்றது. உண்மையைத்தேடிக் காண்பதில் நாம் நம்முடைய வாழ் நாள் முழுமையும் பிரயாசைப்பட்டுப்போக்கிறோம். ஆகையால் நீங்கள் நல்லபிப்பிராயங்கொண்டுரைத்த சொற்களின் தன்மையை நான் உணர்கின்றேன். நீங்கள் என்னிடத்துவைத்த அன்பினால், நீதிபதியாக நானிருந்து நடந்த என் நடத்தையின் பேரில் பிரியம் வைத்தவர்களாய் என்னைப்புகழ்ந்து கூறினீர்கள். நீதிபதியின் தன்மையில் எவ்வளவு மட்டும் உங்கள் புகழுரைகளுக்கு யான் பாத்திரனாகவிருந்தபோதிலும், நீங்களெல்லோரும் ஒன்று கூடி ஒரேமனதாய் வெளியிட்ட நல்லபிப்பிராயத்துடன் தலைமை நீதிபதி ஸ்தானத்தினின்று நீங்குகிறேனென்பதே எனக்குப் பூரணமான திருப்தியைத் தருகின்றது. நீதியடையவரும் வாதிப்பிரதிவாதிகளாகிய இருதரத்தாருக்கும் சந்தோஷம் வரச்செய்வது நீதிபதிக்குக்கூடாத காரியம். அப்படியே நீதிபதி செய்கிற தீர்மானத்தில் எப்போதும் வழுவாமலிருப்பதும் மிகப்பிரயாசை. சிலசமயம் தப்பிப்போவதுண்டு. எந்த நீதிபதியும் வழுவா வரத்தையடைந்திருப்பதில்லை. நீதிபதியின் கடமை கண்டிதமுடையது. அது, பயமின்றியும் தயைதாட்சண்யமின்றியும் சக்திக்கியன்றவரையில், மனசாட்சிக்கு விருத்தமில்லாமல், செலுத்தத்தக்க கடமையாகும். உங்களுக்கெல்லாந் தெரிந்திருக்குமாப்போல், இதனால்தான் நீதிபதியின் தொழில் மிக்க பிரயாசையைத்தருகின்ற தொழிலாகவிருக்கின்றது. நான் முன்சீப் உத்யோகத்தைப்பெற்றதுமுதல் இதுவரையுமான முப்பதுவருஷங்களில் சீப்கோர்ட்டுத் தலைமை நீதிபதியாகவிருந்த ஐந்து வருஷங்களுட்பட 11-வருஷகாலம் இந்தக் கோர்ட்டிற் சேர்ந்திருந்து தாங்கிக்கொண்டிருந்த பெரிய உத்தரவாதமும் கவலையும் பொருந்திய ஒருபெரிய சுமையின் பாரம் இன்று என்புயங்களினின்று இறக்கப்பட்டதாய் உணர்ந்து கவலை நீங்கினவனாயினேன். கொஞ்சகாலத்தாக்குமுன் இதே கோர்ட்டில் விஜயஞ்செய்து நம்மைக்களிப்பித்தவரும், சடுதியில் தேகவியோகம்பெற்றதால் நம்மெல்லோரையும் துக்கிக்கச் செய்தவரும், நம் அன்புக்கு மிகவும் பாத்திரமானவருமான நமது மஹாராஜா கருணைகூர்ந்து எனக்கருளிய இந்த உத்தியோகத்தை விஸ்வாசத்துடன் நடத்தியதில் நானடைந்த வெற்றி எவ்வளவு சிறியதாயினும், அது நியாயவாதிகளின் உதவியாலும் எனது சகபாடி நீதிபதிகளான இராமசந்திர ஐயர், கிருஷ்ணமூர்த்தி, இவர்கள் என்னுடன் துணைசேர்ந்து திறமையோடும் நன்மனதோடும் சலியாமுயற்சியோடும் மனம்பொருந்தித் தாராளமாய் அளித்த ஒத்தாசையாலும் உண்டாயிற்றென்று சொல்லுவேன். இவ்விருவரில் இராமசந்திர ஐயர், இந்தக் கோர்ட்டில் நான் சேர்ந்ததுமுதல் இதுவரையில் என்னுடன்கூடி உழைத்து இந்தச் சமஸ்தானத்தின் முதன்மையான அப்பீல் கோர்ட்டில் நீதிசெலுத்தியடைந்த கவுரவத்துக்குப் பங்காளியாயினர். இந்தப் பெரிய சமஸ்தானத்தின் தலைமையதிகாரியாய் நின்று அரசாங்கத்தை நடத்திவரும் திறமையுள்ள திவானாகிய எனது நேசர் சேஷாத்திரி ஐயர், நீதியிலாகாவின் விருத்திக்குரியதான சப்ஜட்ஜ் முன்சீப்களின் சம்பளங்களை யுயர்த்துவது முதலிய விஷயங்களில் நான் செய்யக்கோரிய ஏற்பாடுகளுக்கிசைந்து பலப்படுத்திவைத்ததை உணர்ந்து அவருக்கு

என் வந்தனங்களைச் செலுத்தக்கடமைப்பட்டவனாக விருக்கிறேன். கடைசியாய் கனவான்களே, நான் உங்களெல்லோருடன் இடைவிடாது வெகுகாலம் மகிழ்ச்சியோடு சம்பந்தப்பட்டிருந்ததை எப்போதும் என் ஞாபகத்தில் வைத்திருப்பதுமன்றி, இன்று நானிக்கோர்ட்டின் சம்பந்தத்தை விட்டு நீங்கும்போது நீங்கள் காட்டிய பட்சமுள்ள உணர்ச்சியையும் எந்நாளும் மறவேனென்று தங்களுக்கு உறுதியாய்ச் சொல்லுவேன்."

"தம்முடைய நற்குணங்களால் பிரஜைகளின் அன்புக்கும் விஸ்வாசத்துக்கும் பாத்திரமாயிருக்கும் மஹாராணி ரீஜெண்ட் அவர்களின் கவுன்சிலராக இப்போது நுழையவிருக்கும் புதிய துறையின் வேலைகளோடு என் சீவியகாலத்தின் பெரும்பாகத்தை நீதியிலாகாவிற் செலவழித்தடைந்த அனுபவத்தைப் பொருத்தச்செய்யும் சந்தர்ப்பம் எனக்கு வாய்க்குமாகில்,என்னால் கூடியமட்டும் இந்த நீதி யிலாகாவின் நன்மையை விர்த்திக்க முயலுவேனென்று நம்புங்கள். என்மட்டில் நீங்கள் கொண்டிருக்கும் நல்லெண்ணங்களுக்காகவும் நல்ல கோரிக்கைகளுக்காகவும் இன்னொருக்காலும் என்னுடைய வந்தனங்களைச் செலுத்தி, அன்போடு உங்கள் ஒவ்வொருவரிடமிருந்து செலவு பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்."

நியாயவாதிகள் முகமன்கூறி வாழ்த்தி வந்தனஞ்செய்தபின், தம்புசெட்டியாரையு மற்ற ஜட்ஜிகளையும் தங்களுடன் வீற்றிருக்கச் செய்து ஒரு புகையுருவப் படம் பிடிக்கும்படிச்செய்தனர். இது நடந்தபின் சீப்கோர்ட்டு ஆபீஸ் உத்தியோகஸ்தர்களெல்லோருஞ் சேர்ந்து தங்கள் எஜமானரும் நல்மை நீதிபதியுமான தம்புசெட்டியாரைத் தங்கள் மத்தியில் வீற்றிருக்கச்செய்து வேறொரு புகையுருவப் படம் அமைத்தனர். இது நடந்தபின்னர் அக்கோர்ட்டு ரிஜிஸ்டரார், இராஜரத்தின முதலியார், ஆபீஸ் உத்தியோகஸ்தர்களின் புறமாகநின்று தம்புசெட்டியாரை வாழ்த்தித், தங்கள்மீது செட்டியார் அன்புபாராட்டி ஆதரித்து வந்ததற்காக மிக்க நன்றிபாராட்டி வந்தனமளித்து விடைபெற்றுக் கொண்டனர்.

அன்று சாயந்திரம் பெங்களூர் ஹிந்து கிளப்பில் (Bangalore Club) நியாயவாதிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், (Advocates and Pleaders) ராஜாங்க உத்தியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் முதலியோர் திரண்ட கூட்டமாய்ச்சேர்ந்து தம்புசெட்டியாரை உபசரித்தனர். அச்சமயத்தில் நடந்த காலட்சேப விநோதங்கள் முதலிய வர்த்தமானங்களைப்பற்றி மதராஸ்வெற்றிக்கொடி (Madras Standard) என்னும் இங்கலீஷ் பத்திரிகையில், பின்வருமாறு பிரசுரஞ்செயயப்பட்டது:—

"தீவான் முதல் பெங்களூரிலுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களும், நியாயவாதிகளாகிய அட்வொகேட்டுகளும் ப்ளீடர்களும், பெருங்கூட்டமாய் பெங்களூர்கிளப் (Club) மாளிகையில் வந்து சேர்ந்தார்கள். அம்மாளிகையின் வெளிப்புறத்தில் பெரிய பந்தலிட்டுப் பலவித புஷ்பங்களாலும் விசித்திர வேலை



களாலும் அலங்கரிக்கப்பட்டு அதன் மத்தியில் இராஜதர்மப்ரவீண தம்பு செட்டியார் வாழ்க வென்னும் சொற்கள் வரையப்பட்டிருந்தன. வெளிக் கம்பவுண்ட்வாசல் முதல் மாளிகைவரையில் மகுட தோரணங்களும் கொடிகளும் நிறைந்திருந்தன. மாளிகைக்குள் பெரிய ஹாலில் 12-பேர் ஹிந்து வாத்தியக்காரர்கள் உட்கார்ந்து விநோதப்பாடல்களைப் பாடிக்கொண்டும் வாத்தியங்கள் முழங்கச்செய்துக்கொண்டு மிருந்தனர். மேற்படி மாளிகையின் பக்கத்திலுள்ள ஒரு பெரிய அறையில் பலவிதப் பழங்கள் மிட்டாய்கள் முதலிய பட்சணங்களுடன் Coffee, Tea, Soda, முதலிய பானங்களும் சித்தப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. தம்புசெட்டியார் சுமார் 6-மணிக்குச் சவாரியில் வந்திறங்கினர். வெளிவாசலில் கவர்ன்மெண்ட் அட்வொகேட் இராமசாமி ஐயர் காத்திருந்து செட்டியாரை எதிர்கொண்டு வரவழைத்தனர். செட்டியார் உட் சென்று வாத்தியக்காரர்களிருந்த ஹாலிலமைத்திருந்த ஆசனத்தின்மீதுட்கார்ந்தனர். செட்டியார் அருகில் இருபுறமும் கௌன்ஸிலர்கள் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மிஸ்டர் அப்துல் ரஹிமான் சாய்ப் அவர்களு மிருந்தார்கள். சீப் கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவரான மிஸ்டர் மீனாட்சி ஐயருமிருந்தனர். சங்கைக்குரிய விசாக் (Rev. Father Vissac), சங்கைக்குரிய பிளேஸ் (Rev. Father Blaize) என்னும் குருமார்களு மிருந்தார்கள். செட்டியார் சற்று நேரம் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருந்தபின் எழுந்துபோய் அங்கிருந்த கூட்டத்தவர்களோடு கலந்து உரையாடிக்கொண்டிருந்தனர். பின்பு கொஞ்சம் சிற்றுணவுபுசித்து வெளிதோட்டத்தில் காற்றில் உலாவிக்கொண்டிருந்து மறுபடியும் மாளிகைக்குள் பிரவேசித்தனர். மாஸ்டர்(Mr. Master)என்றபேர் கொண்ட ஒரு நியாயவாதி (Advocate) தமது பிடில் (Fiddle) கொண்டு வாசித்து, வந்திருந்தசபையோர் உல்லாசப்படும்படி 5-6 பாடல்கள் உர்துபாஷையிலும் இங்கிலீஷிற் சிலபாடல்களையும் இன்பரசம் பொருந்தப்பாடினார். அழகாய் விசித்திரமாய்ச் சமைக்கப்பட்ட ஒரு பெரிய பூச்செண்டைத் தம்புசெட்டியாருக்கு இராமசாமி ஐயர் உபசாரத்துடன் அளித்தனர். பிறகு அங்கிருந்தயாவருக்கும் பன்னீர் தெளித்து புஷ்பஹாரங்கள் தரித்து பூச்செண்டுகளும், தாம்பூலமும் வழங்கினர்."

"இவ்வளவு ஆடம்பரத்துடன் தம்மை யுபசரிக்க வேற்பாடுசெய்து அன்பு கொண்டு நடத்தியவர்களுக்கும், அங்குவந்திருந்து தம்மைக் கவுரவப்படுத்திய கனவான்களுக்கும் தம்புசெட்டியார் வந்தனமளித்து, மைசூர் Bar என்னும் நியாயவாதிகளின் கூட்டத்தினர் இன்னு மதிகமதிகமாக விர்த்தித்து மகிட்சியுற்று நெடுங்காலம் சுகமாய் ஜீவிக்கும்படி வாழ்த்தி, நியாயவாதிகள் யாதொருவருடைய தயைதாட்சண்யத்தை எதிர்பாராமல் கட்சிக்காரருக்காக நன்மனதோடு உழைத்து நீதி நிலைநிற்கச் செய்யும் ஒரு மேலான தொழிலை வகித்திருப்பதாக எப்போதும் அவர்களைத் தாம்மதித்திருப்பதாகக் கூறினர். இராமசாமிஐயர், நியாயவாதிகளின் பிறமாயிக்காலட்சேபஉபசரிப்பை யின்னும் அதிகஆடம்பரத்துடன் நடத்தாமற் போனதற்காக மன்னிக்கும்படிகேட்டு,இங்குசெட்டியார் தயைசெய்துவந்து தங்களைக்கௌரவப்படுத்தியதற்காகத்தாங்கள் மிக்க நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறதாகவும்,இப்போதுஞ் செட்டியார் மஹாராணியாரின் ஜஸ்டிஷியல் கௌன்ஸிலராகவிருந்து இந்த நியாயவாதிகளின் கூட்டத்துக்கு வேண்டிய நலங்களைச் செய்யும் மனமுடையவராயிருப்பாரென்பதைபற்றித் தாங்கள் முழு நம்பிக்கைகொண்டிருப்பதாகவுஞ் சொல்லி முகமன் கூறினர். பின்பு

எல்லோருங் கரங்கொட்டிக் கோஷிக்குவாம்க்கதைல்கூறித் தங்கள் மகிழ்ச்சியை விளக்கிக்காட்டி அவரவர்கள் இருப்பிடத்துக்குச் சென்றனர்."

தலைமை நீதிபதியாயிருந்து தம்புசெட்டியார் சீப்கோர்ட்டின் பெருமையைத் தம்முடைய உழைப்பாலும் கவனத்தாலும் நிலைநிறுத்தச்செய்து, அக்கோர்ட்டைவிட்டுப் பெருமையோடு நீங்கினர்.

—❋❋❋—

# CHAPTER XIII.

## பதின்மூன்றும் அதிகாரம்.

---

மஹாராணி ரீஜென்ட் அரசாட்சியில் பிரதம கௌன்ஸிலர்-பதில் தீவான் அல்லது மந்திரியாக நியமனம் - உத்தியோகத்தை விட்டு நீங்குதல்- மூன்றாவது புத்திரனின் திருமணம். (1895 - 1901.)

தம்புசெட்டியாரும் மற்ற இரண்டு கௌன்ஸில் மெம்பர்களும் மூன்றுவருஷங்கள் வரையில்தொழில் நடத்துவதென்று முதலிலான ஏற்பாடுப்படிக்கு அக்காலங்கழிந்தபின், தம்புசெட்டியாரை மறுபடி மூன்று வருஷங்கள் பரியந்தமும் முதல் கௌன்ஸிலர் ஸ்தானத்தை வகித்திருக்கும்படி மஹாராணி ரீஜெண்ட் அவர்கள் ஏற்பாடு செய்தனர்.

மஹாராணியார் ரீஜெண்டாகவிருந்து அரசாட்சி செய்த எழு வருஷகாலத்தில், தீவான் சேஷாத்திரி ஐயரும், தம்புசெட்டியாரும் மற்ற கௌன்ஸிலர்களும் அரசாங்க காரியங்களைத் திறமையோடும் விமரிசையோடும் நடத்திக் குடிகளுக்கு அதிக க்ஷேமத்தை உண்டு பண்ணினதன்றி, இராஜாங்கத்துக்கும் அதிக வருமானம் வரும்படியான அநேக ஏற்பாடுகளைச் செய்து வைத்தனர்.

இந்த மத்திய ஆட்சி முடிவுபெறும்சமயத்தில், தீவான் சேஷாத்திரி ஐயருக்குத் தேக அசௌக்கியமுண்டாகி ஒருவருஷகாலம் ரஜா பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. அக்காலத்தில் தம்பு செட்டியார் ஏற்கெனவே ரஜாவில் சென்னப்பட்டணத்திலிருந்த தால், அவரை மகாராணி ரீஜெண்ட் அவர்கள் உத்தரவின்படி பெங்களூருக்கு வரவழைத்துத் தீவான் வேலையை அவருக்கொப்புக் கொடுத்துச் சேஷாத்திரி ஐயர் வெளியூருக்குப் பிரயாணமாயினர்.



இதற்கு முன்னர்-பற்பல சமயத்தில் தம்புசெட்டியார் பதில் மந்திரி வேலையை நடத்திவந்த போதெல்லாம் மகாராஜாவாலும் மைசூர் பிரஜைகளாலும் மிக மதிக்கப்பெற்றிருந்தும், செட்டியார் அவ்வேலையைக் காயமாகப் பெறாமற் போனதற்கு அவர் ஜாதியும் அவர் அனுசரித்துவந்த வேதமும் தடையாயிருந்தனவெனச்சிலர் இப்போதும் எண்ணுகிறார்கள். இவ்வெண்ணம் சரியானதல்ல வென்றும் காயமாக அவ்வேலை காலியாயினபோது அதனைக்கை யேற்கும்படி மகாராணி ரீஜெண்ட் அவர்கள் கேட்டுக்கொண்டிருந் தும், தாம் உத்தியோகத்தைவிட்டு நீங்க முன்னரே தீர்மானித்து விட்டபடியால், அதை வேண்டாமென்று தடுத்துவிட்டனர். ஆகை யால் ஜாதியும் மதபேதமும் அதற்குக் காரணமல்லவென்பது அடி யிற் சொல்லப்பட்ட விர்த்தாந்தங்களால் விளங்கமாகும்.

சர். K. சேஷாத்திரி ஐயர் 1883-ம் ஆண்டில் தீவானானபோது, அரமனையில் நடக்கும் வைதீகச்சடங்குகளில் கலக்கப்படாத ஒரு கிறிஸ்தவன் தீவான்வேலைக்குத் தகுதியுள்ளவனல்ல வென்று கட்சி வாதங்கள் புரிந்துவந்தவர்களில் சிலர் எண்ணினார்கள். பதில் மந்திரியாகத் தம்புசெட்டியார் அடிக்கடி நியமிக்கப்பெற்றதால் அவ் வெண்ணத்தை அகலச்செய்தது. அச்சடங்குகள் பிராமணப் புரோகிதர்களாலும் குருக்களாலும் நடத்தப்படுவன. அவைகளில் தீவானுக்காகிலும் கவுன்ஸிலர்களுக்காகிலும் யாதொரு தொந்தரத் தமுங் கிடையாது. அரமனையிலுள் நடக்கவேண்டிய காரியங்களை மஹாராஜாவின், அல்லது மஹாராணியின், சொந்தபராமரிப்பிலும், அவர்களின் ஆக்ஞாபனைகளை யனுசரித்தும், நடத்தத்தக்க உத்தரவா தம் பொருந்திய பக்ஷிமுதலான பல உத்தியோகஸ்தர்களிருக்கின் றமையால், அக்காரியங்களில் தீவான் பிரவேசிக்கும்படியான அவ சியமிருப்பதில்லை. தம்புசெட்டியார் பதில் தீவானாக விருந்து உத்தி யோகம் நடத்திய சமயங்களில், அவர் கிறிஸ்துவேதத்தை யனுசரிப் பவராயிருந்தும், அரமனைக் கணக்குகள் முதலான எல்லாக் காரியங் களின்மீது மேல் விசாரணைச் செய்யவும், சீர்திருத்தவும், யாதொரு தடையுமிருந்ததில்லை. 1887-ம் ஆண்டில், மஹாராஜா அவர்கள் வட இந்தியதேசங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்யச் சென்ற போது, மஹாராணி யவர்களும் இராஜபுத்திரர் புதல்வியரும் மைசூ ரிலிருந்தனர். அந்தச்சமயத்தில் அரமனையின் பிரதான உத்தியோ கஸ்தர் (Palace Controller) நெடுரென ரஜாபெற்றுக் கொண்டு மைசூரைவிட்டு வெளியேபோகும்படி நேர்ந்தது. அப்போது அர மனையைப் பாதுகாத்து விசாரிக்கும் கடமையை, மகாராஜா அவர்கள்

அனுப்பிய மின்தபால் செய்தியிலடங்கிய அடியிற்கண்ட உத்தரவின்படி, செட்டியார் வகித்து நடத்தினர்.

பம்பாய் "மலபார் குன்று" என்னு மாளிகை. மைசூருக்கு

மைசூர் மகாராஜா விடமிருந்து. தி. இரா. ஆ. தம்புசெட்டியார்,

மைசூர் பதில் தீவானுக்கு,

"சிதம்பர ஐயர் ராஜாவிலிருக்கிறவரையில், வீரப்பாஜி அரசைத் தமது உத்தரவின்படி நடக்கச்செய்து அரமனையைப் பாதுகாத்து வரவேண்டும்."

இந்த ஏற்பாடு மகாராஜாவின் பெருந்தன்மையான குணத்தையும், மகாராஜா செட்டியார்மீது வைத்திருந்த நம்பிக்கையையும், எடுத்துக்காட்டுகிறதன்றியும், முன்னர் மந்திரி வேலைக்குக் கிறிஸ்துவேதத்தினர் அருகரல்லவென்று சிலர் கொண்ட எண்ணம் தப்பான எண்ணமென்றும், நியாயமுவின்றிக் கூறிய அடாநிந்தனையானவார்த்தைகளென்றும் நன்றாய் விளங்குகிறது. முதல்விசை தம்புசெட்டியாரைப் பதில் மந்திரியாகவும் மந்திராலோசனைச் சங்கத்தின் சபாநாயகராகவும் நியமனஞ்செய்தது 1887-ம் ஆண்டில். அப்போது, மகாராஜா அவர்கள் இந்திய துரைத்தனத்தாருக்கு எழுதிய நிருபத்தில், "தம்புசெட்டி மிகுந்த அனுபவமுடைய அதிகாரி; அவரிடத்தில் நான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன்" என்று கூறினர். மெத்த உத்தரவாதமுள்ள மந்திரி வேலையைப் பார்க்கும்படி தம்புசெட்டியாரை நியமித்த பற்பலசமயங்களிலும், எல்லோரும் மகிழ்ச்சிகொண்டு திருப்தி யடைந்தார்களென்பது, அவரை வாழ்த்தி எழுதியனுப்பிய அநேககடிதங்களில், அடியிற்கண்ட சிலதுகளை வாசிக்கத் தெரியவரும்:—

மைசூர் ரெஸிடெண்ட் கர்னல் ஆலிவர் செண்ட்ஜன் (Col. Oliver St. John) எழுதிய கடிதம்:—

"அன்புடைய தம்புசெட்டியாரே!

தற்காலந் தங்கள்மேற் பொறுத்த உத்தரவாதமுள்ள அரசாங்க காரியங்களை என்னுடைய ஆதரவில் நடத்துதற்காகத் தாங்கள் என்னை நம்புங்கள்: இதுவரையில் தாங்கள் நடத்திவந்த உத்தியோகங்களை எவ்வளவு சாமர்த்தியத்தோடும் யோக்கியதாபட்சத்தோடும் நடத்தினீர்களோ, அப்படியே இந்த மந்திரித் தொழிலையும் நடத்துவீர்களென்னும் நம்பிக்கை யான் தங்களிடத்து உடையேன்."

அப்போது உதவி ரெஸிடெண்டாகவிருந்து பின்னால் ரெஸிடெண்டான கர்னல் டோனல்ட் ராபர்ட்சன் (Col. Donald Robertson) மேற்சொன்ன கருத்துகளையே உறுதிப்படுத்தி எழுதினர்.



கர்னல் டி. ஜி. கிளார்க் (Col. T. G. Clarke) துரையின் நிருபம்:—

"தாங்கள் தீவானாக நியமனம்பெற்ற செய்தியறிய மிக்க சந்தோஷத்தையடைந்தேன். தங்களுடைய சேவகத்திறமைகளைச் சரியாயறிந்துதவிய பயனிதுவாகும். இதற்குரியவர்கள் தாங்களே. உண்மையாகவே தங்களுடைய பாக்கியத்தையிமறுத்துக் கண்சாடையாக விட்டுவிடுவதற்கெப்படி சாத்தியமாகுமென்று நானறிகிலேன். மைசூரின் அரசியல் விர்த்தித்துவரும் வழியில் நிற்பதாகக் காண்கிறேன். அது அப்படியே நீடூழி நடப்பதாக!"

அக்காலத்தில் டிப்டிகமிஷனராகவிருந்து பின்னால் தீவானான சர். கிருஷ்ணமூர்த்தி எழுதியகடிதம்:—

"கடவுள் திருவுளப்படித் தாங்கள் தற்காலம் மந்திரிக்குப் பதிலாக அரசியல் நடத்தும்படிப்பெற்ற க்ஷேமகத்துக்காகத் தங்களை யான் மனதார வாழ்த்துகின்றேன். தங்களுடைய ஆளுகையில் இத்தேசந்தழைக்குமென்பதில் யான் சகல நம்பிக்கையு முடையேன். உண்மைநேசரா யிருக்கிற தங்களைப்போலொத்த ஒருவரை அரசாங்கத்தின் தலைமையதிகாரியாயிருக்கப் பார்ப்பது எவ்வளவு மகிழ்ச்சியைத் தரத்தக்கதாயிருக்கிறதென்று என்னிலைமையிலிருக்கப்பட்டவர்களே உணர்வார்களென்று உண்மைக்குத்தாரமாய் தங்களுக்கு என்மனதை வெளியிடுகிறேன்."

கர்னல் ராபர்ட் கோல் (Col. Robert Cole) வரைந்த நிருபம்:—

"மைசூர் மந்திரிக்குப் பதிலாகத் தாங்கள் நியமிக்கப்பட்டிருத்தலால், என் மனப்பூர்வமான வாழ்த்துகள் அடங்கிய சிலவரிகளைத் தங்களுக்கு அனுப்புகிறேன். ஒரு பெரிய சுதேச ராஜாங்கத்தில் ஒரு சுதேசக்கிறிஸ்துவன் மந்திரிக்குப் பதிலாக வேலை நடத்துவதானது, தாங்களடைந்த பெரும்புகழை வெகுவாய் விஸ்தரித்துக் காட்டத்தக்கதாயிருக்கின்றது."

தம்புசெட்டியார் இந்த உன்னத பதவியடைந்தது சுதேசக் கிறிஸ்துவர்களின் கூட்டத்தினற்கு இயல்பிலேயே மிக்க சந்தோஷத்தை வருத்தியதாதலால், இதைப்பற்றிச் சில கத்தோலிக்கு விர்த்தாந்தப்பத்திரிகைகள் கூறியுள்ளதுகளை இங்கே எழுதுகிறோம்:—

மலபார் கிறிஸ்டியன் ஜர்னல் என்னும் பத்திரிகை,—

"மைசூர் மஹாராஜாவின் பதில் மந்திரியாகத் தி.இரா. ஆ. தம்புசெட்டியார் நியமனம்பெற்றதற்காகச் சுதேசக்கிறிஸ்துவக் கூட்டத்தாரை யாம் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம். தேசசுகத்துக்காக இந்தப் பிராந்தியங்களில் சுற்றுப் பிரயாணஞ்செய்யும் மிஸ்டர். சேஷாத்திரி ஐயர் ராஜாவிலிருக்கும் சிலகாலபரியந்தமே இவ்வுத்தியோகத்தைச் செட்டியார் வகித்து நடத்துவதென்றாலும், இந்தியாவில் இதுவே முதல்விசை இவ்வுயர்ந்த ஸ்தானம் ஒரு சுதேசக்கிறிஸ்துவருக்கு கொடுக்கப்பட்டதென்னும் விஷயம் மைசூர் கவர்ன்மெண்டினது நிஷ்பட்சபாததன்மையை விளக்குவதால் அதைவிஸ்தரித்துப் புகழத்தக்கதாயிருக்கின்றது. தம்புசெட்டியார், எல்லோருக்குந் தெரிந்தபடி, கத்தோலிக்கு வேதத்தின்மட்டில் மிக்க பற்றுடைய கிறிஸ்துவரும், கிரேட் பிரிட்டன் ஐக்கிய கத்தோ

விக்குச்சங்கத்தைச்சேர்ந்தவருமாயிருப்பதால், மைசூர் மஹாராஜா அவர்கள் தம்புசெட்டியார்மீது வைத்த பெருநம்பிக்கைக்காகக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் பெருமைகொள்ளத் தக்கவர்களாயிருக்கிறார்கள். நியாயாதிபதியாய் விளங்கிப் பிரபலமானகீர்த்தியடைந்த இவர், இப்போதும் இந்தமந்திரித்தொழிலைத் தமக்கும், தாமொருவராய்ச் சேர்ந்திருக்கும் சுதேச கிறிஸ்துவக் கூட்டத்தினருக்கும், இந்தக் கௌரவமும் உத்தரவாதமும்பொருந்திய உத்தியோகத்தைப் பாரபட்சமின்றித் தந்த மைசூர் கவர்ன்மெண்டுக்கும், பெருமையுண்டாகும்படி நடத்தி வெற்றியடைவாரென்று நம்புகிறோம்"

என்று கூறியது.

பொம்பாய் கத்தோலிக்கு எக்ஸாமினர். (Bombay Catholic Examiner) என்னும் பத்திரிகை,—

"மைசூர் சமஸ்தானத்துத்திவானாகத் தம்புசெட்டியாரை நியமித்த செய்தி அச்சமஸ்தானத்துள்ள யாவருக்குந் திருத்தியைத்தந்தது. மிஸ்டர் தம்புசெட்டியார் மைசூர் சீப்கோர்ட்டின் ஜட்ஜாக அநேக வருஷங்களிருந்து விளங்கியவர். அரசாங்க காரியங்களை நடத்துவதில் மிக்க சாமர்த்தியமும் அறிவுமுண்டாயிருக்கத்தக்கதான மந்திரித் தொழிலுக் கிவரைத் தெரிந்தெடுத்தது, இவர் நீதிபதியாகவிருந்து மிக்க திறமையோடு தொழில் நடத்தி வெற்றியடைந்தாரென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. ஹிந்து மஹாராஜாவினால் அரசாளப்பட்ட சமஸ்தானத்திற்குத் திவானாக ஒரு சுதேசக் கிறிஸ்துவரை நியமித்தது இது முதல் விசையாகும். தம்புசெட்டியாருக்கிவ்வுயர்ந்த அந்தஸ்து வாய்த்ததற்காக அவரை வாழ்த்தும்படி எமக்கு இயல்பான முகாந்தரமுண்டு. இவர் பம்பாய் கத்தோலிக்கு ஐக்கிய சங்கத்தின் மீது மிக்க உருக்கம் வைத்து பூர்வந்தொட்டு அதனைக் கனிவோடு ஆதரித்து வந்தவர்; கொஞ்சநாள்களுக்கு முன் இதைச்சேர்ந்ததான மதராஸ் ஐக்கிய சங்கத்தின் கவுன்ஸிலராக நியமிக்கப்பட்டனர். இதுவுமன்றி, கிரேட்பிரிட்டன் கத்தோலிக்கு ஐக்கிய சங்கத்தினது ஓர் அங்கியாகவு மிருக்கின்றனர். இப்புதிய திவான் தம்புசெட்டியாரைப்போன்ற பத்திவைராக்கியமுடைய ஒருகிறிஸ்துவனைச் சுதேசஅரசர்கள் தயவிட்டுதரக்கூடிய மந்திரி வேலையில் அமர்த்தியது, சுதேச ராஜர்களிடத்தில் மதத்துவேஷம் படிப்படியாய் மறைந்து போயிற்றென்று காட்டும் பிழைபடாத அடையாளமாயிருக்கின்றதென்போம். மேலும் மைசூர் மகாராஜா அவர்கள் காட்டிய இந்த உதாரண நடையை ஏனைய சுதேச அரசர்களும் பின்பற்றி நடப்பார்களெனக் கோருகின்றோம்"

எனப் பிரசுரப்படுத்தியது.

தம்புசெட்டியார் பதில் மந்திரியாகவிருந்து அரசியல் நடத்திய இரண்டு சமயங்களில் தசராபண்டிகையின் வைபவங்களிற் கலந்திருக்க நேர்ந்தது. அப்போது காயமாய் மந்திரித்தொழில் நடத்துபவர்களுக்குச் செய்யப்பட்ட எல்லா மரியாதைகளும் செட்டியாருக்கும் நடத்தப்பட்டன. அந்த விசேஷகாலத்தில் நடந்த காரியங்களைப் பற்றிப் பின்வருமாறு பெங்களூரில் வெளியாகும் பத்திரிகைகளில் ஒன்று பிரசித்தப் படுத்தியது:—



"மைசூர் தசராபண்டிகையின் முதல்நாள் வைபவங்கள் மிகச் சிறப்பாய் 10௳ யாகிய செவ்வாய்க்கிழமை யன்று நடந்தன. காலை 7½ மணிக்கு மைசூர் மகாராஜா சாமராஜேந்திர உடையர் பஹதூர் G. C. S. I. அவர்கள் சாலிவாஹனரது பெருமை பொருந்திய பூர்வீக சிங்காதனத்தின்மீது, மழைபோல் மலர்களைப் பொழிந்தும் கரங்கொட்டி ஆனந்தித்து வாழ்த்துகள் கூறியுஞ் செய்த ஆடம்பரத்துடன், எறி வீற்றிருந்தனர். ரதகஜதுரகபதாதி ராணுவக்கூட்டங்கள் இருபுறமும் நின்று மரியாதைசெய்தன. இதன் தோற்றம் வெகு கெம்பீரமுள்ளதாயிருந்தது. மைசூர் மாகாணக்காட்டுகளில் பிடிக்கப்பட்ட இரண்டயானைகளின் கூட்டம் அரமனைவாசலில் நின்றிருந்தது. அங்கு கூடிய ஜனத்திரள் கடல்போற்றலங்கியது. இந்தியாவின் எப்பக்கத்திலுள்ள ஊர்களிலிருந்து பலவருணத்தார்களும் வந்து நிறைந்தனர். இதற்குமுன் மூன்று நாள்கள் விடாமற் பெய்தமழை நின்றுவிட்டதனால், தசராபண்டிகையின் முதல்நாளாகிய இன்று காலை நல்ல சூரியப்பிரகாசம் விளங்கி மனதுக்குச் சந்தோஷத்தைத் தந்தது. இந்த ராஜநகர் முழுமையும் ஆநந்த அக்களிப்பில் மூழ்கியிருந்ததால், இந்நாள் விடுமுறைநாள்போற்றோன்றிற்று. இப்பேர்ப்பட்ட சமயங்களில் காயமாய்த் தொழில்செய்யும் மந்திரிக்குச் செய்வதுபோலவே, எல்லா மரியாதைகளுடன் பதில் மந்திரியாகிய தம்புசெட்டியாரை அரமனைக்கு நடத்திச் சென்றனர். அரமனைவாசலில் செட்டியார் சேர்ந்தபோது மகாராஜாவின் உடற்காப்புப் படைவீரர்கள் அணியாய் நின்று தங்கள் ஆயுதங்களை யேந்தி மரியாதைபுரிந்தனர். தர்பார்முடிவில் சிங்காதனத்தில் வீற்றிருந்த மகாராஜா அவர்கள் தமதுகரத்தால் தம்புசெட்டியாருக்கு புஷ்பமாலை தரித்து கௌரவஞ் செய்யச்சித்தமாயினர். இவ்வித சமயங்களில் ஹிந்துராஜாக்களின் தயையும் மதிப்பும் பெற்றவர்களுக்கு அவர்கள் செய்யும் பகிரங்க மரியாதைகளில் இதுவே முக்கியமானதொன்றாகையால், இந்த கௌரவம் தம்புசெட்டியாரடைந்ததற்காக மெத்த உறுத்தலோடும் மகிழ்வோடும் தம்புசெட்டியாரை அங்கு கூடிய உத்தியோகஸ்தர் முதலிய சகலப் பிரஜைகளும் வாழ்த்தித் துதித்தனர்."

மைசூரில் தசராபண்டிகை மெத்த முழக்கத்தோடும் ஆடம்பரத்தோடும் எப்போதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்தக் கொண்டாட்டம் பூர்வீகத்திலிருந்து நடந்து வருகிறபடியால், மைசூர் மகாராஜா அவர்களின் முன்னோர்களாகிய அரசர் சந்ததியினர் இப்பண்டிகையைக் குடிகள் மனமகிழ மேன்மேலுஞ் சிறப்பித்துக் கொண்டே வருவதில் மனஞ்செலுத்திக்கொண்டு வந்திருப்பதாய்க் காணுகிறது.

மைசூர் பிரஜைகளின் ஒவ்வொரு வகுப்பினருக்கும் பிரதிநிதிகளை யேற்படுத்திக்கூட்டங்கூடிக் கடந்தவருஷத்தின் அரசாங்க ஆளுகையின்வரவுசெலவுகளின் ஸ்திதியையும் சமஸ்தான விருத்திக்குரிய காரியங்களையும் அவர்களுக்குத்தெரியப்படுத்தி, இராஜாங்கப் பொது விஷயங்களில் அவர்கள்சொல்ல விரும்புங்காரியங்களைக்கேட்க வேற்பாடுசெய்து அவ்வேற்பாட்டை இச்சமயத்தில் நடத்திவருவதால், இப்பண்டிகை யின்னும் விசேஷப்படுவதற்குக் காரணமாயிற்று.

அன்றியும், ஆங்கில துரைத்தனத்தாரின் பிரதிநிதியாயிருக்கும் ரெஸிடெண்டென் ஐரோப்பிய துரைமார்களையும் துரைசானிமார்களையும் மகாராஜா தமது இராஜதானி நகராகிய மைசூரில் வரவழைத்துத் தக்க கௌரவத்துடன் அவர்களை உபசரித்து மகிழச் செய்வது இதே சமயத்திலாகையால், அவர்களால் இந்தப்பண்டிகை அதிக விசேஷப்படுவதுமன்றி, மகாராஜா அவர்களுக்கும் மிக்க சந்தோஷம் வருத்தச் செய்கின்றது.

ஒரு சுதேசராஜாங்கத்தில் மந்திரித்தொழில் வகித்தவர் செய்ய வேண்டிய அபாரவேலைகளுடன், ஆங்கில இராஜப் பிரதிநிதிகள், கவர்னர்கள், இதர சுதேச அரசர்கள் முதலிய மேன்மையான அந்தஸ்தை வகித்தவர்கள் சமஸ்தானத்துக்கு வரும்போது, அவர்களை மரியாதைப்படுத்தி வரவழைக்கவும், அவர்களுக்கும் அவர்களுடன் வரும் பரிவாரங்களுக்கும் வேண்டியவைகளைத் திட்டப்படுத்திவைக்கவும் வேண்டிய வேற்பாடுகளைச்செய்வது அதிக பிரயாசையான வேறோர் காரியமாகும்.

தம்புசெட்டியார் மந்திரியா யிருந்தகாலத்தில் ஆங்கில இராஜப் பிரதிநிதியொருவரும், இரண்டு கவர்னர்களும், மைசூருக்கு விஜயஞ் செய்ததற்காகச் செய்த ஏற்பாடுகளால் செட்டியாருக் குண்டான உழைப்பு கொஞ்சமல்ல. அவர்களுக்கு வேண்டிய பண்டபதார்த்தங்களும் மற்று மவர்களுடைய சுகத்துக்கானவைகளெல்லாம் அமைத்து வைக்கும்படியான ஏற்பாடுகள் ஒழுங்காய்ச் செய்து, வந்தவர்களுக்குப் பூரணதிருப்தியையும் சந்தோஷத்தையும் வருவித்தனர்.

இதுவுமன்றி, அரசாங்க விஷயங்களில் தம்பு செட்டியார் செய்த காரியங்கள்யாவும் எல்லோருக்குந் திருப்தியைத்தரத்தக்கனவாயிருந்தன. தம்மைப்பற்றி மகாராணியார் நல்லபிப்பிராயங் கொண்டனரென்று, பின்சொல்லப்பட்ட கடிதத்தை மகாராணியாரின் பிரைவேட் செக்ரடரி (Private Secretary) யிடமிருந்து செட்டியார் பெற்று வாசித்து மகிழ்ச்சியடைந்தனர்.

“எனது பிரியமுள்ள ஐயா! தாங்கள் எழுதிய கடிதங்களிலுள்ள சங்கதிகளை மகாராணியாரவர்கட்கு மரியாதையோடு தெரிவித்தேன். அவைகளை யறிந்து மிகவுஞ் சந்தோஷமடைந்தனர். அன்றியும் தாங்கள் பதில் மந்திரியாயிருந்த கொஞ்சகாலத்தில் தங்கள்மீது பொறுத்த அபாரவேலைகளைச் சரியாய் நிறைவேற்றி மகாராணியாருக்குப் பூரண திருத்தியைத் தந்தீர்களென்று மகிழ்ச்சியோடு வெளியிட்டனர். மகாராணியவர்களின் மேன்மையான மதிப்பைத் தாங்கள் பெற்றமைக்காக நான் தங்களை வாழ்த்துகிறேன். இது எல்லா உத்தியோகஸ்தர்களுக்குங் கிடைக்கத்தக்கதல்ல.”



சர். சேஷாத்திரிஐயர் சுகவீன மடைந்திருந்ததால், 1899-1900 வருஷத்திய மைசூர் ஆளுகை அறிக்கைப் பத்திரம் தம்புசெட்டியாரால் எழுதப்பட்டு விளம்பரஞ் செய்யப்பட்டது. இதனைப் பார்வையிட்ட இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள ஆங்கிலப்பத்திரிகைகள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டன. அவைகளில் லண்டன் டைம்ஸ் (London Times) பத்திரிகை பின்வருமாறு கூறியது :—

“மைசூர் சமஸ்தானத்தினது 1899-1900 வருஷத்திய ஆளுகைப்பத்திரம் மிஸ்டர் தம்புசெட்டியாரால் தயாரிக்கப் பட்டது. இப்பத்திரத்திலுள்ள விஷயங்களில் இளையமகாராஜாவின் திருமணச்சம்பவம் முதலாகவும், லார்ட்கர்ஸன் (Lord Curzon) மைசூருக்கு விஜயஞ்செய்த விர்த்தாந்தங்கடையாகவுமாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு சம்பவங்களின் மத்தியில் நடந்த அரசாட்சியைச் சேர்ந்த காரியங்கள் விவரமாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்நாட்டில் கொள்ளைநோயும், பஞ்சமும், மழைக்குறைவு மிருந்துவந்தனவாதலால், குறிப்பாயெடுத்துக்காட்டத்தக்க விசேஷவிருத்தியை நாம் எதிர்பார்க்கக்கூடாதாயினும், தேசாபிவிர்த்தியிலும், வருமதியிலும், விசேஷமான குறைவு நேரிடாமலிருக்குமேயானால் அது மட்டில் நாம் திருத்தியடையலாம். அநாநுகூலமான இக்காலத்தில், தக்க மிதத்தோடு காரியங்களை மைசூர் கவர்ன்மெண்டார் நடத்திவந்தார்களென்று தெரியவருகிறது. வருமதித்தொகை கடந்தவருஷத்தினதைவிடக் கொஞ்சமதிகரித்தும், செலவு கொஞ்சம் குறைந்துமிருந்தாலும் இருப்புப்பாதையமைத்ததில் அதிக செலவுண்டான காரணத்தால், 1899-ம் வருஷக்கடைசியில்நின்ற மிகுதித்தொகையில் மூன்றில் ஒருபாக மாத்திரம் இவ்வருஷத்தில் நின்றிருக்கிறது. வந்த மொத்த வருமானத்தில் பேர்பாதி, நிலவரி வருமானம். காட்டிலாகாவினின்றும் பொற்சுரங்கங்களினின்றும் வந்த வருமதிகள் முக்கியமானவைகளா யிருக்கின்றன. இவ்விரண்டினாலும் உற்பத்தியாயின தொகைக்கும் ஜாஸ்தியாகவே, சாராயங்கள்ளினால் வருமதி வந்திருக்கின்றது. வருமதியில் ஐந்திலொருபங்கு செலவு மராமத் இலாக்காவிலும், பிளேக் என்னுங் கொள்ளைநோய் தலைப்பின்கீழ் 50 லட்ச ரூபா செலவுங்காட்டுகிறது. காலஞ்சென்ற ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் பஹதூர் மகாராஜா அவர்கள் பெண் கல்வியின்மீது அதிக சிரத்தைகொண்டவர். மைசூர் இராஜ்ஜியத்தில் கல்விகற்கும் பெண்களின் தொகை முன் வருஷத்தில் 13,674 ஆக விருந்தது இவ்வருஷத்தில் 15,754 ஆகப்பெருகியது. இது மனதைச் சந்தோஷிப்பிக்கத்தக்கதோர் விஷயம். இராணுவ இலாக்காவின் செலவு எவ்வளவு குறைக்கக்கூடுமோ அவ்வளவுமட்டுங் குறைக்கப்பட்டு முன்வருஷத்திலாயின செலவில் 100-க்கு 6 ரூபாவாக நிற்கிறது.”

1899-ம் வருடம் மைசூரில் தசராபண்டிகை நடந்தபோது அக்டோபர் மாதம் 18உ யங்கு சென்ற ஐரோப்பிய அதிகாரிகளுக்குச் செய்த அரசாங்க விருந்துணவையுண்ணும்போது, ஜெனரல் மக்ளோட் (General Macleod) என்னும் இராணுவ அதிகாரி, ஸ்ரீ வாணி விலாச மஹாராணியார் C. I. அவர்களுக்கும், இளைய மகாராஜா ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்களுக்குஞ் செய்த ‘Toast’

என்னும் வாழ்த்துப் பானத்திற்கு மஹாராணியார் சார்பிலும் இளையமகாராஜா அவர்கள் சார்பிலும் பதில்மந்திரி தம்புசெட்டியார் பின்வருமாறு வந்தனமளித்தனர் :—

“மகாராணியவர்களுக்கும், மகாராஜா அவர்களுக்கும் சுகவாழ்வு பெருகக் கடவதென அன்போடும் களிப்போடும் கூறி அருந்திய பானத்திற்கு (Toast) விடையளிக்கும்படி மகாராணியவர்கள் என்னைப் பிரியத்துடன் கோரினர். இக்கடமையைச் சர். சேஷாத்திரி ஐயரைப்போல் சொல் தாட்டியோடும், இனிமையாகவுஞ் செய்து முடிக்கத்தக்கவனல்லவென்றுணர்கின்றேன். ஆனாலும் என்னிலுள்ள குறைகளைக் கவனியாமல், சொல்லிலும் மனமே பிரதானமெனக்கொண்டு இதனை அங்கீகரிக்கும்படி உங்களை வேண்டுகிறேன். நீங்கள் மஹாராணியாரின் சுகவாழ்வையும் மஹாராஜா அவர்களின் சுகவாழ்வையுங் கோரி உரைத்த வாழ்த்துக்களால் அவர்கள் மிக்க கௌரவமும் மகிழ்ச்சியுமடைந்தார்கள். உங்களெல்லோருக்குந் தெரிந்திருப்பதுபோல், தொன்றுதொட்டு அனுசரிக்கவரும் இத்தசராபண்டிகை மைசூர் இராஜ கூட்டத்தினருக்கு மிக்கப் பிரசித்தியைத் தந்து வருகிறதுமன்றி, வருஷாவருஷம் இப்பண்டிகையின் கொண்டாட்டத்தின் போது, இன்றிங்கு காண்பதுபோல, இப்பூர்வீக இந்த சமஸ்தானத்தின் சுகத்தையும் விருத்தியையும் கருதிய ஐரோப்பிய நேசர்களின் பெருங்கூட்டத்தைக் கண்டு மகிழ்வதற்கும் ஹேதுவாயிருக்கிறது. நீங்களெல்லோரும் மகாராணியாரின் அழைப்புக்குப் பட்சத்தோடிணங்கித் தயைசெய்து இம்மகோற்சவச் சந்தோஷத்திற்குப் பங்காளிகளாகச் சம்மதித்ததற்காக, மகாராணியார் தமது மனப்பூர்வமான வந்தனங்களைச் செலுத்துகின்றனர். இவ்விதச் சேர்க்கையால் இளைய மகாராஜா உங்களிலிருக்கும் மேன்மையான குணாதிசயங்களைக் கிரகிப்பதற்குத் தக்க சந்தர்ப்பங்களுண்டாகின்றன. ஆங்கில அதிகாரிகளின் பிரதிநிதியாக மைசூரில் வீற்றிருக்கும் ரெஸிடெண்ட் அவர்களின் ஆலோசனைபெற்று மகாராணியாரும், மந்திரியும், கவுன்ஸிலர்களும் அரசாட்சியை நடத்தி வெற்றிபெற்று வருவதை நன்கு மதித்த எண்ணத்துடன், ஜெனரல் மக்ளோட் (General Macleod) அன்போடு உரைத்த மொழிகளுக்காக மகாராணியார் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவராக இருக்கின்றனர். மகாராணியாரால் நேசிக்கப்பட்ட இச்சமஸ்தானப் பிரஜைகளை மிகவும் வருத்தி நஷ்டப்படுத்திய பிளேக் என்னுங் கொள்ளைநோயைத் தடுக்க இந்தியா கவர்ன்மெண்டார் செய்த ஏற்பாடுபடி நடத்துவதில், ரெஸிடெண்ட் கர்னல் ராபர்ட்சன் (Col. D. Robertson) தந்த உதவியும், காட்டிய மனஉணர்ச்சியும், இச்சமஸ்தான அதிகாரிகளை வலிவுபடுத்தி வைத்தன. இந்த 3, 4, மாதகாலமாய் இக்கொடிய நோய் தெய்வகிருபையால் அடங்கிவருகிறதென்றுகாண மன அமைதியுண்டாகிறதன்றி, முற்றுமிந்நோய் ஒழிந்து, யதாப்பிரகாரமாய் எல்லாக்காரியங்களும் நடந்தேறிவருமென்பது மகாராணியார் அவர்களின் கோரிக்கையாகும். நீங்கள் கூறிய சுகவாழ்த்துக்காக இன்னொருமுறையும் மகாராணியாரவர்கள் உங்களுக்குத் தமது வந்தனங்களைச் செலுத்துகின்றனர்.”

இவ்வந்தன வாழ்த்துகளைக்கேட்ட ஐரோப்பிய அதிகாரிகள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.



1900-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஆங்கிலேய இராஜப்பிரதிநிதியாகிய லார்ட் கர்ஸன் பிரபு மைசூர் சுதேச அரசாட்சியின் வளப்பத்தைக்கண்டறியும் பொருட்டு மைசூருக்கு விஜயஞ்செய்தனர். அந்தச்சமயத்தில் முன்னிவ்விராஜ்ஜியத்தையாண்ட ஸ்ரீசாமராஜேந்திர உடையர் பஹதூர் அவர்களின் உருவப்பிரதிமை (Statue)யைத்திறக்கும் சடங்கினைச் செய்தனர். அந்தச்சடங்கினைக் காணும்படி அநேக ஆங்கிலேய ஸ்திரிகளுடன் புருஷர்களும் வந்தனர். கர்ஸன் பெருமாட்டியும், ஸ்ரீவாணிவிலாச சந்நிதான மகாராணி அவர்களும், ஸ்ரீகிருஷ்ண ராஜேந்திர உடையர் பஹதூர் அவர்களும், ஸ்ரீ யுவராஜரும், அரசகுமாரிகளும், துரைத்தன உத்தியோகஸ்தர்களாகிய சுதேசிகளும் மற்றவர்களும் வந்து சூழ்ந்தனர். அந்தப் பெரிய சபையினிடத்துத் திவான் தம்புசெட்டியார், இராஜச்சிலையுருவத்தை உலகத்தார்காணும்படி தமது கரத்தால் திறக்கும்படி லார்ட் கர்ஸன் பிரபுவை வேண்டிக்கொண்டு, காலஞ்சென்ற மகாராஜா அவர்களின் மாட்சிமைப்பட்ட குணங்களும், அம்மன்னவர் பதினன்கு வருடம் மைசூரை அருளோடு இராச்சியந் தழைக்கும்படி யாண்டமையும், அவரிடத்துக் குடிகள் காட்டிய மெய்யன்பும் மரியாதை முதலியனவும், இவைகளுக்கோர் அடையாளமாக அவரது சிலையுருவத்தை இங்குஸ்தாபித்து வைக்கலாயிற்றென்றும் இனியசொற்களால் எடுத்துக்கூறினர். இந்தவிர்த்தாந்தத்துடன் சம்பந்தமுடையதாக என்றும் விளங்க, ஆங்கிலராஜப்பிரதிநிதி லார்ட் கர்ஸன் பிரபு இவ்விடம் விஜயஞ்செய்ததையும் ஞாபகப்படுத்தத்தக்க அவர்பேர்கொண்ட ஒரு சிங்காரவனமும், அதனுள் சிற்பவலங்காரக் கோபுரமும், சூத்திரநீரூற்றும் ஆகியமூன்றும் சமைத்து வைக்கப்பட்டனவென்றும்; கர்ஸன் பிரபு தமது பத்தினியாருடன் இங்குவந்து இக்காரியத்தைக் கௌரவப் படுத்தியதற்காக மகாராணியாரும் இளைய மகாராஜாவும் நன்றி யறிதலுள்ளவர்களா யிருக்கின்றார்களென்றுந் தெரிவித்தனர். இவ்விஷயங்கள் மைசூர் இராச்சியத்திலுள்ள ஐம்பது லட்சங் குடிகளுக்கு ஒப்பற்ற சந்தோஷத்தையளித்தன.

மேற்சொல்லிய சம்பவம் மைசூரில் நடந்தபின், லார்ட் கர்ஸன் பிரபு பெங்களூருக்கு வந்தனர். அங்கு தம்முடைய இருப்பிடத்துக்குத் தம்புசெட்டியாரை வரவழைத்து நெடுநேரம் அநேக விஷயங்களைப்பற்றி அவருடன் மிக்க அன்புடன் சம்பாஷித்தனர். செட்டியார் கிறிஸ்து வேதத்துட்பட்டது தமது ஜீவியகாலத்திலோ, அல்லது தமது முன்னோர்கள் இவ்வேதத்தை சேர்ந்திருந்தனரோவென்று கர்ஸன் பிரபு அறியவிரும்பியதற்கு, 17-ம் நூற்றாண்டில் சேசுசபைக்குருக்களால் தமது முன்னோர்கள் கத்தோலிக்குக் கிறிஸ்

துவர்களாக்கப் பட்டவர்களென்றும்; அப்படிக் கிறிஸ்து வேதத்தை யநுசரித்தவர்கள் வேதத்துக்கு விருத்துவமாகாததங்கள் இந்துகுலாசார ஒழுக்கங்களை அநுஷ்டித்து வரும்படி மிக்க அறிவோடு அக்குருக்கள் சம்மதித்தனர் என்றும்; அந்தக் குருக்கள் விசேஷமாய் வேதோபதேசஞ்செய்து வந்த தென்னிந்தியாவில் இப்போது பெருந் தொகையுள்ள கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் வசித்து வருகிறார்களென்றும்; அவர்கள் குடும்பங் குடும்பங்களாக வேதத்துட்பட்ட தங்கள் முன்னோர்களின் சந்ததிகளாக விருத்தலால், தொன்று தொட்டு இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகத் தங்கள் ஜாதிமுறைமைகளையும் ஆசாரங்களையும் விடாது தழுவி யநுசரித்து வருவதுமன்றிக், கிறிஸ்து வேதத்தை யநுசரியாத தங்கள் இந்து சகோதரர்களைப் போலவே தங்கள் ஜாதியாசார முறைமைகளைப் பிசகின்றி நடத்தி வருகிறார்களென்றும் (தம்புசெட்டியார்) கூறினர்.

செட்டியார் கர்ஸன் பிரபுவிடத்துப் புரிந்த சம்பாஷணையின் இரண்டாவது விஷயம், இந்து கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்குள்ள பிதிரார்ஜித ஸ்திதிபாத்தியதை விஷயத்தில் இந்து மனுதர்ம சட்டத்தை உபயோகப்படுத்துதலைப்பற்றியது. மைசூர் இராஜ்ஜியத்திலுள்ள கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களின் நிலைமையையும் வழக்கங்களையும் செவ்வையாக உணர்ந்த டாக்டர் ஷர்போனு (Doctor Charboneau) மைசூர் மேற்றிராசனத்தலைவராகவும், மிஸ்டர் பவுரிங்கு துரை (Mr. Bowring) இச்சமஸ்தானத்துத் தலைமைச் சீப் கமிஷனராகவு மிருந்த காலத்தில், அவர்கள் இந்திய துரைத்தனத்தாருக்குச் செய்த சிபாரிசால், அத்துரைத்தனத்தார் மைசூர் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களை யெல்லாம் இந்தியன்பிதிரார்ஜித சொத்துபாத்தியதைச் சட்டத்தின் விதிகளினின்று நீக்கிவிட்டனரென்றும், இந்த நீக்கம் ஆங்கிலதுரைத்தன அதிகாரத்துக்கு நேரேவுட்பட்ட கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்குக் கிடையாதென்றும், கர்ஸன் பிரபுவுக்குச் செட்டியார் சொல்லினர். அன்றியும், மனச்சுதந்தரத்தைப்பற்றிய 1850-ம் வருஷத்திய 21-வது சட்டவிதிகளுக்கு மைசூர்மாகாணத்தை உட்படுத்தாதிருப்பதையும்பற்றித் தெரிவித்தனர். இவ்விஷயங்களுக்குடைய அநுகூலப் பிரதிகூல நியாயங்களைச் செட்டியார் சொல்லிவரும்போது, மிக்க கவனத்துடன் செவிகொடுத்த இந்திய இராஜப்பிரதிநிதி, வெகு எச்சரிக்கையோடு, தமது அபிப்பிராயங்களைத் தீர்மானமாய்ச் சொல்லும்படி இணங்கவில்லை. பின்பு நடந்த சம்பாஷணை மைசூர் அரசாங்கத்தைச்சேர்ந்த பலவிஷயங்களைப் பற்றியதாயிருந்தது. அவைகளுக்குச் செட்டி-



யார் தக்க மறுமொழி கூறிவந்து, மைசூர் சமஸ்தானத்தில் தாம் 30 வருஷங்களுக்கு மேல் உத்தியோகஞ் செய்ததில், இப்போதுள்ள இளையமகாராஜா அவர்களின் பாட்டனாரைத் தரிசித்துச்சம்பாஷித்ததையும்; காலஞ்சென்ற ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் பஹதூர் அவர்களின் இராஜாங்கத்தில் அவரது ஜில்லா நியாயாதிபதியாகவும், மந்திராலோசனை முதல் மெம்பராகவும், பலதடவைகளில் திவானாகவும், உத்தியோகம் செய்ததும்; மிஸ்டர் பௌரிங்குமுதல் 20-பேர் சீப்கமிஷனர்கள் ரெசிடெண்டுகளுடன் பழகியதும், இந்திய இராஜப்பிரதிநிதிகள் லார்ட் கர்ஸனுடன் ஆறுபேர்களை மைசூரில் எதிர்கொண்டு அழைத்து அவர்களுடன் சம்பாஷித்துச் சந்தோஷமும் பெருமையும் பெற்றதும்; கடைசியாய், இனி உத்தியோகத்தை விட்டு நீங்கி ஆசோதையடையும் எண்ணங் கொண்டிருப்பதையும், தெரிவித்துச் சம்பாஷணையைச் செட்டியார் முடித்தனர். இதைக் கேட்ட இராஜப் பிரதிநிதி மிக்க சந்தோஷமடைந்து, தம்புசெட்டியாரால் செய்யப்பட்ட நல்லவேலைகட்காகவும் சர். சேஷாத்திரி ஐயர் அகாலமாய்ப் பாக்கியில் விட்டிருந்த வேலைகள் யாவற்றையும் ஒன்றுங் குறைவின்றி சொற்பகாலத்துக்குள் பூர்த்தியாய் நிறைவேற்றினமைக்காகவும் மெச்சினர். கர்ஸன் பிரபு தமது மட்டில் கொண்ட நல்லபிப்பிராயத்துக்காகச் செட்டியார் அவருக்கு வந்தனஞ் செலுத்தியபோது, அவர் மிகவு மன்போடு கைகொடுத்துப் பூர்ணாயுள் பெற்றுச் சுகித்திருக்கவேண்டுமென்று செட்டியாரை வாழ்த்தி விடைதந்தனுப்பினர்.

தம்புசெட்டியார் தமது உத்தியோகத்தை விட்டு நீங்கிவிடக் கொண்ட எண்ணத்தை அவரது சிநேகிதர்கள் அறிந்து தங்கள் மனதிற்கொண்ட உணர்ச்சியைத் தெரிவித்துப் பின்வருமாறு கடிதங்கள் வரைந்தனுப்பினர்:—

## மிஸ்டர். பவுரிங்கு கடிதம்.

“ஐயா! தாங்கள் தங்கள் உத்தியோகத்தினின்று நீங்க நினைத்திருப்பதறிந்து நான் விசனிக்கிறேன். ஆனால் எல்லோருக்கும் வேளைவந்து நெருங்கும்போது ஆசோதைபெறல் அவசியமென்று விரும்புவார்கள்; தாங்கள் தங்கள் கடமைகளைக் கெம்பீரமாகச்செய்து முடித்தீர்கள் என்றுணருந் திருத்தியையடைதலோடு, தங்களையறிந்த உத்தியோகஸ்தர்கள் பலராலும் மதிக்கப்பெற்றீர்கள். இதைவிடத் தங்களுக்கு வேறென்னவேண்டும்?”

## சர். லீவார்னர் நிருபம்.

“தம்புசெட்டியாரே, தாங்கள் எந்த அரசாங்கத்தில் தங்கள் வாழ்நாளைக் கழித்தீர்களோ, எதனுக்கு மதிக்கத்தக்க விதத்தில் ஒருப்பட்ட சிநேகையோடும்

இதயத்தோடும் ஊழியம்புரிந்தீர்களோ, அந்த அரசாங்கத்தின் தலைமை மந்திரியாகத் தாங்களிருந்து கையெழுத்திட்ட அரசாட்சி அறிக்கைப்பத்திரத்தைப் பெற்று யான் மிகவு மகிழ்ந்தேன்."

## கர்னல் கிளார்க் நிருபம்.

"முப்பது வருஷங்கள் விடாமல் மைசூரில் உத்தியோகஞ் செய்துவந்து, இப்போது அதைவிட்டு நீங்க எண்ணியிருக்கிறீர்களென எனக்குத் தெரிய வருகிறது, எல்லோருக்கும் நன்மைசெய்யத்தக்க இந்த மேன்மையான அந்தஸ்த்தைக் கைவிடத் தங்களுக்கு எவ்வளவும் இஷ்டமில்லாமலிருக்கவேண்டியதாஞலும், இவ்வாறு செய்யத்துணிந்ததைப்பற்றி நான் அதிசயிக்கேன். நமக்கெல்லோருக்கும் நம்முடைய உழைப்பின் வலிவைத் தணிக்கவேண்டிய காலம் வருகிறதுண்டு. தேகசக்தி தளர்ந்தகாலத்திலும் முன்போல உழைக்கப் புகுவது நம்மை நாமே கொடூரமாய் நடத்துவதாகும். அந்த வருத்தம் தங்களுக்கு நேருமுன் உத்தியோகத்தைவிட்டு நீங்கிக்கொள்ள எண்ணியது மிக அறிவுள்ள யோசனையென்பேன். மைசூர் அரசாங்கத்தின் வேலைகளைத் தாங்கள் தங்கள் முழுச்சக்திகொண்டு,நன்குசெய்தீர்களென்னும் உணர்ச்சியோடு உத்தியோகத்தைவிட்டு நீங்குகிறீர்கள். தங்களுடைய மேலதிகாரிகள் எல்லோருந் தங்களைமதித்து கௌரவஞ் செய்யும்படியான விதத்தில் உழைத்துப் பேர் பெற்றுத் திவானென்னு மிக்க உயர்ந்த அந்தஸ்தை வகித்து நீங்குவது தங்களுக்கு இன்னும் அதிக திருத்தியையும் சுகத்தையுந் தரவேண்டும். சரீர அவயவங்கள் அதிகமாய்த் தளர்வடையாத இத்தருணத்தில் வேலையினின்று நீங்குவதால், உபகாரநிறைந்த தங்கள் வாழ்நாள் இதனோடு முடிவடையாது. கடவுள் கிருபையால் இன்னும் அநேக வருடங்கள் வரைத் தாங்கள் ஜீவித்திருந்து நல்ல பரோபகார வேலைகளைச் செய்வீர்களென நம்புகிறேன்."

## மிஸ்டர். மெயின் துரை நிருபம்.

"ஒரு சோம்பேறி தனது காலத்தைக்கழிப்பது எவ்வளவு பிரயாசமுள்ள காரியமென்பதைத் தங்களுடைய ஜீவியகாலத்தில் இப்போதுதான் முதல் முதலாகக் கண்டறியப் போகிறீர்கள். எப்போதும் சுறுசுறுப்போடு விடாமல் வேலைசெய்திருந்தோர்கள் அப்படியே கடைசிவரையிலும் செய்துவராததால், தேகசக்திகுறைந்து மெலிந்து போகின்றனர். காலம்போவது மிக்க கடினமாய்த் தோற்றுமலிருக்கத் தாங்களிப்போது செய்யத்தக்க வேலைகளை யேற்கனவே தெரிந்துக்கொண்டிருப்பீர்களெனவெண்ணுகிறேன். உயர்ந்த பதவியில் தாங்கள் ஏறத்தகுதியையளித்த கல்விக்குரிய முயற்சியில் மனதைச் செலுத்துவது சரியான காரியமேயாயினும் சட்ட (Law) புத்தகங்களையெழுதுவதிற்பயனில்லை. மைசூர் அரசாங்கத்தில் நீடித்த அனுபவமுடையவர்களாகத் தாங்களிருத்தலால், எழுதுவதற்குப்பாத்திரமான அநேகவிஷயங்கள் தங்களுக்குத் தெரிந்திருக்கும். மைசூர் தேசசரித்திரத்தைத் தங்களைப் போலொத்த அனுபவமுடைய சுதேசியொருவர் எழுதுவாரேயாகில், அது, அவ்விராக்கியத்தைப் பற்றிய அநேக காரியங்களை யறிவதற்கு, விரும்பத்தக்க இனிமையுடையதாக விருக்கும்."

ஹானரெபில் சர். சேஷைய சாஸ்திரியார் எழுதிய கடிதங்களொன்றில், சர். சேஷாத்திரி ஐயரும் தம்புசெட்டியாரும், மைசூர்



MADRAS

இளையமகாராஜா அவர்களுக்கு அரசாளும் பருவம் வரும்வரையில் தங்கள் உத்தியோகங்களை விட்டு நீங்காமலிருக்க வேண்டுமென்பது தமது கோரிக்கையாகுமென்று தெரிவித்தனர். அக்கடிதத்துக்குச் செட்டியார் பின் வருமாறு மறுமொழி பகர்ந்தனர்:—

"தங்களைப்போலவே ஸ்ரீ வாணிவிலாச மகாராணியவர்களும், தமது அரசாட்சி முடியுமளவும் யானும் சர். சேஷாத்திரி ஐயரும் மைசூர் சமஸ்தான ஊழியத்தில் இருக்கவேண்டுமெனப் பலகால் வெளியிட்டார்கள். ஐயரவர்களுக்கு நல்ல சுகமுண்டாகி இன்னும் சிலகாலம்வரை யிருக்கவேண்டுமானு விருக்கட்டும், ஆனல் 45-வருஷங்கள் விடாமல் உத்தியோகத்திலிருந்து உழைத்த நான் சிலகாலம் விசிராந்திபெற்றுச் சுகிக்க என்னை யிப்போதே விட்டுவிடுவார்களாகில் எனக்கு நலமுண்டாகுமென்றுணர்கின்றேன். அறிவுள்ள அமைச்சர்களும் அனுபவசாலிகளுமான கவுன்சிலர்கள் கிடைப்பதரிது எனத்தாங்கள் குறிப்பிட்டது, தம்மைமப்போலொத்த சாமர்த்தியமும் அனுபவ முதிர்ச்சியுங்கொண்டு பிரகாசித்த இராஜதந்திரிகள் கொள்ளத்தக்கதான உண்மையான அபிப்பிராயமென்ருலும், இவ்வபிப்பிராயத்துக்கு மாருகக் காரியங்களை வேறுவிதமாய்ப் பாவிக்கும் சிறுவயதினராகவும் மேன்மையடையப் பேராசைகொண்டவர்களாகவுமிருக்கும் வாலிபருமுண்டு. அவர்கள் அப்படிச் செய்வதற்காகக் குற்றம்பாராட்டி நாம் அவர்களை வெறுப்பதுகூடாது. தக்கவாலிபப்பருவத்தில் ஆண்மையுடனும் உற்சாகத்தோடும் அரசியலை நடத்துவதுபோல், வயது தளர்ந்த காலத்துஞ் செய்யச் சாத்தியப்படாதென்பது அவ்வாலிபர்களின் கருத்து. விருக்ஷமானது குறைக்கப்பட்டபோதிலும் வளருமென்னும் உண்மைச்சொல் விருத்தியையடையத்தக்க நிலைமையிலுள்ள ஓர் கூட்டத்திற்கு அல்லது அரசாங்கத்துக்குப் பொருத்தமுடையதாகும். அதுபோலக் கல்விமான்களாகவும் சூக்குமபுத்தியுடையவர்களாகவும் விடாமுயற்சிசெய்யும் இயல்புடையவர்களாகவு மிருக்கத்தக்கவர்கள், உத்தியோக ஏணியின் பலபடிகளில் நிறைந்து நின்று தாங்கள் கொண்ட கோரிக்கைகள் முற்றிலும் நடவாததால் ஏக்கமுற்றவர்களாய்ச் சமயம் பார்த்துக்கொண்டே யிருக்கிறபடியால், அவ்வேணியின் தலைப்படியிலிருந்தவர்கள் தங்கள் உத்தியோகத்தைவிட்டு நீங்கியபோது, அப்படியின்கீழுள்ளவர்கள் காலியாயினபடிமேல் ஏறமுயலுகிறார்கள். காலத்தோடு அநேக அதிசயமுள்ள மாறுதல்கள் உண்டாகின்றன. சுயநலத்தைவிட்டுத் தீர்க்கயோசனைகொண்டு தாங்கள் சொல்லும் நியாயங்களை உற்றுணர்ந்து அவைகளுக்காக இரங்குவோர் மிக்க அரிது. உலகத்திலுள்ள சிரேஷ்டமானவர்களில் அநேகர் இக்குற்றத்துக்கு ஆளாகிறார்கள்; ஆகையால், தங்களுடைய சித்தாந்தம் இக்காலத்தில் கவனிக்கப்படாததாயிருக்கிறது. சர். சேஷாதத்திரி ஐயர் ரஜாவிலிருந்து திரும்பி வந்து என்னிடமிருந்து அவர் வேலையைக் கைக்கொண்டவுடன், நான் உத்தியோகத்தினின்று நீங்கிவிடத் தீர்மானித்திருக்கிறேன். சர். சேஷாத்திரி ஐயருக்கு நல்ல சுகம் வராவிட்டால் அவரும் என்னைப் பின்பற்றித் தமது உத்தியோகத்தினின்று நீங்கிவிடுவாரென்றே எண்ணுகிறேன்."

தெய்வாதீனமாய்ச் சர். சேஷாத்திரி ஐயரும் தம்புசெட்டியாரும் ஒரேகாலத்தில் உத்தியோகத்தை விட்டு நீங்கும்படிச் சந்தர்ப்பங்கள் ஒத்துவந்தன. திவான் உத்தியோகத்தின் சுமை இரண்டாவது கவுன்ஸிலராயிருந்த கிருஷ்ணமூர்த்தியின் தோளிற் சுமந்தது.

அடியிற்கண்ட விளம்பரம், மைசூர் கெஜட்டில் (Mysore Gazette) 1901-ம் வருடம் மார்ச்சு மாதம் 18உ பிரசுரஞ் செய்யப்பட்டது :—

"மைசூர் அரசாங்கத்து மந்திர சங்கத்து முதல்வரும், அரசாட்சியை நடத்திய பதில் மந்திரியுமாகிய, இராஜ தர்மப்பிரவீண தி. இரா. ஆ. தம்பு செட்டியார் C. I. E. அவர்கள் தமது உத்தியோகத்தினின்று நீங்கும்படி உத்தரவளிக்கின்ற இந்த சமயத்தில், அவர் இவ்வரசாங்கத்தில் அருமையுள்ள உத்தரவாதம் பொருந்திய பல கௌரவச் சேவகங்கள் வகித்து 34-வருடங்கள் வேலை பார்த்ததில், யாவரும் மதிக்கத்தக்க விலைகடந்த ஊழியங்கள் செய்தமையை மகாராணியார் அவர்கள் தமதுள்ளத்திற்பதிந்து தாம்கொண்ட நல்லுணர்ச்சியை வெளியிடலாயினர். தம்புசெட்டியார் தமது உத்தியோகத்தினின்று நீங்குதலால், மிகுந்த அனுபவமும், இடைவிடா முயற்சியும், வேலையிற் சிரத்தையும்படைத்த மேலான அதிகாரியாகிய ஒருவரை இவ்வரசு இழக்கின்றதென்று மிகவும் வருந்துகின்றனர்."

தாழ்ந்த பதவியிலிருந்து படிப்படியாயேறி பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள விசேஷ சுதேச அரசாங்கங்களில் ஒன்றான மைசூர் சமஸ்தான மந்திரியாய் விளங்கியவரும், மைசூர் இராஜ்ஜியக் குடிகளால் அன்போடு நேசிக்கப்பட்டு அவர்கள் வந்திக்கும் விக்கிரகம் போலொத்து அச்சமஸ்தானத்தில் நின்றவரும், ஒருவனுடைய ஜீவியகாலத்தின் உழைப்பைப் பொறுமையோடும் தளரா முயற்சியோடும் ஊக்கத்தோடும் யோக்கியதாபட்சத்தோடுஞ் செய்து கடவுள் காட்டிய வழியைப் பற்றி நிற்பானாகில், அவன் எவ்வளவு தாழ்ந்தபடியிலிருந்து தன் லௌகீகவாழ்வை ஆரம்பித்தாலும் அவ்வாழ்வின் உயர்தரமான அந்தஸ்த்தையடையக்கூடு மென்பதை உலகத்தோருக்கு உதாரணமாக நடந்து காட்டியவருமான, தம்பு செட்டியாரினது உத்தியோகவாழ்க்கை இவ்வளவு வெற்றியோடு முடிவு பெற்றது.

உத்தியோகச் சுமையினின்று விடுபட்ட சிலதினங்களில், ஓயா அழைத்துப்பட்ட சிரமையைக் கொஞ்சம் இளைப்பாற்றிகொண்டு தீர்த்துக்கொள்ளுவதற்கும், தமது மூன்றாவது குமாரனின் கல்யாணத்தை நிறைவேற்றிவைப்பதற்கும் தம்புசெட்டியார் பெங்களூரை விட்டுத் தமது ஜனன தேசமாகிய சென்னபட்டணத்துக்குப்போய் அங்கு மூன்றுமாதங்கள் தங்கியிருந்தனர்.

கோலார், சித்தல்துருக முதலிய மைசூர் மாகாணத்தைச் சேர்ந்த பல ஊர்களிலுள்ள உத்தியோகஸ்தர்களும், வர்த்தகர்கள் முதலியோரும், கூட்டங்கள் கூடித், தம்புசெட்டியார் உத்தியோகத்தை விட்டு நீங்கினமைக்காக வியசனித்தார்கள் எனத் தீர்மானம் பதித்தனர். பெங்களூரில் கூடிய மஹாஜன சபையில் தம்புசெட்டியாரின் ஞாப

MADRAS



MR. T. R. THANASAWMY CHETTY

கத்தை நிலைக்க வைக்கத்தக்கதாய் சிலை உருவமொன்று ஸ்தாபித்து வைக்கத் தீர்மானித்தனர். இது நிறைவேறினாலும், அல்லது நிறைவேறாமற்போனாலுமென்ன? ஸீப்கோர்ட்டு நீதிபதியாயிருந்தகாலத்தில், செட்டியார் செய்த அருமையான தீர்மானங்கள் வெளியாக்கப்பட்டுள்ளன. அவைகளும், அநேக பொதுவிஷயங்களைப்பற்றியும் அரசாங்க காரியங்களைப் பற்றியும் அவரெழுதியவைகளும், அவருடைய இந்தச் சம்பவச்சரிதமும், அவருடைய கீர்த்தியை எப்போதும் பிரகாசிக்கச் செய்யத்தக்க சாஸ்வத அடையாளங்களாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

மேற்கூறிய மஹாஜனக் கூட்டங்களில் தம்புசெட்டியாரின் உத்தியோகவாழ்வைப்பற்றியும், அவரிடத்தில் விளங்கிய நல்லகுணாதிசயங்களைப்பற்றியும் புகழ்ந்து பேசியவிர்த்தாந்தத்தைச் சென்னபட்டணத்துக்குச்சென்ற தமது தமையனாருக்குத் தனசாமிசெட்டியார் ஒருகடிதமெழுதித் தெரிவித்தனர். அக்கடிதத்திற்குத் தம்புசெட்டியார் எழுதிய மறுமொழி, தமக்குவாய்த்த பெரிய அந்தஸ்து கடவுளின் விசேஷகிருபையாலன்றித் தமது கல்வி விசேஷத்தாலும் சாமர்த்தியத்தாலும் வந்ததல்லவென்பதைத் தாட்சியோடுரைக்கும் நல்லகருத்துகளைக் கொண்டிருத்தலால், அதனையிங்கு வரைகின்றோம்.

“சென்னை, 1901௵ மார்ச்சு மாதம் 22௳.”

“என் பிரியமுள்ள தனசாமி! நாங்கள் இங்கு க்ஷேமமாய் வந்து சேர்ந்தோம். நான் எண்ணியபடி மதராஸ் இப்போது அதிக உஷ்ணமாயிருக்கவில்லை. குளிர்ந்த கடற்காற்று எப்போதும் வீசிக்கொண்டிருக்கின்றது. இன்னும் நாள் போகப் போக வெய்யில் காங்கை யதிகரித்து என்னால் சகிக்க முடியாததானால் பெங்களூருக்கு வருகிற மாதத்தில் திரும்பி வந்து விடுவேன். உங்களெல்லோரையும் பிரிந்திருப்பதாலுண்டாகுங் கவலை நீங்கலாக, மற்றெல்லா விஷயங்களிலும் இந்த மாற்றம் திருப்திகரமாகவேயிருக்கின்றது. நானிது வரையில் அறியாத இவ்விசிராந்தி சுலுவான சத்காலட்சேப மகிழ்ச்சியைத் தருவதற்கேதுவாயிற்று. இந்த [illegible]ரவிடத்தில் நாமெல்லோரும் ஒன்று சேர்ந்திருப்போமேயாகில், இக்காலம் இன்னுமதிக வின்பத்தைத்தரத்தக்கதாகவிருக்கும். கடவுள் சித்தப்படி நமக்கு சம்பவிக்கிற எல்லாக்காரியங்களும் நமது நன்மைக்காகவே இருக்கும். 1865ம் ஆண்டில், நானிப்பட்டணத்திலிருந்தபோது, மைசூர் இராஜ்ஜியத்தில் இவ்வளவு நீண்ட காலந் தங்கியிருப்பேனென்றாகிலும், அல்லது அதிக மேலான பதவி பெற்று முக்கியமான சுதேச அரசாங்கத்தில் குறிக் கொள்ளத் தக்கவிதமான பிரசித்தியடைந்து அச்சமஸ்தானத்துள்ளோரின் மதிப்பையும் புகழ்ச்சிகளையும் பெறுவேனென்றாகிலும், என் சொப்பனத்திலும் எண்ணியதில்லை. கடவுளின் விசேஷ உதவியால், என்சீவியத்தை என்னால் கூடியமட்டும் நல்வகையில் நடத்திவந்து நானெடுத்த இந்த ஜென்மத்தைச் சுகிர்தமாக்கினேனென்றெண்ணுகிறேன். எல்லாத்திலு மேலாக, இப்போது அழியாத மோட்ச

பாக்கியத்தை அனுபவித்துக்கொண்டு நம்முடைய வருகைக்காக எதிர்பார்த்திருக்கும் நமது நல்ல தாய் தந்தையரின் பெயர்க்குத்தக்க யோக்கியதையுடையவனாக நடந்து கொண்டேன் என்றெண்ணுகிறேன். நம்முடைய குடும்பத்தாள்ளை பிள்ளைகளில் ஒருவன் கடவுளின் கிருபையால் நம்மைப்போல் நன்னடை பற்றியொழுகி, மேலான பதவிபெற்றுச், சமமற்றிருக்கும் நம்முடைய குடும்பத்தின் மகிமையை இன்னுமதிகரிக்கச் செய்து கீர்த்தியோடு வாழவேண்டுமென்று நாம் கோரிக் கடவுளைப்பிரார்த்திப்போமாக. கடவுளால் ஆகாத காரியமொன்றுமில்லை. 'நமக்குத் துணையாகக் கடவுளிருந்தால் நமக்கு விரோதிகளாக இருப்பவர்கள் யார்' என்னும் உண்மைச் சொல் என்வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் திருஷ்டாந்தமாய்த் தப்பாகாமல் நிறைவேறியது.

உனது மிகவும் பட்சமுள்ள,

தி. இரா. ஆ. தம்பு செட்டி."

தம்புசெட்டியார் தமது வேலைகளைச் செய்வதில் எப்படி ஊக்கமுற்று உழைத்தாரோ, அப்படியே அவர் கீழுள்ளோரும் அவருடன் ஏகோபித்து உழைத்து உதவி செய்யும்படியான உற்சாகத்தை அவர்களுக்குத்தந்து வெற்றிபெற்றாரென்னும் விஷயத்தைச் செட்டியார் உத்தியோகத்தைவிட்டு நீங்கின பின்னும் அவர் கீழிருந்து வேலைசெய்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் மனதிலுணர்ந்தார்கள். அவர்களில் ஒருவராகிய, இராஜா சர். டி. மாதவராவ் அவர்களின் குமாரரும், தம்புசெட்டியார் தீவானாகவிருந்து வேலைபார்த்தபோது அவருக்குச் சிப்செக்ரட்டரியாக விருந்தவருமான, மிஸ்டர். ஆநந்தராவ் 1901-ம் வருடம் மார்ச்சுமாதம் 20-உயில் தம்புசெட்டியாருக்குப் பின்வருமாறு ஒருகடித மெழுதியனுப்பினர்:—

"உயர்வும் தகுதியுமுடைய மேலதிகாரிகள் தங்கள் லௌகீக மேன்மைகளைப்பற்றிப் பேசியிருப்பதால், யான் அவற்றைக்குறித்துப் புகழ்ந்து பேசுதல் அகங்கார தன்மையைக் காட்டி என்தகுதியின்மையை வெளியிடுவதாகும், தங்களுடைய வேலைகளின் நடவடிக்கை மிக்க திட்டமும் உயர்வுமுடையதாகும். அதை அன்னியருங்கைக்கொண்டொழுகவேண்டுமென்று விரும்பினீர்கள். தாங்கள் விரும்பியபடி நடந்து தங்கள் பரிட்சையிற்றேறி வெற்றியடைவது மிகக்கஷ்டமான காரியம். என்றாலும், தங்களுடைய பரிட்சைகளில் யான் தேறித் தாங்கள் என்னை மெச்சும்படி நான் பாத்திரனானேனென்றுணர்வது எனக்குப் பெரிய திருத்தியைத் தருகின்றதெனத் தங்களுக்கு தெரியப்படுத்தக் கடமைப்பட்டவனா யிருக்கிறேன்."

தம்பு செட்டியார் உத்தியோகத்தைவிட்டு நீங்கிய சில நாள்களுக்குள், மகாராணி ரீஜெண்டின் ஆளுகைமுடிந்து இளைய மகாராஜா அவர்கள் அரசாட்சியைக் கைக்கொள்ள வேண்டியிருந்ததால், அரசாட்சி நடவடிக்கைகளில் சிற்சிலமாறுதல்கள்செய்ய உத்தேசித்து அவைகளைக் குறித்து செட்டியாருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள மகாராஜா விரும்பினர். மைசூர் மகாராஜா அவர்களது சுய



ஆளுகையின் காலம் ஆரம்பித்த 1881ஆம் முதல் 1901ஆம் வரையும், அதாவது, தம்பு செட்டியார் மைசூர் அரசாங்க அதிகாரிகளில் முக்கியஸ்தராக விருந்த 20 வருஷகாலங்களில், சமஸ்தான மடைந்த விருத்தியை விவரித்தும், அரசாங்க முறைகள் விர்த்திக்க இனிமேல் நடத்த வேண்டிய வழிகளை எடுத்துக்காட்டியும், ஒரு பத்திரம் செட்டியார் குறிப்பிட்டனர். அதைப் பார்வையிட்ட மிஸ்டர் பௌரிங்கு, லீவார்னர் முதலிய ஐரோப்பிய துரைகள், அது மிக்க யோசனையோடும் திறத்தோடும் எழுதப்பட்ட ஓர் பத்திர மெனப் புகழ்ந்து செட்டியாரை வாழ்த்தினர்.

உத்தியோகத்தைவிட்டு நீங்கியபின் தம்புசெட்டியார் தமது காலத்தை வீணாய்ப்போக்காமல் பொதுநல விஷயங்களில் உபயோகித்து வந்தனர். சர். லீவார்னர்துரை செட்டியாருக் கெழுதிய நிருபங்களொன்றில் பின்வருமாறு கூறினர்:—

"தங்களுக்குக்கிடைத்த ஒழிவானகாலத்தை இந்தியாவைச்சேர்ந்த பொதுநல்விஷயங்களில் செலுத்தி வருவதற்காக நான் சந்தோஷிக்கின்றேன். உத்தியோகத்தைவிட்டு நீங்கிய கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், தாங்கள் அடைந்த முதிர்ந்த அனுபவங்களால் இந்துக்களின் மனதைப் பயன்படப் படிப்பியாமல் ஆசோதைகொண்டு இளைப்பாறுகிறார்கள். ராஜா. சர். டி. மாதவராவ் அப்படிச் செய்யாமல் தமது கடமையை நிறைவேற்றினார். அவரைப் போலொத்தவர்கள் மிகவுஞ் சிலர். அவர்களில் தாங்கள் ஒருவராகஇருக்கின்றீர்களெனச் சந்தோஷிக்கின்றேன்."

தம்புசெட்டியார் ஆசையோடு எதிர்பார்த்திருந்த இளைய மகாராஜா கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்களின் பட்டாபிஷேக மகோற்சவத்தை மிக்க களிப்போடு கண்டனர். இம்மகோற்சவம், மைசூர் ஜகன்மோகனிவிலாச அரமனையில் இந்தியப் பிரதிநிதி லார்ட் கர்ஸன் பிரபுவால் நடத்தப்பட்ட தர்பாரில் நிறைவேறியது. மைசூர் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களின் வாழ்த்துப்பத்திரம் வெள்ளியினாற் செய்யப்பட்ட இரண்டு யானைகளின் மீது பொருத்திய அழகான ஒருபெட்டியில் வைக்கப்பட்டுத், தம்பு செட்டியாரால் மகாராஜாவுக் களிக்கப்பட்டது. அப்பெட்டியின்மீது "இது மைசூர் மேற்றிராணியாரால்; இராஜதர்மப்பிரவீண. தி. இரா. ஆ. தம்புசெட்டியார் சார்பிலும் மைசூர் சமஸ்தானத்துள்ள இதர கிறிஸ்துவர்கள்சார்பிலும்அளிக்கப்பட்டது" எனவரையப்பட்டிருந்தது. இவ்வாழ்த்துப் பத்திரம் நற்கருத்துள்ளதாய் இலத்தீன் பாஷையில் பாடலாகச் செய்யப்பட்டு இங்கிலீஷிலும் பாடலாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தது.

ஸ்ரீகிருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்கள் மைசூர் அரசின் சிங்காதனத்திலேறிய வைபம் நடந்தேறிய ஆறுமாதங்க

ருக்குப்பின், 1903-ம் வருடம் ஜனவரிமாதம் முதற்தேதியில், இந்தியசக்கிரவர்த்தியாகிய ஏழாவது எட்வர்ட் அரசர் கிரீடாதிபதியாயினதற்காக டில்லிமாநகரில் கூடிய பெரிய இராஜசபைக்குத், தம்புசெட்டியார் மைசூர் மகாராஜாவுடன் சென்று, அங்குநடந்த பெரிய சிறப்பினைக் காணும்படியான பாக்கியம் பெற்றனர். அப்பெருங்காட்சியின் பெருமைகளையறியும்படி இங்கிலாந்திலுள்ள தமது ஆங்கில நேயர்களுக்குத் தம்புசெட்டியார் கடிதங்கள் வரைந்தனர். மிஸ்டர். மெயின்துரைக்கு எழுதிய நிருபத்துள், மைசூர் சிரேஷ்டநியாயாதிபதி உடையுடன் தோன்றிய தமது புகையுருவப்படமொன்றுவைத்தனுப்பி, மிஸ்டர் மெயின்துரையவர்கள் தமக்கு உணர்த்திய சட்டஞானத்தினால் இப்பெரிய அதிகார மேன்மையையடைந்தனரென்றுகூறி வந்தனம் புரிந்தனர். அக்கடிதத்திற்கு மறுமொழியாகப்பின்வருங்கடிதத்தை மெயின்துரை செட்டியாருக்கனுப்பினர்:-

“எனது பிரியமுள்ள தம்புசெட்டியாரே!

இதற்கு நெடுநாள் முன்னரே தங்கள் கடிதத்திற்குத் தகுதியுள்ள மறுமொழியனுப்பியிருக்கவேண்டும். தங்கள் கடிதக்கருத்தையும், அக்கடிதத்துடன் அன்போடு அனுப்பிய தங்கள் உருவப்படத்தையுங் கண்டு மிக ஆனந்தித்தேன். தாங்கள் இதற்குமுன் அனுப்பிய படங்களைப் பார்க்கிலும் இப்படம் மனதிற்கு விசேஷ பிரியத்தைத்தந்தது; நீதிபதி உடுப்பினோடு தாங்கள் அதில் கவுரவமுற்றுக் காணப்படுகிறீர்கள். தாங்கள் வாழ்க்கையிலடைந்த ஜெயத்திற்கு யான் ஹேதுவென்று தாங்கள் கூறியிருப்பதை யுணரும் உணர்வு நிச்சயமாகவே பெரிய சந்தோஷத்தை எனக்குத்தருகின்றது. என்னைப்போல ஒவ்வொரு ஆசிரியனும் தான் செய்யும் தொழிலில் மனத்தை நிலைநாட்டில் தனது மாணாக்கர்கள் நல்ல பயனடையச் செய்யக்கூடும். ஆனால் அந்தப் போதகன் மிகவினிய நற்குறிப்புள்ள சரியான பயனையடைந்த தங்களைப் போல்வாரை உதாரணமாகக் காட்டுதலரிது. இதன்றியும், மாணாக்கர்க்குள், ஆசிரியர் உணர்த்தியதை விரைவாகக் கற்றுணர்ந்து உணர்த்தப்பட்டன வெல்லாவற்றையுந் தம் உபயோகத்திற்குக் கொண்டுவருகிற சற்சீஷனை அவ்வாசிரியர் கண்டுபிடிப்பது, மிக அருமை; இதனைப்பார்க்கிலும், மாணாக்கன் ஒருவன் தனது காரியசித்திகளைக் குருவருளாற் பெற்றேனென்று ஒப்புக் கொள்ளுவது மிகவுமருமை. இதுநிற்க, தாங்கள் ஒரு பெரிய கோத்திரத் தலைவராக விளங்கித் தங்கள் மக்களுடன் அவர்கள் மக்களும் தங்களைச்சூழ நிற்கும் மகிழ்ச்சிக்குரிய பெருந்தோற்றத்தை யடைந்தீர்கள், ஆதலால், தம்புசெட்டியாரே, தங்களைப் பாக்கியவானென்றே கூறவேண்டும்.

எனக்குச் சந்ததி தழைத்தோங்கக் கடவுள்கிருபை செய்யாதவராயினார். நமக்குவயதேறவேற, பிறப்பினாலல்லாமல் இறப்பினால் நம்முடைய சிநேகிதர்களின் தொகையதிகரிக்கக்காணுவதோர் விசனகரமானகாரியம்.

தாங்கள் அடைந்திருக்கும் பழயலௌகிக அனுபவங்களுடன் புதிய அநுபவமாக எண்ணிச்சேர்க்க, டில்லியிற்கூடிய பெரியராஜசபையைப்போய்க் காணும் புகழும் அதிர்ஷ்டமும் பெற்றீர்கள். உண்மையாகவே அக்காட்சி ஒப்-



பற்றதேயாகும். உலகத்தில் ஜாதியாலும், பாஷையாலும், மதத்தாலும் வேற்றுமையுடையவர்களாகித், தங்களை ஞானத்தினோடும் நீதியோடும் தயவோடும் ஆளுகின்ற ஒரு அரசனிடத்து, 30 கோடிக்கணக்கான குடிப்பிரஜைகள் அன்புசெய்கின்ற ஒற்றுமையை விளக்கிக் காட்டுதல், உலகிலுள்ள மற்ற எந்த ஜாதியார்க்கும் அசாத்தியமானகாரியமாகும். இந்த அரியகாட்சியானது ஐரோப்பிய தேசமாந்தர்க்கு அவர்கள் இதயத்திற்பதியும்படி ஆச்சரியத்தையும் பொருமையையும் தந்தது.

நாற்பத்தியெட்டு வருடங்கட்கு முன், அதாவது 1854-ம் வருஷத்தில், ஆரம்பிக்கப்பட்ட எனது பாரிஸ்டர்வேலை, இன்னம் நான்கு மாதங்களில் முடிவாகும். என்னுடைய புத்தகாலயத்தில் என்னைச்சுற்றிலும் ஆயிரமாயிரமாசப் புத்தகங்கள் குவிந்திருக்க, அவற்றின் நடுவில் யானிருப்பதைத் தாங்கள் பார்க்க நேர்ந்தால், எந்தகாலத்திலும் யான் சோம்பல் கொண்டாகிலும், மந்த உணர்வு கொண்டாகிலுமிருக்கச் சந்தர்ப்பப்படாதென்றெண்ணுவீர்கள். யான் சேகரித்து வைத்திருக்கும் புத்தியின் பொக்கிஷமாகிய இந்தப்புத்தகங்களிலடங்கிய விசேஷங்களில் ஒருபாதியென்கிலும் பயின்றுணர்வதன் முன்னர் இவ்வுடம்பை விட்டு நீங்குவேனோ வென்னும் அந்த ஒரேவிசனமே என்னை வருத்துகின்றது.”

ஒருவன் அடைந்த உன்னதபதவியின் வாழ்க்கையாலுண்டாகிய மகிழ்ச்சிகள் அடங்கி, கவலைநீங்கி ஆசோதை பெறுங்காலத்தில், விலைமதிக்கக்கூடாத பொக்கிஷமாகிய ஞானக்கல்வியின் பாதத்தண்டை வீற்றிருந்து, அக்கல்வி தரும் பாடங்களைக் கற்றுணர்ந்து, அவைகளால் அடையக்கூடிய வெகுமானங்களைப்பெற எதிர்பார்த்து, படித்தறிந்த நல்விசேஷங்களைக்கொண்டு தனது ஆத்தும சுகத்தை வளரச்செய்து, நித்தியானந்த பதவியிற்செல்லும் மார்க்கத்தைப் பிடித்தேன் என்னும்மனத்திடன் கொண்டவனாவானேயாகில், அப்போது அவனுடைய கண்களில் மகிழ்ச்சியும் அவனது இருதயத்தில் நல்ல சமாதானமுங் குடிக்கொள்ளுவதாகும் என்னுமுண்மையை, மேற்சொல்லிய மிஸ்டர். மெயின்துரையின் கடிதத்திலுடைய கடைசிபாகம் தெளிவாய் விளக்கிக் காட்டுகின்றது. இந்த மனோரம்மியந்தான் மானிடஜென்ம மெடுத்த ஒருவன் இவ்வுலகத்தில் அடையக்கூடிய உண்மையான சுகமும் பாக்கியமுமாம். தம்புசெட்டியார் உத்தியோகத்தினின்று நீங்கியபின், மெயின்துரை சொல்லியபடியே ஞானவிஷயங்களையும், நீதிமார்க்கத்தைப் போதிக்கும் பல்நூல்களையும் படித்துணர்வதில் தமது காலத்தைப் பெரும்பாலுஞ் செலவழித்தனர்.

தம்பு செட்டியார் உத்தியோகத்தை விட்டு நீங்கிய ஒரு மாதத்தின் பின், 1907-ம் வருஷம் மே மாதம் 22உ, அவருடைய மூன்றாவது புத்திரன் சத்தியராஜ் செட்டியின் திருமணம் சென்னபட்டணத்தில் மிகச்சிறப்புடன் நிறை வேறியது.

—※※※—

# CHAPTER XIV.

## பதினாலாம் அதிகாரம்.

### தம்புசெட்டியார் பலசமயங்களில் செய்த சபாப்பிரசங்கங்கள்.

"தம்பு செட்டியார் இங்கிலீஷ் பாஷையை ஐரோப்பியரைப்போல் எழுதவும் பேசவுந் திறங்கொண்டவர்" என மிஸ்டர் மெயின்துரை முதலியோர் கூறியுள்ளதை முன்னதிகாரங்கள் ஒன்றில் சொல்லியிருக்கின்றோம். உலகில் கல்வியிற் றேர்ந்தவர்கள் அநேகருளராயினும், தெளிந்தநடையில், நல்ல கருத்துகளமைத்து எழுதவும், சபைமுன் அஞ்சாது நாட்டியாய்ப் பேசவும் வரம் பெற்றவர்கள் சிலரே. ஒன்றிருந்தால் மற்றொன் றிருப்பதில்லை. இவ்விரண்டு சாமர்த்தியங்களும் தம்புசெட்டியாரிடத்திற் பொருந்தியிருந்தன. உத்தியோக விஷயமாய்த் தமக்கிருந்த பாரமான வேலைகளைச் செய்வதில் ஓய்வின்றி உழைத்து வந்தாலும், பொதுநன்மைக்குரிய விஷயங்களை அவர் கவனியாதிருந்தவரல்லர். இவர் புரிந்துள்ள பிரசங்கங்களை அவைகளின் கட்டுரையோடும் பாஷாலங்காரத்தோடும் தமிழில் எடுத்துக்காட்ட எமக்குச் சக்திபோதாதாயினும், அவைகளிலடங்கிய நல்ல கருத்துக்களை இதை வாசிப்போர்களறிந்து சந்தோஷிப்பார்களென்றெண்ணி அப்பிரசங்கங்களிற் சிலதுகளை மாத்திரம் இவ்வதிகாரத்தில் எமது சக்திக்கியன்ற மட்டும் மொழிபெயர்த்தெழுதுகின்றோம்.

வங்களூரில் ஸ்தாபித்துள்ள 'Bowring Institute' என்னும் வித்தியாவிர்த்தி சங்கத்தில் "Popular Education" ஜனரஞ்சக வித்தியா விஷயத்தைப்பற்றி 1868-ம் ஆண்டில் புரிந்த பிரசங்கம்:—

"சிறுவர்களுக்கு அறிவு விளங்கும்படி, அவர்களுக்கு இயல்பாகிய தாய்ப்பாஷையை நன்றாகத் தெளிந்துணரக் கற்பித்தல் தாய் தந்தைகளின் முதற்கடனாகும். மிஸ்டர். வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) துரை இந்திய தேசாதிபதி அதிகாரம்பெற்று இவ்விடம் வந்து, இந்துதேச மக்கட்கு நன்மையைத் தருவதாகிய உயர் வகுப்புக் கல்வியை இங்கிலீஷ் பாஷையிற் புகட்ட முயற்சி செய்தாராயினும், தேசபாஷைகளின் பயிற்சியில் சிரத்தை எடுத்துக் கொள்ளாமையால் அதுகள் விர்த்தியடையாமற் போயின. இங்கிலீஷ் பாஷையின் வசியத்தினால் மாணாக்கர்களின் உள்ளம் மிகவும் மயங்கின. ஐயோ! பிரபல முற்ற தங்கள் தாய்பாஷைகளை நன்றாகக் கற்பது கைவிட்டனர். இங்கிலீஷ் பாஷைப்படிப்புத் தமது சுகவாழ்க்கையை இன்புறச்செய்யும் உயர்ந்த உத்தியோகங்களைத் தரும் என்னும் எண்ணத்தால் இங்கிலீஷையே யன்புகொண்டு பலபேர் அதிகமாகக் கற்றனர். இந்துதேச அதிகாரிகள் ஆங்கில பாஷையைக் கற்கவேண்டியதற்காகச் செய்த உதவிகள், தேசபாஷைகளைக் கற்க வேண்டிச் செய்திருப்பார்களாயின், இத்தேசத்தில் தேச பாஷைகளுக்



குரிய கல்வி நன்றாகத் தழைத்தோங்கும். அதிகாரத்தார் அவ்வண்ணம் செய்யாமையால், சுதேசிகள் தமது தாய் பாஷைகளில் பயிற்சி குறைந்தவர்களாயினர்.

பி. ஏ., பி. எல். பட்டங்களைப் பெற்ற நம்மவர்கள், ஆங்கில பாஷையிலுள்ள சிறப்புற்றனவும் பயன் தருவனவுமாகிய நூல்களைத் தமிழில் நன்றாக மொழிபெயர்த்து உதவி இத்தேசத்தார்க்கு விளங்கச் செய்விக்கு மாட்சிமை பொருந்திய தொழிலைக் கைக்கொள்ள வேண்டும். இந்துதேசத்தின் மக்களாகிய ஆரியர்கள் தமக்குச் சொந்தமாகப் பூர்வத்துள்ள அளவிறந்த கல்வி நூல்கள் உடையார்; அந்த நூல்கள், நாண்டும் ஆதரவில்லாமையால், யாரும் அதுகளை நினையார்களாகி, மறதியிலே வீழ்ந்தன. இந்தக் கல்வி நூல்களுக்கெல்லாம் மூலமாகவுள்ளது சமஸ்கிருத பாஷையாகும்.

தெலுங்குபாஷையானது இனிமையோடும் அழகினோடுஞ் சிறந்ததாகி அதனைக் கற்கின்ற ஐரோப்பியர்கூட அதிசயிக்க விளங்குகிறது. தென்னிந்தியாவிலே வழங்கிவருகிற பாஷைத் தமிழ்ப்பாஷையாகும். இப்பாஷையைப் பயின்றுணர்ந்த வித்வசிகாமணிகள் எழுதிய பல நூல்களிருக்கின்றன. ஆங்கிலபாஷைக்கு முதன்மையான பண்டிதர்களாகிய ஷேக்ஸ்பியர் (Shakespear) மில்டன் (Milton) முதலியவர்கள் எழுதிய நூல்கள் போன்ற நூல்கள் தமிழ் நூற்களுள் உள்ளன. ஆரியர்க்குரிய கல்வி நூல்களில் கவிகளாற் செய்யப்பட்ட நூல்கள் முதன்மையுடையதாயிருக்கின்றன. வால்மீகி முதற்புலவனுவதுபோல், அம்முனிவன் உரைத்த இராமாயண நூலும் முதன்மையுடையதாகும். பொருத்தமில்லாத கற்பனைக்கதைகளைச்சொல்லும் புராணகாவியங்களை விட்டு, இதிகாசங்களாகிய இராமாயண பாரதங்களை ஆராய்ந்து பார்க்கில், யாப்பிலக்கண வழுவும் கருத்திலினிப்புடைய முக்கியமான வருணனைகளும், அந்த வருணனைக்குரிய ஒழுங்குகளும் அவற்றினிலைமையும், விரிவாகத் தோன்றுவன, அன்றியும், இயற்கையுணர்வுகளும், சந்தோஷ உணர்ச்சிகளும் அதிசயிக்க விளங்குவன. நல்லபொழுதுபோக்கினிக்குரியதான நாடகாலங்காரம் ஆரியர்க்குள்ளாக அளவில்லாத பூர்த்தியையடைந்ததாகும். புகழில் மிக்கப் பழமையான சாகுந்தலம் என்னும் நாடகத்தைச் செய்த வல்லமையுடைய காளிதாச மகாகவி, இந்துதேசத்து ஷேக்ஸ்பியர் என்று யாவரும் மதிக்கும்படி இன்றும் விளங்குகின்றனன்.

ஆரியராகிய இந்துக்கள் பூர்வகாலத்திலேயே வானசாஸ்திர ஞானத்திற் சிறந்தவராகிக் கிரகங்களின் நிலைமைகளைத் திட்டமாகக் குறிப்பதிலும், அவற்றால் விளையும் பலன் இதுவாகுமென்று சூட்சும புத்தி கொண்டுரைப்பதிலும், நிபுணர்களாயிருந்தனர். அன்றியும் காரியங்கட்கு உபயோகமுள்ள கணிதத்தில் சாமர்த்தியராய் விளங்கினர். பீஜ கணிதத்தையும், தசபின்ன கணிதத்தையும் வகுத்தனர்.

பிராமணருக்குப் பிரியமுள்ள கல்வி, தருக்க நூலிலுள்ள ஞானமாகும். இந்துக்களின் தருக்கநூற் கல்விச்சாலையானது, இங்கிலாந்தில் அரிஸ்டாட்டில் (Aristotle) என்னுஞ் சாஸ்திரியால் வைக்கப்பட்ட கல்விச்சாலைக் கொப்பானது. ஆரியர்பெற்ற முதிய தத்துவஞானம் கிரேக்கர் பெற்ற தத்துவஞானத்துடன் சம்பந்தம்பெற்று விளக்கமுற்றது. இந்துக்களுள் மாதவர்களாகிய முனிவர்கள், மனிதர்கள் மோட்சத்தைப் பெறுதற்குரிய மார்க்கத்திற்கும், கூர்மையுடையமனதின் விவேகசிந்தனைகள் விளங்கு மார்க்கத்திற்கும், உதவும்படி

யாக பலதத்துவஞான நூல்களைச் செய்த தன்மையால், தெளிந்தோர் தங்களை வாழ்த்தும்படி விளங்குகின்றனர்.

இந்த ஆரியருக்குள்ளாக வைத்தியத்திற் சிறந்தோர், பச்சிலைமூலிகை, கிழங்கு, வித்துகளாதியால், பல நோய்களை யொழிக்கின்ற விசேஷ ஞானமுடையவர்களா யிருந்தனர். அவர்கள் தாதுப் பொருட்களை நல்ல மருந்துகளாக்கி உள்ளுக்கு ஊட்டி நோய்களைத் தீர்ப்பதில் முற்காலத்திற்றானே கைகண்டவர்களாயினர்.

இந்துதேசத்திலுள்ள பல தேவாலயங்களையும், சிற்பவேலைகளிற் சிறந்து நீண்ட மேனிலை விளக்கமுற்ற மாடமாளிகைகளையும் நோக்குமிடத்தில், பூர்வகாலத்திலே ஆரியர்கள் பெற்ற மேலான சிற்பசாஸ்திர ஞானத்தையும், கற்களிலுள்ள கொத்து சித்திரவேலைத்திறமையையும் மிகக் காட்டுகின்றன.

வஸ்திரங்கள் நூற்கும் நெசவுத் தொழில்திறத்திலும், ஆபரணங்கள் செய்யுந் திறத்திலும் அந்த ஆரியர்கள் அக்காலத்திருந்த மற்றதேசத்து மற்ற ஜனங்களிலும் மேன்மையுற்றுப் பூலோகத்தில் விளங்கினார்கள். இந்தப்பிரகாரம் தமக்குண்டாயிருந்த கல்வியுணர்வாலும் கைத்தொழிற் கல்வியுணர்வாலும் பூர்த்தியடைந்து நாகரீகத்தில், சமானமற்றவர்களாகிய இந்துக்கள், அந்தப்படியினின்றிறங்கிக் கீழ்மையடைந்தனர். அவர்களுக்குச் சுதேசபாஷைகளின் உணர்ச்சியால் அக்கலை ஞானங்களைத் துரைத்தனத்தார் ஏற்றுவாராயின், அவர்கள் முன்போல உயர்வடைவார்கள்.

---

தாது ஈஸ்வர (1876-1877) வருஷங்களில் தோன்றிய பஞ்சத்தின்போது, ரெவரெண்ட் ஸ்லேற்றர் (Revd. Slater) துரை பெங்களூர் லண்டன் மிஷன் ஹாலில் கூடிய பெரியதோர் சபைமுன், பஞ்சத்தைப்பற்றி ஒரு பெரியபிரசங்கஞ் செய்தனர். அக்கூட்டத்திற்குச் சபாநாயகராகத் தம்புசெட்டியார் வீற்றிருந்து, ரெவரெண்ட் ஸ்லேற்றர் துரை செய்த பிரசங்கத்தை மிகவும் ஸ்லாகித்து அவருக்குச்சபையோர் செய்யத் தக்க வந்தனத்தைத் தாம்செய்து, சிலபாகமுள்ள சொற்களை அடியில்வருமாறு சொல்லினர்:—

“நாட்டில் பஞ்சந் தோன்றுவதற்குக் காரணங்களும், அதுமீண்டும் தோன்றாமலிருப்பதற்குச் செய்யவேண்டிய பரிகாரங்களும், பலவாறு கல்விமான்கள் கூறுவார்கள். பஞ்சம் உண்டாவதற்கு முதற்காரணம், காலத்திற் பெய்யவேண்டிய மழை பெய்யாமல், அதனால் தானியாதிகளின் விலை மிதமின்றி அதிகரிப்பதும், சிலசமயம் உணவுக்குரிய தானியம் கிடையாமற் போவதுமேயாம். நாடுகளில்வாழுங் குடிப்பிரஜைகள் பொதுவாக ஏர் ஓட்டி நிலத்தைப்பயிர்செய்து ஜீவிக்கிறவர்களா யிருக்கிறார்கள். அவனவனுக்குள்ள காணிபூமி மிதமானது. அப்பூமியில் விளைந்தபலனைக்கொண்டு கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய நிலத்தீர்வையைச்செலுத்தித், தனக்குச் சிறிது போஜனத்துக்கு வைத்துக் கொண்டு, அதிக கஷ்டத்தோடும் அரைப்பட்டினி கிடந்தும் ஜீவித்து வருகிறான். பஞ்சந்தோன்றியகாலத்து தனக்குதவும்படி விளைந்த தானியத்தில் கொஞ்சமேனும் மிச்சப்படுத்திக்கொள்ள வேறுவழியின்றியும், வேறுஉதவியு மற்றவனாகின்றான். இந்த மைசூர் இராஜ்யத்தில் 1801-ம் வருஷத்தில் வாழ்ந்த ஜனங்களின் எண்ணிக்கைத் தொகை 20 லக்ஷம். அது 1857-ம் வருஷத்தில் 35 லக்ஷ



மாகவும், 1871-ம் வருஷத்தில் 50 லக்ஷமாகவும் அதிகரித்தது. 1801, 1857, 1871 ஆகிய இம்மூன்றுவருடங்களில், முறையே 66 லக்ஷம், 58 லக்ஷம், 72 லக்ஷம் ரூபாக்கள் குடிகள் செலுத்திய நிலத்தீர்வைப் பொருளாகும். இந்தப்பிரகாரம் 1801-ம் வருஷம்முதல் 70 வருஷங்களுக்குள் ஜனத்தொகைமாத்திரம் ஒன்றுக்கு ஒன்றரையாகப் பெருகியதேதவிர, அதுபோல் நிலத்தீர்வைப் பெருகவில்லை. மேற்கூறிய மூன்றாண்டுகளின் நிலத்தீர்வையில் அதிகரிப்பு நூற்றுக்குப் பத்துவீதமாகும். நாடுகளில் விருத்தியுற்ற ஜனத்தொகையினுக் கொப்பாக உழவுத்தொழில் விருத்தியாகாமைக்கு இதுவோர் சாட்சியென்னலாம். இதுநிற்க,

மைசூர் மிகுந்த செழிப்புடைய நிலவளத்தையுடையதாயினும் திருந்தாத உழவுத்தொழிலால் அந்த நிலம் என்னபயனைத்தரும்? உழவுத்தொழிலினாற் சீவிக்கின்ற கிருஷிகன் ஓர் கிராமத்தையடைந்து அவ்விடத்தில் நிலப்பாறில், பழகிய அப்பதியைவிட்டுப் பலவருஷங்கள் கழியும்வரை வேறோர் ஊருக்குப் போகான். தானும் தனது குடும்பத்துள்ளவர்களும் உண்டு சுகிக்கவேண்டிய அளவிற்கு நிலம் பயன் கொடுக்க விளைவித்து உண்டு அம்மட்டிலேயே திருப்திகொள்வான். உழவுத்தொழிலில் விருத்தியுறப் பழமையாகத் தான்கொண்ட நிலங்களுக்குமேல் அதிக நிலங்களை உழுது பயிரிடவிரும்பான். அன்றியும் அவன் நன்றாக விளையத்தக்க நிலத்தையும், அந்த விளைநிலமிருக்கும் வசதியுள்ள ஸ்தானத்தையும் தெரிந்து பயிரிடுவதற்கு முயற்சிசெய்யான். காலந்தோறுஞ் செய்யப்படும் பயிர்களுக்குரிய ஒழுங்கினையுந் தெரிந்துகொள்ளப் பிரியப்படான். எந்த நிலத்துக்கு எந்தப் பயிர்தக்கதோ அதைப் பயிரிடாமல், பலவித வித்துகளைத்தூவி ஒன்றாயினும் சரியான பலனைத்தராமல் ஒழியப், பல பயிர்களை விளைவிப்பது அதிக பொருட்செலவின்றி, நல்ல வருமானத்தை யுண்டாக்க நல்ல மார்க்கமென்று கூறுவான். ஆராயுமிடத்துக், கொஞ்சமும் வருத்தமில்லாமல் சொற்ப பொருட்செலவினால், வியவசாயம் இனியதாம்படிக் கடமைமாறிச் செய்கின்ற கோட்பாட்டில், விளைநிலங்களின் கூட்டமும் போகங்களில் முழுப்பலனின் பூர்த்தியும் குன்றி, பயிர்செய்யும் உழவர்களின் தரித்திர நிலைமைக்கும் சிறுமையைத்தருகின்ற பஞ்சத்தின் கொடுமைக்கும் காரணமாகும். உழைப்பின் கூட்டுறவும், முதற்பணமும், செவ்வையான உழவுப்படையும் ஆகிய இம்மூன்றும் ஒன்றுபட்டபோதுமாத்திரமே உழவுத்தொழில் விருத்தியடைவதாகும்.

பஞ்சமென்பது சருவேசுரன் உயிர்களுக்குச் செய்கின்ற தண்டனையென்பது உண்மையே. இதற்குப் பிரமாணம் வேதத்தில் மிக உண்டு. மண்ணுலகில் மழையைப் பெய்விப்பவர் கடவுளே. நீரைப்பூமியில் ஒழுகாமல் மேகங்களில் ஒடுக்குவாரும் அவரே. அவர் விரும்புமிடங்களில் மேகங்கள் பெய்து நீர்ப்பிரவாகத்தைச் செய்யும்படி கருணை நிறைந்த கட்டளையைச் செய்யவும் வல்லவர் அவரே. மனிதன் அடைந்திருக்கிற சாஸ்திர ஞானத்தின் வலியால் கடவுளது திருவுளக் கருத்தை எதிர்க்கவல்லவனாவானோ? ஆகான், பஞ்சத்தை மாற்ற அல்லது அதன் கொடுமையைத் தணிக்கக் கடவுள் சித்தமாவாரேயாகில், பஞ்சம் க்ஷணமாத்திரத்தில் விலகுமென்பதில் சந்தேகமில்லை.

---

1886-ம் வருஷம் பெங்களூர் செண்ட்ஜோசேப் காலேஜின் வருஷாந்திர வெகுமதி நாளில் தம்புசெட்டியார் சபாநாயகராக வீற்றிருந்து செய்த பிரசங்கம்:—

இக்கலாசாலையில் முக்கியமாய் கவனிக்கத்தக்க வோர் விசேஷமுண்டு. அதென்னவெனில், ஐரோப்பியர், யூரேஷியர், ஹிந்துக்கள், மகமதியர்களான இந்த நான்கு ஜாதிப்பிள்ளைகளும் தாங்கள் தங்கள் ஜாதிபேதக வேற்றுமையின்றி, ஒன்றாய்ச்சேர்ந்து வாசித்தும் சம்பாஷித்தும் விளையாடியும் வருகிறார்கள். இளம் வயதிலேயே உண்டாகும் இச்சேர்க்கையால், இவர்களொருவருக்கொருவர் மனங்கலந்து ஒற்றுமையோடு பழகிய பழக்கம், மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டே வந்து பிற்காலத்தில், இவர்களுக்குள் அன்னியோன்னிய நேசமும் ஒருமையும் பலப்படுமாதலால், இவர்களுடைய சுதந்தரத்துக்கும் விருத்திக்கும் ஹேதுவாகு மென்பதற்குச் சந்தேகமில்லை. கல்வியானது அறிவையும் புத்தியையும் விசாலப்படுத்துவதன்றி, பூலோகத்தில் சகல ஜாதியாரும் பேதமின்றி ஒருவரோடொருவர்கலந்து தங்கள் லௌகிக விஷயங்களைச் சீர்திருத்திக்கொள்ளத்தக்கதான குணத்தையுந் தருவதாகும்.

கலாசாலையை விட்டபின் ஒவ்வொரு மாணாக்கனும் அங்கு தான் படித்துணர்ந்ததல்லாமல், சுயபுத்தியென்னும் இரண்டாவதான கல்விமுறைமையைப் பின்பற்றவேண்டும். மூடவழக்கங்களைத் தள்ளி, நற்குணம் நற்செய்கைகளைக் கைப்பற்றி, நீதி நெறிகளைக் கிரகிப்பதில் மனத்தை நாட்டவேண்டும். தற்காலத்தில், கல்வி கற்றுக்கொடுக்கும் முறைமையில் ஒரு விசேஷ குறைவுண்டு. இந்த முறைமை அநேக இடங்களில் பெருகப்பரவியுள்ள விதத்தில் மாணாக்கர்கள் தங்கள் சுயேச்சைப்படி நடக்குந்திறத்தைக் கெடுக்கிறது. ஆனால், இஷ்டானுசாரமாய் நடப்பதில், யந்திர முறையாய் விஷயங்களைக் கிரகித்தல் மாத்திரம் போதாது. கற்றவைகளைக் கைவசமாய் உபயோகித்துச் சாதாரண உலகவழக்கில் பிரவேசிக்கச் செய்யவேண்டும். சாஸ்திர முறையைக் கற்றுக்கொண்டு அதைக் கைத்தொழிலில் உபயோகித்து, அதனால் தான் லாபமடையும்படிச் செய்துகொள்ள வேண்டும். இராஜாங்க இலாக்காக்களிலும் வர்த்தகமுதலிய சங்கங்களிலும் கிடைக்கத்தக்க உத்தியோகங்கள் மிகவுஞ் சொற்பம். நியாயவாதித் தொழில்களில் அநேகர் பிரவேசித்துச்சேர்ந்திருக்கிறார்கள். வருஷா வருஷம் ஆயிரமாயிரமாகக் கலாசாலைகளைவிட்டு நீங்கும் மாணாக்கர்கள் எல்லோருக்கும் வைத்திய இலாக்கா, இஞ்சினீர் இலாக்கா முதலிய இலாக்காக்களிலும், ரெயில், தந்தி, தபால் இலாக்காக்களிலும், உத்தியோகங்கள் கிடைப்பதில்லை. இவர்கள் வேறென்னவகையில் ஜீவிக்கவேண்டும்? பிரதிகலாசாலையிலும் கைத்தொழில், பயிர்த்தொழில், முதலிய தொழில் முறைச் சாஸ்திரங்களைச் சிறுவர்களுக்குப் படிப்பித்து, கலாசாலையைவிட்டு நீங்கும்போது மாணாக்கர்கள் பலர் கைத்தொழில் செய்தும் பயிர்க்கிருஷிசெய்தும் பிழைக்கும்படி ஏற்படுத்தவேண்டும். பூலோகத்தில் மனிதன் பிழைக்கத்தக்கப் பலவழிகளுண்டு. ஆகையால் அவன் தனக்கிருக்கும் சக்திக்கும் புத்திக்கும் ஏற்றதான தொழிலையோ அல்லது கிருஷியையோ தெரிந்துகொண்டு முயற்சிப்பானேயாகில் தக்கபடி பயன்பெறலாம். ஆனால் தன்னால் பூர்த்திப்படாத வேலையில் ஒருவன் புகுவது சரியல்ல. தங்கள் முன்னோர் தொன்றுதொட்டுப் பழகிப் பிழைத்து வந்த தொழிலில் பிரவேசிக்க இஷ்டமுண்டானாலும், தன்னாலான பிரயாசைப்பட்டு அதனை விர்த்திப்படுத்தி விசாலப்படுத்தி ஆதாயமுள்ளதாகச் செய்துகொள்ளட்டும். சித்திரம் எழுதுதல் மெத்த உபயோகமான தொழில். அதனைப் பழக்கப்படுத்துவதில் புத்தியும் அறிவும் பெருகும். கலாசாலையை விடுவதன்முன், ஒரு மாணாக்கனுக்கு வர்ணவேலை, மண்பாத்திரவேலை, கல்தச்ச



வேலை, கட்டடவேலை, மரத்தச்சுவேலை, ஆபரணங்கள் செய்யும் வேலை, இதுகளுக்கு அஸ்திவாரமாய் வேண்டிய முதற்படிப்பினையைச் சொல்லிவைக்க வேண்டும். இதுகள் மாணாக்கர்களுக்குப் பிற்காலத்தில் மெத்தவும் உபயோகமுள்ளதுகளாகும். பயிர்த்தொழில் செய்வதற்கு அனுபவமான பயிற்சியையுஞ் செய்துவைப்பது நலமாகும். இலங்கைத்தீவிலுள்ள ஒவ்வொரு கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும், விவசாய முறைமைகளுக்குரிய சாஸ்திரக்கல்வியை மாணாக்கர்கள் கற்கச்செய்கிறார்களென்று விர்த்தாந்தப்பத்திரிகைகள் ஒன்றில் பிரசுரமானது. அப்பள்ளிக்கூடங்களின் வெளிவாசலில் (Compound) புதிதாய் ஏற்பட்டுள்ள கலப்பையை உபயோகிக்கும் விதத்தைக் காட்டிக்கொடுக்கிறார்களென்றும், கலாசாலைக்கட்டடத்தைச் சேர்ந்த பெரிய கம்பவுண்ட், அல்லது காலிநிலமில்லாதிருந்தால், இதற்கென்று வேறேநிலம் வாங்கி வைத்திருக்கிறார்களென்றுந் தெரியவருகிறது. இதுபோலொத்த ஏற்பாடு மைசூரில் செய்து திரவியவான்களின் பிள்ளைகளைப் பழக்கினால், அவர்கள் பிற்காலத்தில் விவசாயிகளாகும் பயனை விளைவிக்கும். ஆதிமனிதனைக் கடவுள் சிருஷ்டித்து ஏதேன் என்னுந் தோட்டத்தில் வைத்து அதனைத்திருத்தி விருத்திப்படுத்தும்படிச் செய்தார். இந்தியாவில் உழைக்கத்தக்கவர்கள் அநேகரிருந்தும் அவர்களின் கிருஷிகளுக்கு வேண்டிய முதற்பணமில்லாமலிருக்கின்றதெனச் சொல்லுகிறார்கள். கிருஷியின் விருத்திக்குப் பெரிய தடையாயிருப்பது முயற்சியின்மையேயன்றிப் பணமில்லாமையல்ல. உழைப்பிருந்தால் பணமுண்டாகும்; அல்லது, உழைப்பே பணத்துக்கு அஸ்திவாரமென்னலாம். ஹிந்துக்கள் தங்கள் கல்யாணங்களிலும், மற்ற சுபாசுபங்களிலும், ஆபரணங்களிலும், செலவிடுகிற பெருந்தொகையான பணத்தை உபயோகமுடைய தொழில் முறையில் செலவழித்தால் எவ்வளவோ பிரயோஜனமுண்டாகும். சொற்ப தொகையென்கிலும் முதல் பணமாக ஆக்கிக்கொண்டால் அதிசயிக்கத்தக்க விதமாய் அது வளர்ந்துகொண்டே போகும். இந்தியாவிலுள்ள அருமையான பொருள்களைச் சேகரஞ்செய்யும்படி ஸர்க்காரத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சங்கத்தினரது முதற்கூட்டத்தில் லார்ட் கிம்பர்லி (Lord Kimberley) என்பவர் இந்தியாவில் உற்பத்திசெய்யும் பொருள்களைப்பற்றியும் இத்தேசத்தின் தொழில் கிருஷிகளைப்பற்றியும் மிகவுஞ் சிலாகித்துப் பேசினர். "இந்தியாவில் விளைகிற வஸ்துக்களைப்பற்றியும் அங்கு வழங்கிவருகிற தொழில்முறைமைகளைப்பற்றியும் ஐரோப்பியராகிய நாம் அறிந்துகொள்வதே இந்தியாவின் நன்மைக்குப் போதுமானதாயிருக்கிறது. அவர்களுக்கு நாம் கற்றுக்கொடுக்க வேண்டியதுகளைப் பார்க்கிலும் அவர்களிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள் அதிகமாயிருக்கின்றன. அநேகாயிரம் வருஷங்களாக அவர்களால் செய்யப்பட்டுவருகிற அழகான கைத்தொழில் சாமான்களை உற்றுப்பார்க்கில், அவர்கள் அநேகவிதமான கைத்தொழில்களில் தேர்ந்தவர்களாகவிருக்கிறார்களென்று தெரியவருகிறது. அதுகள் நம்முடைய ஆளுகையில் க்ஷீணித்துப்போகும்படி பார்க்கிறது ஐயோ மிக்க பரிதாபமான காரியம்! கீழ்த்திசைக் கைத்தொழில்களை நம்முடைய பிரியத்தைநாடிய வகையில் மாற்றிக்கொண்டு வருகிறதை நான் கண்டுவருகிறேன். நம்மிடமிருக்கும் ஆங்கிலக்கல்வியும், சாமர்த்தியமும், ஏராளமான பணமுங்கொண்டு நாம் இரண்டு தேசங்களையும் ஒன்றுபடுத்தி வைப்பதன்றி, வேறுவித பிரயோஜனமுண்டாகச்செய்கிறோமென்று என் புத்தியிற் படவில்லை" என்றனர். இந்தத்துரை கூறிய இச்சொற்கள் மிக ஆழ்ந்த கருத்துகளடங்கினவை

களாகவும், நாம் ஊன்றி ஆலோசிக்கத்தக்கவைகளாகவுமிருக்கின்றன. மேற்
றிசைக்கல்வியும் நாகரீகமும் இந்தியாவில் விருத்தியாகிக்கொண்டுவந்ததைக்
கவனித்தவர்களுக்கு, இந்நாட்டில் பூர்வீகத்திலிருந்த சாஸ்திரங்களும் தொழில்
முறைமைகளும், பெரும்பாலும் அல்லது முழுமையுமே, மறைந்து போகும்படி
விட்டு விடப்பட்டன வென்பது விசிதமாகும். ஆங்கில பாஷையைக்கற்று
உயர்தரக்கல்வி யடைந்தவர்களும், நல்ல ஸ்திதியிலுள்ளவர்களும், கவர்ன்
மெண்ட் உத்தியோகங்களைப் பெற எதிர்பார்க்கும் இயல்புடையராயினர்.
கல்வி கற்காதவர்களும் ஏழைகளும் தங்கள் பழய தொழில்களையே விடாமற்
பிடித்துக்கொண்டு அதைச் சற்றேனும் விருத்திப்படுத்தாமல் இருக்கிறார்கள்.
ஆகையால் இத்தேசத்தின் கைத்தொழில்களும், விவசாய விருத்திகளும், உற்
பத்தி சாமான்களும் குறைந்துபோயின. அறிவாளிகளும், கல்விமான்களும்,
திரவியவான்களும் ஒன்றுசேர்ந்து முயற்சித்தாலொழிய இந்தகள் முன்னிரு
ருந்த ஸ்திதிக்கு வந்து விருத்தியடைவது கூடாது. ஆகையால், மாணாக்கர்களே,
நீங்கள் உபயோகமுள்ள கைத்தொழில்களைப் பயிலப் பிரயாசைப்படுங்கள்.
கவர்ன்மெண்ட் உத்தியோகங்கள் உங்களுக்குக் கிடைப்பது அரிதாகில்,
நீங்கள் கற்றுக்கொண்ட கைத்தொழில்கொண்டு ஜீவிக்கலாம்.

---

பெங்களூர் சென்ட்ரல் காலேஜ் என்னும் கவர்ன்மெண்ட் கலா
சாலை ஸ்தாபிக்கப்பட்டதுமுதல் அங்கு நடந்த வருஷாந்தர வெகுமதி
நாளில் சபாநாயகராக வீற்றிருக்கும் கௌரவம், முதன்முதலாக
சுதேசிகளில் பெற்றவர், கம்புசெட்டியாரவர்களாம். 1892-ம் வருஷம்
ஜூலை மாதம் 20உ யன்று நடந்த வெகுமதிநாளில் செட்டியார்
சபாநாயகராக வீற்றிருந்து செய்த பிரசங்கம்:—

வெளியூர்களிலிருந்து இங்கு வந்து கல்விகற்கு மாணாக்கர்களுக்கு வசதி
யான இருப்பிடமில்லாமை ஒரு பெரிய குறைவாகும். இவர்கள், தற்காலத்தில்
பெங்களூரிலுள்ள கேவலமான அன்னசத்திரங்களிலும் சோற்றுக்கடை
களிலும் தங்கியிருந்து, அதிக அசௌகரியத்துக்கும் அபாயத்துக்கும் இலக்
காகின்றார்கள். இந்த விஷயத்தில், தரும சிந்தனையுடையவர்கள் வெளிவந்து,
தக்க ஏற்பாடு செய்யத் துரைத்தனத்தாருக்கு உதவிபுரியவேண்டும். துரைத்
தனத்தார் இவ்விஷயத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் தாங்களே
செய்வது அசாத்தியமாகும். துரைத்தனத்தாரிடமிருந்து எதிர்பார்க்கக்
கூடியதெல்லாமிதற்கு அவசியமான ஒரு கட்டடம், அதனைப் பரிபாலித்து நடத்
துதல், கலாசாலையின் பிரதமாதிகாரியின் கண்காணிப்பில் அந்தந்த ஜாதியாரின்
பிரதிநிதிகள் சேர்ந்த சபையாரைப் பொறுத்ததாயிருத்தல் வேண்டும். மாணாக்
கரின் போஷணைச்சம்பளத்தொகையை அரசாங்கப் பொதுப்பணத்திலிருந்து
பெற எதிர்பாராமல், எல்லாச் செலவுகளுஞ் சரிபோகும் வண்ணம், மாணாக்கர்
களின் போஷணைச்சம்பளத்தை அல்லது கட்டணத்தை நிஷ்கரிசை செய்ய
வேண்டும். மிஸ்டர் கூக் துரை (Mr. Cook) இப்போதுபடித்த அறிக்கைப்
பத்திரத்திற் சொல்லியபடி இக்கலாசாலையில் வாசிக்கிற மகமதீயப்பிள்ளை
களின் தொகையும், சுதேசக்கிறிஸ்துவப் பிள்ளைகளின் தொகையும் மிகவுஞ்
சொற்பமாயிருக்கின்றன. தென்னிந்தியாவிலுள்ள சுதேசக்கிறிஸ்துவர்கள்



இப்போது கொஞ்சங் கொஞ்சமாய் முன்னுக்குவருகிறார்கள். சென்னபட்ட
ணத்திலுள்ள கிறிஸ்டியன்காலேஜிலும், திருச்சிராப்பள்ளி, பெங்களூர்,
மங்களூரிலுள்ள கத்தோலிக்கு காலேஜுகளிலும், சுதேசக்கிறிஸ்துவர்களைக்
கல்விமான்களாக்கத்தக்க நல்முயற்சி செய்துவருகிறார்கள். ஆனால், மகம்மதீயர்
விஷயத்தில் அவ்வித முயற்சி செய்வது அவசியமா யிருக்கின்றது. எல்லா
ஜாதியார்களுக்கும் பின்னாக இவர்கள் நிற்பதற்குக் காரணம் இவர்களது வறு
மையேயாகும். மாணாக்கர் கல்வியைப்பெறுவதற்குப் பண உதவியும் மற்றசகா
யங்களும் இவர்களுக்கு துரைத்தனத்தார் அதிகரித்துச் செய்யவேண்டியது
ந்யாயமாயிருக்கிறது. மைசூரில் கல்வியூட்டுந்தொழில் துரிதமானவிர்த்தியைத்
தரத்தக்கதான விதத்தில் நடத்தப்படுகின்றது. எந்தவிடங்களிலும் ஜனங்கள்
கல்வியைக் கற்பதற்கு ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்களென்பதற்குரிய அடை
யாளங்கள் தோன்றுகின்றன. 1872-ம் ஆண்டுமுதல் 1880-ம் ஆண்டுவரை
யிலான ஒன்பதுவருஷங்களில் 12 பேர்கள்மாத்திரம் B. A. பரீட்சையிற் றேறி
னார்கள். 1881-ம் ஆண்டில் 7 பேரும், மறுவருஷத்தில் 4 பேர்களும் அப்
பட்டத்தைப் பெற்றார்கள். 1883-ம் ஆண்டுமுதல் நாளதுவரையில் தற்கா
லத்திலுள்ள இக்கலாசாலை அதிகாரியின் பராமரிப்பில் 115 பேர்கள், அதாவது,
முன் 11 வருஷங்களிலாயின தொகைக்கு ஐந்துபங்கதிகமாக பி. ஏ. பட்ட
தாரிகளாயினர். மைசூர் துரைத்தனம் 1881-ம் வருஷம் மகாராஜாவின் சுய
ஆளுகைக்கு வருமுன் 19 பேர் மாத்திரம் B. A. பரீட்சையிற் றேறினர்.
அதற்குப்பின்னர், அப்பரீட்சையில் வெற்றியடைந்தவர்களின் தொகை 101க்கு
ஏறியது, இது குறிக்கொள்ளத்தக்க விஷயமா யிருக்கின்றது. ஆகிலும், மைசூர்
ஜனங்களின் சுகம் விருத்திக்கும்பொருட்டு பொதுக்கல்வியும் உயர்தரக்
கல்வியும் மைசூர் மாணாக்கருக்குக் கற்பிப்பதில் அதிகமான முயற்சி செய்து
அநேக விஷயங்களை முடிக்கவேண்டியதா யிருக்கின்றது. அறிவும் பெருந்தன்
மையும் நிறைந்த ஓர் இராஜனை மைசூர் பிரஜைகள் தங்களை யாளும் அரசனாகப்
பெறும் பாக்கியத்தை யடைந்திருக்கிறார்கள். அவர் கல்வியைச் சேர்ந்த விஷ
யங்களில் மெத்தவுஞ் சிரத்தைகொண்டு நடத்திவருவது, தமது குடிகளின்
சுகம் கல்விப் பேறடைவதிலேயே தங்கியிருப்பதெனத் தெரிந்துகொண்டிருக்
கிறாரென்பதற்குத் தக்க சாக்ஷியாயிருக்கின்றது. துரைத்தனச்செலவிலேயே
உயர்தரக் கல்வியைக் கற்றுக்கொடுக்க வேண்டுமோ, அல்லது அக்கடமையைக்
கிறிஸ்துவேத போதகர்களுக்கும் இதராளுக்கும் விட்டுவிட வேண்டுமோ வென்
னும் விஷயத்தைப்பற்றித் தர்க்கிக்க நானிப்போது விரும்பவில்லையாயினும், மிஸ்
டர் கூக்துரை இதைப்பற்றித் தமது அறிக்கைப் பத்திரத்தில் எடுத்துப் பேசி
யதால், இரண்டொருவிஷயங்கள் இதைப்பற்றிச் சொல்லும்படி மனதானேன்.
கல்வியை யாரம்பித்துக் கற்பிக்கவேண்டிய மேற்பாடுகள் துரைத்தனத்தாரைப்
பொறுத்ததேயானாலும், ஜனங்களின் அறிவுவளர்ந்து கல்வியைக்கற்கப் பிரியப்
பட்டு முன்வந்தவர்களின் தொகை மிதமிஞ்சி அதிகரித்தபோது, அதற்காகச்
செல்லும் பணத்தைத் துரைத்தனத்தார் கொடுப்பதற்கு ஒருக்காலும் சாத்தி
யப்படாது; ஜனங்களின் காரியமாக்கிக்கொண்டு ஜனங்களே அதற்குவேண்டிய ஏற்
பாடுகளைச் செய்துக்கொள்ளவேண்டும். மைசூர் பிரஜைகள் கல்வியின் முதற்
படியை இன்னுங்கடக்கவில்லை. குடிகள் பெரும்பாலும் கல்வியற்றவர்களா
யிருக்கிறார்கள். பெண்கல்வி இவ்வூரில் இப்போது கொஞ்சம் தலையெடுக்கப்
பிறப்பட்டது. இந்து ஸ்திரீகள் தங்கள் சரியான நிலைமையைப்பெற இன்
னும் வெகுகாலஞ்செல்லும். அரசாட்சியை நடத்துவதிலும் சட்டநிருபணஞ்

செய்வதிலும் அதிகமான பங்கு சுதேசிகளுக்கு அளிக்கப்படவேண்டுமென்று சென்னபட்டணத்தில் 1853-ம் ஆண்டில் முதல் முதல் முயற்சிசெய்து இங்கிலாந்திலுள்ள பார்லியமெண்டாருக்கு மனுச்செய்துகொண்டனர். அது முதல் அநேக மாற்றங்கள் உண்டாயின. முனிசிபல் வருமானங்களையும் லோகல்பண்ட் வருமானங்களையும் ஜனங்களுக்குள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் சங்கத்தினரே பரிபாலித்து நடத்திவருகிறார்கள். இந்திய சட்டநிருபணச்சங்கத்திலும் மாகாணங்களின் சட்டநிருபணச்சங்கங்களிலும் உத்தியோகஸ்தரல்லாத சிலர் சேர்ந்து ஜனங்களின் பிரதிநிதிகளாக விருக்கின்றனர். இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட ஐரோப்பியருக்கென்றே வைத்திருந்த உயர்வான அதிகாரமுள்ள உத்தியோகங்கள் சுதேசிகள் பரிட்சைகொடுத்துப் பெறும்படி வழிதிறக்கப்பட்டிருக்கிறது. சில தினங்களுக்கு முன் ஜாரிக்குக் கொண்டுவரப்பட்ட இந்தியன் கௌன்ஸில் சட்டத்தினால் ஜனங்களினின்று தெரிந்தெடுக்கப்பட்டு கவுன்ஸில் மெம்பர்களாகத்தக்கவர்களின் தொகை ஜாஸ்தியாக்கப்பட்டிருக்கின்றது.

இங்கிலாந்தில் பார்லியமெண்டு சபையின் ஒரு அங்கியாகத் தாதாபாய் நௌரோஜி என்னுஞ் சுதேசகனவான் தெரிந்தெடுக்கப்பட்டனரென அறிந்து சிலதினங்களுக்கு முன்னர் இந்தியாமுழுமையுஞ் சந்தோஷித்தது. இந்தியாவின் பின்வருங்காலத்தினது நன்மையை இது காட்டுவதாயிருக்கின்றது. சுதேசிகள் கல்வியிலும் யோக்கியதையிலும் தக்கவர்களாயிருக்கும் பட்சத்தில் பார்லியமெண்டின் கதவுகளும் அவர்களுக்குத் திறக்கப்பட்டுள்ளன. இப்படிச் செய்தது ஆங்கிலதுரைத்தனத்தாரின், தாராளமான மனதையும் நீதி நெறியையும் எடுத்துக்காட்டுகின்றது. இனிவரும் சந்ததியார் தங்கள் கல்வியினருமையையும் சக்தியையுந் தக்கவழியிலுபயோகித்துத், துரைத்தனத்தார் தயவுகொண்டு கொடுக்கப்பட்ட பெரிய அந்தஸ்துக் குரியவர்களாகித், தங்கள் தேசாபிவிருத்தியை நோக்கினவர்களாய்த் தங்கள் தேசத்தாரைச் சரியான மார்க்கத்திற் செல்லச் செய்து, அவர்களது நிலைமையைச் சீர்திருத்திக்கொள்ளும்படிக்குத் தக்க உதவிசெய்து வருவார்களாக.

---

1901௵ டிசம்பர்௴ 26௳ யன்று சென்னைக்கிறிஸ்டியன் காலேஜின் வருடாந்தரக் கூட்டத்திற்குச் சபாநாயகராக வீற்றிருந்து தம்பு செட்டியார்செய்த பிரசங்கம்:—

முற்காலத்தில் Free Church Mission கல்விக்கூடம் என்றும், இப்போது கிறிஸ்டியன் காலேஜ் என்றும் பேர்கொண்ட இக்கலாசாலையில் யான் கல்விகற்று, இங்கு என்னைப்போல் கல்விபயின்ற மாணாக்கர்கள் கூட்டத்தின் ஒருமையைப் படைத்தவனாயிருத்தலால், இன்று எனக்குத் தந்த கடமையைச் செலுத்துவது எனக்குப் பெரிய சந்தோஷத்தைத் தருகின்றது. நான் இக்கலாசாலை மாணாக்கனாயிருந்தகாலத்தில், இதனை முதலில் ஸ்தாபித்த ரெவரண்ட் ஜான் ஆண்டர்ஸன் (Rev. John Anderson) துரையும், அக்காலத்தில் அவருக்குத் துணையாகச் சேர்ந்து நின்றவர்களும், தெளிவுறக் கல்வியைக் கற்பித்துச், சிறுவர்களின் அறிவை விளக்கி, நீதிநெறியைப் புகட்டி, அவரவர்களின் இயல்பைச் செவ்வையாயுணர்ந்து தக்கபடி அவர்களைப் பயிற்சிசெய்வதில் எடுத்துக்கொண்ட பிரயாசையும் சிரத்தையும் கண்டு நான் ஆச்சரியமடைந்



தேன். ஜனங்களால் மிகவும் கொண்டாடப்பட்ட சென்னைக் கவர்னர்களில் ஒருவரான சர் சார்ல்ஸ் டிரவிலியன் (Sir Charles Trevelyan) காலத்தில், கவர்ன்மெண்டில் முக்கியமான உத்தியோகங்களைத் திறமையோடும் வல்லமையோடுஞ் செய்து கீர்த்திபெற்ற சுதேசிகளில் அநேகர் மிஷன் பள்ளிக்கூடங்களில் கல்விகற்றவர்கள். அக்கல்விச்சாலைகளில் முதன்மையானது ப்ரீசர்ச் மிஷன் கலாசாலையே என்று மேற்படி கவர்னர்தாமே சாட்சி சொல்லினர். மைசூர் சமஸ்தானத்தில் பிரதான அதிகார உத்தியோகங்களைச் செய்கிறவர்களில் அநேகரும், இராஜ குடும்பத்துள்ள சிலரும், தாங்கள் அடைந்துள்ள கல்விப்பேறுக்காக இக்கலாசாலைக்குக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்களென்பதை என்னனுபவத்தைக்கொண்டு சொல்லத்துணிவேன். பெண்கல்வி விஷயத்திலும் முதல் முதலாக ரெவரெண்ட் ஜான் ஆண்டர்சன் துரையே பிரயாசையோடு முயற்சித்து சென்னபட்டணத்தின் நடுமத்தியில் பெண்கல்விச்சாலையொன்று ஸ்தாபித்து நடத்தினர். இதோ, நம்முடைய சபையின் விசேஷ ஆபரணமாய் விளங்கும் ஹானரெபில் டாக்டர் மில்லர், (Hon'ble Dr. W. Miller) 40 வருஷங்களாக மனவன்மையோடும், நெறியான சித்தத்தோடும், தளரா முயற்சியோடும், ஏராளமாய்ப் படைத்த கல்வித்திரவியத்தை வழங்கும் உதாரத்துவத்தோடும் உழைத்த உழைப்பே, இக்கிறிஸ்டியன் காலேஜை இப்போதிருக்கும் நிலைமைக்குக் கொண்டுவந்ததன்றி, எக்காலத்திலு மழியாத எங்கும் பரவிய கீர்த்தியை நிலைநாட்டியது. இக்கலாசாலையின் சம்பந்தமாய் இவர் எடுத்துக்கொண்ட பிரயாசையின் உயர்ந்த தன்மையை முன்னிட்டு இவரை எவ்வளவு உயர்த்திப் புகழ்ந்து பேசினாலும் உண்மையையே பேசுகிறேனன்றி வேறல்ல. "இவருடைய கீர்த்தி என்று மழியாமல் சதாகாலமும் நிலைநிற்கும். இவர் பெருமையை விளக்கிக் காட்டத்தக்க ஞாபகச்சின்னங்களொன்றுந் தேவையில்லை. இவர் செய்த நன்மையின் மகத்துவம் தன்னிற்றானே இவரது மேன்மையை விளக்கும்" என்று சொல்லிய புலவனது சொற்கள் இவருக்குப் பொருந்தும். யூனிவெர்சிடி என்னுஞ் சாஸ்திரகலாசாலைகளில் படிப்பிக்குங் கல்வியினது மார்க்கத்தையும், தன்மையையும், அதனாலுண்டாகும் பலன்களையும் பற்றிப் பலவாரான எதிரிடை அபிப்பிராயங்கள் சிலர் கொள்ளுகிறார்கள். பரிட்சைகளுக்கு, விசேஷமாய் மற்றிகியுலேஷன் (Matriculation) பரிட்சைக்குச் செல்லும் மாணாக்கர்களின் தொகையில் வெகு சொற்பபங்குத் தேறுவது திருத்திகரமுள்ளதல்லவென்று சொல்லப்படுகின்றது. தற்காலத்தில் கல்விகற்பிக்கு முறைகளைச் சீர்திருத்தாதிருக்குங் காரணத்தால் மாத்திரம் இப்படியாகிறதென்று சொல்லக்கூடாது. சிறுவர்களின் புத்திவன்மையின் வித்தியாசமும் இதற்கு ஓர்விதத்தில் காரணமாகச் சொல்லலாம். பரிட்சைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்களில் பெரும்பாலார் பரிட்சைக்குடைய பாடங்களை நன்றாய்க் கற்றுணர்ந்தவர்களாயினும்; புத்திவன்மையின் பேதத்தினால் ஒருவன் ஓர்விஷயத்தில் சிறந்து நிற்கலாம்; மற்றவர்கள் மற்றவிஷயங்களில் மேன்பட்டவர்களாகலாம்; சிலர் எல்லாவிஷயங்களிலும் நிபுணர்களாயிருக்கலாம். பரிட்சைகொடுக்கத்தக்கவர்களாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்களில் பெரும்பாலார் பரிட்சைக்குடைய பாடங்களை நன்றாய்க் கற்றுணர்ந்தவர்களாயினும், அவர்களில் மூன்றிலொருபங்குமாத்திரம் வெற்றியடைகின்றது; மற்ற இரண்டுபங்கு அபஜெயமடைகின்றது. தள்ளப்பட்டவர்கள், ஞாபகசக்திக்குறைவினால், அல்லது துரிதமாய்க் கேள்விகளுக்கு விடை எழுதக்கூடாதவர்களானதினால், வெற்றியடையாமற் போயினரென்ன

லாம். ஆகையால் பரிட்சைகளிற் றேறியதையே முக்கியமாய் நான் பாவிக்கேன். வான மண்டலங்களில் உள்ள கிரகங்கள் பூமியின்மீது பற்பல திட்டங்களமைந்த பிரகாசங்களைத் தருகின்றன. எல்லாம் சூரியன்களல்ல, எல்லாம் பெருத்த நட்சத்திரங்களல்லவாயினும் அப்பிரகாசங்கள் யாம் விட்டங்களுக்குரியனவாகவும் தன்மைக் கொத்தனவாகவுஞ் சொலிக்கின்றன. அதுபோலவே மாணுக்கர்கள் தங்கள் புத்திகூர்மையின் தன்மைக்கொத்தும் கற்றவிஷயங்களின் அளவுக்கொத்தும் பலவிதபேதத்துடன் அறிவு விளக்கமுற்றுப் பிரகாசித்தாலும், அவர்களில் ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்தப் பகுதிமட்டுக்கும் முக்கியஸ்தனாகவும் விருத்தியடையுந்தன்மையிலுள்ள கூட்டத்திற்கு ஒரு பங்குடையவனாகவுமிருக்கிறான். பரிட்சைகளில் தேறும்பொருட்டுக் குறிக்கப்பட்ட பாடங்களைமட்டும் செவ்வையாய்க் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தினால், மாணுக்கர்கள் புத்தகங்களிலுள்ளதுகளை அல்லது உபாத்தியாயர் கற்றுக்கொடுத்தவைகளை மனப்பாடஞ்செய்யும் இயல்புடையவர்களாகிறார்கள். இவர்களைப் பிறவிஷயங்களைப் படிக்கச்செய்வது மிக்க பிரயாசம். ஏனெனில், பரிட்சைக்குடைய பாடங்களைப் படிப்பதிலேயே அநேக மாணுக்கர்களுடைய காலமெல்லாஞ் செலவாகிறது. பொதுவாய் அறிவை விளக்கத்தக்க கல்வியையோதுவதற்கு அவர்களுக்குப் போதுமான நேரம் கிடைப்பதில்லை. இவ்விஷயத்தில் சீர்திருத்தம் அவசியமாயிருக்கின்றது. கல்வி போதிக்கு முறைமையில் என்ன குறைகளிருந்தபோதிலும், இந்திய சர்வகலாசாலைகள் இந்நாட்டுக்குப் பெரிய நன்மையைத்தந்து வெற்றியடைந்தன வென்பதற்குச் சந்தேகமில்லை. கல்வியென்னுந் தீவர்த்தியின் பிரகாசம் நாலாபக்கங்களிலும் பரவி விளக்கமுற்று அறிவைத் துலங்க வைத்திருக்கிறது. இதற்குச் சாட்சியாக பிரதி வருஷமும், கலாசாலைகளில் படிக்குமாணுக்கர்களின் பெருங்கூட்டம் F.A., B.A. பரிட்சைகளில் தேறுவதைக் காண்கிறோம். மேற்றிசைக் கல்வியின் நன்மைகளையும் நாகரீகங்களையும் இந்தியர் பெற்றுவருகிறார்கள். அவர்களில் அநேகர் துரைத்தன உத்தியோகங்களில் மேலான பதவிகளையடைந்து வருகிறார்கள். வர்த்தகத்துறையிற் சேர்ந்தவர்களும் ஆங்கிலக்கல்விப்பயிற்சியினால் திரவியவான்களாகி உயர்வடைந்திருக்கிறார்கள். உயர்தரக்கல்விப் பயிற்சியை எவ்வளவேனுங் குறைக்கவெண்ணுவது மதாவிசனத்துக்குரியகாரியம். சாஸ்திர முறையானகல்விஞானம் பெருகிவருகின்றது. ஆனால் அவைகளின் பலனை அனுபவத்திற் பெறும்படியாகவும் சாஸ்திர முறைக்கொத்த கைத்தொழில் செய்யவும் அவைகளை யாராய்ந்தறிவதற்கும் தக்க முயற்சி குறைவாகவே இருக்கின்றது. கைத்தொழில் பாண்டித்தியமும் அதன் விருத்தியும் குறைவாக விருக்கின்றன. இந்ததேசத்தில் உலோகவகைகளும் இரத்தினங்களும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. இப்பூமியின் விளைவுகள் விலையேறத்தக்கதாம் விருத்திசெய்யத்தக்கனவாயுமிருக்கின்றன. அறிவாலும், சாஸ்திர ஞானத்தாலும், முயற்சியாலும் பயன்படுத்தத்தக்க வளப்பமுள்ள விஸ்தீரணமான பூமியுமுள்ளதாயிருக்கின்ற இத்தேசத்தில் ஏராளமாய் உற்பத்தியாகும் வஸ்துக்களை ஆலையந்திரங்கள்கொண்டு பண்படுத்தி நல்ல லாபத்தையடையக்கூடும். பூலோகத்தின் இதர ஜாதியார்கள் அடையும் விருத்தியை நாமும் அடையவேண்டுமென்றால், தொழில் முறைமைக்குத்தக்க கல்விப்பயிற்சியும் சாஸ்திர முறைகளை அநுபவத்திற்குக் கொண்டுவரும் படிப்பினையும் அதிகப்படச் செய்யவேண்டும். இவ்விஷயத்தில் எல்லோருடைய அபிப்பிராயமும் ஒன்றாகவேயிருக்கிறது. இந்ததேசத்தை யாண்ட ஆங்கில இராஜப்பிரதிநிதிகளில் விசேஷித்தவரான லார்ட் கர்ஸன்



பிரபுவின் ஆளுகையில் தொழில் முறைக்கல்வியும் பொதுவிஷயங்களையறியும் படிப்பும் விசாலமாகப்பெருகுமென்று கோரப்படுகின்றது. அன்றியும் இந்தியாவில் பூர்வகாலத்திலிருந்து மறைந்ததொழிற்கல்வியும் சாஸ்திரங்களும், மேற்றிசைக் கல்விஞானத்தாலும் தற்காலத்தில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளினாலும் விர்த்திக்கப்பட்டு மறுபடியும் விளங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. துரைத்தனத்தார் இவ்விஷயத்திற் செய்துவரும் உதவியை அதிகமாய்ப் பலப்படுத்த பொம்பாய் வாசஸ்தரான மிஸ்டர் டாடா வென்னும் தயாளசிலரை உதாரணமாகப் பின்பற்றி இன்னும் பலபேர்கள் வெளியாவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வஜனக்கல்வி விஷயத்தில் ஏற்பட்டிருக்கிற கணக்குப்படி, நூற்றில் தொண்ணூற்றுநான்கு பேர் எழுத்துவாசனையறியாதவர்களாயிருக்கிறதாகச் சொல்லப்படுகின்றது. படித்திருக்கிற ஆண்பிள்ளைகளின் தொகைக்குக் கல்வியறிந்த பெண்மக்களின் தொகை மிகவுங்கொற்பம். ஆண் பெண் இருபாலர்களான எல்லா ஜனங்களையும் கல்வியுடையவர்களாக்க வேண்டுமானால் அவர்களின் தாய்ப்பாஷையிலேயே அவர்களுக்குப் படிப்பிக்க வேண்டும். இப்படிச்செய்வதில் நாட்டுப்பாஷைகள் அபிவிர்த்தியாகி கல்வி கற்ற சிலர்க்கும் கல்விபெறாது அறியாமையிலிருக்கும் பெருங்கூட்டத்தினர்க்குமுள்ள பிரிவை ஒன்றுபடுத்தி, நாட்டைப்பற்றிய இராஜாங்க விஷயங்களில் இப்போது பெறக்கூடாமலிருக்கும் பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்குப் படிப்படியாய் வழியுண்டாகும். பிரஜைகளுக்குக் கல்வி ஞானமுண்டானால் இராஜகாரியங்களைப்பற்றிப் பட்சபாதமின்றி சாந்தமாய்ப் பொதுஜன அபிப்பிராயத்தை எடுத்துக்கூறவும், துரைத்தனத்தாரின் ஆட்சேபனைக் கிடங்கொடாமலிருக்கவுஞ்செய்யும். நாட்டுக்கு வென்றாலோச்சேபம் இருக்கும் கல்விஞானமடையும்படியான விதத்தில் பொதுஜனக் கல்வி விஷயத்தில் ஏற்பாடுசெய்யவேண்டும். கிராமங்களிலுள்ளோர்க்குக் கடடிதப்படிப்பும், அதற்குமேற்றாமான படிப்பையும் உண்டாகச்செய்வதல்லாமல், விவசாயத்தைக்கு வேண்டிய கைத்தொழிலையுங் கற்பிக்கவேண்டும். இப்படிச் செய்வதில், கிராமவாசிகளில் பெருங்கூட்டத்தார்களான பயிரிடுவோர்களுக்கும், வர்த்தகஞ் செய்வோர்களுக்கும், கைத்தொழிலாளர்களுக்கும் பெரிய நன்மையைத் தந்து, அவர்கள் தங்கள் விவசாய முறைமையையும், பூமியின் வளப்பத்தையும் விருத்திப்படுத்திக்கொள்ளவும், உள்ளூரிலுற்பத்தியாகிற வஸ்துக்களை யதிகரிக்கவும், வர்த்தகத்திறமையை யடையவும், கிராம வரிகளைப் பற்றடைடாசெய்வதற்குச் சாப் பாற்றி வருவதில் துரைத்தனத்தாருக்குத் தக்க உதவியாயிருக்கவுஞ் செய்யும். பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய பாடபுத்தகங்களைத் தெரிந்தெடுப்பதில் அதிக ஜாக்கிரதையும் விமரிசையும் வேண்டும். சர் லீ வார்னர் துரை "இந்திய நகர்வாசி" ("The Citizen of India") என்னும் புத்தகத்தைச்செய்தது இத்தேசத்திற்கு மெத்த உபகாரமாகும். பொதுஜனக் கல்விஞானத்தைப் பரவச்செய்யவும், பயிரிடுங்குடியானவனுக்குப் பூமியை நல்வளப்பமுடையதாகச் செய்யத் தக்க சாஸ்திர உணர்ச்சியையூட்டவும். சுலபவின் அதிகலாபமுடன் பயிர்செய்வதற்கு வேண்டிய புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட கலப்பை முதலிய கருவிகளைச் செய்து உபயோகிக்கக் கைத்தொழிலாளிகளை வற்புறுத்தவுஞ் செய்யவேண்டிய ஒத்தாசைகளுக்கு நம்மில் B.A. பட்டதாரிகளாயினவர்களை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

ஓர்காலத்தில் இந்து பெண்மக்கள் அறிவிலும், நாகரீகத்திலும், பெருந்
தன்மையிலும், நன்னடத்தையிலும் பேரோங்கி நின்று, அவர்கள் காலத்திருந்த
இதர பெண்மக்களும் தங்களைப்பின்பற்றும்படியான ஏதுக்களைத் தந்தனர்.
தற்காலத்தில் ஐயோ பெண்மக்களின் தன்மை க்ஷீணத்தை யடைந்துவிட்டது.
இவர்களின் முன்னிலைமையைக் கல்விஞானத்தால் மாத்திரமே அடையக்கூடும்.
எண்ணக்கூடாத பலபிரிவுகளாய்ப் பிரிந்திருக்கும் ஜாதி வித்தியாசத்தாலும்
அவைகளின் சிக்குள்ள கொள்கைகளாலும் கட்டப்பட்டு, வீடடங்கி அந்தப்புரத்
திலடைபட்டவர்களாயிருக்கும் நமது குலஸ்திரீகளுக்கு உயர்தரமான கல்வி
ஞானத்தை இப்போதே போதிப்பது அசாத்தியமாகும். முதல்தர இரண்டாந்தர
வகுப்பின்பெண்மக்களுக்கு வித்தைகற்பிக்கும் உபாத்திமார்களாகுந் திறத்தைப்
பெறவும், டப்ரின் துரைமகளாலும் (Lady Dufferin), கர்ஸன் துரைமகளாலும்
(Lady Curzon), ஊர்ஜும் சிங்கு பெருமாட்டியாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும்
உபகாரநிதிகளின் நோக்கத்துக்கொத்து பெண்மக்கள் பெறக்கூடிய தொழில்
முறைக்கல்வி எவ்வளவோ அவ்வளவுவித்தையைக் கற்றுக்கொள்ளும்படிக்குஞ்
செய்யலாம். வித்தைகற்கத்தக்க இளம்பிராயகாலம் நீங்குவதற்குமுன் நமதுகுலப்
பெண்கள் வித்தியாசாலைக்குச்சென்று கல்விகற்பதை விலக்குவது அவர்களின்
கல்வி விருத்திக்குப் பெரிய தடையாகின்றது. ஆகையால் பெண்களுடைய வீடு
களுக்குச்சென்று கல்விபோதிக்கத்தேர்ந்த உபாத்திமைத்தொழில்பூண்ட ஸ்திரீ
களால் படிப்பிக்கும் முறைமையை விசாலப்படுத்தவேண்டும். அவ்வித உபாத்
திமைத்தொழிலை நடத்தத்தக்கத்திறமையும் யோக்கியதாபட்சமுமுடைய ஸ்திரீ
கள் சுலபமாய்க்கிடைத்தல் அரிதாயிருக்கின்றது. சென்னையில், பெண்மக்களுக்
காகப் பிரத்தியேகமான காலேஜ் ஒன்று மகாராணி ரீஜெண்ட் அவர்களால் ஸ்தா
பிக்கப்பட்டு, அக்காலேஜிலும் அதைச்சேர்ந்த கிளைக்கலாசாலைகளிலும் மரி
யாதையுள்ள குடும்பத்தைச்சேர்ந்த விதவைகளைச்சேர்த்து, அவர்கள் வீடுகளுக்
குச்சென்று பெண்மக்களுக்கு வித்தை கற்பிக்கத்தக்க திறமையடையும்படிக்குத்
தயாரிக்கப்படுகிறார்கள். தற்காலத்தில் அவசியமாய்ச் செய்யவேண்டிய காரிய
மிதுவே. இதுபோல் இதரவிடங்களிலும் செய்வது நன்று. இந்திய தக்ஷிண
தேசத்தில் சுதேசக்கிறிஸ்தவப்பெண்களும் பிராமணமக்களும் வித்தையின்
மேன்பாட்டினால் மற்றசாதிப்பெண்களிலும் அதிகமாக விளங்குவோராயினர்.
M. A. பட்டத்தைப்பெற்ற மிஸ்ட்ரஸ் சத்தியநாத மாதினைப்போலும், B. A.
பட்டம்பெற்ற கிருஷ்ணம்மாவென்னும் மங்கையைப்போலும், இந்தியாவிலுள்ள
எல்லா ஜாதிப்பெண்களும் கல்வி கற்றுச்சர்வகலா சங்கத்தவர் அளிக்கும் கௌர
வப்பட்டங்களைப்பெற்றுப் பிரகாசிக்குங் காலம் சமீபத்திலுண்டாகும். ஆனி
பெசண்ட் (Annie Besant) என்னும் துரைமகள் சிலநாளைக்குமுன் பெண்
கல்விப் போதனையைப்பற்றிய சில முறைகளை எடுத்துக்கூறினர். அவைகள்
மெய்யாகவே மேன்மையுள்ளவைகளாயினும் அவைகளிற் சிலதுகள் தற்காலத்
தில் நடத்தக்கூடியவைகளாய்க் காணவில்லை. நெடுநாளாய்க் கைப்பற்றிய இப்
போது நடைபெறும் முறைமையை முற்று மாற்றிப் புதியதோர் மார்க்கத்தில்
செல்லவிடுந் தன்மையை உடையனவாயிருக்கின்றன. ஆயினும் அந்தம்மாள்
சொல்லிய வேற்பாடுகள் மேலான மார்க்கத்தையனுசரித்துப் பூர்த்திபெறுந் தன்
மையை யுடையனவாதலால், அவைகளைப்பற்றி நிதானமாய் யோசிக்கத்தக்கதாக
இருக்கின்றது. சர். அந்தோனி மக்டானல்துரை (Sir Anthony Mac Don-
nell) கொஞ்ச நாட்களுக்குமுன் கூறிய பிரசங்கங்கள் ஒன்றில் "அரசாங்க
சீர்திருத்தத்தைச் செய்வதற்குமுன் குலாசாரத்திருத்தஞ்செய்வது அவசிய



மாகும்" என்றனர். அவர் சொல்லியது சரியென்று நான் ஒப்புக்கொள்வேன்.
ஆனால், மானிடர் ஒற்றுமையுடன் கூடிவாழ்கின்ற சங்கங்களுக்குரிய ஆசார
முதலிய சீர்திருத்தங்கள் செய்வதற்கு நமது குலஸ்திரீகளும் நம்மோடு
கூடிநின்றார்களானால், அக்கருமம் நிறைவேறும். ஏனெனில் புருஷர்களோடு
ஏக ஒருமையுடன் கூடிநின்று மருவி குடும்ப காரியங்களில் பெரும்பாலும்
ஸ்திரீகளே நடத்த அதிகசுதந்தரமுள்ளவர்களாதலாலும், அவர்களே சங்கவாழ்க்
கையின் நடவடிக்கைகளில் வலிமையுடைய பந்தக்கட்டினையுடையோராக
விருப்பதாலும், அவர்களை நீக்கிப் புருஷர்கள் யாதொன்றுஞ் செய்யக்கூடாதவர்
களாயிருக்கின்றார்கள். ஆகையால் ஸ்திரீகள் சரியான கல்விஞானத்தைப் பெறும்
வரையில், தங்கள் விருத்திக்குத் தடையாயுள்ள ஆசாரங்கள் மீதும் கொள்கை
கள் மீதும் உள்ள பற்றைத் தவிர்த்துச், சீர்திருத்தமான வழிகளைப் பின்பற்றித்
தங்கள் புருஷர்களோடிணங்கிக் காரியங்களை நடத்தமாட்டார்கள். ஹிந்து ஆண்
மக்களுக்கும் பெண்மக்களுக்கும் ஒன்றாய்க் கல்வியறிவைப் போதித்தாலன்றி
அவர்கள் [illegible] ஜாதியாரடைந்திருக்கும் உன்னத நிலைமையை அடைவது
கூடாது. ஹிந்து இளைஞர்கள் சரீரத்திடனையுடையவர்களாகும்பொருட்டு அவர்
கள் கல்வியிலும் வித்தியாசாலைகளில் அமைக்கப்பட்ட தேகவன்மைக்குரிய
சாதனங்களை அப்பியாசித்து அடைந்தும், தங்கள் சரீரக்கட்டினைமை உடை
ந்து நிற்பது ஆக்ஷிக்கத்தக்கவிஷயமாயிருக்கின்றது. பெண்கள் தக்கவயதுள்ள
வர்களாகுமுன் அவர்களை விவாகஞ்செய்து கொடுக்கிறவழக்கத்தாலுண்டாகுந்
தீங்கு கொடியது. வாலிபர் கட்டுடைந்து தளர்தலும், பெண்களின் பாலவிவாக
மும் ஆகிய இரண்டு தீமைகளும் நீங்கும்படி, மணவாட்டி மணவாளர்கட்குத்
தாலகாத்திரமும் வன்மையும் வெளிப்படுமளவும் அப்படிப்பட்ட பாலவிவாகம்
எல்லாக் குலத்தாரிடத்தும் நடவாமல் நிறுத்தப்படவேண்டும். தக்கபருவமும்
தேகதிடமும் உண்டானபின் விவாகம் நடத்தப்படுமானால், அந்தக்காலத்தில்
அமைகின்ற மணவாட்டியானவள் தனது நாயகன் மனது சந்தோஷிக்க நெரு
ங்கிய தோழமை பொருந்தியவளாவாள். இந்தச் சீர்திருத்தம் முதலிலே செய
யப்பட்டால், மற்றைய ஆசாரமுதலிய சீர்திருத்தங்கள் ஒன்றின்பின் ஒன்றாக
நடைபெறுதற்கு இது மார்க்கத்தைச் செய்வதாகும். இவ்விஷயத்தைப்பற்றிய
பேச்சுமாத்திரம் அதிகமாய் நடக்கின்றதேயன்றிக் காரியசாதனையாவதைக்
காண்கிலோம். அரசாங்கச் சீர்திருத்தத்தைப்பற்றிச் சர் அந்தோனி மக்டா
னல் துரை எடுத்துரைத்த விஷயங்களைத் தர்க்கித்துப் பேச நான் விரும்ப
வில்லை. பெரிய அதிகார நிலைமையை அடைய மனதிற் கொள்கின்ற
பேராசையானது பலவீனத்தைக் காட்டும் அடையாளமாம். அன்றியும் அது
ஒருவருக்கும் மகிழ்ச்சியைத்தராது, வெறுப்பைத் தருவதாகும். பேராசையானது
தேவதூதரையும் வானுலகத்திலிருந்து கீழேவிழச்செய்ததோர் பாவம் என்
னப்படும். ஆங்கில அரசாங்கத்தார் இந்தியருக்கு இப்போது கொடுத்துவரும்
உயர்ந்த உத்தியோகங்களைப்பார்க்கிலும் மேலான அந்தஸ்தும் அதிகாரமுமுள்ள
சேவகங்களை அவர்களுடைய தகுதியைக்கண்டு கொடுக்குந்தனையும் காத்திருப்
பதே விவேகமாகும். அதற்குள்ளாக இந்தியர் அரசாங்கக் கல்வியில் விருத்தி
யடைந்து, இந்தியாவின் உண்மையான நேசராகிய லார்ட் ரிப்பன் (Lord
Ripon) பிரபுவால் கொடுக்கப்பட்ட சுதேச ஆட்சி முறையைச் சேர்ந்த வேலை
களைச் செய்வதில் அதிக திறத்தை வெளியிடவேண்டும். ஆங்கிலேய ஜாதியாரும்
இந்தியரும் ஒருவரோடொருவர் கலந்துறவாடவேண்டுமென்றும் அருவருக்
கத்தக்க விஷயத்தைப்பற்றிச் சொல்லவேண்டுமானால் தங்கள் ஒழுக்கத்துடன்

மிகவும் வேற்றுமைப்பட்ட நடையையுடைய ஆங்கிலேயருடன் இந்தியர் சமதுவ முடையவர்களென்று மதித்து அவர்கள் கூடுஞ் சங்கங்களில் இவர்களுங் கலந்து சம்பாஷித்தல் முதலிய சகவாசத்தைச் செய்தற்குத்தக்க பருவம் இன்னும் வரவில்லையென என்னுகின்றேன். இந்தியர்களுக்குள்ளிருக்கும் பற்பல ஜாதிவேற்றுமையால் ஏற்பட்டிருக்கும் தடையை நிவர்த்திக்க முதலில் முயற்சிக்க வேண்டும். கல்விகற்ற அந்தணரும், போர் பொருதும் வலுவுடைய க்ஷத்திரியரும், திரவியவான்களான வைசியரும், கைத்தொழில் முதலிய உழைப்புகளால் பாடுபட்டு ஜீவிக்குஞ் சூத்திரரும் தங்களுக்குள் ஒருமைப்பட்டு ஒன்றாய்ச் சேர்ந்திருக்கும்படி வருந்தியழைப்பேன். இந்நான்கு வருணத்தவர்கள் ஒருவரோடொருவர் நேசவுணர்ச்சியைப் பரிமாறிக்கொள்ள எண்ணி, மனமொத்துச் சமமாகக் கூடியொன்றுபடுமளவும், ஆங்கிலேயரும் இந்தியரும் ஒருவரோடொருவர் கூடியளாவுதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்குதல் நியாயமற்றதாகும். நாகரீகமும், செல்வமும் பல லௌகீக ஞானமும் நிறைந்து பிரபலிக்க இந்தியரிடத்துத் தழைக்கவேண்டும். அவைகள் ஒருங்குடன் சேர்ந்த தன்மையுடையனவாய் இந்தியர் ஒருஜாதியார் என எண்ணப்படும் மாறுதல் உண்டாகும். அப்போதுதான் மேனாட்டின் திருத்தமுற்ற நடையுடையொழுங்குகளை இந்தியர் தழுவி அவர்களுடன் ஒப்பாகின்ற தகுதி விளங்கும். ஆதலால் அக்காலம் வரும்வரையில் இந்த எண்ணத்தை நீக்கிவைத்திருக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். கொஞ்சநாட்களாக இந்தியர் தங்கள் சிறுவர்களுக்குச் சமயசன்மார்க்கக் கல்வியைக்கற்பிக்கப் பலமான விருப்பங்கொண்டிருக்கின்றனர். இதைவிட முக்கியமான காரியம் வேறொன்றில்லையென யாவரும் ஒப்புக்கொள்வர். சிறுவர்களுடைய பக்தியுணர்விலும், பயனுள்ள லௌகீக ஞானத்திலும், நற்குண நற்செய்கையுடைய நடையிலும் விர்த்தியுண்டாகும் வண்ணம் நீதியும் மதக்கல்வியும் போதிக்கப்படவேண்டும். மதசம்பந்தமான காரியங்களில் கலக்கக்கூடாதென்னும் விரதத்தை யனுசரித்துவரும் ஆங்கில துரைத்தனத்தார் கலக்கத்தக்க விஷயமிது வல்லவாதலால், அந்தந்த ஜாதியாரே தங்கள் சிறுவர்களுக்கு நன்மையுண்டாக்குவதாய்த் தோன்றுங் காரியங்களைச் செய்யவேண்டும். மைசூரிலும் கொடகுதேசத்திலுமுள்ள வித்தியாசாலைகளில் படிப்பித்துவருகிற புத்தகங்களைச் சோதித்து, அவைகளின் விஷயமாய்த் தோன்றிய அபிப்பிராயங்களைக் குறிக்கும்படி 1874-ம் வருடம் ஏற்பட்ட சங்கத்தில் நானும் ஒருவனாக இருந்தேன். அச்சங்கத்தினரது அபிப்பிராயப் பத்திரிகையை (Report) மைசூர் அரசாட்சியின் தலைமைக் கமிஷனராக அக்காலத்திருந்த சர் ரிச்சர்ட் மீட்துரை (Sir Richard Meade) பார்வையிட்டுக் "கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களில் மதசம்பந்தமான விவாதக் கொள்கைகளைப்பற்றிய விஷயங்களைத் துரைத்தன வித்தியாசாலைகளில் படிப்பிக்கக்கூடாதென்பது நியாயமே, ஆனால் சர்வமத சம்மதமாயிருக்கும் கடவுள் ஒருவர் உண்டு, புண்ணியத்துக்கு நல்ல சம்பாவனை, தீமைக்குத்தண்டனை, தெய்வபயபக்தி, உண்மைபேசுதல், இராஜாங்கத்தாருக்குக் குடிகள் செலுத்தவேண்டிய கடமைகள், தங்களைத் தாங்கள் நடப்பிக்கவேண்டிய ஒழுங்குகள், பொதுவில் எல்லாஜனங்கள் விஷயத்தில் தங்களுக்குள்ள கடமைகள், இவைபோன்ற உண்மைகளைப்பற்றிச் சொல்லும் பாடங்களையுடைய புத்தகங்களை எல்லாக் கல்விச்சாலைகளிலும் வாசிக்கச் செய்வதில் ஆட்சேபமென்ன" வென்று கூறினார். "ஹிந்துக்களின் கூட்டத்திற்குத் தலைவர்களாயுள்ள சிலர் இவ்விஷயத்தைப் பற்றிய ஆலோசனைகள் செய்துவருகிறார்களென்றறிய நான் சந்தோஷிக்கிறேன். ஹிந்துக்களின்



வேதங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் இன்னுமுள்ள அவர்களின் பூர்வீக கிரந்தங்களிலிருந்தும் சர்வசம்மதமாயுள்ள மேற்சொல்லிய விஷயங்களைப்பற்றிச் சொல்லிய வாக்கியங்களை எடுத்துத் திரட்டிப் புத்தகமாக்கி வித்தியாசாலைகளிலும் வீடுகளிலும் சிறுவர்கள் அதனை வாசிக்கச் செய்வது நன்மையும் உபயோகமுமுள்ள காரியமாயிருக்கும். முற்காலத்தில் ஹீப்ரேய ஜாதியார் அனுசரிக்க ஆப்த வாக்கியங்களாகிய சட்டங்களையளித்த மோசே என்னு முனிவர் "உலகில் தோன்றிய எல்லா மனிதருக்கும் பொருந்துகின்ற சுகத்துக்கு மூலமாவது, யாவருக்கும் மூத்தவராகிய கடவுளது முடிவில்லாத கிருபை" யென்றுரைத்தனர். இதுவே கல்வியின் நிஜமான முடிவு, அல்லது ஒத்ததக்க எந்த ஒழுங்குள்ள கல்வியாலும் பெறக்கூடிய முடிவான பொருளாகும்.

மேற்சொல்லிய பிரசங்கத்தைப் பல பத்திரிகைகள் புகழ்ந்து பேசின.

---

பெங்களூர் நகர் முனிசிபல் கலாசாலை, மைசூர் மரிமல்லப்பன் பாடசாலை, இவைகளின் வருஷாந்திர வெகுமதிநாளிலும்; பரஞ்சிபை என்னும் பூனாதேசத்துச் சிறுவன் இங்கிலாந்தில் சாஸ்திரபரிட்சையில் மேலாகத்தேறி "Wrangler" என்னும் முதன்மையான பட்டம் பெற்றமைக்காக வாழ்த்துதல் கூறப் பெங்களூரில் கூடிய கூட்டத்துக்குச் சபாநாயகராகவீற்றிருந்தும்; சர் லீ வார்னர் (Sir Lee Warner) துரை மைசூர் ரெசிடெண்டாக விருந்து இங்கிலாந்துக்குப் போகும் சமயத்தில் அவரை உபசரித்து வந்தனமளிக்கக் கூடிய பெருஞ்சங்கத்திலும்; விக்டோரியா சக்ரவர்த்தினியின் ஞாபகச்சின்னம் ஒன்று ஏற்படுத்துவதற்காக 1902-ம் வருடம் பிப்ரவரி மாதம் 18உ பெங்களூரில் கூடிய மஹா ஜனக்கூட்டத்திற்குச் சபாநாயகராகவிருந்தும்; இன்னும் பற்பல சமயங்களிலும்; செட்டியார் செய்த பிரசங்கங்களை இவ்வதிகாரத்தில் விரிவாய் எழுதினால் இப்புத்தகம் பெரிதாகுமென்று அஞ்சி அதுகளை இங்குசேர்க்காமல் விட்டுவிட்டோம்.

# CHAPTER XV.

## பதினைந்தாம் அதிகாரம்.

### பற்பல பொதுவிஷயங்களில் தம்புசெட்டியாரின் சம்பந்தம், அவர்பெற்ற கௌரவப்பட்டங்கள்.

உத்தியோகமுறையில் தம்புசெட்டியார் நியாயாதிபதியாக
மந்திராலோசனைச் சங்கத்தில் அங்கியாகவுமிருந்து செய்து
வும் பொதுநன்மைக்குரிய பலவிஷயங்களிற்
வந்த அபார வேலைகளுடன்,

கலந்து பாலமாறுமல் சிரத்தையோடு உழைத்து உதவிபுரிந்துவந்த னர். அவைகளால் அந்தந்த சங்கங்களுக்குண்டாயின நன்மைகளை அவைகளில் சம்பந்தப்பட்டோர் எந்நாளுமறவாமல் நினைத்துச் செட்டியாரைப் புகழும்படியாயிருக்குமாகையால், அவைகள் இவ்வதிகாரத்தில் சுருக்கமாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

## பெங்களூர் அநாதலர்சாலை.

கைப்பாடுபட்டுழைத்து ஜீவனஞ்செய்யச் சக்தியற்ற வேழைகள் எந்த வருணத்தினராயினும் அவர்களுக்கு உதவிசெய்ய ஏற்படுத்தப்பட்ட இச்சங்கத்தின் ஓர் மெம்பராகவும், உதவி அக்கிராசனாதிபதியாகவும், தம்புசெட்டியார் 1872-ம் வருஷமுதல் 20 வருஷகாலங்களிருந்து, அப்போதைக்கப்போது செய்த சகாயங்களை அச்சங்கத்தின் கௌரவக் காரியதரிசியுணர்ந்து பலமுறைத் தம்புசெட்டியாரைப் புகழ்ந்து வந்தனமளித்தனர்.

## தேவராஜ பஹதூர் தரும நிதி.

சமஸ்கிருதம், கன்னடம், தமிழ், தெலுங்கு ஆகிய சுதேச பாஷைகள் நன்றாகத் தழைத்தோங்கும்படி அவைகளை வளர்ப்பதற்கும், வைதவ்யமடைந்த மாதர்களைக் கல்வியபிவிருத்திசெய்து ஸ்திரீ உபாத்தியாயினித்தொழிலுக் கேற்றவர்களாகத் தேற்றுவதற்கும் இந்நிதி ஸ்தாபிக்கப்பட்டது. 1883-ம் வருஷத்தில், மைசூர் மகாராஜாவின் கட்டளைப்படி இந்நிதியைப் பரிபாலித்துக் காரியங்களை நடத்தும்படி ஓர் நிர்வாக சபையை ஏற்படுத்தி, அச்சபைக்குத் தம்புசெட்டியாரை அக்கிராசனாதிபதியாக நியமித்தனர். இந்தத் தருமநிதியின் உதவியடைந்த அமங்கிலியஸ்திரீகளில் சுமார் 20 பேர்கள் உயர்ந்த பரீட்சைகளிற் றேறி, உபாத்தியாயினித்தொழிலுக்குரிய நற்சாட்சிப்பத்திரங்கள் (Teachers' Certificates) பெற்றனர். கன்னடம், தமிழ், இவ்விரண்டு திராவிட பாஷைகளில் பரீட்சையிற் றேறி எம். ஏ. (M.A.) பட்டம் பெற்றவர்களுக்கு இந்நிதியிலிருந்து 300-ரூபாய் வெகுமானந் தருவதாய் நிருவாக சபையாரால் ஓர்சமயம் தீர்மானிக்கப்பட்டது. மதராஸ் இராஜதானி முழுவதிலும் முதலாக இக்கௌரவத்தைப்பெற்ற மைசூர் சுதேசிகளில் ஒருவரான R. A. நரசிம்மாசார் என்பவர், மேற்சொல்லிய 300 ரூபாய் வெகுமதியையடைந்து இந்நிதியின் காரியாதிபர்களால் சன்மானிக்கப்பட்டனர். 1901-ம் வருஷத்தில் தம்புசெட்டியார் இராஜிநாமாகொடுத்து இந்நிதியினின்று நீங்கியபோது, இதன் நிருவாக சபையார் மைசூர் அரசாங்கத்துக்கு அவரைப்பற்றி எழுதியதாவது :—



REGISTERED ... MADRAS

"இராஜதர்மப்ரவீண தி. இரா. ஆ. தம்புசெட்டியார் C. I. E. அவர்கள், தேவராஜ பஹதூர் தருமநிதியின் நிருவாக சபையின் அக்கிராசனாதிபதியாக விருந்து அறிவோடும், மதிக்கத்தக்க விதத்திலும் நிதியைப்பரிபாலித்து எங்களுக்கு அப்போதைக்கப்போது நல்லாலோசனை தந்து நடத்திவந்ததைப்பற்றி எங்களுக்குண்டாயிருக்கும் நல்லுணர்ச்சியை இச்சமயத்தில் வெளியிடவேண்டியவர்களாயிருக்கின்றோம். அவர் உத்தியோகத்தைவிட்டு நீங்கிப் பெங்களூரைவிட்டு வெளியேபோக யோசித்திருப்பதினிமித்தம் இந்நிதியின் சம்பந்தத்தை நீக்கிக்கொள்ளுவது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கின்றது. எங்கள் கடமைகளைச்சரியாக நடத்த எங்களுக்குத் தக்க உதவிகள் புரிந்து வந்தமைக்காக எங்களுடைய மனப்பூர்வமான வந்தனங்களை அவருக்குச்செலுத்துகிறோம்."

## ராய் பஹதூர் தருமரத்னாகரம்

## ஆ. நாராயணசாமி முதலியார் வித்தியாதான விஷயம்.

பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும், ஐந்தாவது குலத்தரித்திரர்களெவர்களும், அவர்கள் பெண்களும், அவருள் தாய் தந்தை மனையிலிலாப் பிள்ளைகளும் கல்வி பயிலுவதற்குப் பெங்களூரிலும், வெகுதச்சார்ந்த அல்சூரிலும், ஐந்து கல்விச்சாலைகளை ஸ்தாபித்து, யிறவைகளைத் தளர்வின்றி பரிபாலனஞ்செய்யத் தருமநிதியையும் மேற் சொல்லிய நாராயணசாமி முதலியார் வைத்தனர். இந்நிதியைப் பரிபாலித்து வித்தியாசாலைகளின் காரியங்களை நடத்திவர ஏற்பட்ட நிருவாகசபைக்கும் பொருள் காப்பாளிகளுக்கும் அக்கிராசனாதிபதியாகத் தம்புசெட்டியார் 30 வருஷங்கள் வரையுமிருந்து உதவிபுரிந்துவந்தனர். இதற்காக மேற்படி முதலியாரும் அவருடைய குடும்பத்தினரும் தம்புசெட்டியார்மீது அத்தியந்த விஸ்வாசமுள்ளவர்களாயிருந்து நேசித்துவந்தார்கள்.

## மைசூர் மஹாராணி பெண்கல்விச்சாலை.

பெண்கல்வி விஷயத்தில் எப்போதும் சிரத்தையெடுத்துக் கொண்டுவந்த தம்புசெட்டியார், மைசூர் மஹாராணியவர்கள் வகுத்த இவ்வித்தியாசாலையின்மேல் மனஞ்செலுத்தினவராய், அதன் விசாரணைச் சங்கத்தினுள் ஓர் அத்தியக்ஷராகவும் சபாநாயகராகவும் வீற்றிருந்து, இக்கல்விச்சாலை மிக்க கீர்த்தியுற்று விளங்கும்படியான விர்த்திக்குக் கொண்டுவந்தனர். இவ்வித்தியாசாலையில் கல்வி பயின்ற பெண்களில் பலர், மதராஸ் சர்வகலாசாலைச் சங்கத்தினது பரீட்சைகளில் தேறி உபாத்திமைத் தொழிலைப் பெற்றதல்லாமல், 1906-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நடந்தேறிய B. A. பரீட்சையில், ருக்மணியம்மாள், ஸ்ரீரங்கம்மாள், என்னும் பேர்கொண்ட இரண்டு பிராமணஸ்திரீகள் தேறிப் பிரசித்தியடைந்தனர். தட்சணை

தேசத்தில்; உயர்குல ஸ்திரீகளில் இங்கிலீஷிலும் சுதேசபாஷையிலும் உயர்தரப்படிப்பினால் முதல் முதலில் வெற்றியடைந்தவர்கள் இவர்களே. இவர்களிருவரும் இதே கல்விச்சாலையில் உபாத்திமைத் தொழில் பூண்டு 200 ரூபாய் மாதாந்தவேதனம் பெற்றுவருகின்றனர். இப்பெண்கல்விச்சாலை தோன்றி விளங்குவதற்கு மூலகாரணராகிய ராய்பஹதூர் A. நரசிம்மையங்காரும், இவ்வித்தியாசாலையின் லேடி சூபரின்டெண்டும், தம்புசெட்டியார் இக்கல்விச்சாலையின் நிருவாக சபையை நடத்திவந்த திறமையை வியந்து எழுதிய கடிதங்கள், அவர் செய்த இவ்வித்தியாசாலையின் சம்பந்தமான சீர்திருத்தங்களை விளக்குவன.

## பெங்களூர் உன்மத்தர் சாலை.

இச்சாலையில் 100-150 பேர்கள் வரையில் இருந்துகொண்டு வந்தனர். இவ்வுன்மத்தர்சாலையை அப்போதைக் [illegible]புசெட்டி போய் பார்த்துவரும் அதிகாரிகளுக்குள் தம்புசெட்டியாரு வராகவிருந்தனர். இச்சாலையிலுள்ளிருந்த பைத்தியக்கார வெவ்வேறு ஸ்பாவத்தையுடையவர்களாயினும், அங்குள்ள உத்தியோகஸ்தர்களின் மேல்விசாரணையினாலும் சாமர்த்தியத்தினாலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆடை, கம்பலம் முதலிய நெசவுத் தொழில்களையும், இன்னும் உபயோகமுள்ள சிற்சில வேலைகளையுஞ் செய்து வந்தனர். தம்புசெட்டியார் நியாயாதிபதித்தொழிலையும் வகித்திருந்ததால், இவருடைய உத்தரவின்படி, வலிய சரீரமும் அறிவும் பெற்ற உன்மத்தர்கள் பலர் தங்கள் சிறையிலிருந்து விடுதலைபெற்றனர்.

## மைசூர் கவர்ன்மெண்ட் இன்சுரன்ஸ்
## அல்லது உயிர்க்கொதுவை யேற்பாடு.

மைசூர் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் நன்மைக்காக இவ்வேற்பாடு 1891-ம் வருஷத்தி லுண்டாகியது. இது ஜாரிக்கு வருமுன்னர் அரசாங்க ஊழியத்தைச் சேர்ந்தவர்கள் இஷ்டமிருந்தால் இதிற் சேரலாமென்றும், பிற்பாடு உத்தியோகம் பெறுகிறவர்கள் யாவரும் கட்டாயமாயிதிற்சேரவேண்டுமென்றும் நிபந்தனைசெய்யப் பட்டது. இதைச்சேர்ந்த காரியங்கள் நடத்துவதற்குச் சில பெரிய உத்தியோகஸ்தர்கள் சேர்க்கப்பட்டனர். அக்காரியாதிபதிகளின் கூட்டத்திற்குத் தம்புசெட்டியார் அக்கிராசனாதிபதியாக மைசூர் அரசாங்க ஊழியத்திலிருந்து நீங்கும்வரையிலிருந்தனர். இவ்வேற்பாடு செவ்வையாய் நடந்துவருகின்றது. இதன் மூலதனம் கவர்ன்மெண்ட்



பத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றது. இது அரசாங்க வேற்பாட்டிலொன்றாகவும் அரசாங்க உத்தரவாதம் பொருந்தியதாகவும் வைக்கப்பட்டு இதைக் கிரமமாய் நடத்துவதற்குரிய சட்டநிபந்தனைகள் அப்போதைக்கப்போது செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஏற்பாட்டினால் அரசாங்க உத்தியோகஸ்தர் தங்கள் மாதச் சம்பளத்தில் 100-க்கு பத்து ரூபாய் வீதம் கொடுத்துவருவார்களேயாகில், உத்தியோகத்தைவிட்டு நீங்கியபின் தங்களுக்காதரவாகும் மொத்தத் தொகையொன்று பெற, அல்லது தாங்கள் முந்தியிறந்தால் தங்கள் குடும்பத்தாருக்கு ஆதரவாகும்படியான பொருள் கிடைக்கத்தக்க திட்டத்தை யுடையதாயிருக்கின்றது.

## மைசூர் பாளையக்காரர் விஷயம்.

மைசூருள் பாளையக்காரரென ஒருவகுப்பாருண்டு. அவர்கள் தரித்திரர்களென்றாலும் மிகமுக்கியமானவர்கள். அவர்களுக்கு அரமனையிலிருந்து கொடுக்கப்பட்டுவந்த உபகாரச்சம்பள வேற்பாடு வெகுகாலத்துக்குமுன் செய்யப்பட்டதாகையால் மிக்க குறைவாயிருந்ததைக் கண்டு, மைசூர் மகாராஜா அவர்கள் 1894-ம் ஆண்டில் அவரவர்களின் அந்தஸ்துக்குத் தக்கபடி உபகாரச்சம்பளங்களை உயர்த்தினர். அன்றியும், அவர்கள் கல்விவிஷயத்தில் விருத்தியாகும்படி தக்க ஊக்கத்தைக்கொடுத்துப் பொருளுதவிசெய்ய மகாராஜா அவர்கள் கருதினர். அவர்களில் கிருஷ்ணம்ம நாயக்கனென்னுமொரு சிறுவன் போதுமானமட்டும் இங்கிலீஷ் பாஷையைக் கற்றிருந்தபடியால், அவனை இங்கிலாந்தினுக்கு அனுப்பி அவ்விடத்தில் பாரிஸ்டர் ஆகிறதற்கு வேண்டிய கல்வியைப் பெறும்படிக்கு மகாராஜா அவர்கள் உதாரத்துவத்துடன் பொருளுதவிசெய்தனர். ஆனால் அதிதீட்சண்ய புத்தியுடைய அச்சிறுவன் அகாலமாய் அங்கு இறந்தான். தம்புசெட்டியார் அவ்வாலிபன் விஷயத்தில் மெத்தசிரத்தை கொண்டு மிஸ்டர் மெயின்துரைக்கு சிபாரிசு செய்து வேண்டிய அனுகூலங்களைச் செய்துவைத்தனர்.

## லேடி டாக்டர்கள்.

1885-ம் ஆண்டுக்கு முன்னர் மைசூர் சமஸ்தானத்தில் இங்கிலீஷ் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுத்தேர்ந்த லேடிடாக்டர்கள் இல்லாமலிருந்தனர். இவ்விஷயத்தை மைசூர் அரசாங்கத்தினருக்கு வற்புறுத்தி இதற்கான வேற்பாடு செய்வது அவசியமென்று தம்புசெட்டியார் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். செட்டியாருடைய கருத்தின்படி மிஸ் குருதயாள் சிங்கு என்னுஞ் சுதேசமாது தெரிந்தெடுக்கப்பட்டு, பரிட்சையிற்தேறி, மைசூர்

அரசாங்கத்தில் அசிஸ்டண்ட் ஸர்ஜனாக நியமனம் பெற்றனள். இந்த மாதைப் பின்தொடர்ந்து, மிஸ் கோவிந்தராஜுலுவும், மிஸ் ஆயாச்சியம்மாளும் அசிஸ்டண்ட் ஸர்ஜன் உத்தியோகத்தில் நிலைபெற்றுச் சுதேச ஸ்திரீகளின் நோய்களுக்குத் தக்க சிகிச்சை செய்து மிக்க உதவிபுரிந்து வருகின்றனர்.

## இந்திய ஆங்கிலேய மாதர்களின் ஒருமைச்சங்கம்.

1888-ம் வருஷத்தில் ஆங்கிலேயர்கூடிய இந்தியதேச ஸமாஜனக் கூட்டமென்னும் ஒரு சங்கத்திலிருந்து ஹிந்துமாதர்களின் மனமயக்கத்தை நீக்கிக் கல்வியில் பயனடையச் செய்யவேண்டுமென்னும் நோக்கத்துடன், மிஸ் மானிங் (Miss Manning) என்னும் ஒரு ஆங்கிலேயமாது பெங்களூருக்கு வந்தனள். அச்சமயத்தில் தம்புசெட்டியார் தமது மாளிகையில் கீதவிநோத காலக்ஷேபம் வைத்து மேற்படி துரைமகளை வரவழைத்தனர். இந்த ஆங்கிலேய மாதைக் காணச் சுதேச ஸ்திரீகளும் பூமான்களும் அங்குவந்து கூடினர். செட்டியாரின் குலதர்மபத்தினி இராஜம்மாள், மிஸ் மானிங் துரைமகட்கு உபசார வந்தனங்கள் கூறி எதிர்கொண்டு வரவழைத்து, தானும் அங்கு கூடியிருந்த மற்ற சுதேச மாதர்களும் பெண்கல்வியபிவிருத்திக்கு வேண்டியதற்கான உபாயங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். இங்கு நேர்ந்த விர்த்தாந்தத்தைக் கொச்சியின் இளவரசராகிய கேரளவர்ம இராஜன் அறிந்து "நம்முடைய குலஸ்திரீகள் சிநேகத்துடன் ஒருவரையொருவர் சந்திப்பார்களாயின், அது இவ்விடத்தில் நமக்கு எவ்வளவோ பேறாகும். தங்களால் காட்டப்பட்ட இந்த உதாரண நடையைத் தங்கள்பாலனமுடைய பொறுப்பின்கீழ் மற்றவர்களும் நடக்கும்படி பின்பற்றுவார்களென்று நாங்கள் மனப்பூர்வமாகக் கோருகின்றோம்" எனக் கடிதமூலமாகத் தம்புசெட்டியாருக்குத் தெரிவித்தனர். இது நடந்த சிலகாலங்களுக்குப்பின், மிஸ் கார்லண்ட் (Miss Garland) என்னும் மற்றொரு ஆங்கிலமாது இத்தேச ஸ்திரீகளின் கல்வியை அபிவிர்த்திசெய்யும் நோக்கத்துடன் பெங்களூருக்கு வந்தபோதும், தம்புசெட்டியாருடைய மனைக்கு வந்து, செட்டியாரையும் அவர் குடும்பத்தாரான ஸ்திரீகளையும் சந்தித்து, சம்பாஷித்து, மகிழ்ச்சியுற்றுப் போயினள்.

## இராஜம்மாள் தம்புசெட்டி பெண்கல்விச்சாலை.

மேற்சொல்லிய ஆங்கில மாதர்களின் கல்வித்திறத்தையும் மேன்மையான குணங்களையுங் கண்டுணர்ந்த தம்புசெட்டியாரின் மனைவி இராஜம்மாள், இத்தேசத்தில் பெண்கல்வி விர்த்திக்குப்படி, தன்னா



லியன்ற உதவிசெய்ய வேண்டுமென்று கருதினர். 1898-ம் ஆண்டு, பெங்களூர் கத்தோலிக்கு மிஷியோனுக்கு இராஜம்மாளால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட பெங்களூர் தண்டு நாராயண பிள்ளை வீதியிலுள்ள கட்டடத்தில், இராஜம்மாள் தம்புசெட்டியார் பெண் கல்விச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. இக்கல்விச்சாலை, ஐரோப்பாவில் பரீட்சைகொடுத்துத் தேர்ந்த, பெங்களூர் ஆர்ச். சூசையப்பர் கன்னிகாமடத்தைச் சேர்ந்த, மரிய செவாரி என்னும் பேர்கொண்ட கன்னிகையால், சுதேச கன்னியாஸ்திரிகள் ஆறுபேர்களின் உதவிகொண்டு, நடத்தப்பட்டு வருகின்றது. இப்பள்ளிக்கூடத்தில் தற்காலம் 160 பெண்கள் கல்வி பயின்று வருகிறார்கள். பெரும்பாலும் முதலிமார் ஜாதியைச் சேர்ந்தவர்களும், மஹாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவர்களும், பிராமணர்களும், லிங்கசைவரும், சுதேசக் கிறிஸ்துவர்கள் சிலருமுளர். ஊர்மத்தியில், ஜனநெருக்கமுள்ளவிடத்தில், இக்கல்விச்சாலையிருப்பதால் எல்லாஜாதியார்களின் பெண்கள் இங்கு வந்து படிப்பதற்கு மிக்க அனுகூலமுள்ளதாகவிருக்கின்றது. தமிழ், தெலுங்கு, கன்னடம், இங்கிலீஷ் பாஷைகள் மதராஸ் கல்விச் சட்டமுறைமைப்படிக்குக் கற்பிக்கப்படுகின்றன. அன்றியும் தையல் சித்திர வேலைகள் முதலியனவும், தேகப்பயிற்சிக்கான சிலம்பமும், பாடல் சங்கீதமும் கற்பிக்கப்படுகின்றன.

## தம்புசெட்டியார் தரும வைத்தியசாலை.

ஏழைப்பிணியாளருக் குதவிசெய்யுங் கருத்துடன், தம்புசெட்டியார், தாம் வசித்திருந்த பெங்களூர் தண்டு நாராயணபிள்ளை வீதியிலுள்ள மாளிகையைச் சேர்ந்த விடுதியில் தருமவைத்தியசாலை யொன்று ஸ்தாபித்துக் காலையிலும் மாலையிலும் அங்குவருகிற நோயாளிகளுக்குத் தக்க அவுஷதங்கொடுத்து சிகிச்சைசெய்யும்படி ஐரோப்பிய வைத்தியமுறைமையிற்றேர்ந்த டாக்டர் ஒருவருக்கு மாதச்சம்பளங் கொடுத்து, 1884-ம் ஆண்டு முதல் சுமார் பத்து வருஷகாலம் வரையில், நடத்திவந்தனர். இதனைத் துரைத்தன அதிகாரிகளின் மேற்பார்வையில் வைக்கவேண்டுமென்றெண்ணிப், புதுமார்க்கட்டு ரோட்டிலுள்ள பவுரிங்கு சிவில் ஆஸ்பத்திரியினருகாமையில் ஒருகட்டடம் 1893-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கட்ட ஆரம்பித்து, 1895-ம் ஆண்டில் முடித்து, அதனை மேற்படி பவுரிங்கு ஆஸ்பத்திரியின் அதிகாரிகளிடம் ஒப்புவித்து, அதில் பிணியாளர்களுக்கு ஔஷதங்கொடுத்துச் சிகிச்சை செய்யும்படியான ஏற்பாடு செய்தனர். இவ்வேற்பாட்டின்படி நடத்த அக்கட்ட

டத்தைத் திறக்கும் விஷயத்தைப்பற்றி மைசூர் ரெஸிடெண்ட் லீவார்னர்துரை,

“என் பிரிய தம்புசெட்டியாரே! தாங்கள் என்னைச் சோமவாரத்தன்று காணக்கூடுமானால் யான் மிகவுஞ்சந்தோஷமுடையவனாக இருப்பேன். அன்று பகல் பதினொருமணிக்கும் பன்னிரெண்டுமணிக்கும் இடையிலுள்ள வேளை தங்களுக்கு அனுகூலமாயிருக்குமாயின், அது எனக்கு நல்ல சமயமாயிருக்கும். தருமவைத்தியசாலை ஸ்தாபிப்பதற்காகத் தாங்கள் நன்கொடையாகக் கொடுக்கவிருக்கும் கட்டட விஷயத்தில் யான் அதிக சிரத்தையுடையவனாக விருத்தலால், அதுபற்றித் தங்களிடம் யான் சம்பாஷிக்க விரும்புகின்றேன்”

என்றெழுதினர். தம்புசெட்டியார் மேற்படி ரெஸிடெண்டு துரையைக்கண்டு சம்பாஷித்தபின், பெங்களூர்வாசிகள் அநேகர் கூடிய கூட்டத்தின்முன் இத்தருமவைத்தியசாலை திறக்குஞ்சடங்கு நிறைவேறியது.

## சென்னை அர்ச். அடைக்கல நாயகி ஆலயம்.

சென்னைமாநகரில் வசித்திருந்த ஹிந்து கத்தோலிக்க கிறிஸ்துவர்கள், தங்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு கோவில் சம்பாதிக்க வேண்டுமென்று விரும்பி, இவ்வாலயத்தை, 1845-ம் வருஷத்தில் கட்டிமுடித்து, அதனை மைலாப்பூர் மேற்றிராசன ஞான அதிகாரத்துக்குட்படுத்தினர். இவ்வாலயம் உண்டாகச்செய்து அதன் காரியங்களை அக்காலத்தில் நடத்திவந்த தர்மகர்த்தாக்களில், தம்புசெட்டியாரின் தந்தையாரும் ஒருவராயிருந்தனர். தம்புசெட்டியார் சென்னையில் வசித்திருந்த காலத்தில் அக்கோவிலுக்கு தாமும் ஒரு தர்மகர்த்தராயிருந்து காரியங்களை நடத்திவந்து, பற்பல சமயங்களில் அக்கோவிலுக்கு வேண்டிய உதவிபுரிந்து வந்ததன்றி, அக்கோவிலில் 35-வருஷகாலமாய் வருஷந்தோறும் தம் பெயரால் நடந்துவரும் உற்சவத்துக்காகவும், அச்சமயத்தில் எளிய ஜனங்கள் பலருக்கு ஆடைகள் தந்துதவவும், ஓர் நிதியை மைலாப்பூர் மேற்றிராசன அதிகாரிகளிடத்து வைத்திருக்கின்றனர்.

1887-ம் வருஷம் ஜனவரிமாதத்தில் உண்டாயின இந்திய கத்தோலிக்கு ஞான மேய்ப்பர்கள் விசாரணைப் பிரிவினால், அர்ச். அடைக்கல தேவமாதாவின் ஆலயம், மைலாப்பூர் மேற்றிராசன ஞான அதிகாரத்தை விட்டு விலகவில்லை. 1890-ம் வருஷம் அக்டோபர் மாதம் 28உ யன்று சென்னைச் சுதேச கத்தோலிக்கு ஐக்கிய சங்கத்தினர்கள் ஒன்றுகூடி, போர்த்துகால் அரசருக்கு மைலாப்பூர் மேற்றிராசனத்தின்மீதுள்ள சுதந்தரத்தை அங்கீகாரஞ் செய்யாமல் தள்ளிவிட வேண்டுமென்று, அங்கிலேய துரைத்தனத்தா



ருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள முயன்றார்கள். இங்கிலாந்தின் அரசருக்கு ஞானாதிகார சம்பந்தமுள்ள விஷயத்தைப்பற்றி விண்ணப்பஞ் செய்வதைப்பார்க்கிலும், அர்ச். பாப்பானவருக்கு மனுச் செய்துகொள்ளுவதினால் நன்மையுண்டாகுமென்று தம்புசெட்டியார் அபிப்பிராயப்பட்டனர். சங்கத்தினர் தாங்கள் கொண்ட கருத்துப்படி இந்தியராஜாங்கக் காரியதரிசி (Secretary of State) க்கு தங்கள் விண்ணப்பத்தை யனுப்பினர். ஆனால், தம்புசெட்டியார் எதிர்பார்த்தபடியே பயனற்றதாய் முடிந்தது. ஆகையால் சென்னை அர்ச். அடைக்கலநாயகி ஆலயம் மைலாப்பூர் ஞான ஆளுகையிலேயே நிலைத்துநின்றது.

தம்புசெட்டியார் சென்னையைவிட்டுப் பெங்களூருக்கு வந்த பின்னர், அர்ச். அடைக்கலநாயகியாலய தர்மகர்த்தத்துவ விசாரணையை விட்டு நீங்கிநின்றாலும், இவ்வாலய விசாரணைக்கு ஏற்படுத்தப்பட்ட குருக்களும் மைலாப்பூர் மேற்றிராணிமார்களும் செட்டியாருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாமல் இவ்வாலயத்தைப்பற்றிய விசேஷகாரியங்களைத் தீர்மானித்தவர்களல்லர். ஓர் சமயத்தில் இவ்வாலய விசாரணைக் குருவுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் மன ஒற்றுமையின்றி கோவில்காரியங்கள் நெடுங்காலம் சரியாய் நடவாமலிருந்தன. தம்புசெட்டியாரின் உதவிகொண்டு மிகவுஞ் சங்கைக்குரிய தோம் டிசில்வா மேற்றிராணியார், பேதப்பட்ட இருதரத்தாரையும் ஒன்றுபடுத்திச் சமாதானம் உண்டாகச் செய்தனர். இதே மேற்றிராணியாருக்கு, இக்கோவிலைச்சேர்ந்த கிறிஸ்துவர்கள், 1893-ம் ஆண்டு ஜனவரிமாதம் 1உ எழுதியனுப்பிய வந்தனப்பத்திரம், நாலாவது பாராவில், தம்புசெட்டியார் மேற்படி விஷயத்தில் புரிந்த உதவியை யுணர்ந்து பின்வருமாறு எழுதினர்:—

“இந்த இரண்டு வருஷகாலமாய்த் தாங்கள் இம்மேற்றிராசன ஸ்தானத்திலிராமலிருந்ததைப்பற்றி நாங்கள் எவ்வளவோ மனக்கவலையுடையவர்களாயிருந்தோம். எங்கள் கோயில் விசாரணைக் குருவானவருக்கும் எங்களுக்குமிருந்த மனவேற்றுமை நீங்கி ஒற்றுமையும் நல்ல சமாதானமு முண்டாக, எங்கள் கோவிற்கு பெரும் உபகாரியாகிய கனம்பொருந்திய தி. இரா. ஆ. தம்புசெட்டியாரின் உதவியால் தாங்கள் எங்களுக்குச் செய்த நன்மைக்காக நாங்கள் எந்நாளும் நன்றியறிந்தவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அந்தக்கனவான் பெயரைச் சம்பந்திக்காமல் அர்ச். அடைக்கலநாயகி கோவிலை ஒருநாளும் மனதிலெண்ணக்கூடாதவர்களாயிருக்கின்றோம். நாங்கள் நியாயமாய்க் கோரிய விஷயங்களுக்கனுகூலமாகத் தங்கள் தீர்மானத்தை (Decree) மாற்றியதற்காகவும் எங்கள் வந்தனங்களைச் செலுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம்.”

சென்னைக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களும் மேற்றிராணிமார்களும், குருக்களும், தம்புசெட்டியார் மீது எவ்வளவு மதிப்புடையவர்களாக விருந்திருக்கின்றார்களென்பது மேற்சொல்லிய விருந்தாந்தங்களாலும், பின்னால் கூறப்பட்ட விஷயங்களாலும் விளங்கும்.

## பெங்களூர் அர்ச். சவேரியார் தேவாலயம்.

பெங்களூரைச்சேர்ந்த கன்டோன்மென்ட் என்னும் சேனைதலத்தில் தம்புசெட்டியார் சேர்ந்து, அங்கு தமது குடும்பத்துடன் வசிக்க ஆரம்பித்த 1867-ம். ஆண்டு முதல், மேற்படி கோவிலின் ஞானாதிகார விசாரணைக்குட்பட்டிருந்தமையால், இத்தேவாலயத்தில் நடக்கும் பூஜை உற்சவமுதலிய தெய்வாராதனைகளுக்கும், திருச்சபைக்கும் அநேக தருமங்கள் அப்போதைக்கப்போது செய்து வந்தனர். இவ்வாலயத் திருப்பெயருக்குரிய அர்ச். சவேரியாரின் நவநாள் மகோற்சவத்தைத், தமது சொந்தச்செலவில், மிகச்சிறப்பாய் வருஷந்தோறும் நவம்பர்மாதக் கடைசியில் ஆரம்பித்துக் கொண்டாடி வரும்படியான ஏற்பாட்டைச் செய்ததுமல்லாமல், சுமார் எழுபது வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட இக்கோவில் அதிக பழமையாய்விட்டதாலும், நாளுக்குநாள் அதிகரித்துவரும் பெருந்தொகையான கத்தோலிக்கு கிறிஸ்துவர்களுக்குப் போதுமான இடம் தரத்தக்க விசாலமுடையதா யில்லாமையாலும், இதற்குப் பதிலாக வேறே ஒரு பெரிய அழகான புதியகட்டடம் அமைக்க முயற்சி செய்துவரும் இவ்வாலய விசாரணைக்குருவாகிய சங்கைக்குரிய சர்வாங்கோம் ஸ்வாமியாரின் விருப்பப்படி பதினாயிரம் (10,000) ரூபாய் தமது கையொப்ப நன்கொடைத் தொகையாகத் தம்புசெட்டியாரீந்தனர். இதுவுமன்றி, தற்கால சாஸ்திர முறைமைக் கொத்து விர்த்திக்குக் கொண்டுவரும் பல கைத்தொழில் கல்விஞானமும், விவசாயக் கிருஷிகளின் பயிர்ச்சியும், கிராமவாசிகளுக்குண்டாகச் செய்யவேண்டுமென்று கருதி, பெங்களூருக்கு அருகாமையில் (5 மைல் தூரத்தில்) உள்ள கிருஷ்ணராஜபுரத்தைச் சேர்ந்த தம்புசெட்டியார் பாளையமென்னுந் தமது கிராமத்தை மைசூர் மேற்றிராசன ஞான அதிகாரிகளுக்கு நன்கொடையாகத் தந்து, அக்கிராமத்திலுள்ள குடிகளுக்குக் கைத்தொழில் முறைமையும் விவசாய வித்தையும் புகட்டத்தக்க கல்விச்சாலை யொன்று ஸ்தாபித்து, மேற்படி கிராமத்தின் வருமதியைக் கொண்டு அதைப் பரிபாலித்து வரும்படியான ஏற்பாடு செய்துவைத்தனர். கொடையாளரின் விருப்பத்தை நிறைவேற்ற, அங்கு ஓர் குருவானவரையும் அவருக்குதவியாக சில உபாத்தியாயர்களையும் வைத்து, தக்கமுயற்சிகள் மேற்றிராசன அதிகாரிகள் நடத்தி வருகின்றனர்.



## கோவை நகர் திருயாத்திரை.

1890-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27உ க்கும் 1891-ம் ஆண்டு ஜனவரி மாதம் 32உ க்கும் இடையில் தம்புசெட்டியார் தமது குடும்பத்துடன் கோவைநகர் திருயாத்திரைக்காரர்களிற் சேர்ந்திருந்து, 450 வருஷங்களாகியும் அழியாமல் அற்புதமாய்க் காப்பாற்றப்பட்டு விளங்கும் அர்ச். சவேரியாரது திருமேனியின் காட்சியைக் கண்டனர். இத்திருச்சரீரத்தைத் தரிசித்து வந்திக்க அங்கு சேர்ந்திருந்த பெருங்கூட்டத்தினரது விஸ்வாசமும் பக்தியுங் கண்டு செட்டியார் மிக்க ஆச்சரியமுற்றனர். இந்நகரின் சிறப்பைப் பற்றியும் தாம் அங்கு பார்த்த விசேஷங்களைப் பற்றியும் செட்டியார் பின்வருமாறு கூறினர்:—

“கோவைநகர் முற்காலத்தில் போர்த்துகாலர் அரசாட்சியில் செல்வமெல்லாந் தன்னுட்கொண்டு பிரகாசித்ததாகும். இதனிடத்துப் பூமண்டல முழுதும் ஒத்துக்கொண்டாடச் சிறந்தோங்குவதாகிய நீண்டவீதி வர்த்தகஸ்தானமாக உள்ளது. இதில் உன்னதமான பல கோவில்களும், முனிவர் ஆச்சிரமங்களும், அழகிய மண்டபாளிகைகளும், கன்னிகா மடங்களும் மறையாமல் இன்று முள்ளன. ஆயினும் முன்னாளிற்பெற்ற அழகையிழந்த நகரையொத்த காட்சியைக் காட்டுகின்றன. இவையெல்லாம் நானும் என்குடும்பத்தோரும் அப்போது அங்குவிஜயஞ்செய்திருந்த மைலாப்பூர் மேற்றிராணியாரின் இனிய உதவியால் தரிசிக்கப் பெற்றோம். அன்றியும், கீழ்த்திசைத் தலைமை ஞானாதிகாரரான கோவை அதிமேற்றிராணியாரையும், கோவைக் கவர்னர்ஜெனரல் அவர்களையுந் தரிசித்துச் சம்பாஷிக்கும் பாக்கியமும் கவுரவமும் அடைந்தேன்.”

தம்புசெட்டியார் கோவைநகரை விட்டுப் பெங்களூர் வந்தபின் மைலாப்பூர் மேற்றிராணியாருக்கொரு நிருபமெழுதி அவர் செய்த உதவிக்காக வந்தனமளித்தனர். அவ்வாண்டவர்,—

“என்பிரிய தம்புசெட்டியாரே, கோவையில் தாங்கள் கண்ட காட்சிகளால் மனோரம்மிய மடைந்தீர்களென அறிய நாம் மிக்க சந்தோஷிக்கின்றோம். விசேஷமாய் அங்குள்ள விநோதமான பெரிய கோவில்களைக்கண்டு அத்தியானந்தமடைந்திருப்பீர்கள் மெய்யே. நாமறிந்தமட்டில் இந்துதேசமுழுவதிலும் இவ்விதக்கட்டடங்கள் இல்லையா. மைசூர் மகாராஜா அவர்கள், இந்நகரின் விசேஷங்களைத் தாங்கள் சொல்லக்கேட்டு, சந்தோஷப்பட்டிருப்பாரென நம்புகிறோம். தாங்கள் கோவையிலிருந்தகாலையில், தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை இன்னுமதிகமாய் தாங்கள் விரும்பியபடிச் செய்துவைக்கக் கூடாமற் போயிற்றென்று நாமும் எமது காரியதரிசியும் வியசனிக்கிறோம்.

தங்களுக்கும் தங்கள் குடும்பத்தோருக்கும் நம்முடைய ஆசீர்”

என்று பதில் நிருபமனுப்பினர். தம்புசெட்டியார் கோவையிலிருந்து

சில அருமையான பொருள்களைக் கொண்டுவந்து தமது சுற்றத்தார்க்கும் நேசர்களுக்கும் நன்கொடையாகத் தந்தனர்.

## இந்திய சுதேசக் கத்தோலிக்குச் சங்கம்.

1893-ம் வருஷம் 28-ம் டிசம்பர் மாதம் பெங்களூர், புதுவை, கூடலூர், தஞ்சாவூர், திரிசிரபுர முதலிய தென் தேசங்களிலுள்ள உத்தமஜாதிக் கத்தோலிக்குக் கிறிஸ்தவர்கள் ஒன்றுசேர்ந்து, பதின்மூன்றாம் சிங்காரயரென்னும் அர்ச். பாப்பானவர் இந்தேசத்தில் குருப்பட்டத்துக்குச் சுதேசிகளை உரியவர்களாக்கும் கல்விச்சாலைகளை ஸ்தாபிக்கவேண்டுமென்று வற்புறுத்தி எழுதிப் பிரசித்தப்படுத்திய 1893-ம் வருஷம் ஜூன்மாதம் 24-ம் உடைய திருபத்திரிகை சம்பந்தமாக, ஒரு தந்தி சமாசாரமனுப்பிச் சுதேசகத்தோலிக்கு சங்கத்தின் பெயரால் தங்களின் நன்றியறிதலுள்ள வந்தனங்களைச் செலுத்தினர். இந்த விஷயமாய்க்கூடிய மகாஜனக் கூட்டத்தில் சுதேச கத்தோலிக்குச் சங்கமொன்று ஸ்தாபிக்கவும், இச்சங்கத்தினது பத்திரிகையொன்று ஆரம்பித்து நடத்தவும் தீர்மானித்தனர். இவ்விஷயத்தில் தம்புசெட்டியார் அர்ச். பாப்புவின் ஸ்தானாபதியின் ஆலோசனையைக் கேட்டுத்தெரிந்து இச்சங்கத்தின் மூலகர்த்தாக்களுக்குத் தெரிவித்தனர். இதன்பயனாக தென்னாட்டுக்குச் சுதேச கத்தோலிக்குச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டு, அதன் தலைநகர் சென்னைப்பட்டணமாகவும், வெளிதேசங்களில் அதன் சேர்க்கையாயுள்ள கிளைச்சங்கங்களு முண்டாயின. இச்சங்கத்தை நடத்துந் தலைமையதிகாரம் மேற்றிராணிமார்களையும் குருக்களையும் பொருந்தினதாகவும், இதற்குக் காரியதரிசி மிஸ்டர் சாமிக்கண்ணுப்பிள்ளையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இச்சங்கம் நாளடைவில் விர்த்தியாகிக்கொண்டு வருகின்றது. பெங்களூரில் மாத்திரம் ஒரு கிளைச்சங்கம் இன்னு மேற்படவில்லை.

## இந்திய கத்தோலிக்கு ஞானமேய்ப்பர்கள் நியமனம்.

1887-ம் வருஷத்தில், அர்ச். பாப்பானவரின் ஸ்தானாபதியாக இந்துதேசத்திற் கனுப்பப்பட்ட மோன்சிஞ்ஞோர். அக்லியார்டி (Monseigneur Agliardi) என்பவரும், இந்துதேசத்திலுள்ள ஞானமேய்ப்பர்களாகிய மேற்றிராணிமார்களும், அதிசிரேஷ்டர்களும் இந்திய ஞானமேய்ப்பர் அதிகார எல்லைப் பிரிவைக்குறித்த திருபத்திரைப் பகிரங்கப்படுத்தப் பெங்களூரில்வந்து கூடினர். அவர்கள் பெங்களூரைவிட்டுப் போகுமுன்னர் தம்புசெட்டியாரின் முயற்சியால்,



காலஞ்சென்ற ஸ்ரீசாமராஜேந்திர உடையார் பஹதூர் மகாராஜா அவர்களைத் தரிசித்துச் சம்பாஷணை புரிந்தனர்.

முதல் ஸ்தானாபதியாகிய அக்லியார்டி ஆண்டவருக்குப்பின் மோன்சிஞ்ஞோர் அஜூதி யென்பவர் அவர் ஸ்தானத்திற்கு வந்தனர். இந்த அஜூதி யென்னும் ஸ்தானாபதிமூலமாய், மைசூர் மகாராஜாவுக்கு அர்ச். பாப்பானவர் நன்கொடையொன்று அனுப்பினர். அந்த ஸ்தானாபதி கல்குத்தாவிலிருந்து, தந்திமூலமாய்த் தம்புசெட்டியாருக்குச் செய்தியனுப்பி,

"பிரியதம்புசெட்டியாரே, நாம்பெங்களூரில் 3, 4, நாள்கள் மாத்திரந் தங்கியிருப்போம். பதின்மூன்றாஞ் சிங்காராயராகிய அர்ச். பாப்பானவரிடமிருந்து உங்கள் மகாராஜாவுக்கு ஒரு வெகுமதி கொண்டுவருகிறோமாகையால், நாம் மகாராஜாவைக் காணும்படிக்கான ஏற்பாடு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்"

எனத்தெரிவித்தனர். அவ்வெகுமதியை மகாராஜா அவர்கள் மகிழ்ச்சியோடு அங்கீகரித்து வந்தனமளித்தனர். அர்ச். பாப்பானவரின் பிரதிநிதியாக மோன்சிஞ்ஞோர் அஜூதிக்குப்பின் வந்த மோன்சிஞ்ஞோர் ஜாலெல்ஸ்கியென்பவர் 1896-ம் வருஷம் ஜனவரிமாதத்தில் பெங்களூருக்கு விஜயஞ்செய்தனர். இவரும் தம்புசெட்டியார் மூலமாக மைசூர் மகாராஜாவைச் சந்தித்து உரையாடினர்.

மிகவுஞ் சங்கைக்குரிய ஜாலெல்ஸ்கி ஆண்டவர் தென்னிலங்கையில் ஒரு கல்விச்சாலையை ஸ்தாபித்து, அக்கல்விச்சாலையில் ஞானசாஸ்திரத்தைச் சுதேசக்கிறிஸ்தவர்களுக்குப்புகட்டி, அவர்களைக் குருப்பட்டம் பெறுதற்குரியவர்களாக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். அங்கே படித்துத்தேர்ந்து பரீட்சைகொடுத்து வெற்றியடைந்த சிறுவர்கள், நாளடைவில்உரோமாபுரியில் வேதசாஸ்திரத்தையுணர்ந்து தேறியபின், இந்தியமேற்றிராணிமார்களாகவும் சிரேஷ்டர்களாகவும் பட்டம் பெறத்தக்கவர்களாவார்கள். இந்த மேலான ஏற்பாட்டைச் செய்த இம்முனிவருக்கு இந்து கத்தோலிக்குக் கிறிஸ்தவர்கள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்கள். இந்து கத்தோலிக்குக் கிறிஸ்தவர்களிற் சிலர் மேற்றிராணிகளாகப் பட்டம் பெற்றுப் பெருந்தொகையான சுதேசக் கிறிஸ்தவர்களிருக்கின்ற ஊர்களின் மேற்றிராசன ஞான அதிகாரத்தை வகித்திருக்கப் பார்க்க வேண்டுமென்பது தம்புசெட்டியாரின் வெகுநாள் கோரிக்கையாயிருந்தது. இந்திய மேற்றிராசன ஞான அதிகார ஏற்பாடாயின மூன்று வருஷங்களுக்குள், மலபார் டிஸ்டிரிக்ட் சுதேசியான சங்கைக்குரிய டாக்டர் டி. எம். மேக்கில் (T.M. Makil) என்பவர் மேற்றிராணிப்பட்டம் பெற்றனர். இவர் சென்னபட்டணம்வந்து

சில தினங்கள் தங்கியிருந்தபோது, தம்புசெட்டியார், தமது புத்திரர்களும் பந்துக்களும் அவரைப்போய்க் கண்டு பின்வருமாறு வாழ்த்துப்பத்திரம் ஒன்று வாசிக்கச் செய்தனர் :—

"தீபேஸ் தேச மேற்றிராணியாரும் சங்கணச்சேரி விகாரி அப்போஸ்தோலிக்குமாகிய மிகவுஞ் சங்கைக்குரிய டாக்டர் T. M. ஜலெஸ்கி அவர்கள் திவ்விய சமுகத்திற்கு.

ஆண்டவரே!

தென்னிந்தியா உத்தம ஜாதிக்கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களாகிய நாங்கள் இன்று மிக்கமரியாதையோடு தேவரீருடைய சந்நிதானத்தை யடுத்து, தேவரீர் மேற்றிராசன மேலான ஞான அதிகாரத்தைப் பெற்றதற்காக எங்கள் நல்லுணர்ச்சிகளையும் மங்களகரமான வாழ்த்துதலையுஞ் செலுத்துகிறோம். தேவரீர் இங்கு எங்கள் மத்தியில் வரும்படியாகவிருந்தது நினையாமல் நேர்ந்ததாகக் காணப்பட்டாலும், தேவரீரடைந்த இந்தமேலான ஞான அந்தஸ்தில் நம்முடைய தேசங்களில் ஒருவரை இதுவரையிலும் கிடையாத அருமையான காட்சியுடன் தரிசிக்கப் பாக்கியம் பெற்றதனால், இது தெய்வசித்தத்தாலாயினதென்று எண்ணுகிறோம். மூன்று வருஷங்களுக்கு முன்னர் திருச்சபையின் தலைவராயப் பிரகாசித்த பதின்மூன்றாம் சிங்கராயரென்னும் அர்ச். பாப்பானவர், புகழத்தக்க தீர்க்கயோசனைகொண்டு, இந்து தேசத்தின் கிறிஸ்துவேதப் பரம்புதலின் சரித்திரத்தையுற்றுணர்ந்து, சுதேசக் குருக்களையாளத்தக்க இந்திய சுதேசஞான மேய்ப்பர்களின் ஞான அதிகாரம் இத்தேசத்துக்கு அவசியமானதென்று தீர்மானித்தார். முன்னுக்கு இந்து தேசத்தில் கிறிஸ்துவச் சபை நிலை நின்று காப்பாற்றப்பட வேண்டியதென்றும் அவருடைய ஆசையும் விருப்பமுமே. தென்னிலங்கையில் சுதேசிகளைக் குருப்பட்டத்துக்குப் படிப்பிக்கத்தக்க கல்விசாஸ்திர மடத்தை ஸ்தாபிக்கவும், இந்தியாவிலுள்ள மேற்றிராணியார்கள் தேசத்தின் பற்பல இடங்களிலும் கல்விசாஸ்திர மடங்கள் ஏற்படுத்தி அவைகளில் பெருந்தொகையான சுதேசப்பிள்ளைகளைக் குருப்பட்டத்துக் குரியவர்களாக்கும்படி ஞானசாஸ்திரக் கல்வியை போதிக்கும்படி, அவர்களுக்கு ஊர்ஜிதமாய்ப் [illegible] செய்தது, எல்லாமேற்றிராணியார்களும் இவ்விஷயத்தில் கவனித்துச் சிரத்தை கொள்ளவேண்டுமென்னும் விருப்பத்துடன் அர்ச். பாப்பானவரால் எவ்வளவோ ஆவலோடு அந்த விருப்பம் எழுதப்பட்டதாகவிருக்கின்றதென்பதற்குச் சந்தேகமில்லை. அதைப்பற்றி நாங்கள் இங்குவிஸ்தரித்து வியாக்கியானிக்க அவசியமில்லை. அர்ச் பாப்பானவரின் கோரிக்கை பலிதமாகுங்காலம் ஆரம்பித்ததென்றறியச் சந்தோஷப்படுகிறோம். தேவரீரை இன்று இந்த மேலான அந்தஸ்தில் நாங்கள் காண்பதே அதற்கு அத்தாட்சியாயிருக்கிறதென்பதை நாங்கள் சொல்லவேண்டியதில்லை. ஆகையால் சொல்லக்கூடாத மனமகிழ்ச்சியின் உணர்வோடு தேவரீருடைய வருகையை எதிர்கொண்டு ஞானமேய்ப்பராகத் தேவரீரடைந்த மேலான ஞான அந்தஸ்திலுக்காகத் தேவரீரை மனப்பூர்வமாக நாங்கள் வாழ்த்துகிறோம். தேவரீரல்லாமல் இன்னுமிரண்டு சுதேசிகள் மேற்றிராணிகளாயினாரென்றறிய எங்களுடைய சந்தோஷமின்னும் மதிகரிக்கின்றது. அவர்கள் விஷயமாய் நாங்கள் கொண்டிருக்கும் அன்புள்ள உணர்ச்சிகளை அவர்களுக் கெங்கள் பேரால் தெரிவிக்கும்படி தேவரீரைப் பிரார்த்திக்கின்றோம். இதோ, இன்றே அர்ச். பாப்பானவருக்கு நாங்கள் ஒருகடிதமனுப்பி அதில் நம்முடைய விஷயமாய்



அவர் எடுத்துக்கொண்ட சிரத்தைக்காக வந்தனமளித்து, மூன்று இந்திய மேற்றிராணிமார்களைத் தந்ததற்காக நன்றியறிதலுள்ள வர்களாயிருக்கின்றோமென்று தெரிவித்திருக்கின்றோம். இந்தச் சம்பவம் இந்து தேசத்தின் கிறிஸ்து வேத சரித்திர விஷயங்களில் மிக்கப்பிரகாசமுற்றதொன்றாகவிளங்க ஆரம்பித்திருக்கின்றதாய் நாங்கள் எண்ணுகிறோம். தேவரீருடைய அசௌக்கியம் தேவரீரை இங்கு கொண்டுவந்த தென்பது விசனிக்கத் தக்கதானாலும், தேவரீரை எதிர்கொண்டு வரவழைத்துத் தரிசிக்கும் பாக்கியமான சந்தர்ப்பம் முதல் முதலாக இவ்வூரில் எங்களுக்கு வாய்த்த தென்பதை யுணர்ந்து பெருமை கொண்டு சந்தோஷிக்கிறோம். இங்குவந்தபின் தேவரீருக்குப் போதுமான சௌக்கியமுண்டான தென்றறிந்து திருப்தியடைவதுடன், முழுமையும் நல்ல சௌக்கியந்தரும்படி கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். கடைசியாய்த் தேவரீருக்குச் சரீரசுகமும் எல்லாஞானவரப்பிரசாதங்களும் நன்மைகளுமுண்டாகவும் தேவரீருக்குக் கொடுக்கப்பட்ட ஞான ஊழியத்தில் வெகுகாலம் நிலைநின்று இத்தேசத்தாருக்கு நன்மையளிக்கும்படிச்செய்யவும் கடவுள் கிருபை செய்யும்படி பிராத்திக்கின்றோம். இங்ஙனம்,

| | |
|---|---|
| சென்னப்பட்டணம், 189 மீ நவம்பர்மீ 29உ. | தேவரீருடைய கீழ்ப்படிதலுள்ள ஞானமக்களாகிய சென்னப்பட்டணத்திலுள்ள ஹிந்து உத்தம ஜாதிக்கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள். |

மேற் சொல்லிய மோஞ்செஞ்ஞோர் ஜலெஸ்கி ஆண்டவர், சுதேசக்குருக்கள் இந்தியாவில் பலப்படவேண்டுமென்றும், அதற்காகவே அர்ச். பாப்பானவர் தமது ஸ்தானாபதியாக இங்கு தம்மை அனுப்பினரென்றும், தாம் இந்தியாவுக்கு வந்த 1887-ம் வருஷ முதலிதுவரையில் விடாமுயற்சியோடு இப்பெரிய வேலையை நடத்தி வருவதாகவும், இந்து கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் தங்கள் முழுநம்பிக்கையுந்தந்து தங்கள் பிள்ளைகளைக் குருபட்டத்துக்குக் கல்விகற்கும்படி தாம் கண்டியிலேற்படுத்திய கல்விசாஸ்திர மடத்துக்கு அனுப்பிப் போதுமானவரையில் தமக்கொத்தாசையாயிருக்கவேண்டுமென்றும், 1894-ம் வருடம் மே மாதம் 5உ ஒரு கடிதம் எழுதி தம்புசெட்டியாருக்கு அனுப்பினர்.

அதே வருஷம் செப்டம்பர் மாதம் 15உ மேற் சொல்லிய ஜலெஸ்கி முனிவர் தம்பு செட்டியாருக்கு வேறொரு கடிதமெழுதினர். அதில் அர்ச். பாப்பானவரால் தென்னிலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட கல்விசாஸ்திர மடத்தின் கட்டட அஸ்திவார ஞாபகார்த்தமாக அர்ச். பாப்பானவரின் கட்டளையால் செய்யப்பட்ட பதக்கமொன்றை செட்டியாருக்கு அனுப்பியிருப்பதாகவும், மேற்படி கல்விச்சாலையைத் தென்னிலங்கையில் ஸ்தாபிக்கத் தீர்மானித்த காரணங்களையும் விவரமாய்த் தெரிவித்தனர்.

தேசபாஷைகளை நன்றாயுணர்ந்தவர்களாகவும் இந்துக்களின் கொள்கைகளையும் பிரியங்களையுந் தெரிந்து, வேதத்துக்கு

விருத்தமாகாத ஜாதியாசாரங்களுக்கொத்து நடந்து, இதுவிஷயங்களில் சமயா சமயத்திலுண்டாகும் சங்கடங்களைப் பக்குவமாய்ப் பரிகரிக்கவும் செய்யச் சுதேசக் குருக்களால் கூடியதுபோல் ஐரோப்பிய குருப்பிரசாதிகளுக்குச் சாத்தியமாகாததாகையால், இந்திய சுதேசக் குருக்களின் தொகையை அதிகப்படுத்தி அவர்களிலேயே ஞான மேய்ப்பர்களை ஏற்படுத்தி மேற்றிராசன ஞான அதிகாரத்தை நாளடைவில் வர்ஜிதப்படுத்தி வைப்பது இந்து கத்தோலிக்கு ஞானாதிகாரத்துக்குப் பலமான ஊன்றுகோலாகுமென்பது தம்புசெட்டியாருடைய அபிப்பிராயமாகும். இக்கருத்தைச் செட்டியார் மேற்படி முனிவருக்கு அடிக்கடி எழுதித் தெரிவித்து வந்தனர். அவரும் செட்டியாரின் அபிப்பிராயத்தைச் சரியென்றொத்துக்கொண்டு, மேற் சொல்லிய கடிதங்களையும் இன்னும் பல கடிதங்களையும் விரைந்து தம்பு செட்டியாருக்கனுப்பினர்.

## சுதேசக் கிறிஸ்துவர்களின் பாரம்பரைச் சொத்து பாத்தியதை விஷயம்.

ஆங்கில ஆட்சிக்கு நேரே உட்பட்ட இந்தியப் பிரதேசங்களிலுள்ள சுதேசக் கிறிஸ்துவர்கள் 1865-ம் வருஷத்திய 10-வது சட்டத்தின் நிபந்தனைக்குட்பட்டவர்களாயினும், சுதேசக் கத்தோலிக்குக் கிறிஸ்துவக் கூட்டத்தினர் பெரும்பாலோர் ஹிந்து சிவில் சட்ட முறைமையைத் தழுவினவர்களாய்த் தங்கள் ஜாதி குலாசாரங்களையும் சபையிற் பழகும் பழக்கங்களையும் விடாது ஆதரித்து வருபவர்களென்று அறிந்த மைசூர் தலைமைக் கமிஷனர் பவுரிங்கு துரை, மைசூர் ஞான ஆளுகையை அக்காலத்தில் நடத்தி வந்த ஷரபோனு மேற்றிராணியார் அவர்கள் மனுச் செய்தபிரகாரம், இந்திய துரைத்தனத்தாரை யேவி மேற்படி சட்டத்தின் விதிகளுக்கு மைசூர் சுதேசக் கிறிஸ்துவர்கள் உடன்படாதபடித் தப்பிவித்தனர். தம்பு செட்டியார் இவ்விஷயத்தில் மெத்தப்பிரயாசையோடு வாதிட்டு வந்தவராதலால், இவ்விஷயத்தைப் பற்றித் தர்க்கிக்கும்படிச் சென்னபட்டணத்தில் சுதேச கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களும் புரொடெஸ்டான்டு கிறிஸ்துவர்களும் ஒன்று சேர்ந்து, மிகவுஞ் சங்கைக்குரிய மேயர் ஆண்டவரின் அக்கிராசனாதிபத்தியத்தில் கூட்டங்கூடியபோது, தாம் ஒரு கடிதமெழுதியனுப்பினர். அக்கடிதத்தில் மைசூரிலுள்ள சுதேசக்கிறிஸ்துவர்கள் மேற்படி சட்டத்தின் விதிகளினின்று நீக்கப்பட்டனராகையால், அவர்களைப்போல் தென்னாட்டிலுள்ள சுதேசக்கிறிஸ்துவர்கள் பெரும்பாலோர் ஹிந்துகுலாசாரதருமங்களையும் வழக்கங்களையும் விடாது அநுசரித்து வருபவர்களாதலால்



அவர்களுடைய சொத்துபாத்தியதை விஷயத்திலுள்ள பூர்வீக அநுசரணையை மாற்றி 1865-ம் வருஷம் 10-வது சட்டத்தின் விதிகளைத் தழுவிய ஐரோப்பிய முறைமைக்குட்படுத்துவது சரியல்லவென்றும், ஒருவன் தனது மதக் கொள்கையை மாற்றினதினாலேயே அவன் புதிதாய்க் கைப்பற்றிய மார்க்கத்தை அநுசரிக்குமுன் தான் ஆசரித்துவந்த குலாசார நடவடிக்கைகளையும் மாற்றவேண்டுமென்பது அவசியமில்லையென்றும், மரியாதையுடன் நியாயங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டிக் கவர்ன்மெண்டாருக்கு மனுச்செய்துங்கொண்டால், அநுகூலமுண்டாகுமென்றுந் தெரிவித்ததோடு, இவ்விஷயத்துக்கு மூர்ஸ் இந்தியன் அப்பீல் 9-வது வால்யும், 243-245-ம் பக்கங்களில், அபிரகாம் வழக்கில் பிரிவி கவுன்ஸிலார் செய்த தீர்மானம் அநுகூலமாக விருக்கிறதென்றும், 1850-ம் வருஷத்திய 21-வது சட்டம் வெளிவந்தபோது அந்தச் சட்டத்தை மறுத்து ஹிந்து சுதேசக்கிறிஸ்துவர்கள் இந்தியகவர்ன்மெண்டாருக்குஒருமனுச்செய்துக்கொண்டு அவ்விண்ணப்பத்தின் முடிவில் "நாங்கள் யாதொரு விசேஷ நயமைப் பெறும்படி எதிர்பார்க்கவுமில்லை அல்லது கேட்கவுமில்லை. மதசம்பந்தமான விஷயங்களில் இங்கிலீஷ் துரைத்தனத்தார் பிரவேசிக்கிறதில்லை யென்னும் முறைமையை அநுபவத்தில் நடத்திக்காட்ட வேண்டுமென்பதே எங்களுடைய மனோபீஷ்டம். ஹிந்துவானாலும், மஹம்மதியனானாலும், கிறிஸ்துவனென்கிலும், ஆங்கில துரைத்தன ஆட்சியின் எந்தத் துறையிலும், எந்த நியாயஸ்தலத்திலும், எந்த உத்தியோகச் சாலையிலும் அவனவன் அநுசரித்த மதத்தைப்பற்றிப் பாரபட்சமாய் அல்லது கடினமாய் நடத்தப் பெற்றனனென்னும் முறைப்பாட்டிற்கு விடமுண்டாகாமல், ஒரேசீராய் எல்லா மதஸ்தரையும் நியாயப்படி நடத்தவேண்டுமென்பதே எங்களுடைய கோரிக்கையாகும்" என்றுவரைந்தனர் என்றுந்தெரிவித்தனர்.

தம்பு செட்டியார் நீதிபதியாயிருந்தபோது சுதேசக் கிறிஸ்துவர்களின் சுதந்தரங்களையும் சொத்து பாத்தியதையையும் பற்றிய இரண்டு முக்கியமான வியாச்சியங்களை விசாரித்துத் தீர்மானஞ் செய்தனர். இதுகள் பொதுவாய் எல்லோருடைய மனதைக் கவரச் செய்தன. முதலாவது ஹெலென் கொர்ட்ரூட் என்றழைக்கப்பட்ட உச்சியென்னும் பெண், ஹிந்து மதத்தைவிட்டுக் கிறிஸ்து வேதத்துக்குட்பட்டபின், தான் ஹிந்து மதத்தினளாயிருந்தபோது கல்யாணஞ் செய்துகொண்ட அப்பையா வென்னும் புருஷனின் தொந்தார்த்தத்தைநீக்கிக்கொள்ள வழக்கிட்டனள். பெண்சாதி மதத்தில் வேறுபட்டவளாயினும், தன்னுடன் தன்சம்ரட்சணையில் அவள் வாழ்ந்திருக்கத் தனக்கு ஆட்சேபமொன்றுமில்லையென்று புருஷன்

தெரிவித்தனன். தம்புசெட்டியார் வழக்கைத் தள்ளிவிட்டனர். செட்டியார்செய்த தீர்மானம், முதல், இரண்டாவது அப்பீல் கோர்ட்டுகளிலும் மஞ்சூராயினது. கிறிஸ்துவேதத்தைக் கைக்கொண்ட சுதேசிகளின் கல்யாணத்தை உடைத்து ரத்துசெய்ய 1866-வது வருஷத்திய 21-ம் சட்டத்தைப் போன்ற சட்டம் அக்காலத்தில் மைசூரில் ஜாரியில் இருக்கவில்லையாகையால், தம்புசெட்டியார் மைசூர் துரைத்தனத்தாரைத் தூண்டி இச்சட்டத்தை மைசூரில் ஜாரிக்குக்கொண்டுவரும்படிச் செய்ததல்லாது, இதேசந்தர்ப்பத்தில் 1850-ம் வருஷத்திய 21-வது சட்டத்தையும் மைசூரில் நடைபெறச் செய்யவேண்டுமென்றும், மனச்சுதந்தரமும் சொத்து பாத்தியதையும் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள சுதேசக் கிறிஸ்துவர்களுக்குக் கொடுத்திருக்க, சுதேசராஜாங்கத்தாக் குட்பட்ட அதேவகையான ஜனங்களுக்கு அதுகள் கொடாமலிருப்பது நியாயவிரோதமாகுமென்றும் வாதித்துவந்தனர். மைசூர் அரசாங்கத்தை மகாராஜாவின் சுய ஆளுகைக் கொப்புக்கொடுக்குமுன் இவ்விஷயம் பிரேரேபிக்கப்பட்டது. இந்திய துரைத்தனத்தார் மகாராஜா சுய அதிகாரத்தை வகித்தபின் இவ்விஷயத்தை யோசித்துப் பைசல் செய்யலாமென்று விட்டுவிட்டனர். தம்புசெட்டியார் மைசூர் சீப் கோர்ட்டுத் தலைமை நீதிபதியாயிருக்கிற காலத்தில், இதே விஷயத்தைப்பற்றிய வழக்கொன்று அவர்முன் அப்பீல் தாப்பில் கொண்டுவரப்பட்டது. இதில் தாசப்பன் வாதி, சிக்கம்மா பிரதிவாதியாக நின்றனர். (இவ்வழக்கின் தீர்மானம் மைசூர் லாரிபோர்ட் 17-ம் புத்தகம் 324-ம் பக்கத்திற் பிரசுரமாயிருக்கின்றது). தன்மதத்தை விட்டுக் கிறிஸ்துவேதத்துட்பட்ட ஒரு ஹிந்து தகப்பன், தனது பிள்ளைகளைத் தாயாரிடம் விடாமல் தன்னுடைய காப்பிலே வைத்திருக்கச் சுதந்தரமுள்ளவனோ என்னும் விஷயம் இவ்வழக்கில் வாதிக்கப்பட்டது. தலைமை நீதிபதியாகிய தம்பு செட்டியார், தாயைவிட தகப்பனுக்கே அதிக சுதந்தரமுண்டென்று அபிப்பிராயப்பட்டனர், மற்ற இரண்டு ஜட்ஜிகளும் தகப்பன் மதப்பிரஷ்டனானதால், ஹிந்து லாவின்படி அவனுக்குச் சுதந்தரமில்லையென்றும், தாயின் காப்பிலேயே அப்பிள்ளைகளிருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டனர். பெருங்கட்சியின் பேரில் இவ்விரண்டு ஜட்ஜிகள் கொண்ட அபிப்பிராயப்படிக்குத் தீர்மானஞ் சொல்லப்பட்டது. ஆனாலும், தம்பு செட்டியாரின் அபிப்பிராயமே சரியென்று ஹிந்து சட்டமுறைமைகளையும் வழக்கங்களையுந் திரட்டிச்செய்த புத்தகத்தின் கிரந்தகர்த்தாவான மிஸ்டர் மெயின்துரை யொப்புக்கொண்டு அதையே ஊர்ஜிதப்படுத்தினர். (மேற்படி புத்தகத்தின் 215, 271, 275, பக்கங்களில் வரைந்திருப்பதை வாசித்துக் காண்க). மிஸ்டர் மெயின்துரை அப்புத்தகத்தில்



"மைசூர் சமஸ்தானத்தில் 1850-ம் வருஷத்திய 21-வது சட்டம் ஜாரியிலில்லையாகையால், நீதியும் மனசாட்சியுமே சாட்டாக இவ்வித வழக்குகள் தீர்மானிக்கப்படவேண்டுமென்பது சீப் கோர்ட்செட்டத்தின் 11-வது பிரிவில் விதித்திருக்கின்றது. நீதிநெறிவழுவி ஞாயமற்றசெய்கைகளுக்குக்குற்றவாளியாயினொன்றும் ருஜுவில்லாமலிருக்க, மதபேதமே காரணமாக, ஒருவனைத் தன் பிள்ளைகளின் ஒற்றுரிமைக் குரித்தானவனல்லவென்பது, ஞாயத்துக் கொத்ததல்ல. இவ்விஷயம் ஜல்தியில் சட்டத்தினால் சீர்பெறச்செய்வது நலம்" என்று எழுதுகிறார்.

மிஸ்டர் மெயின் துரை 1901-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 29வ தம்புசெட்டியாருக்கு எழுதிய கடிதத்தில்

"கிறிஸ்துவனான தாசப்பன் வழக்கைப்பற்றி நான் எவ்வாறு அபிப்பிராயப்பட்டு என் புத்தகத்திலெழுதினேனென்று அறிய விரும்புவீர்கள் என்றெண்ணுகிறேன். நீர் செய்த தீர்மானம் மிகச் சரியானது; அதை எதிர்த்தெழுதிய தீர்மானம் சுத்த பிசகென்றே நான் சொல்லுவேன்" என்று வரைந்தனர்.

## பாப்பு சுவாமிகள் அளித்த ஜூபிலி பதக்கம்.

மாட்சிமை பெற்ற பதின்மூன்றும் சிங்கராயரென்னும் அர்ச். பாப்பானவர் 1892-ம் ஆண்டில் தம்புசெட்டியாரைப் Pro Ecclesia Pontifices என்னும் ஞானசங்கத்தினரில் ஒருவராக ஏற்றுக்கொண்டு, அதே வருஷத்தில் நடந்தேறிய தமது குருபட்டத்தின் ஐம்பதாம் வருஷத்திய ஜூபிலியின்போது, தமது திருஉருவந்தாங்கிய பதக்கம் (Medal) ஒன்று செட்டியாருக்கனுப்பினர். அதனையறிந்த திவான் சேஷாத்திரி ஐயர், செட்டியாரை வாழ்த்தி, அர்ச். பாப்பானவருடைய இந்த மேலான வெகுமதியை, மைசூர் ராஜ தர்பார் காலங்களில், தம்மேல் அணிந்துவரவேண்டுமென்பது மஹாராஜாவினுடைய விருப்பமெனத் தெரிவித்தனர்.

## மைசூர் மகாராஜா அவர்கள் சூட்டிய இராஜ தர்ம ப்ரவீணர் என்னும் பட்டம்.

1893-ம் வருஷம் அக்டோபர் மாதம் 17உயன்று தசராபண்டிகையின் தர்பார் நடக்கும்போது, ஸ்ரீசாமராஜேந்திர உடையார் பஹதூர் மஹாராஜா அவர்கள், தாம் சிங்காசனாதிபதியாயின தேதியின் ஞாபகார்த்தமாகத், தம்புசெட்டியாருக்குக் கில்லத்து என்னும் விலையுயர்ந்த காஷ்மீர்துஷால் முதலிய வெகுமதிகளோடு, ஐயாயிரம் ரூபாய் பெறுமான இரத்தினமாலை யொன்று தரித்து, இராஜ தர்ம ப்ரவீணர் என்னும் கௌரவப் பட்டத்தை யளித்தனர். சரி நீதிபதியாய் எல்லோராலும் புகழ்ப்பெற்ற செட்டியாருக்கு இப்பட்டந் தகுந்ததுமென்று உலகோர் மகிழ்ச்சியடைந்தார்கள்.

## விக்டோரியா சக்ரவர்த்தினியார் தந்த இந்திய ராஜ்சியத் தோழன் என்னும் C. I. E. பட்டம்.

மாட்சிமை தங்கிய இங்கிலாந்து தேச அரசியும், இந்திய சக்ரவர்த்தினியுமாகிய விக்டோரியா மாதாவின் ஜென்ம நாளின் கௌரவப்பட்டங்களடங்கிய 1895-ம் வருஷத்திய ஜாபிதாவில் தம்புசெட்டியாரின் பெயர் சேர்க்கப்பட்டது.

இந்தியராச்சியத் தோழன் என்று குறிக் கொள்ளத்தகும் C.I.E. என்னும் கௌரவப்பட்டத்தை விக்டோரியா சக்ரவர்த்தினியார் கிருபை கூர்ந்தளிக்கச் சிக்கமாயினரென்னும் சந்தோஷச் செய்தியை, அக்காலத்தில் மைசூர் ரெஸிடெண்டாகவிருந்த சர் வில்லியம் லீவார்னர் (Sir William Lee Warner) துரை, தாமே நேரில் வந்து செட்டியாருக்குத் தெரிவித்து, அகமகிழ்ந்து வாழ்த்தினார். இப்பட்டம் செட்டியார் பெற்றதற்காக அவருடைய நேசர்களான ஐரோப்பியர்களிலும் சுதேசிகளிலும் அநேகர் வாழ்த்தினார்கள். விசேஷமாய், ஸ்ரீ வாணிவிலாச மகாராணி ரீஜெண்ட் அவர்கள் தமது அந்தரங்க காரியதரிசியின் மூலமாக ஒரு நிருபம் அனுப்பினார். அதில்,

"மகாராணியார் அவர்கள் தாங்கள் பெற்ற இக்கௌரவத்துக்காகத் தங்களை மனம்பொருந்தி வாழ்த்தும் இச்சமயத்தில், தமது கௌன்ஸிலர்களில் ஒருவர் இந்தியசக்ரவர்த்தினியாரிடமிருந்து இந்த கௌரவத்தைப்பெற்றதற்காகவும் இந்த மைசூர் சமஸ்தானத்திலுள்ளோர் மாத்திரமல்ல, பிறவிடங்களிலுள்ளோர்களும் தங்களை யறிந்து மதிப்பதற்குமேலாக எல்லாக் கௌரவப்பட்டங்களின் ஊற்றாயிருக்கும் விக்டோரியா மாதாரசியின் செவிகளுக்கும் தங்கள் பிரபாவங்கள் எட்டும்படியாயிருந்ததென்றுணர்ந்து மிக்க பெருமை கொள்கிறார்கள். அன்றியும், மகாராணியார் தங்களைவேந்தர்கள் மீதுவைத்திருக்கும் நம்பிக்கை சரியானபடிக்கே வைக்கப்பட்டதென்பதையும் அந்த நம்பிக்கைக்கு முழுமையும் உரியவராகத் தாங்களிருக்கிறீர்களென்றும், உறுதியாய் தம்முடைய மனதிற் பதியவைத்திருக்கின்றார்கள்"

என்று வரைந்தனர்.

பெங்களூர் சுதேசக் கிறிஸ்தவச் சங்கத்தார் பின்வருமாறு ஓர் கடிதம் வரைந்தனுப்பினர்:—

"கனம் பொருந்திய ஐயா! சென்ற ஜூன் மாதம் 1உ யன்று கூடிய கூட்டத்தில், பெறுதற்கு மிக்க பாத்திரமான இந்திய ராச்சியத்தோழன் என்னும் உயர்ந்த கௌரவப்பட்டத்தை, இராஜ சக்கிரவர்த்தினியார் தங்களுக்களித்ததற் காகச் சமூகத்தவர்களின் சந்தோஷ வாழ்த்துதலைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படிச் சங்கத்தைச்சேர்ந்த யாவரும் ஒரேவாக்காய் தீர்மானித்தனர். இந்தமேலான பட்டத்தைத் தென்னிந்தியாவிலுள்ள சுதேசக் கிறிஸ்தவர்களில் முதன்முதலாகப் பெற்றது தாங்களே என்னும் விஷயம், இச்சங்கத்தினருக்குப் பெரிய பெருமையைத் தருகின்றது. ஆகையால் சுதேசக் கிறிஸ்தவக் கூட்டத்தின்



ஆபரணமாக விளங்கும் தங்களால் இக்கூட்டத்திற்கு வந்த பெருமைக்காக இச்சங்கத்தினர் கொள்ளும் நன்றியறிதலுள்ள உணர்ச்சியைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகின்றனர். அநேக வருஷங்கள் தாங்கள் பாக்கியமுள்ளவர்களாய் ஜீவித்துத் தங்களுக்கும் நமது கூட்டத்தாருக்கும் இன்னும் மேலான அநேக கௌரவங்களை வருவிக்க வேண்டுமென்பதே இச்சங்கத்தாரினது அளவிறந்த ஆசையும் பிரார்த்தனையுமாகும்.

15உ ஜூன் 1895. } தங்கள் மிக்க கீழ்ப்படிதலுள்ள ஊழியன்,
S. சாந்தப்பா, B.A.
பெ. சு. கி. சங்கத் காரியதரிசி."

மைசூர் சமஸ்தானத்தில் தம்புசெட்டியார் செய்த உத்தியோகத் தன்மையை மிக நுட்பத்தோடும் நிஷ்பட்சபாதமாகவும் உற்றுணர்ந்ததால், அதனைப்பற்றித் தன் மனதிற் பட்டதை ஒளியாமலும் மனதாரவெடுத்து வெளியிடத் தக்கவரான, திவான் இரங்காசார்லு அவர்களின் குமாரர் இராகவாசார்லு பின்வருமாறு எழுதினர்:—

செங்கல்பட்டைச் சேர்ந்த அத்தூர்,
எனது பிரியமுள்ள ஐயா, 4—6—1895.

காலஞ்சென்ற இவ்வூருக்கு வர்த்தமானங்கள் எட்டுவதற்கு அநேக நாள்கள் செல்கின்றன. தங்களுடைய விசேஷித்தப்பட்ட அரசாங்க ஊழியங்களை இராஜ சக்கிரவர்த்தினியார் தமது ஜென்மநாள் கொண்டாட்டத்தன்று மதித்துக் கௌரவப்படுத்தினமைக்காகச், சற்று காலதாமதமானாலும், மனப்பூர்வம் பற்றில் குறைவில்லாததான, எனது வாழ்த்துதலை ஓர் வரியெழுதித் தெரிவிக்கின்றேன். இப்போதளித்த இக்கௌரவப்பட்டம் நியாயமாக வெகுநாள் முன்னரே தங்களுடையதாக இருந்திருக்கவேண்டும், ஆனால் எவ்விடத்தவர்களும் ஒருதேச இராஜாங்கத்தில்முதன்மையாயிருக்கும் மந்திரியைத்தவிரமற்றெல்லா அதிகாரஸ்தர்களையும் நினையாமல் விட்டுவிடுகிற ஸ்வபாவத்தைக்கொண்டிருக்கிறார்கள். சுதேச அரசாங்க வேலைகளெல்லாம் ஓர் அதிகாரியால் மாத்திரம் நடத்தப்படவில்லையென்னும் உண்மையை உலகோர்க்கு இந்திய அமைச்சர் இப்போது வெளியிட்டனரென்பது அத்துரைத்தனத்தைப் பெருமைப்படுத்துகிறது. மைசூர் சமஸ்தானத்திற்குத் தாங்கள் செய்துவருகிற நன்மைக்காக மேலான வெகுமதியை இப்போதும் எப்போதும் பெறத்தாங்களே உரியர் எனக்காட்டினால்மாத்திரம் தங்கள் மனதைத் திருப்திப்படுத்தியதாகும். ஆகையால் இக் கௌரவப் பட்டத்தைப் பெற்ற தங்களைவிட அதிகமாயிதை யளித்தவர்களுக்குப் பெருமை உண்டாகியது. ஜனங்கள் வெளிதோற்றங்களைக்கொண்டு மதிக்கும் இயல்புடையவர்களாயிருக்கின்றார்கள். ஆகையால் தங்களுக்கேற்றவையுள்ள உத்தியோகப்பட்டங்களுடன் இதுவும் ஒன்றாகச் சேர்ந்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். நான் முகஸ்துதி செய்யுங் குணமுடையவனல்ல வாகையால், கௌரவம் பொருந்திய நம்பிக்கையுள்ள ஒரு பெரிய உத்தியோகஸ்தரைச் சுதேச அரசாங்கத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களினின்று கண்டு பிடிப்பது மிக அருமையென்று, வஞ்சனையின்றி வெளியிடத் துணிகிறேன். பெருந்தன்மையான குணமும் கல்வித்திறமும் சாமார்த்தியமுமுள்ள ஐரோப்பியர்களுடன் தங்களைப்போல் நேரிற்பழகி யனுபவ மடைந்தவர்களுக்கு மாத்திரமே, காலக்

கிரமத்தோடு அந்தந்த வேலையைச்செய்தல், விடாமுயற்சி கொண்டுழைத்தல்,
நெறியில் பிசகாதிருத்தல், நீதிசெலுத்தும் நுட்பமான புத்தியும் அறிவும்
பொருந்தியிருத்தல், எல்லாத்துக்கு மேலாக யோக்கியதாபட்சம், கடமை
செலுத்தும் ஊக்கமுதலிய நற்குணங்கள் படிந்திருத்தல் முதலிய லட்சணங்கள்
அமைந்திருக்கும். அப்பேர்ப்பட்ட ஒருவரையே தாங்கள் மதிக்கிறதுபோல்
நடுநிலைமையாய் யோசிக்கும் எல்லா ஜனங்களும் மெச்சுவார்கள். சிலரால்
அல்லது ஓர்கட்சியாரால்மாத்திரம் சிநேகிக்க அல்லது மதிக்கப்படுகிற இதர
உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள், ஆனால், தங்களுடைய விஷயத்திலோ,
ஒருவர்தப்பாமல்எல்லோரும் ஒரேவிதமான நேசமும் மரியாதையும் வைத்திருக்கி
றார்கள். அரசாங்க காரியங்களைத் திறமையோடு நடத்திவெற்றிபெறுவது, பாஷா
அலங்காரமுள்ள வியாசங்க ளெழுதவும் பிரசங்கங்கள்செய்யவுந்தக்க அநேக
உத்தியோகஸ்தர்கள் சேர்ந்திருப்பதால் அல்ல; இந்தியராஜப் பிரதிநிதிகள்
அல்லது ரெஸிடெண்ட்டுகள் சமஸ்தானத்தைப் பார்க்க விஜயஞ்செய்தபோது
அவர்கள் பார்த்து பிரமிக்கத்தக்க சிறப்பும் அலங்காரமுஞ்செய்து காட்டத்தக்க
வர்களாலுமல்ல; தமைய தாக்ஷண்யத் தூக்கும் பெருமைக்கு மிடங்கொடாமல்,
எப்போதும் ஒரு சீராய் துரைத்தனக் கடமைகளைத் தங்கள்சொந்தபொருப்பாய்
நேசித்து நிறைவேற்றிவரும் தங்களைப்போலொத்த சில பழய உத்தியோகஸ்தர்
களாலேயே என்பதை யான் துணிந்துரைப்பேன். மகாராஜா அவர்களின்
அகாலமரணத்தால் திவான் ஸ்தானத் தங்களைப்போன்ற சில உயர்ந்தஅதிகாரஸ்தர்
கள்மீதும் உண்மைக்குத்தாரமான பெரிய உத்தரவாதமுள்ள பொருப்பு சுமந்
திருக்கின்றது. நம்முடைய திருஷ்டி முழுவதும் இளைய மகாராஜாவின்மீது
செலுத்தவேண்டியவர்களாயிருக்கின்றோம். இவ்விளவரசருக்கு வயது வருந்
தனையும் மைசூர் அரசாங்கத்தின் உயர்வான நிலைமையையும், கீர்த்தியையும்
பாதுகாக்கும்படித் தங்கள் தேகவலிமையும் மனத்திடனையும் செலவழிக்க
வேண்டுமென்று தங்களைப் பிரார்த்திக்கின்றேன். இது மிக்க கவலைகொள்ளத்
தக்க காலம். இளவரசரின் கல்வியாகவும் மஹாராணியாரின் ஆலோசனைக்
கர்த்தராகவும் தாங்கள் வகித்திருக்கிற பதவியை அடைவது வேறொருவராலும்
கூடாத காரியம். அமைதியும் நற்குணமுமுடையவர்கள் தங்களுடைய சொந்த
மதிப்பையும் அருமையையும் தாங்களறியாதவர்களாயிருப்பதுண்டு. இச்சமஸ்
தான அதிகாரிகளில் முக்கியஸ்தரல்லாத ஒருவராகத் தங்களைத் தாங்கள்
பாவித்துக் கொள்ளக்கூடாதென்பதே என்னுடைய பரிபூரண விருப்பம்.
மைசூர் தேசத்தினது நடந்துவருகிற கொஞ்சகாலத்திய சரித்திரத்தை எழுத
நேரிடுமானால், இவ்வரசாங்கத்தில் தாங்கள் செய்த ஊழியங்களையும் நன்மை
களையும் விரித்துரைக்க அநேக ஏடுகள் நிரம்பும். தாங்கள் சீப் கோர்ட்டை
விட்டுப் போனதால் உண்டாயின நஷ்டத்தைப் பரிகரிக்கக் கூடாமையாயிருக்
கின்றது. மதராசில் முத்துசாமி ஐயரின் ஸ்தானத்தில் தகுதியான ஒருவரைக்
கொண்டு நிரப்பக்கூடாததாயினது போலவே, தங்கள் ஸ்தானத்தையும்
நிரப்பக்கூடாததாயிற்று. உயர்ந்த அதிகாரமுள்ள ஸ்தானங்களைப் பெற
அநேகர் முன்வருவார்கள், ஆனால் அதுகளுக்குத் தக்க யோக்கியதையுள்ள
வர்கள் கிடைப்பது அரிது. எனது மனப்பூர்வமான மரியாதையையும், தங்கள்
விசேஷதன்மையின்மீது யான் கொள்ளும் ஆச்சரியத்தையும் இன்னொருக்
கால் தங்களுக்கு உறுதிப்படுத்தி நிற்கும்,

தங்கள் உண்மையுள்ள,

**C. இராகவாசாரலு.**



# CHAPTER XVI.

## பதினாறும் அதிகாரம்.

அந்தியகால வர்த்தமானம்-நான்காவது புத்திரனின் திருமணம்-
நோய்-மரணம்-அனுதாபக்கடிதங்கள்-சாமகவிகள்-
குடும்பத்தின் தற்கால ஸ்திதி.

உத்தியோகத்தைவிட்டு நீங்கியபின் ஏழுவருஷகாலம் தம்பு
செட்டியார் ஜீவித்திருந்தனர். அவர் விருத்தாப்பிய தசையிலிருந்
தும் தமது காலத்தை விருதாவிற் செலவழித்தவரல்லர். மைசூர்
அரசாங்கம் நடைபெற்று வருவதை எப்போதுங் கவனித்து வரு
வார். அவ்வரசாங்கம் மேன்மேலுந் தழைத்தோங்கி வரவேண்டு
மென்பது அவருடைய அபேட்சையும் பிரார்த்தனையுமாகும்.
மைசூர் மகாராஜா அவர்களும் ஸ்ரீவாணிவிலாச சந்நிதான மகா
ராணியார் அவர்களும் செட்டியாருக்கு அடிக்கடி பேட்டிகொடுத்து
அவருடைய க்ஷேமயோகங்களைப்பற்றி அன்போடு விசாரித்து வந்
தார்கள். மைசூர் அரமனையில் விசேஷகாலங்களில் நடக்குந்
தர்பார்களுக்குத் தப்பாமல் செட்டியார் விஜயஞ்செய்து வந்தனர்.
மஹாராஜாவும் திவான் முதலிய மேலதிகாரிகளும் அரசாட்சியைப்
பற்றிய விஷயங்களில் செட்டியாருடைய ஆலோசனையை அடிக்
கடி பெற்றுவந்தார்கள். பொது நலங்களைப்பற்றிய விஷயங்களிலுந்
தமது அபிப்பிராயத்தை உலகோர்க்குத் தந்து உதவிபுரிந்து வந்த
னர். அபாரமான வேலைசெய்து சலியாமல் உழைக்குந் தன்மை
யுடைய செட்டியாருக்கு இம்மட்டிலேயே காலம் போகவில்லை.
ஒழிவானகாலத்தைப் பெரும்பாலும் ஞானமார்க்கத்தைப் புகட்டும்
புத்தகங்களை வாசிப்பதிற் செலவழித்துவந்தார். கடவுளின் விசேஷ
கிருபையால் செட்டியாரின் இல்லறவாழ்க்கை எப்போதும் அமரிக்
கையும் சமாதானமு முள்ளதாயிருந்தமையால், அது விஷயத்தில்
தாம் அதிக கவலைப்படும்படியா யிருந்ததில்லை. தமது காலத்திற்
குப்பின் அற்பவில்லங்களுந் தோன்றாமலிருக்கும்படி, தாம் சேக
ரித்த ஆஸ்தியைத் தமது பத்தினிக்கும், புத்திரர் புதல்வியர்களுக்கும்,
அவரவர்கள் தராதரப்படிப் பகிர்ந்து, அவரவர்கள் பாகம் அவரவர்
கள் பேரிலேயே யிருக்கும்படியான ஏற்பாட்டை ஏற்கனவே
செய்து வைத்தனர். அவருடைய நான்கு புத்திரிகளுக்கும் புத்திரர்
நால்வரில் முதல் மூவருக்கும் முன்னரே விவாகஞ்செய்து வைத்த
னர். தம்புசெட்டியென்னும் பெயருடைய கனிஷ்டனாகிய நான்கா
வது புத்திரன், இங்கிலீஷ் கல்வியில் B.A. பட்டம்பெற்று, இராஜாங்

கத்தில் தகுந்த உத்தியோகம் பெறுமளவும் விவாகத்திற் கிசைவதில்லையென்று தீர்மானித்திருந்ததால் இச்சிறுவன் திருமணம் நிறைவேறத் தாமதித்தது. இவனது விவாகத்தைத் தமது ஜீவியகாலத்திலேயே நிறைவேற்றி மகிழ்வுறவேண்டுமென்பது செட்டியாருக்கிருந்தவோர் கவலை. சிறுவன் கொண்ட எண்ணப்படியே B. A. பரீட்சையிற்றேறியபின், 1903-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், மஹாராஜா அவர்கள் கருணைகூர்ந்து, தமது அரசாங்கத்தில் அஸிஸ்டெண்ட் கமிஷனர் (Dy. Collector) உத்தியோகத்தைப் பரிபாலித்தனர். இவன் இவ்வுத்தியோகத்தைப் பெற்றபின், மணஞ்செய்துகொள்ள இசைந்திருப்பதை யறிந்து தாய் தந்தையர், தக்கதோர் பெண்ணைத்தேடி யமைத்து, 1907-ம் வருஷம் மே மாதம் 10 தேதி விவாகத்தைப் பெங்களூரில் மிகச்சிறப்பாக நிறைவேற்றினர். இவ்விவாகத்துக்குரிய காரியங்களைத் திட்டப்படுத்த ஆரம்பித்தபோதே, செட்டியாருக்குத் தேக அசௌக்கிய முண்டாகி, அவரது இடது கையில் ஒரு சிறிய பருவு தோன்றிற்று. பருவு சிறியதேயாயினும் புடைகொண்டு, தக்க சிகிச்சைசெய்தும் ஆறுமல், இரண்டுமாதகாலம் படுக்கையிற்றள்ளிவிட்டது. பருவின் உபத்திரவத்துடன் ஜ்வரமும் விடாமலிருந்து வந்தது. இந்நோயினால் செட்டியார்பட்ட வருத்தம் பெரிதேயாயினும், அதை மிக்க பொறுமையோடும் நல்மனதோடுஞ் சகித்து, ஓயாது தமக்கென்றும் புண்ணியத்தை நாடிக் கடவுளின் திருச்சித்தத்துக்கமைந்து, அவரது திருச்சமுகத்திற்சேரும் நாளுக்கெதிர்பார்த்திருந்தனர். நோய்க்கு சிகிச்சைசெய்த டாக்டரும் மற்றவர்களும் நோய் ஆபத்துள்ளதல்லவென்றும் சௌக்கியமாகுமென்றும் எவ்வளவு தைரியஞ்சொன்னாலும், செட்டியார் அவர்கள் சொற்களில் நம்பிக்கைவையாமல், தமது அந்தியகாலஞ் சமீபித்திருக்கிறதென்று அறிந்து, அதற்குச் சித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிறதாக விடாமல் சொல்லிக்கொண்டு வந்தனர். தமது கனிஷ்ட புத்திரன் கலியாணத்துக்கு வெளியூர்களிலிருந்து வந்த திரண்ட பந்து மித்திரர்கள் சுபகாரியத்தை முன்னிட்டு வந்தவர்களாயினும், அவர்கள் கடைசிவிசையாகத் தம்மைப்பார்த்துப் போகும்படியான சந்தர்ப்பம் இக்கலியாணம் தானாயிற்றென்றுஞ் சொல்லினர். அல்லாமலும், தமது ஆத்தும காரியத்திற் சிந்தைவைத்து, அடிக்கடி தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பெற்றுவந்தனர். செட்டியார் மனதிற்றோன்றியபடியே, கட்டி ஆறுமலும், ஜ்வரம் நீங்காமலுமிருந்து, நாளுக்குநாள் தேகசக்திகுறைந்து மெலிவடைந்தார். தேகம் க்ஷீணித்துவந்தபோதும், அவருடைய புத்திமாறுமல் கடைசிவரையில் நல்ல நினைவோடிருக்கக் கடவுள் சித்தமாயிற்று. தாம் மரிக்கப்போகும் நாளைக்கு முந்தினநாள், தமது ஆத்தும குரு



வாகிய சங்கைக்குரிய சேர்வாந்தோம் ஸ்வாமியாரை வரவழைத்துப் பாபோச்சாரணஞ் செய்து, திவ்ய சற்பிரசாதமருந்தி, அவஸ்தைப் பூசுதலும் பெற்றனர். அன்றையதினம் தமதருமைப்பெண்டீர், பிள்ளைகள், பேரர், பேத்திமார் முதலியோரை ஒவ்வொருவராய்த் தமதருகிலழைத்து, அவரவர்களுக்குச் சொல்லவேண்டிய புத்திமதிகளைச் சொல்லி யாசீர்வாத மளித்தனர். 1907-ம் வருஷம் ஜூன் மாதம் 19 தேதி புதவார முழுவதும், மாறுவல்லதை யென்பதற்பமுமின்றித், தம்மைப்பார்க்கவந்த குருக்களிடத்தும் மற்றவர்களிடத்தும் தெளிவாய் உரையாடிக்கொண்டிருந்தனர். அன்றுமாலை ஏழுமணிக்கு மைசூர் மேற்றிராசன ஞானமேய்ப்பராகிய மிகவுஞ் சங்கைக்குரிய டாக்டர் பாலே(Dr.A. Basle) ஆண்டவரும், பெங்களூர் அர்ச். சவேரியார் ஆலய விசாரணைக்குருவாகிய சங்கைக்குரிய சேர்வாந்தோம் (Rev. Father Servanton) ஸ்வாமியாருஞ் செட்டியாரைப்பார்க்க வந்தனர். மேற்றிராணியாருடைய ஆசீர்வாதத்தைப்பெற்று அவருக்கு விடைகொடுத்தனுப்பும்போது, சங். சேர்வாந்தோம் ஸ்வாமியாரைப் போகவிடாமல் தமதருகிலிருக்கும்படி செட்டியார் கேட்டுகொண்டனர். அவர் கோரியபடியே ஸ்வாமியார் அவர் படுத்திருந்த விடத்துக் கருகாமையிலுள்ள ஓர் அறையிற் காத்திருந்தனர். இராத்திரி $11\frac{1}{2}$-மணி சுமாருக்கு ஸ்வாமியாரைத் தம்மிடம் அதிசீக்கிரம் வரும்படிச்சொல்லியனுப்பினர். குருவானவர் அவரிடமணுகி என்னவேண்டுமென்று கேட்கத் தமது கைவிரல் ஒன்றைக் காட்டி, இன்னும் ஓர் நிமிஷத்தில் என்கர்த்தாவிடத்தில் நான்போய்ச் சேர்வேன், உடனே எனக்குமுடைய கடைசி ஆசியைத் தந்தருள வேண்டும் என்று ஆவலோடுரைத்தார். ஸ்வாமியார் அப்படியே யாகட்டுமென்று ஆசீர்வதித்த அந்த நிமிஷத்திலேயே, தமது பூத உடம்பை நீத்துப் புகழுடம்பை நிலைநாட்டி, 1907-ம் வருஷம் ஜூன் மாதம் 19 தேதி புதவாரம் மாலை $11\frac{1}{2}$-மணிக்குப் பரலோகப்பதவி யடைந்தனர்.

கணநேரமும் பிரியாமல் கண்மணிபோல் காத்துவந்த காதலரை யிழந்தேனே! மலருமணமும்போல மருவியிருந்த மன்னவான் மறைந்தாரே! பொன்காய்த்த மரம்போலப் பூஷணாபரணங்களைப் பூட்டிப் பூரித்துப் புளகாங்கிதங்கொண்ட புருஷன் போய்விட்டாரே! ஐயோ பர்த்தாவை யிழந்த பாவியானேனே! என்று பத்தினி பதறியழுதனள்; பெற்று வளர்த்துப் பெருஞ்சீருந்தந்து பெருமைப்படுத்திய பிதாவைப் பிரிந்தோமே என்று பிள்ளைகள் பிரலாபித்தார்கள்; பந்துக்களெல்லாம் எங்கள் பாக்கியம் போய்விட்டதென்று பரிதபித்தார்கள்; உற்றாரெல்லாம் எங்கள் ஊன்றுகோல் போய்விட்டதென்று

உருகினார்கள்; சிநேகிதர்களெல்லாம் எங்கள் செல்வம் போய்விட்டதென்று நினைத்தார்கள்; ஏழைகளெல்லாம் எங்கள் இரக்ஷகர் போய்விட்டாரென்று ஏங்கினார்கள்; இப்படியே வீட்டிலும் காட்டிலுமுள்ளோர்கள் விசனத்திலுள் மூழ்கினார்கள்.

மறுநாள் பொழுதுவிடியுமுன்னமே, இம்மகானது மரணத்தையறிந்த பெங்களூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள ஜனங்கள் கும்பல் கும்பலாய் வரத்துவக்கினார்கள். காலைமுதல் மாலை 5-மணி வரையில் வந்து பிரேதத்தைத் தரிசித்த ஜனங்களின் தொகை எண்ணமுடியாது. வருவாரும் போவாருமாயிருந்த ஜனங்களின் திரண்ட கூட்டம் தெருக்களில் அடர்ந்திருக்கக் கண்டோர், இதென்ன இன்று ஓர் திருநாள் போலிருக்கிறதென்று நினைத்துப் பிரமைகொண்டார்கள். மாலை நாலுமணிக்குமேல் ஜனக்கூட்டத்தின் தொகை ஆயிரமாயிரமாய் அதிகரித்தது. பிரிட்டிஷ் ரெஸிடெண்டுமுதல் ஆங்கில அரசாட்சியில் பெரிய அதிகார உத்தியோகங்கள் வகித்த ஐரோப்பிய துரைமார்களும், மைசூர் அரசாட்சியைச்சேர்ந்த சுதேச அதிகாரிகளும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும், பாரியவர்த்தகர்களும், சீமான்களும், ஏனையோரும் வந்து நிறைந்தார்கள். சுமார் 5½-மணிக்கு அதியுன்னதமாய் புஷ்பங்களால் அலங்கரித்த பல்லக்கின்மீது செட்டியாரின் சடலத்தை யேற்றி, அதன் முன்பு இருபுறத்திலும் கத்தோலிக்குக் குருப்பிரசாதிகள் சுமார் 50 பேர் வரையில் அணிவகுத்து நின்று, தங்கள் கரத்தில் மெழுகுதிரிகளையேந்தி, வேதசங்கீதங்களைப் பாடிக்கொண்டும், வந்த ஜனங்களெல்லோரும் புடைசூழ்ந்து பல்லக்கைப் பின்பற்றித் தொடர்ந்தும் வந்தனர். ரக்பி ஹால் (Rugby Hall) என்னும் மாளிகை முதல் அர்ச். சவேரியார் கோவில் மட்டுமிருந்த ஜன நெருக்கஞ் சொல்லிமுடியாது. கோவில் மதிற்சுவர்களின்மீதும், கோபுரத்தின்மீதும், தெருச்சாலை மரங்களின் மீதும் அநேகர் ஏறிநின்று பார்த்தார்கள். பல்லக்கு கோவில் வெளிவாசல் கிட்டியபோது, மிகவுஞ் சங்கைக்குரிய டாக்டர் பாலே (Dr. A. Basle) என்னும் மைசூர் உதவி மேற்றிராணியாரண்டவர் எதிர்கொண்டுவந்து, பல்லக்கின்முன் நின்ற மற்ற குருப்பிரசாதிகளின் வரிசையில் சேர்ந்து, கோவில்மட்டுஞ் சென்றனர். பல்லக்கை இறக்கி, அதன்மீதிருந்த சரீரத்தைத் தேவாலயத்தின் நடுபீடத்தின்முன் அழகாய்ச் செய்யப்பட்டிருந்த பெட்டியில் வைத்தனர். அப்போது மேற்றிராணியாரும் மற்ற குருப்பிரசாதிகளும் மிசரெரே மேயி தேயுஸ் (Miserare Mei Deus) என்னும் வேதகீதங்களைப் பாடியபின், பிரேதம் மேற்றிராணியாரால் மந்திரிக்கப்பட்டுக் கோவிலின் வலதுபுறச்சாலையில், இரக்ஷகரது திரு இருதயசொரூபம்



ஸ்தாபித்துள்ள விடத்தருகில், கொண்டுபோகப்பட்டது. அங்கு தயார்செய்திருந்த கல்லறையில் சரீரத்தை அடக்குமுன், தேவாலயத்தின் விசாரணைக்குருவாகிய சங்கைக்குரிய சொர்வாந்தோம் ஸ்வாமியார் இத்துக்க சம்பவத்தைப்பற்றிய வியாசமொன்று பின்வருமாறு புரிந்தனர்:—

“மரித்த தம்புசெட்டியாரின் பிரபாவங்களைப் பற்றியும் அவருடைய நற்குண நற்செய்கைகளைப் பற்றியும் இங்கு விஸ்தரித்துரைக்கப் போதுமான சமயமில்லை. அவைகள் இங்கு வந்திருக்கிற எல்லோருக்குந் தெரிந்தேயிருக்கின்றன. இப்பூலோகத்தில் தமது உத்தியோக வாழ்க்கையில் தம்முடைய எஜமான்களாகிய ஆங்கில அதிகாரிகளுக்கும் மைசூர் அரசருக்கும் எவ்வளவு உண்மையோடும் விஸ்வாசத்தோடும் ஊழியஞ்செய்து, அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு, அதிசீக்கிரத்தில் உயர்வும் உத்தரவாதமும் பொருந்திய உத்தியோகங்களைப் பெற்று, மைசூர் சமஸ்தானத்தின் தலைமை யதிகாரியானாரோ, அது போலவே தமது பரலோக எஜமானருக்கும் ஊழியஞ்செய்து, யாவரும் பின்பற்றத்தக்க உதாரண நடையுள்ள கிறிஸ்தவனாய் ஜீவித்தார். ‘விஸ்வாசமுள்ள நல்ல ஊழியனே உன் வேலைகளை நீ மிக நன்று செய்தாய்’ என்று புத்திமானான வோர் உக்கிராணக்காரனுக்குச் சொல்லியதாக வேதாகமத்திற் கூறிய சொற்களை மரித்த இந்த நமதரிய நேசருக்குஞ் சொல்லலாம். இவர் ஏழைகளுக்கும், கோவில்களுக்கும், திருச்சபைக்குஞ் செய்த தருமங்கள் எல்லோருக்குந் தெரிந்திருப்பதால், அவைகளைப்பற்றி நான் ஒன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. கடைசியாக ஓர் வார்த்தை உங்களுக்குச் சொல்லுவேன், அதாவது, நீங்களும் தம்புசெட்டியாரைப்போல் ஜீவித்து, இப்பூலோகத்தை விட்டுப் பிரியுஞ் சமயத்தில் அவரைப்போல் அர்ச்சியசிஷ்டவர்களுக்குரிய அமரிக்கையான மரணத்தையடையும்படிப் பிரயாசைப்படுவீர்களாக!”

என்று சொல்லி ஸ்வாமியார் தமது வியாசத்தை முடித்தனர்.

அதன்பின்பு மைசூர் தீவான் ஆபீஸ் அண்டர் செக்ரிடெரி (Uuder Secretary) யாகிய மிஸ்டர் டிசோஸா என்பவரும், மரித்த கனவான் தமது உத்தியோகவாழ்க்கையில் அடைந்த வெற்றியையும் அவருடைய அதிசயிக்கத்தக்க குணாதிசயங்களையும்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்துகூறி, இப்பேர்ப்பட்ட ஒருவரை இனிக்காண்பது அரிதாகுமென்றும், அவர் பிரிவால் இச்சமஸ்தானத்துக்கும் இந்திய கத்தோலிக்குக் கூட்டத்துக்கும் பெரிய நஷ்டமுண்டாயினதென்றும், எல்லோரும் இத்துக்க சம்பவத்தை நினைத்து வருந்தி அநுதாபப்பட வேண்டியதாயிருக்கின்றதென்றுங் கூறினார்; இது நடந்தபின் பிரேதம் கல்லறைக்குள் அடக்கப்பட்டது.

தம்புசெட்டியாரே! தாங்கள் இந்திய கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களில் முதன்மையான பிரதாபத்தைக்கொண்டு நன்னடையில் வர்த்தித்து வந்ததின் பயனாகப், பெங்களூர் சேனாதலமாகிய இவ்வூர்

மத்தியிலுள்ள அர்ச். சவேரியார் ஆலயத்தில், திரு இருதய
ஆண்டவரின் காவலில், தொன்றுதொட்டுத் தொழுதைப்புத் தாங்
கள் தெரிந்துகொண்ட அந்த விடமே, தங்களது மேனியைக்கொண்ட
கல்லறையாய் நிற்கப் பாக்கியம் பெற்றீர் !!! இந்தப் பாக்கியம்
யாருக்குக் கிடைக்கும்? ஓ கல்லறையே! தெய்வபக்தி நிறைந்த
கிறிஸ்துவப்பிரபுவைத், தேர்ந்த கல்விமானை, மன்னர்களும், பிரபுக்
களும், வேத வேறியரும், வித்தியாப்பிரகரு மதித்துப் புகழ்ந்த மதி
யூகியை, தேசவிர்த்திக்காகப் பாடுபட்ட தேசாபிமானியை, எந்த
ஜாதியாராலும் அன்போடு நேசிக்கவும் மதிக்கவும் பட்ட விக்கிரகத்
தைப், பொதுநன்மைகள் பலபுரிந்த புண்ணியவானைத், தன் துயரை
ப்போல் மன்னுயிரை நேசித்த மகாநுபாவனைச், சொல்மொழி
தவறாத ஆரம்பரனைப், பரோபகாரச் சிந்தையுடைய பாக்கியவானைப்,
பிறர்மனை நோக்காத பேரறிவாளனைத், தன்னையடைந்தாரைக் காக்
கும் நயாநிதியை, அன்பு, இரக்கம், தயை, தாட்சண்ணியம்,
பொறை, நிறை, வாய்மை, தூய்மை முதலிய நற்குணங்களை யாபரண
மாகக் கொண்ட புண்ணியாலங்கார புருஷனை, உன்னுள் அடக்கிக்
கொண்டனையே! உனக்கு வாய்த்த அதிர்ஷ்டத்தைப் புகழுவோ ?
அல்லது இப்பேர்ப்பட்ட விலைமதிக்கப்படாத இரத்தினத்தைக் கவர்
ந்துகொண்ட உன் கொடூரச்செய்கையை நிந்திக்க இகழுவோ ? இவ்
வுத்தம புருஷனின் சரீரத்தை நீ மண்ணால் மறைத்திடினும், உலகெ
லாங் கொண்டாடும் இவரது சீரை மறைக்க உன்னாலாமோ? இல்லை,
இல்லை, தம்புசெட்டியார் மரிக்கவில்லை; எக்காலத்தும் எல்லோராலும்
புகழத்தக்கவிதமாய் அவர்களின் இருதயங்களில் தங்கி ஜீவந்தராகவே
யிருப்பாரென்பது உண்மையென்று நீ அறிந்துகொள்வாயாக.

மைசூர் மகாராஜா அவர்கள் தம்புசெட்டியாரின் மரணச்செய்தி
யை யறிந்தவுடனே அபூர்வ விளம்பரம் ஒன்று பிரசுரஞ் செய்வித்து,
அதில் தாம் இச்செய்தியை மிக்கதுக்கத்துடனறிந்ததாகத் தெரி
வித்து, மைசூர் நகரிலும் பெங்களூரிலுமுள்ள எல்லா கோர்ட்டு
கச்சேரிகளும், உத்தியோக சாலைகளும், (Public Offices) கல்விச்
சாலைகளும், அந்தினமுழுவதும் தம்புசெட்டியாரின் மரண ஞாப
கார்த்த மரியாதைக்காக மூடப்படவேண்டுமென்று ஆஞ்ஞாபித்த
னர். இவ்வுத்தரவு பிறக்குமுன்னமே, காலை 11-மணிக்குச், சீப்
கோர்ட்டு ஜட்ஜிகள் தங்கள் நியாயாசனத்தின்மீது வீற்றிருந்தவுடன்,
மிஸ்டர் சீனிவாசய்யங்காரென்னும் நியாயவாதி (Advocate) செட்
டியார் காலமாயின செய்தியை ஜட்ஜிகளுக்குத் தெரிவித்து, அவர்
நீதி யிலாகாவில் அநேகவருஷங்கள் உத்தியோகஞ்செய்து அடைந்த
மேலான கீர்த்தியையும், அவரது உத்தம குணாதிசயங்களையும்



பற்றி விஸ்தரித்து ஸ்லாகித்துப்பேசி, அக்கோர்ட்டின் தலைமை
ஜட்ஜாகவிருந்து பேர்பெற்ற இக்கனவானைக் கவுரவிக்கும் அடையா
ளமாக இன்று கோர்ட்டைப் பந்திப்பது சரியென்று பிரேரேபித்தனர்.
அவ்வாறே ஜட்ஜிகள் சம்மதித்துச் செய்தனர். மேலும் ஆங்கில
ராஜாங்கப் பிரதிநிதியாகிய மைசூர் ரெஸிடெண்டவர்களின்
மாளிகை மீதுள்ள பிரிட்டிஷ் ராஜாங்கக்கொடிமரம் அன்றும்
மறுநாளும் தாழ்த்தப்பட்டிருந்தது. இந்த மரியாதை இச்சமஸ்தா
னத்தில் யாரும் இதுவரையில் பெற்றதில்லையாகையால், தம்புசெட்டி
யாருக் கிவ்விசேஷ கவுரவங் கிடைத்ததற்காக ஊரிலுள்ளவர்கள்
ஆச்சரியமுற்றார்கள்.

செட்டியார் மரணமடைந்த செய்தியைக்கேட்டு வருந்தி அவ
ரது குடும்பத்தாருக்கு நேர்ந்த துக்க சம்பவத்திற்காகத் தங்கள் அநுதா
பத்தைத் தெரிவித்தனுப்பிய தந்தி செய்திகளுக்கும் கடிதங்களுக்குங்
கணக்கில்லை. மைசூர் மகாராஜா அவர்கள் காரியதரிசியிடமிருந்து
செட்டியாரின் ஜேஷ்ட குமாரருக்கு வந்த தந்தி செய்தியில்,

"மகாராஜா அவர்களும் அவர் அன்னையார் வாணிவிலாச சந்நிதான
மகாராணியவர்களும், மிகவு மதிக்கப்பெற்ற தங்கள் இனிய நேசரும் மைசூர்
இராஜாங்கத்தில் அரிதான கீர்த்தியோடும் விஸ்வாசத்தோடும் ஊழியம் புரிந்த
வருமாகிய உமது பிதாவின் மரணச்செய்தியை யறிந்து மிதமற்ற சஞ்சலத்தில்
மூழ்கினார்கள்;"

என்று தெரிவித்தனர்.

வாணிவிலாச சந்நிதான மகாராணியார் அவர்களின் சகோதரர்
காந்தராஜ் அரசும், மகாராஜா அவர்களின் மாதுலர் பசப்பாஜி அரசும்,
அரண்மனையைச்சேர்ந்த இதர அரசமக்களும், தங்கள் அநுதாபங்
களைத்தெரிவித்துத் தந்தி செய்திகளும் கடிதங்களும் அனுப்பினார்
கள். இப்படியே, இந்தியாவின் எப்பக்கத்திலுள்ள ஊர்களிலிருந்தும்
இங்கிலாந்து முதலிய அந்நியதேசங்களிலிருந்தும் அரசாங்கத்தைச்
சேர்ந்த பெரிய அதிகாரிகளாலும், பிரபுக்களாலும், பொதுஜனச் சங்
கத்தார்களாலும் அனுப்பப்பட்ட அநுதாபக்கடிதங்களில், செட்டியா
ரின் நற்குண நற்செய்கைகளைப்பற்றியும், அவரிடத்திற் பொருந்திய
கல்வி புத்தி சாமார்த்தியத்தைப்பற்றியும், கொண்ட அவரவர்களின்
உணர்ச்சியைப் பற்பலவிதமாய் மிக்க உருக்கத்தோடு வரைந்தனர்.
அவைகளை யெல்லாம் இங்கெழுதுவோமாகில், இப்புத்தகம் மிக விரி

வாகுமென்றஞ்சி, அவைகளில் முக்கியமான சிலதுகளை மாத்திரம் மொழிபெயர்த்து இதனடியிற் குறிக்கின்றோம் :—

From His Eminence Cardinal ANTONIO AGLIARDI,

*Formerly Papal Delegate, in India, now one of the Cardinals with His Holiness the Pope Pius X. in the Vatican, Rome—*

முன் அர்ச். பாப்பானவரிடஸ்தானாபதியாய் இந்தியதேசத்துக்கு அனுப்பப்பட்டவரும், இப்போது உரோமாபுரி வத்திக்கானில் அர்ச். பாப்புவின் ஸ்திருலாக விருக்கும் மிகவுமேன்மைதங்கிய அந்தோனியோ அக்லியார்டி முனிவரிடமிருந்து வந்த

கடிதம் :—

“ தங்கள் இனிய பிதாவின் மரணச்செய்தியை யறிந்து அதிக சஞ்சலமடைந்தோம். தங்கள் குடும்பத்தினருக்கு நேர்ந்த பெரிய நஷ்டத்துக்காக மிகவும் வருந்துகிறோம். அர்ச். பாப்பானவரும் இத்துக்கசெய்தியை யறிந்து விசனமுற்றார். தமது அனுதாபமுள்ள உணர்ச்சிகளைத் தெரிவித்து உங்களெல்லோரையும் ஆசீர்வதிக்கின்றார். எமது ஆசீர்வாதங்களையும் உங்களெல்லோருக்கும் அளிக்கிறோம்.”

---

சென்னை அதிமேற்றிராணியார் மிகவுஞ் சங்கைக்குரிய ஜோசெப் கால்கன் (Dr. Joseph Colgan) ஆண்டவரிடமிருந்து வந்த நிருபம் :—

“ உம்முடைய நல்ல தந்தையின் மரணச்செய்தியறிந்து நாம் மிக்க சஞ்சலமடைந்தோம். அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பூசைசெய்து ஒப்புக்கொடுப்போம். எம்முடைய உருக்கமுள்ள அநுதாப உணர்ச்சிகளை துக்கத்தில் மூழ்கியிருக்கும் உம்முடைய குடும்பத்தார் யாவருக்கும் தெரிவிக்கக் கோருகிறோம்.”

---

புதுவை அதிமேற்றிராணியார் மிகவும் சங்கைக்குரிய A. காந்தி (Dr. A. Gandy.) ஆண்டவரிடமிருந்து வந்த கடிதம் :—

“ மிக்க கீர்த்தியுடன் ஜீவித்த கனம்பொருந்திய தம்புசெட்டியாரின் மரணச் செய்தியையறிந்து யாம் அதிக சஞ்சலமுற்றோம். அவருடைய பிரிவால் சுதேச கத்தோலிக்க கிறிஸ்துவர்களுக்கு, விசேஷமாய் அவருடைய குடும்பத்தாருக்கும், பெரிய நஷ்டமுண்டாக்கிறது. இத்துக்க சம்பவத்திற்காக யாம் மெத்தவும் வருந்தி அநுதாபப்படுகிறோம். தம்புசெட்டியார் தமது மேலான உத்தியோகத்தன்மையாலும் சுவிர்த்த நன்னெறிகளாலும் விசேஷ கீர்த்தியடைந்து சுதேச கிறிஸ்துவர்களில் முதன்மையான பேரோங்கி நின்றதை யாமறிவோம். அவரைப்போலொத்த சில சுதேசக் கிறிஸ்துவர்களிருப்பார்களேயாகில், அக்கூட்டத்திலிருக்கும் வேதத்துக்கும் பெருமையும் நன்மையுமுண்



டாகுமென்பதிற் சந்தேகமில்லை. அவர் பிரிவால் நேர்ந்த நஷ்டத்தை நினைத்துத் துக்கிக்கும் அவர் பத்தினி, புத்திரர் முதலிய அவருடைய குடும்பத்தோரின் துன்பத்தையுணர்ந்து அநுதாபப்படுகிறோம்.”

---

முன் மயிலாப்பூர் மேற்றிராசனத்தலைவராகவிருந்து இப்போது ஒப்பொர்த்தோ வென்னும் நகரின் மேற்றிராணியாராக விளங்கும், ஹென்றி ரீட் டிசில்வா (Dr. Henry Reid D'Silva) ஆண்டவர் எழுதிய கடிதம் :—

“ உம்முடைய பிரிய தந்தையின் மரணச்செய்தியறிந்து அதிக விசனமுற்றோம். உமக்கும் உமது குடும்பத்தார்களுக்கும் நேர்ந்த துன்பத்துக்காக மிக்க அனுதாபப்படுகிறோம். இந்தச் செய்தியறிந்த அன்றே, தாம் செய்த நன்மைகளுக்குக்காகவும் தாமடைந்த புண்ணியபேறின் பலனாகவும், ஏற்கனவே மறுலோகத்தின் சம்பாவனை யடைந்திருக்கவேண்டிய உமது பிதாவுக்காகப் பூசை செய்தோம்.”

---

திரிசிராப்பள்ளி மேற்றிராணியார் மிகவும் சங்கைக்குரிய பார்த்தே (Dr. G. Barthe, S.J., D.D.) ஆண்டவருடைய காரியதரிசியிடமிருந்து வந்த கடிதம் :—

“ உங்களுக்கு நேர்ந்த துன்பத்துக்காக மனமுருகி உங்களுக்கு நல்லாறுதல் தரும்படிக் கடவுளை மன்றாடி வருவதுமல்லாமல், மிக்க கௌரவமடைந்த உமது பிரிய பிதாவின் ஆத்தும நன்மைக்காக வேண்டிக் கொண்டதாகவும், எப்போதும் வேண்டிக்கொண்டு வருவாரென்றும் உமக்குத் தெரியப்படுத்தும்படி மேற்றிராணியார் கேட்டுக்கொண்டனர்.”

---

கும்பகோணம் மேற்றிராணியார் மிகவுஞ் சங்கைக்குரிய பொத்தேரோ (Dr. H. M. Bottereau) ஆண்டவரிடமிருந்து வந்த நிருபம் :—

“ உமது பிரிய தந்தையின் பிரிவால் உங்கள் குடும்பத்துக்கு நேர்ந்த பெரிய நஷ்டத்தை யறிய மெய்யாகவே யாம் அதிக சஞ்சலமுற்றோம். உங்கள் குடும்பத்தின் ஊன்றுகோலாகவும் ஆபரணமாகவு மிருந்த ஒருவரை இழந்தீர்களென்று நீங்கள் நினைப்பது சரியே. ஆம், எல்லோராலும் நினைத்து துக்கிக்கப்பட்ட இராஜதர்மப்பிரவீணர் நீர் சொல்லியபடியே யிருந்தனர். உங்கள் குடும்பத்துக்கு மாத்திரமல்ல, திருச்சபைக்கே ஓர் இரத்தினமாகப் பிரகாசித்துக் கவுரவமடைந்தாரென்று யாம் சொல்லுவோம். உம்முடைய பிதா கல்வியறிவிலும், புத்தியிலும், செல்வத்திலும், அந்தஸ்திலும், அதிகாரத்திலும் விசேஷப்பட்டவராயிருந்தார் மெய்யே ; ஆனால், இதுகளால் கிஞ்சித்தேனும் பெருமை கொண்டவரல்லவென்பது உமக்கு நன்றாய்த் தெரியும். அவர்பெற்ற கௌரவப்பட்டங்களுக்கெல்லாம் தன்னைக் கிறிஸ்துவன் என்றழைப்பதே விசேஷமென்றும்,

மகிமையுள்ள கௌரவப்பட்டமென்றும் எண்ணிக், கடவுளுக்குந் திருச்சபைக்கும் விஸ்வாசமுள்ள ஊழியனாய் இருந்தார். இதனை யாம் எமது முழு இருதயத்தோடு மதித்து ஆச்சரியப்படுகிறோம். உமது தாயாருக்கு எமது மரியாதையைச் செலுத்தி, அவர்களுக்கு நேர்ந்த நிர்பாக்கியத்துக்காக உருக்கத்தோடு அனுதாபப்படுகிறோமென்றும், அவர்களையும் அவர்களுடைய பிரிய குடும்பத்தாரனைவரையும் ஆசீர்வதிக்கிறோமென்றும், அவர்களின் பிரிய பர்த்தாவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ; எப்போதும் வேண்டிக்கொண்டு வருவோமென்றுஞ் சொல்லக் கோருகிறோம்."

சென்னை அதிமேற்றிராசன உதவி மேற்றிராணியாராகிய மிகவுஞ் சங்கைக்குரிய ஆலென் (Dr. J. J. Aelen, D.D.) ஆண்டவரிடமிருந்து வந்த கடிதம் :—

"உமது பட்சமுள்ள பிதா இறந்தமைக்காக நாம் மெத்தவும் விசனமுறுகிறோம். மரணமடைந்த இராஜதர்மப்பிரவீண தி. இரா. ஆ. தம்பு செட்டியார், C.I.E. அவர்களுக்காகவும், அவருக்காகத் துக்கப்படும் அவருடைய குடும்பத்தினரெல்லோருக்காகவும், எமது ஜெபங்களில் மறவாமல் வேண்டிக் கொள்ளுவதோடு, அவர்களுக்கு நேர்ந்த இப்பெருந் துன்பத்துக்காக அனுதாபமுள்ள உணர்ச்சியோடு ஆறுதல் சொல்லுகிறோம்."

கோயம்புத்தூர் மேற்றிராசனத் தலைவராகிய மிகவுஞ் சங்கைக்குரிய அகுஸ்தீன் ருவா (Dr. Augustin Roi.) ஆண்டவரிடமிருந்து வந்த கடிதம் :—

"மகா மேன்மைதங்கிய தெய்வபக்தியுள்ள உம்முடைய அருமைப் பிதாவும் எமது நேசருமாகியவர் நம்மைவிட்டுப் பிரிந்தாரென்றறிய விசனப்படுகிறோம். இப்பூலோகத்தில் இனி அவர் முகத்தைநாம் காணப்போகிறதில்லை. நம்முடைய சஞ்சலத்தை நீக்கி ஆறுதல்தரும்படிக் கடவுளைப் பிரார்த்திப்போமாக. பூலோக வாழ்க்கைக்கும் ஆத்தும நன்மைக்கும் உரியனவாக உமது தந்தையடைந்த அநேக மேலான வரப்பிரசாதங்களில், கத்தோலிக்கு வேத விஸ்வாசத்தில் நிலைகொண்டிருந்ததே விலையுயர்ந்ததாகும். அதுதான் அவருக்கும் உங்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக உணரவேண்டும். உங்களெல்லோருக்காகவும், விசேஷமாய் அதிக துன்பப்படும் உங்கள் தாயாருக்காகவும் மன்றாடிக்கொண்டு வருவோமென்பதை எமது அனுதாப உணர்ச்சியோடு தெரிவிக்கின்றோம்."

மயிலாப்பூர் மேற்றிராசனத்தலைவராகிய மிகவுஞ்சங்கைக்குரிய தோம் தேயோத்தோனியு டி. காஸ்ட்ரோ (Dr. D. Theotonins E. R. V. D. Castro.) ஆண்டவரனுப்பிய தந்தி செய்தி :—

"மகா கீர்த்திபெற்ற தங்கள் பிதாவின் மரணச்செய்தியெமக்குப் பொறுக்கொணுத் துயரத்தை வருத்தியது. சுதேசக் கிறிஸ்துவக் கூட்டத்திற்கும் விசேஷமாய் உங்கள் குடும்பத்துக்கும், பெரிய நஷ்ட முண்டாச்சுது. இப்



பெரியதுன்பம் உங்களுக்கு நேர்ந்ததற்காக மெத்த அனுதாபப்பட்டு ஆறுதல் சொல்லுகிறோம். மரித்த உமது தந்தையின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுவோம்."

எர்ணுகுலத்து சுதேச மேற்றிராணியாரும் விக்காரி அப்போஸ்தோலிக்குமாகிய, மிகவுஞ் சங்கைக்குரிய அலோசியஸ் பாரே பரம்பில் என்னும் சுதேச ஆண்டவரிடமிருந்து வந்த கடிதம் :—

"எமது அருமை நேசராகிய உமது தந்தை மரணமடைந்த நிற்பாக்கியச் செய்தியை உம்முடைய கடிதங்கொண்டு சொல்லொணுத்துயரத்துடனறிந்தோம். உமது பிரிய தாயாருக்கும் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் நேர்ந்த துன்பத்தினுக்காக வருந்தும் எமது உண்மையான அனுதாப உணர்ச்சியைத் தெரிவிக்கவும்; மரணமடைந்தவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பூஜைபலியை ஒப்புக்கொடுத்து விசேஷவிதமாய் வேண்டிக்கொண்டோமென்று உங்கள் மனதில் வற்புறுத்தவும் இக்கடிதத்தை அதிதுரிதமா யெழுதுகிறோம். இராஜதர்மப்பிரவீண தி. இரா. ஆ. தம்புசெட்டியாரின் பிரிவால் நேர்ந்தநஷ்டம் ஒரு குடும்பத்தை யல்லது ஒரு ஊரைமாத்திரம் சார்ந்ததல்ல, உலகிலுள்ள கத்தோலிக்குக் கிறிஸ்துவக்கூட்டத்தை முழுதுஞ் சார்ந்ததாக யாம் எண்ணுகிறோம். இந்தியகத்தோலிக்குக் கிறிஸ்துவர்களாகிய நாம் நமது கூட்டத்தைத் தாங்கிய தூணை யிழந்தோம். இந்தநஷ்டத்தைச் சுலபமாய்ப் பரிகரிக்கமுடியாது. சேசுக்கிறிஸ்துவின் ஏழைமக்கட்கு அவர் செய்த உதவிக்கும், தருமத்துக்கும், அவருடைய அநேக நற்செய்கைகளுக்குந் தக்க சம்பாவனையைச் சர்வ வல்லபமுள்ள கடவுள் அவருக்குக் கட்டளையிடுவாராக ! எம்முடைய உருக்கமுடைய ஆசீர்வாதங்களை உமது பிரிய தாயாருக்கும் மற்ற குடும்பத்தினருக்கும் அளிக்கின்றோம்."

இந்திய சுதேச மேற்றிராணியாரும் திருச்சூர் விக்காரி அப்போஸ்தோலிக்குமாகிய மிகவுஞ் சங்கைக்குரிய மெனேச்சேரி ஆண்டவர் எழுதிய கடிதம் :—

"கனம்பொருந்திய தங்கள் பிதாவின் துக்ககரமான மரணச்செய்தி யைத் தெரிவித்த தங்களுடைய 21உ கடிதத்தைக் கைப்பற்றினோம். அவர் துரைத்தன உத்தியோகத்தில் மேன்மைபெற்று விளங்கியதையும், கிறிஸ்துவ ளுக்குடைய புண்ணியசாங்கோபாங்க நெறியில் நின்று பிரகாசித்தலடைந்த கீர்த்தியையும் பற்றிக் கேள்வியுற்றிருந்தோம். பெங்களூரில் கூடிய யூக்கரிஸ்டிக் (Eucharistic) கூட்டத்தின்போது நாமங்குபோகச் சந்தர்ப்பப்பட்டதால், அவரைநேரில் கண்டு அவர் பழக்கத்தைப் பெற்று மகிழ்ச்சியுற்றோம். அவர் மரணத்தால் கத்தோலிக்குக் கிறிஸ்துவக் கூட்டத்தின் விலையேறப்பெற்ற ஓர் அங்கியாகவும் அதன் ஆபரணமாகவுமிருந்த ஒருவரை இழந்தோம். உங்களுடன் நாமும் சேர்ந்து அவர்பிரிவினை நினைத்து துக்கப்படவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் அவர் கடைசியாகப் பெறவேண்டிய தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுப் பாக்கியமான மரணத்தை யடைந்தாரென்றும், அவரையலங்கரித்த அநேக சுகிர்தபுண்ணியங்களின் சம்பாவனையாக நமது திவ்ய ரக்ஷகரின்

சமுகத்திலென்று நித்தியானந்த பாக்கியத்தைப் பெற்றிருப்பாரென்றும் நினைத்து ஆறுதலடைய வேண்டியவர்களாயிருக்கிறோம். தங்களுக்கும், தங்களுடைய தாயாருக்கும், தங்கள் குடும்பத்தோரனைவருக்கும் நேர்ந்த இப்பெருந்துன்பத்திற்கு வருந்தி அநுதாபப்படுகிறோம். அவருக்காக நாம் எப்போதும் வேண்டிக்கொள்ளுவோமென்று உறுதியாய் நம்புங்கள். அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பூசைசெய்து ஒப்புக்கொடுப்போமென்று உங்களுக்குத் தெரிவித்து உங்களை யாசீர்வதிக்கிறோம்."

---

மிகவுஞ் சங்கைக்குரிய மொன்செஞ்சோர் (Monseigneur) மலகாதன் ஸ்வாமிகளிடமிருந்து வந்த நிருபம்:—

"மிகமற்ற சஞ்சலத்தோடு உமது தந்தையின் பிரிவை யறிந்தோம். அநேக வருஷங்கள் பிரிடிஷ் அரசாங்கத்திலும் மைசூர் சமஸ்தானத்திலும், அந்நிய மதஸ்தர் மத்தியில் ஓர் கிறிஸ்துவனுக்குள்ள மகா பிரயாசையான நிலைமையில், மிகநம்பிக்கையோடு ஊழியஞ்செய்ததில், கடவுளுக்கும் தாமனுசரித்த சத்திய வேதத்துக்கும் செலுத்தவேண்டிய கடமைகளை மறவாது செலுத்தி வந்து, தாம் கிறிஸ்துவின் மெய்யான ஊழியனென்று மகாராஜாக்களுக்கு மகாராணி முதலிய பூலோக அதிகாரிகளுக்கும் காண்பித்தவ ரென்னும் விஷயம், கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களாகிய நமக்கெல்லோருக்கும் எவ்வளவு பெருமையும் ஆதரவுமாயிருக்கிற தென்பதை யாம் சொல்லவேண்டியதில்லை. தமது பிள்ளைகளும் மற்ற கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களும் இப்பெருமையைக் குறிக்கொண்டு பின்பற்றத்தக்க உதாரண நடையைக் காட்டிப் போயினர். நீண்ட ஆயுள்காலம் ஜீவித்திருந்து பரலோக எஜமானனிடம் சதாகால சம்பாவனையைப் பெறப்போயினர். அங்கே, பொற்சிம்மாசனத்திருந்து, முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தைப் புனைந்து, உண்மையாகவே ஓர் பெரிய இராஜாவாகத் துலங்குவார். அவருடைய நல்ல ஆத்துமம் நித்திரத்தில் இளைப்பாறக் கடவதாக! யாம் செய்யும் பூசைகளிலும் ஜெபங்களிலும் அவரை யாம் மறக்க மாட்டோம். உமது நல்ல தயாருக்கும் உமது குடும்பத்துள்ள மற்றெல்லோருக்கும் எமது அநுதாபங்களை யுணர்த்துகிறோம்."

---

திருச்சூர் பதேசமேற்றிராணியாரின் காரியதரிசி சங்கைக்குரிய மெனெச்சேரி என்னும் குருவானவரிடமிருந்து வந்தகடிதம்:—

"இவ்வுலக வாழ்வைவிட்டு நீங்கிய உமது பிதாவின் துக்ககரமான மரணச் செய்தி எம்முடைய இருதயத்தைப் பிளக்கச்செய்தது. இராவ்சாகிப் வி. இரா. ஆ. தம்புசெட்டியவர்களின் ஆச்சரியப்படத்தக்க மேன்மை குணங்களைப்பற்றிப் பிறர் சொல்லக்கேட்டு அவரைத் தரிசிக்க ஆவல்கொண்டிருந்திருந்தாலும், யாம் பெங்களூர் வந்தபோது அவருடைய பழக்கத்தைப்பெற்றுத் திருத்தியடைந்தோம். அவருடைய அமைதியும் பெருந்தன்மையும் கண்டு பிரமித்தோம். அவர் பணிப்பொருக்குச் செய்த தருமங்கள் எமது மனதைவிட்டு நீங்கவில்லை. சென்ற கடவுள் திருவவதாரத் திருநாளன்று அவரிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றோம். அதில் அவரும் அவர் குடும்பத்தாரும் நல்ல சௌக்



கியத்தோடிருப்பதாக வரைந்தனர். பெங்களூருக்கு இன்னொருவிசை வந்து அவரைத் தரிசித்து எங்களிருவருக்குமுண்டான நேசத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்று கருதினோம். அவருடைய மரணச்செய்தி நினையாத இடிபோல் எம்மைத் தாக்கியது. அவருடைய சாயலைக்காட்டும் புகைப்படத்தை எமது வாசஸ்தானத்தின் விசேஷவிடத்தில் வைத்து எப்போதும் காண்பதுபோல், அவருடைய நினைவு எமது இருதயத்தில் சிநேகாக்கினி கொண்டெப்போதும் எரிகின்றது. மனிதனுடைய எண்ணம் ஒன்றாகவும் கடவுளின் திருச்சித்தம் வேறாகவுமிருக்கிறது. அவருடைய மரணம் எமக்கே தாங்கக்கூடாத துயரத்தை வருத்துகிறதாயிருக்குமாகில், உமது பிரிய தாயாருக்கும் அவர்களின் இனியமக்களாகிய உங்களுக்கெல்லாம் அது எப்படியிருக்குமென்பதை யாம் உணராமலிருக்கவில்லை. இப்பூலோக வாழ்வு எவ்வளவு ஸ்திரமற்றதாக விருக்கிறதென்றும், இங்கு நாம் அநுபவிக்கிற சந்தோஷங்கள் அதி சீக்கிரத்தில் மாறிப்போகின்றனவென்றும், இந்தசம்பவம் நமக்கறிவிக்கின்றது. மறுலோகத்தில் சதாகால வாழ்வு ஒன்றிருக்கின்றதென்னும் நம்பிக்கை நமக்கில்லாதிருக்குமாகில், இவ்வுலகவாழ்வை விட்டு நீங்காமலிருக்க நம்மாலானமட்டும் நாம் போராடலாம். இப்போது உங்களுக்கு நேர்ந்த துன்பத்தை யொழிக்க மனிதர்கள் எவ்வளவு ஆறுதலான மொழிகளை யுரைத்தபோதிலும் பயன்படா. துன்பப்பட்ட இருதயத்தை ஆறுதல்படுத்தக் கடவுளால் மாத்திரமாகும்; அவரை நேசித்து விசுவசிக்கும் ஆத்துமங்கள் படுந்துன்பத்தை இன்பமாக்குவது அவரொருவரால் மாத்திரங் கூடும்; சஞ்சலத்திலாழ்ந்து புண்பட்ட இருதயத்திற்கு அவர் சொல்லும் தேறுதல்வார்த்தைகள் தேனினுமினியவை; புண்களையாற்றும் விலைமதிக்கப்படாத சஞ்சீவித்தயிலங்களிலும் மிகச்சிறந்தது. உமதருமைத்தந்தையை யாம் பெங்களூரில் பார்த்தபோது, தமக்கிருக்கும் இன்னுஞ்சில காலத்தைக் கடவுளின் ஊழியத்தில் செலவழித்து அழியாத பாக்கியத்தைப் பெறும்படி முயற்சித்து வருகிறதாகத் தெரிவித்தனர். தமது வாழ்நாளெல்லாம் பிறருடைய நன்மைக்காகவும் கடவுளின் ஊழியத்திலும் போக்கினரென்பதை நினைக்கும்போது, நமக்கு எவ்வளவோ மனோரம்மிய முண்டாகின்றது. நாம் மரித்தவரின் ஆத்துமம் நித்தியத்திலிளைப்பாறும்படி வேண்டிக்கொள்ளுவதாயன்றி அவரிடத்தில் பிரகாசித்த புண்ணியங்களைக் கண்டுபாவிக்க நம்மாலான பிரயாசைப் படுவோமாக."

---

திருச்சூர் எல்துருத் மடத்துச் சிரேஷ்டர் சங்கைக்குரிய N. செலஸ்டின் ஸ்வாமியாரிடமிருந்து வந்தகடிதம்:—

"மிஸ்டர் தம்புசெட்டியாருடைய துக்ககரமுள்ள மரணச்செய்தியைத் தெரிவித்த கடிதம் (மதராஸ் மெயில் பத்திரிகையைக்கொண்டு யாம் அச்சம்பவத்தைத் தெரிந்துகொண்டபின்) எமது கைக்கு வந்தது. அப்பத்திரிகையை வாசித்த மறுநாள் பெரிய சடங்கு பாட்டுப்பூசை செய்யப்பட்டு மடத்தைச் சேர்ந்த எல்லா குருக்களும், சந்நியாசிகளும், உட்பிள்ளைகளும், மரித்த செட்டியாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக விசேஷவிதத்தில் வேண்டிக்கொண்டார்கள். இச்சமாசாரம் தங்களுக்கு அதிக ஆறுதல் தருமென்று நம்புகிறோம். உமது தாயாருடைய ஆறுதலுக்காக இச்செய்தியை யவர்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தம்புசெட்டியாரின் மரணம், உரோமான் சத்தோ

விக்குக் கூட்டத்தின் முக்கியஸ்தராகவும் அதன் விலைமதிக்கப்படாத ஆபரணமாகவும் விளங்கிய ஒருவரை நம்மிடமிருந்து நீக்கிவிட்டது. பொதுவாய் உலகம் முழுவதுமுள்ள கத்தோலிக்குத் திருச்சபையாரின் நன்மையைக் கோரியவரும், விசேஷமாய் சுதேச கத்தோலிக்குக் கூட்டத்தினர்களின் விருத்திக்குரிய விஷயங்களில் கடைசி வரையில் சிரத்தைகொண்டுழைத்தவருமாகிய தம்புசெட்டியாரின் பிரிவால் நேர்ந்த பரிகரிக்கக்கூடாத பெரும் நஷ்டத்தை நினைத்து துக்கிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் பெறவேண்டிய கடைசி தேவதிரவிய அநுமானங்களைப்பெற்றுத் திடங்கொண்டு அமைதியாய் மரணித்தாரென்றறிய எமக்குப் பெரிய ஆறுதலைத் தருகின்றது. பக்தியுள்ள கிறிஸ்துவனுக்குப் பாக்கியமான மரணத்தைவிட முக்கியமான காரியம் வேறென்ன விருக்கிறது? தம்புசெட்டியாரைப்போன்ற பக்திமானுள்ள கிறிஸ்துவனுக்கு நல்ல மரணம் சம்பவித்த தென்பது கொஞ்சமேனும் ஆச்சரியப்படத்தக்கதல்ல. இரண்டு மாத காலம் அவர் வியாதியாயிருந்தும் அதைப்பற்றி யெமக்கு தெரிவிக்காமற் போனதற்காக யாம் மெத்த விசனப்படுகிறோம். அதனுல் எமது நேசர் இப்பூலோகத்தைவிட்டுப் போகுமுன் அவரைக்கண்டு திருப்தியடையும் சந்தர்ப்பத்தை யாமிழந்தோம். எமதிருதயத்தை மூடி போதிக்கொண்டிருந்த துயரம் எம்மை யதிகமாயெழுத விடவில்லை. ஆகையால் இக்கடிதத்தைச் சுருக்கமாய் முடித்துவிடுகிறோம். உண்மையான துக்கத்தை நன்றாய்ச் சொல்லிக் காட்டுவதற்குச் சில வார்த்தைகளே போதுமானவை. எமது மனப்பூர்வமான அநுதாபங்களை உமது தாயாருக்குத் தயைசெய்து தெரியப்படுத்துங்கள். மனிதன் என்றைக்கிருந்தாலும் ஒருநாள் சாகவேண்டுமென்றும் உண்மையை அவர்கள் நினைத்து ஆறுதல்கொள்ளும் படி வற்புறுத்துங்கள். அவர்களையும் உங்களெல்லோரையும் கூடுமான சீக்கிரத்தில் நேரில்வந்து தேறுதல் செய்ய ஆவல் கொண்டிருக்கிறோம். இப்போது உமது தகப்பனுரின் மரணத்துக்காக யாம் மனப்பூர்வமாய்க் கொள்ளும் அனுதாப உணர்ச்சிகளை யங்கீகரிக்க வேண்டுகிறோம்."

---

கூடலூர் செண்ட். ஜோசெப் காலேஜைச்சேர்ந்த சங்கைக்குரிய பாரேர் (Fahrer) சுவாமியார்,

"எல்லோருக்கும் படிப்பிக்கத்தக்க பாக்கியமான மரணம் மிஸ்டர் தம்பு செட்டியார் அடைந்தாரென்ற விஷயம் எமதிருதயத்துக்குப் பெரிய ஆறுதலை வருவித்தது"

என்று வரைந்தனர்.

சங்கைக்குரிய பாய்க்கே ஸ்வாமியார்,

"உம்முடைய தகப்பனுரின் மரணம் எல்லோரும் பின்பற்றத்தக்க எல்லா நன்மைகளையும் புண்ணியங்களையும் கொண்டிருந்தது. எமது சத்தியவேதம் இப்பேர்ப்பட்ட ஒருவரை தன்னுட் கொண்டிருந்ததைப்பற்றி மிகப் பெருமை கொள்ளத்தக்கதாயிருக்கின்றது"

என்று எழுதினர்.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் கொட்டயத்தைச்சேர்ந்த மன்னானம் என்னும் ஊரில் அர்ச். குரியாப்பர் சந்நியாசி மடத்துப் பிரெஷிடர். சங்கைக்குரிய F. அலெக்ஸாந்தர் ஸ்வாமியார்,



"எங்கள் மடத்தின் பிரதானமான ஹாலில் தங்கள் இனியபிதாவின் சாயலைக்கொண்ட புகையுருவப்படத்தை வைத்து எப்போதும் அதைப் பார்த்துக்கொண்டு அவருடைய நல்ல குணாதிசயங்களைப்பற்றி ஆச்சரியமுறுகிறோம்"

என்று வரைந்தனர்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த என்னூர், பெரிய பாளையம், பவழமுதலிய இடங்களின் விசாரணைக்குருவாகிய சங்கைக்குரிய S. M. F. இஞ்ஞாஸியார் ஸ்வாமியார்,

"நம்மோடிருந்த பிரகாசமுள்ள ஒரு பெரிய நட்சத்திரம் மறைந்து நம்முடைய தேசத்தை இருள் மூடிக்கொண்டது. நமது கத்தோலிக்கு வேதத்திற்குப் பெரிய ஆதரவாகவும் அதனுல் பேர்பெற்று விளங்கியுமிருந்தவரை நாமிழந்தோம்"

என்று எழுதினர்.

---

இங்கிலாந்து முதலிய அன்னிய தேசங்களிலுள்ள மன்னவான்கள், பிரபுக்கள் முதலிய ஐரோப்பிய துரைகளில் அநேகர், தம்புசெட்டியாரின் மரணச்செய்தியை யறிந்து கஸ்திப்பட்டுச் செட்டியாரின் குடும்பத்தினர்க்கு ஆறுதல் கடிதங்களை வரைந்தனுப்பினர்; அவர்களில் முக்கியமான சிலரின் பெயர்களை இதனடியிற் குறிக்கின்றோம்:—

(1) நார்பக் என்னுந் தேச சிற்றரசர் (His Grace the Duke of Norfolk.)

(2) இந்திய இராஜப்பிரதிநிதியாகவும் கவர்னர் ஜெனரலாகவுமிருந்த லார்ட் ரிப்பன் பிரபு (Lord Ripon, late Viceroy & Governor General of India).

(3) இந்திய இராஜப் பிரதிநிதியாகவும், கவர்னர் ஜெனரலாகவுமிருந்த லார்ட் லான்ஸ்டௌன் பிரபு (Lord Lansdown, late Viceroy and Governor General of India).

(4) இந்திய இராஜப்பிரதிநிதியாகவும் கவர்னர் ஜெனரலாகவுமிருந்த லார்ட் கர்ஸன் பிரபு (Lord Curzon, late Viceroy and Governor General of India).

(5) முன் இந்துதேச இராணுவங்களின் பிரதான தளகர்த்தரும், கந்தஹார் ப்ரிடோரியா தேச சிற்றரசருமான ராபர்ட்ஸ் பிரபு (Field Marshal Earl Roberts of Khandahar and Pretoria, formerly Commander-in-Chief of India).

(6) மதராஸ் ராணுவங்களின் தளகர்த்தரும் ஜிப்ரால்ட்டர் தேசத்தின் கவர்னருமாகிய ஜெனரல் சர்-சார்லஸ் மான்ஸ்பீல்ட் கிளாக்

(General Sir Charles Mansfield Clarke, formerly Commander in Chief, Madras, and latterly Governor of Gibralter.)

(7) இந்திய இராஜப்பிரதிநிதியின் அந்தரங்க காரியதரிசியாகவும் வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ்செய்தபோது அவருடைய காரியதரிசியுமாகவுமிருந்த சர்-வால்டர் லாரன்ஸ் பிரபு (Sir Walter Lawrance, formerly Private Secretary to the Viceroy of India and latterly Secretary to His Royal Highness the Prince of Wales during his tour in India, 1905).

---

நம்புசெட்டியார் பிரிட்டிஷ் இந்திய இராஜாங்கத்திலும் மைசூர் சமஸ்தானத்திலும் உத்தியோகஞ்செய்தபோது, அவருடன் சம்பந்தப்பட்டிருந்த, இச்சரித்திரத்தில் ஆங்காங்கு குறிப்பிட்ட, ஐரோப்பியதுரைமார்கள் எழுதிய அனுதாபக் கடிதங்கள் செட்டியார்மீது அவர்களுக்கிருந்த விசேஷ மதிப்பையும் அன்பையும் எடுத்துக்காட்டுதலால், அவைகளை யிங்கு மொழிபெயர்த்தெழுதுகிறோம்:—

மிஸ்டர் J. D. மெயின் (J. D. Mayne) துரையின் கடிதம்:—

“இன்றுகாலை என்னிடஞ் சேர்ந்த தங்கள் கடிதங் கொண்டுவந்த நிர்ப்பாக்கியச்செய்தியை யறிய மிகவும் மனவருத்தமுற்றேன். இந்தியாவில் நானிருந்தபோது ஆதிதொடங்கி என்னையறிந்த எனது நேசர்களில் தங்கள் தகப்பனார் ஒருவரே கடைசியாக நின்றிருந்தனர். கவர்ன்மெண்டாபீஸ் ரைட்டர் அந்தஸ்திலிருந்து, தமது சுதேச இராஜாங்க சிங்காசனத்தின் படிகளில் அதிகாரமாக ஏறிச்சென்று நட்சத்திரத்தைப்போலப் பிரகாசிக்கப்பண்ணின உத்தியோக வாழ்க்கையை ஆரம்பிக்குமுன், மாணாக்கராய் அவர் கல்விகற்று வந்த நாட்களில் அவரையறிந்தவர்களில், நான் ஒருவனே இன்னுஞ் சீவித்திருப்பவனாயிருக்கவேண்டும். உத்தியோகவாழ்க்கையில் வெற்றியடையுங்கோக்கத்துடன் ஆங்கில அவர் போர்பொருதும் நாளில், நான் அவருடன் கூடிப்பழகியிருந்தேனென்று உணர்வது எப்போதும் என்னுடைய சந்தோஷங்களி லெல்லாம் பெரிய மகிழ்ச்சியைத் தந்து வந்தது. தாம் பாத்திரராயிராமலும், விடாமுயற்சியோடு பிரயாசைப்படாமலும், யாதொரு வெகுமானத்தையும் அவர் பெறவில்லை. நான் கண்ட துரைத்தன உத்தியோகஸ்தர்களி லெல்லாரிலும் அவர் மேலானவராயிருந்தார். வேண்டிய யாதொரு விஷயத்தை எவ்வளவு சீக்கிரத்தில் கிரகிப்பரோ அவ்வளவு துரிதமாகவே அதைநடத்திச் சாதிக்கும் சக்தியுடையவராயுமிருந்தனர். தம் சக்தியென்றமட்டும் செவ்வையாய்ச் செய்யும் நோக்கத்தையுடையவராதலால், அவர் செய்யுங் காரியங்கள் செவ்வையாகவே யிருக்குமென்னும் நம்பிக்கையை எப்போதுங் கொள்ளலாம். தமது மேலான வாழ்க்கையால் கௌரவத்தோடு தமது நாட்டிக் கூழியம் புரிந்தனர்; தாம் காட்டிய உதாரண நடையால் முன்னுக்கும் அதற்கு ஊழியஞ் செய்துகொண்டேவருவார். ஐயோ! என் முழு இருதயத்தோடு மதித்து வந்திருந்து நேசித்த என்னுடைய உயிர்த் தோழ-



ரையிழந்தேன். அவருடைய ஸ்தானத்தில் வைக்கத்தக்க சரியான வேறொருவர் கிடைப்பதரிது. உமக்கும் அவருடைய குடும்பத்தோர் யாவருக்கும் நேர்ந்த நஷ்டம் சொல்லிமுடியாததும் பரிகரிக்கக்கூடாததுமாகும். காலம் போகப்போக அவருடைய குணாதிசயங்களும், பெயருங், கீர்த்தியும் நிறைந்து, அவரைச் சேர்ந்திருந்த உங்களைச் சூழ்ந்துவிளங்கிய பிரகாசம் நீங்கி வெறுமையுற்றுக் காணும் போதுதான், உங்களுக்கு நேர்ந்த துன்பமட்டுப்படும். அவருடைய ஜீவியசரிதம் இங்கிலீஷில் சீக்கிரம்வெளிப்படுமென நம்புகிறேன். சென்றவருஷத்தில் உமது பிதா எனக்கொரு கடிதமெழுதி, மேற்படி புத்தகத்தில் சேர்ப்பதற்காக என்னுடைய புகையுருவப்படமொன்று ஈலிங்கென்னும் தேசத்திலுள்ள ஒரு அச்சியந்திர சாலைக்கு அனுப்பும்படிக் கேட்டுக்கொண்டனர். உடனே அனுப்பினேன்; ஆனால் அச்சாலை யதிபர்களிடமிருந்து இதைப்பற்றிய செய்தி யொன்றுங் கைப்பற்றவில்லை.

உமக்கும் உமது குடும்பத்தோர்க்கும் நேர்ந்த துன்பத்திலுக்காகக் கொள்ளும் என்னுடைய மனப்பூர்வமான உருக்கமுள்ள அனுதாபங்களை அங்கீகரித்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.”

---

மிஸ்டர் பவுரிங்கு (Mr. Lewing Bowring, C. S. I.) துரையின் கடிதம்:—

“சென்றவார வர்த்தமானப் பத்திரிகைகளில் தங்கள் அருமைதந்தையின் மரணச்செய்தியடங்கிய விளம்பரத்தைப்பார்த்து அனேகடந்தசஞ்சலமுற்றேன். அவரது குற்றமற்ற உத்தியோக வாழ்க்கைக்காகவும், அவரில்விளங்கிய உயர்ந்த குணாதிசயங்களைப் பற்றியும், நான் கொண்டிருந்தவனது மனப்பூர்வமான மரியாதைக்குப் பாத்திரமாயிருந்த அவரை யிழந்ததற்காகமிகவும் வருந்துகிறேன். அவர் சுதேசக் கிறிஸ்துவர்கள் எல்லோரும் பின்பற்றத்தக்க உதாரண நடையுடையவராக விருந்தனர். உங்களுக்கு நேர்ந்த இத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளத் தக்க மனத்திடனும் ஆறுதலுங் கடவுள் கடாட்சித்தருள்வாராக!”

---

கர்னல் டிரட்வே கிளார்க் (Col. Tredway Clarke) துரையின் நிருபம்:—

“மிகவுந் துக்கிக்கத்தக்கச் செய்தியடங்கிய உமது கடிதம் இப்போது கைக்கு வந்தது. ஜூன் மாதம் 18 தேதி உமக்கு நான் கடிதமெழுதியபோது இவ்வளவு சீக்கிரத்தில் உமது பிதாவின் மரணச்செய்தி தொடர்ந்து வருமென்று நான் நினைக்கவில்லை. நானெழுதிய மறுநாளே இந்தச் சம்பவம் நேர்ந்ததாகக் காணுகிறது. உமது தகப்பனாருக்குண்டான நோய் மெத்த அபாயகரமானதால் நான் அதன்மட்டில் மிகவும் பயந்தேயிருந்தேன். மைசூர் சமஸ்தானத்துக்கவர் பிரிவால் பெரியநஷ்டம் நேர்ந்ததாக எண்ணவேண்டும். அவருடைய குடும்பத்துக்கோ இஃதோர் பெரிய இடிபோலிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அவருடைய நான்கு புத்திரர்களும் கவர்ன்மெண்ட் உத்தியோகங்களைப் பெற்றிருக்கிறார்களென நம்புகிறேன். இதுவிஷயத்தில் அவருக்கு யாதொரு மனக்கவலையுமிருந்திராதென நினைக்கிறேன். B. A.

பரிட்சையிற்றேறின அவருடைய கடைசி குமாரனை ஒரு அசிஸ்டெண்ட் கமிஷன
ராக நியமனஞ்செய்ய எண்ணியபடி, நடந்ததும் நடவாததும் நான் கேள்விப்
படவில்லையாயினும், மஹாராஜா அவர்கள் செய்த கருத்தை நிறை-
வேற்றத் தப்பமாட்டாரென வென்றுகிறேன். தம்புசெட்டியாரின் பத்தினி
யாருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் நேர்ந்த துன்பத்தை யுணர்ந்து
வருந்தி யானும் லேடி. [illegible] அனுதாபமுற்றவர்களாயிருக்கி
றேமென்று தெரிவிக்க வேண்டுகிறேன். மிஸ்டர். தம்புசெட்டியார் அநேக
வருஷங்கள் என்னுடன் கூடி உத்தியோகஞ்செய்தவர்; மதிக்கத்தக்க என்னு
டைய நேசராகவுமிருந்தவர். எனக்கெல்லாவோ மனமகிழ்ச்சியைத்தந்த அவ
ரது கடிதங்களை ஐயோ! இனி யான் காணப்போகிறதில்லை. உம்மால் கூடிய
போதெல்லாம் உங்கள் குடும்பத்தின் க்ஷேமச்செய்தியைத் தெரிவித்து வருவீ
ராகில் எனக்கது மிக்க மகிழ்ச்சியைத்தரும்."

---

சர். வில்லியம் கன்னிங்காம் (Sir Williant Cunningham)
துரையின் கடிதம்:—

“எனது நேசராகிய தங்கள்பிதாவின் மரணச்செய்தியை யறிய
மிதமில்லாத துக்கத்தை யடைந்தேன். மிஸ்டர். தம்புசெட்டியார் நீங்களெல்
லோரும் பெரிய பெருமைகொள்ளத்தக்க அற்புதமும் குறைகூறக்கூடாத நெறி
யையுமுடையவராகவும், மிகவும் மதிக்கத்தக்க கண்ணியமுடைய இராஜாங்க
உத்தியோகஸ்தராகவும், உங்களுடைய மாறாத அன்பினைக் கொண்டிருக்கத்
தக்க ஒருவராகவுமிருந்தனர். இப்பேர்ப்பட்ட ஒருவரை யிழந்துபடும் உங்கள்
துன்பத்திற்காக நான் விசனித்து எனக்குள்ள அநுதாப உணர்ச்சிகளை உங்க
ளுக்குத் தெரிவிக்கிறேன்."

---

சர் சார்லஸ் எல்லியட் (Sir Charles Elliot) துரையின்
கடிதம்:—

“மிக்க கவுரவம்பொருந்திய தங்கள் பிதாவின் மரணச்செய்தியைத் தங்கள்
கடிதத்திலிருந்து அதிக சஞ்சலமடைந்தேன். 1677-78ம் வருஷப் பஞ்சத்தின்
போது நான் மைசூர் இராஜ்ஜியத்தைக் கமிஷனராகச் சந்தித்தபோது, அந்த
சமஸ்தானத்தில் மிஸ்டர். தம்புசெட்டியார் முக்கியமான பெரிய உத்தியோகஸ்
தராக விருந்தனர். அவரப்பொழுதெனக்குத்தந்த உதவிக்காக மெத்த கடமைப்
பட்டவனாக இருந்தேன், நானும் அவரும் அன்னியோன்னிய நேசர்களா
யிருந்தோம். அதற்குப்பின் அவருடைய உத்தியோக வாழ்க்கையின் விருத்தி
யைப்பற்றி ஒன்றும் கேள்விப்படவில்லையாகையால், எவ்வளவு உயர்ந்த அந்தஸ்
தை யடைந்தாரென்றும் உத்தியோகத்தைவிட்டு எப்போது நீங்கினாரென்றும்
எனக்குத் தெரியவில்லை. சில வருஷங்களுக்கு முன்னமே உத்தியோகத்தி
லிருந்து நீங்கிக்கொண்டனரென்று எண்ணுகிறேன். அவர் மரணத்துக்காக
நான் விசனப்படுகிறேன் என்றும், அவருடைய குடும்பத்தினர்க்கு நேர்ந்த
துன்பத்துக்காக அநுதாபப்படுகிறேனென்றும் நம்புங்கள்."



மைசூர் சமஸ்தான மாஜி ரெஸிடெண்ட் சர் ஜெ. பி. லியால்
(Sir J. B. Lyall) துரை எழுதிய கடிதம்:—

“தங்கள் கடிதம் இன்று கைப்பற்றினேன். எல்லோராலு மேன்மையாய்
மதிக்கப்பெற்ற தங்கள் தந்தையின் மரணத்துக்காக நான் அதிக விசனமுறுகி
றேன். நான் மனப்பூர்வமாகக் கொள்ளும் அனுதாப உணர்ச்சிகளை யங்கீகரிக்கும்
படித் தங்களையும் தங்கள் குடும்பத்திலுள்ள மற்றவர்களையும் கேட்டுக்கொள்ளு
கிறேன். தங்களருமை பிதா ஆங்கில அரசாட்சியின் [illegible]மையையும் மைசூர்
சமஸ்தான ஆட்சியின் அபிவிருத்தியையும் எப்போதும் [illegible]யவராக இருந்தன
ரென்பதை நான் அறிவேன்."

---

மைசூர் சமஸ்தான மாஜி ரெஸிடெண்ட் சர் டி. பிட்ஸ்பாட்ரிக்
(Sir D. Fitzpatrick) துரையின் நிருபம்:—

“தாங்களெழுதிய கடிதம் எனக்கனுப்பப்பட்டது. அதிலடங்கிய நிர்பாக்கிய
செய்தியை எவ்வளவோ சஞ்சலத்துடன் நான் படித்தறிந்தேனென்றுங்களுக்
குத் தெரிவித்தெழுதுகிறேன். அநேக வருஷங்களுக்குமுன், மைசூரில் நான்
வெகு சொற்பகாலமிருந்தேன். அப்போது ஹைகோர்ட்டு ஜட்ஜாகவிருந்த
தங்கள் தந்தையை எல்லோரும் உயர்ந்த தன்மையில் மதித்திருந்தார்க
ளென்பது என்னுடைய ஞாபகத்தில் செவ்வையாய்ப் பதிந்திருக்கிறது. அது
முதல் கடைசிவரையில் அவருடைய உத்தியோக வாழ்க்கையை மெத்த சிரத்
தையோடு நான் கவனித்துவந்தேன். மைசூர் பிரஜைகளுக்கும் அச்சமஸ்தானத்
தின் அதிபதிக்கும் உங்கள் தந்தையின் பிரிவால் நேர்ந்த நஷ்டம் மிகப்பெரியது.
வந்திக்கத்தக்க பழைய ஒரு நேசரை நானும் இழந்தேனென்றுணர்கின்றேன்.
ஆனால், நீங்களடைந்த நஷ்டத்திற்கு எங்களுடைய நஷ்டம் எம்மாத்திரம்?
உங்களுக்கு நேர்ந்த துன்பத்துக்காக நான் மனப்பூர்வமாய் வருந்துகின்றே
னென்பதை நம்புங்கள். தாங்கள் மைசூராட்சியில் உத்தியோகம் பெற்று
விர்த்தித்து வருகிறீர்களென வெண்ணி எனது பட்சமுள்ள நற்கோரிக்கை
களையும் மரியாதைகளையுஞ் செலுத்துகிறேன்."

---

மைசூர் சமஸ்தானத்தில் முன் ரெஸிடெண்டாகவிருந்து இப்
போது இந்தியா ஆபீஸ் காரியதரிசி (India Office Secretary) யாக
விருக்கும் சர்-லீ வார்னர் (Sir William Lee Warner) துரையின்
கடிதம்:—

“தங்களுடைய கடிதம் கொண்டுவருகிற கெட்ட சமாச்சாரம் எனக்குச்
சடுதியுள்ளதல்லவாகிலும், தங்கள் குடும்பத்தைத் தாக்கிய துன்பத்தை நான்
மிகவு முணர்ந்து வருந்துகிறேன். தங்கள் தந்தையின் மரணத்தால் இந்தியரின்
பொதுவாழ்க்கைக்கு நேர்ந்த நஷ்டத்தை நான் செவ்வையாய் உணர்கின்றேன்.
அவர் இராஜாங்கவூழியத்தைச்சேர்ந்தவர்களைத் தம்முடைய விசேஷ அறிவி
லும், நன்னெறியிலும், மனத்திடத்திலும், மேலான எண்ணத்தாலும் உற்சா
கப்படுத்திவந்தவராக இருந்தனர். தமது இல்லற ஒழுக்கத்தில் மேலான நடையை

யநுசரித்து வேதாந்தின்மீதும் தீர்மெனசியின்மீதும் வைராக்கிய பக்திகொண்டு பிறர் பின்பற்றத்தக்க உதாரணமாக நின்று, தம்முடைய மரணத்தின் பின்னரும் அநேகர் மனிதர் மனதில் நிலைகொண்டு பயன்பெறத்தக்க மேலான விதத்தில் ஜீவித்தனர். நாங்கள் அறிந்த தங்கள் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாப உணர்ச்சிகளுடன், நடந்த காரியங்களும் இனி நடக்கும் எல்லாக்காரியங்களும் நன்மைக்கே யிருக்கும்படிக் கோரிக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோமென்று தயவு செய்து தெரிவிக்கவும்."

---

மைசூர் சமஸ்தான மாஜிரெஸிடெண்ட் சர். வில்லியம் மாக் வொர்த் யங் (Sir William Macworth Young) அவர்களின் கடிதம்:

" என்னுடைய பழைய சிநேகிதர் தங்கள் பிதாவின் மரணச் செய்தியை யறிய மெய்யாகவே அதிக சஞ்சலப்படுகிறேன். இராஜ தர்மப்பிரவீண தம்பு செட்டியார், C.I.E., அவர்களைப் பெங்களூரில் [illegible] முதல் அவர்மீது எனக்கு விசேஷ எண்ணமும் மதிப்பு முண்டாயிருந்தது. உங்களுக்கு நேர்ந்த துன்பத்தை யுணர்ந்து மிக்க அனுதாபம் கொள்ளுகிறேனென்பதைத் தாங்கள் அங்கீகரிப்பதுமன்றி, தங்கள் குடும்பத்தோர்க்கும் தெரியப்படுத்தும்படி வேண்டுகிறேன். இதிலுள்ள [illegible] கதந்தரமாகிய நல்ல நோக்கங்களை கொண்டிருக்கும் உங்கள் சஞ்சலங்களை யொழித்து ஆறுதல் கொள்ளும்படி நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். அன்றியும், மரணமடைந்த தங்கள் பிதாவினிடத்தில் விளங்கிய கிறிஸ்துவருக்குரிய விஸ்வாசத்தை இங்கிலீஷ்காரருடைய விருப்பும் அவருடைய சிநேகிதர்களின் அநேகர் உதாரணமாகக் கொண்டு தங்கள் முன் [illegible] இரக்ஷகரைப் பின்பற்றி நடப்பார்களெனக் கோருகிறேன்."

---

மைசூரில் முன் ரெஸிடெண்டாக விருந்த கர்னல் டோனல்ட் ராபர்ட்ஸன் (Colonel Sir Donald Robertson) அவர்கள் எழுதிய கடிதம் :—

" இவ்விடங்களில் நான் சுற்றுப்பிரயாணஞ் செய்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் தந்தையின் துக்ககரமான செய்தியைத் தெரியப் படுத்திய கடிதத்தைக் கைப்பற்றினேன். அவர் என்னுடைய பழைய நேசர். அவருடைய போக்கியதா லட்சமுள்ள எண்ணத்தையும், அவருடைய காரியத்திறத்தையும், அவர் ஜீவித்த நல்ல ஜீவியத்தையும் பற்றித் தெரிவதாகிறவர்களில் என்னிலும் மேலான ஒருவரில்லையென நான் நினைக்கிறேன். அவருடைய காரியங்கள் கல்வலத்திலும் ஒழுங்கு படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவென்று நம்புகிறேன். மிஸ்டர் தம்பு செட்டியாரடைந்த உயர்ந்த கீர்த்தியையும், பெயரையும் நீடிக்கச்செய்து, நெடுங்காலம் அவர் குடும்பத்தினர் வாழ்ந்திருக்கும்படியாக விருத்தியில் அவருடைய காரியங்கள் ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவென்று நம்புகிறேன்."

---

மைசூர் சமஸ்தானத்தில் முன்னர் ரெஸிடெண்டாக விருந்த சர். போர்டிலன் (Sir. J. A. Bourdillon) அவர்களின் நிருபம் :—



" தங்களுடைய 21உ கடிதத்தைக் கைப்பற்றுமுன், பையனீர் மெயில் (*Pioneer Mail*) என்னும் பத்திரிகையில் தங்கள் மேன்மையான பிதாவின் மரணச்செய்தியை வாசித்தறிந்து மிக்கதுயரமடைந்தேன். அவரை எப்போதும் மறவாமல் எனது ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். அவர் மகா அறிவுள்ள அபிப்பிராயங்கள் கொண்டவராயும், முதிர்ந்த அனுபவமுடையவராகவும், எல்லா மனிதர் பேரிலும் நேசப்பற்றுதலுடையவராகவும், அவருடன் பழகியவர்கள் அவரை யெப்போதுங் காணவேண்டுமென்று மனதைக் கொடுக்கத் தக்கவராகவுமிருந்தாரென்பதை என் மனமறியச் சொல்லுவேன்; அவரைக்கண்டு உரையாட வேண்டுமென்னும் விருப்பத்தையும் சந்தோஷத்தையும் யான் எப்போதுங் கொண்டிருந்தேன்."

"மனப்பூர்வமான எனது அனுதாப உணர்ச்சிகளையும் லேடி போர்டிலன் துரைமகளின் உணர்ச்சிகளையு மேற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்."

---

மைசூரின் தற்கால ரெஸிடெண்ட் ஹானரெபில் ப்ரேசர் (Honourable Mr. S. M. Fraser) அவர்கள் ரஜாவில் இங்கிலாந்தி லிருக்கும்போது அங்கிருந்து எழுதியகடிதம் :—

" தங்கள் தந்தை இராஜ தர்மப்பிரவீண தி. இரா. ஆ. தம்புசெட்டியார், C.I.E., அவர்களின் மரணச் செய்தியடங்கிய கடிதம் வரப்பெற்றனன்; அவர் பிரிவைப் பற்றி மிகவுந்துக்கிக்கின்றேன். தங்களுக்கும் தங்கள்குடும்பத்தார்க்கும் நேர்ந்த இந்த நஷ்டத்தாலுண்டாயின பெருந்துன்பத்தை யுணர்ந்து நான் கொள்ளும் அனுதாபங்களை அங்கீகரிக்க வேண்டுகிறேன். தங்கள் தகப்பனார் என்னால் மிகவு மதிக்கப்பட்ட மைசூரிலுள்ள பழைய நேசர்களில் ஒருவராகும். தன் ஜீவியத்தைப் பெரும்பாலுஞ் செலவழித்துப் பற்பல அதிகாரமுள்ள உத்தியோகங்களை வகித்து ஊழியஞ்செய்து மைசூர் சமஸ்தான காரியங்களை மிக நன்றுயறிந்தவராகையால், ரெஸிடென்ஸி என்னும் ஆங்கில ராஜப்பிரதிநிதியின் மாளிகையைச் சந்தித்தவர்களிலெல்லாம் இவர் மிக மதிக்கத்தக்கவராய் எண்ணப்பட்டதல்லாமல், என்னாலும் எனக்கு முன்னிருந்த ரெஸிடெண்டுகளாலும் அவருடைய மேலான நல்ல அபிப்பிராயங்கள் நன்கு மதிக்கப்பட்டன. கடைசிவிசை அவரை நான் பெங்களூரில் பார்த்தபோது அவருடைய வயதுக்குடைய தளர்ச்சி அவர் தேகத்தில் காணப்படவில்லை. எப்போதுமுள்ள வலிவும் திடமுமுடைத்தானவராய்க் காணப்பட்டனர். ஐரோப்பியராலும், இந்துக்களாலும், சுதேசக் கிறிஸ்துவர்களாலும், மகம்மதியராலும் ஒரேவிதமாய் மதிக்கப்பெற்றுக் கண்ணியமடைந்த இவருடைய எல்லா விதத்திறத்தாலுண்டான பயனை எல்லாஜாதியாரும் இழந்தார்களென்று நினைக்கும்போது பெரியதோர் இடியைப்போல் மனதைத் தாக்குகின்றது. அவருடைய உதாரணமுள்ளநடை, அவரடைந்த மேலான கீர்த்தியை அடையும்படிக்கு, அவருடைய குமாரர்களை உற்சாகப்படுத்துமென நம்புகிறேன். அவர் புத்திரர்களில் ஒருவரான நீரும் மற்றவர்களும் மைசூர் சமஸ்தான சேவகத்திலிருந்து உயர்வடைந்து உங்கள் குடும்பத்தின்பெயரை விளங்கச் செய்வீர்களென உறுதிகொண்டிருக்கிறேன்."

---

மேற்படி ப்ரேசர் (Honourable Mr. Fraser) அவர்கள் ரஜாபெற்று இங்கிலாந்திலுக்குப் போயிருக்கையில் அவருக்குப் பதிலாக வேலை

பார்த்தவரும் தம்புசெட்டியாரின் பிரேத அடக்கத்துக்கு வந்திருந்து கனம்பொருந்தியவருமான, ஆனரெபில் A. வில்லியம்ஸ் (Honourable Mr. A. Williams) துரை வரைந்த நிருபம் :—

"அணைகடந்த துக்கத்தோடு உமது பிதா மிஸ்டர் தம்புசெட்டியார், C. I. E., அவர்களின் மரணச்செய்தியை இப்போதறிந்தேன். அவருடைய பிரிவால் மைசூர் சமஸ்தானம் மகா பிரதாபமடைந்த ஒரு [illegible] அதிகாரியை இழந்துவிட்டது. மிகவும் மதிக்கத்தக்க ஒரு இனிய சிநேகரை நானும் இழந்தேன். உமக்கும் உமது குடும்பத்தோர்க்கும் நேர்ந்த துன்பத்தினுக்கு மிகவும் வருந்தி என்மனதிற்கொள்ளும் உணர்ச்சிகளைத் தெரிவிக்கச் சம்மதிப்பீர்களெனக் கோருகிறேன்."

---

தம்புசெட்டியாருக்குப்பின் மைசூர் சீப் கோர்ட்டு சீப் ஜட்ஜாக விருந்த மிஸ்டர் J. W. பெஸ்ட் (J. W. Best) துரையின் கடிதம் :—

"தங்கள் 21உ யுடைய கடிதங்கொண்டு தங்களுடைய மதிக்கப்பெற்ற தந்தையின் மரணச்செய்தியையறிய விசனப்படுகிறேன். மைசூர் அரசாங்கத்திற்குச்செய்த ஊழியங்கள் மதிக்கப்பெற்று அவைகளுக்குத்தக்க சம்பாவனையைத் தங்கள் தகப்பனாரடைந்தாரென்பது தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாளோர்க்குந் திருப்தியைத் தரத்தக்கதாக விருக்கின்றது. உங்களுக்கு நேர்ந்த நஷ்டத்துக்காக விசனிக்கிறேன்."

---

மிஸ்டர் J. வியர் (J. Weir) துரையின் கடிதம் :—

"மஹா கீர்த்திபெற்ற தங்கள் பிதாவின் மரணச்செய்தியைத் தெரிவிக்கும் தங்கள் 21உ கடிதத்துக்கு வந்தனம். இச்சமாசாரத்தை முன்னமே வர்த்தமானப் பத்திரிகைகளில் வாசித்திருந்தேன். தங்களுக்குந் தங்கள் குடும்பத்தினர்க்கும் இதனால் நேர்ந்த பரிகரிக்கக்கூடாத பெரிய நஷ்டத்துக்காக மிகவும் வருந்துகிறேனென்று தங்களுக்கு நிச்சயிக்கிறேன். மைசூர் அரசாங்கத்துக்கவர் செய்த ஊழியங்கள் மிகப்பெரியது; மைசூர் மஹாராஜாவுக்காகவும் அந்த சமஸ்தானப்பிரஜைகளுக்காகவும் அவ்வளவு நன்றாயுழைத்த தங்கள் பிதாவின் பிரிவுக்காக அவர்களெல்லோருந் துக்கித்திருப்பார்களென்பதை நான் நிச்சயமாயுணருகின்றேன். நான் மைசூர்நாட்டில் உத்தியோகஞ் செய்திருந்தபோது மிகப்பட்சத்தோடும், அபிமானத்தோடும், நிதானத்தோடும் என்னை நடத்தினதையும், விசேஷமாய் நான் அச்சமஸ்தானத்தை விட்டுப்போகும்போது அவர் காட்டிய மெய்யன்பையும் நன்றியறிதலோடு எப்போதும் நினைக்கவேண்டியவனாயிருக்கிறேன். அவருடைய பிரிவு அவர் குடும்பத்தோர்க்குப் பரிகரிக்கக்கூடாத நஷ்டமாயிருந்தாலும், அவர் நீண்ட ஆயுள்கொண்டு ஜீவித்து அடையப்பாத்திரராயிருந்த எல்லாமரியாதைகளையும் வெகுமானங்களையும்பெற்று, மேலாகத் தமது ஜீவியத்தின் கடமைகளைச் செய்து, தாமிகப்பற்றுடன் அநுசரித்த வேதக்கொள்கைகளின்மீதுள்ள விஸ்வாசத்துடன் மரித்தாரென்பது அவர்கள் மனதிற்குப் போதுமான ஆறுதல் தரத்தக்கதாயிருக்கும். தங்களுக்கும் மரித்தவரின் மேன்மையுள்ள குடும்பத்தினர்க்கும் நல்லாறுதல் வரும்ப



டிக்கும், எல்லாநன்மைகளும் உண்டாகும்படிக்கும், மனப்பூர்வமாய்க்கோரி என்னுடைய அனுதாப உணர்ச்சிகளை இன்னொருக்கால் தெரிவிக்கிறேன்."

---

மைசூர் மஹாராணி ரீஜெண்ட் அவர்களின் அந்தரங்க காரியதரிசி (Private Secretary) யாக விருந்த கர்னல் காம்பெல் (Colonel J.A. Campbell) துரையின் நிருபம் :—

"மிதமற்ற சஞ்சலத்துடன் தங்கள் கடிதத்திற்றெரிவித்த தங்கள் பிதாவின் மரணச்செய்தியையறிந்தேன். உங்களுக்கு நேர்ந்த துக்கத்துக்காக அனுதாபங்கொள்ளும் தங்கள் பிதாவின் அநேக நேசர்களுடன் நானுமொருவனாகவிருக்கின்றேன் என்பதை நிச்சயமாயறிவிக்கிறேன். நான் தங்கள் பிதாவுடன் கூடி மைசூர் அரசாங்கஊழியத்தைச் செய்திருந்த அநேகவருஷங்கள் அவரை எனது இனிய நேசராகவும், தோழராகவும் மதித்திருந்தேனென்பதை யறிந்து இந்த சமயத்தில் எனக்குக்கடிதம் வரவிட்டதற்காக நான் மிகத் திருப்தியடைகிறேன்."

---

மைசூர் சமஸ்தானத்தில் (Director of Archæological Researches) என்னும் பூர்வீகசாதன ஆராய்ச்சி இலாகாவின் அதிபராயிருந்த மிஸ்டர் ரைஸ் (Mr. L. Rice) துரையின் கடிதம் :—

"21உ யுடைய தங்கள் கடிதத்திலடங்கிய செய்தியையறிய அதிக விசனமுற்றேன். தங்கள் தகப்பனார் உத்தியோக வாழ்க்கையிலும் அந்தரங்க ஜீவியத்திலும், தமது மேலான கல்வித்திறத்தாலும், குணாதிசயங்களாலும், நன்னடத்தையாலும் விசேஷ கீர்த்திபெற்றவராகையால், அவர் பிரிவினாலுண்டான நஷ்டம் எவ்வகையிலும் பரிகரிக்கக்கூடாததாய் அவர் குடும்பத்தினரை உறுத்துமென்பதை நான் செவ்வையாய் உணர்கின்றேன், உங்களுக்கு நேர்ந்த இப்பெரிய துன்பத்தை யுணர்ந்து அனுதாபப்படுகிறேன்."

---

மைசூர் சமஸ்தானத்தில் முன்னர் சீப் இஞ்சினீராக விருந்த கர்னல் D. மக்னீல் காம்பெல் (Colonel D. McNeil Campbell) துரையின் கடிதம் :—

"தங்கள் பிதாவின் மரணச்செய்தியை அன்புடன் தெரிவித்ததற்காக வந்தனஞ் செலுத்துகிறேன். அவர் மட்டில் நான் வைத்திருந்த மதிப்பும் மரியாதையு மிகப்பெரிய தாதலால், இந்த சமாசாரம் எனக்கு அதிக சஞ்சலத்தை வருத்தியது. தங்களுக்கும் தங்கள் குடும்பத்தோர்க்கு நேர்ந்த துன்பத்துக்காக மிக விசன முறுகிறேன். மைசூர் அரசாங்கத்திலிருந்தவர்களுக்குள் தங்கள் பிதாவையும், சர்-சேஷாத்திரி ஐயரையுமே என்னுடைய பெரிய நேசர்களாக மதித்திருந்தேன். அவர்களுடைய ஸ்தானங்களை இதரர்கள் பெறுமவிருந்திருந்தால், மைசூரில் நான் செய்த ஊழியங்களுக்குரிய மதிப்பைக்

கொஞ்சமேனும் பெற்றிருப்பேன். "உமக்கு வந்தனம்" என்னும் வார்த்தைகளைக் கேட்க வென்கிலும் பாத்திரனுகாமல் நான் அச்சமஸ்தானத்தை விட்டுப் போக வேண்டியதாயிருந்தது."

---

மதராஸ் கிறிஸ்டியன் காலேஜின் அதிபராகவிருந்த டாக்டர் மில்லர் (Dr. Miller) துரையின் பேரால் மிஸ்டர் கென்னெத் மாக்கிலர் துரை எழுதியகடிதம் :—

"தங்களுக்குத் தெரிந்திருப்பதுபோல் டாக்டர் மில்லர் தமது கடிதங்களைத் தாமே எழுதச் சக்தியற்றவராக விருப்பதால், அவருக்காக நான் எழுதுகிற வழக்கத்தை யனுசரித்துத், தங்களுடைய 21வ யுடைய கடிதத்தை யவருக்கனுப்பிய தற்காக வந்தனமளிக்கும்படி என்னைக் கோருகின்றனர். எல்லோராலும் துக்கிக்கத்தக்க தங்கள் தந்தையின் மரணத்தை மிக்க சஞ்சலத்தோடு அறிந்தனர். இந்தப் பெரிய துன்பம் உங்களுக்கு நேர்ந்தமைக்காக தாம் அனுதாபங் கொள்ளுவதாகத் தங்களுக்குத் தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொண்டனர். இவ்வளவு பட்சத்தோடு அவருக்கு கடித மெழுதியதற்காகவும் தங்கள் தகப்பனருடன் அவர் பழகியிருந்தமையை மறவாது ஞாபகத்தில் வைத்திருப்பதையும் வெகுவாயுணர்கின்றனர்."

---

பெங்களூர் கன்டோன்மெண்ட் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் (District Magistrate) டாகவிருந்த மிஸ்டர் ஹியுவட்ஸன் (E. Hewetson.) துரையின் நிருபம் :—

"தங்கள் 21வ கடிதம் கைப்பற்றினேன். அதற்காக எனது வந்தனஞ் செலுத்துகிறேன். என்னுடைய மிகவுமதிப்புக்குரிய பழய நேசராகிய தங்கள் பிதாவின் மரணச்செய்தி எனக்குப் பெரிய சஞ்சலத்தைத் தந்தது. தங்களுக்கும் தங்கள் தாயாருக்கும் எனது அனுதாப உணர்ச்சிகளைத் தெரிவிக்கின்றேன். தங்கள் தகப்பனரின் அசௌக்கியத்தைப்பற்றி நானறியாதிருந்ததால் இந்த நிர்பாக்கியச்செய்தி என்னை திடுக்கிடவைத்தது. நான் பெங்களூரைவிட்டு வந்தபின், எங்கள் ஒவ்வொருவரின் வாசஸ்தானம் நெடுந்தூரத்தால் பிரிக்கப்பட்டிருந்ததால், இனி யொருக்கால் எனதினிய நேசரைக்காணும் அதிர்ஷ்டம் வாய்க்காமற்போயினும், வருஷத்திற்கொருக்கால் தப்பாமல் புதுவருஷ வாழ்த்துக் கடிதங்களைப் பெற்று எங்களிலுள்ள அன்னியோன்னிய நேசத்தைப் புதுப்பித்துப் பலப்படுத்தி வரலாமென்று கோரியிருந்தேன். அந்த எண்ணத்தையும் விடும்படியான காலம் நேர்ந்துவிட்டது. அவருடைய பிரிவால் நேர்ந்த நஷ்டத்தை நினைத்து நீங்கள் வெகுகாலம் மனமுருகவேண்டியவர்களாக விருப்பீர்களென்பதை நான் உணர்கின்றேன்."

---

பெங்களூர் சர்வ கலாசாலையின் அதிபர் மிஸ்டர் J. கூக் (Mr. J. Cook, Principal, Central College, Bangalore) துரையின் கடிதம் :—



"மிதமற்ற சஞ்சலத்துடன் நானும் எனது மனைவியும் எல்லோராலும் மதிக்கப்பெற்ற தங்கள் நேசதகப்பனார் தேகவியோகமாயின செய்தியை யறிந்தோம். உங்களுக்கு சம்பவித்த இந்தப் பெரிய நிர்பாக்கியத்தினை நாங்களுணர்ந்து அனுதாபப்படுகிறோமென் றுங்கள் தாயாருக்கும் மற்றுமுள்ள உங்கள் குடும்பத்தோர்க்கும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மைசூர் ராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகபதவிகளில் அவரிருக்கும்போது அவரிடமிருந்து நான் பெற்ற அன்பார்ந்த கடிதங்கள் அநேகம். நல்லிருதயம்படைத்த மரியாதையறிந்த கனவானென்றெப்போது மறவாமல் அவரை நினைத்திருப்பேனென்பதைத் தங்களுக்கு வெளியிடாமலிருக்க நான் சம்மதியேன். கடைசிவிசை அவரைப் பார்த்துப் பேசியபோது நம்மிலிருந்து இவ்வளவு சீக்கிரத்தில் அவர் எடுபட்டுப் போவரெனக் கிஞ்சித்தும் நான் எண்ணவில்லை. இன்னொருக்காலும் எங்கள் அனுதாபவுணர்ச்சிகளை தெரிவிக்கின்றோம்."

---

மிஸ்டர் கிரேஹாம் ஆண்டர்சன் (Mr. Graham Anderson, President, Mysore Coffee Planters, Association) துரையின் கடிதம் :—

"தங்களருமைப் பிதாவின் மரணச்செய்தியைத் தெரிவித்த பட்சத்தினுக்கு நான் மிக்க நன்றியறிதலுள்ளவனாக விருக்கிறேன். தாங்கள் அருந்துயரில் மூழ்கியிருக்கும் இச்சமயத்தில் என்னை நினைத்தெழுதிய அன்பினை அதிகமாயுணரக் கடமைப்பட்டவனாக விருக்கிறேன். தங்களுக்கு நேர்ந்த இத்துன்பத்திற்காக மிகவுந் துக்கித்து என் அனுதாப உணர்ச்சிகளைத் தெரிவிக்க அதிதுரிதமாயிக் கடிதத்தை எழுதுகிறேனென்று நம்புங்கள்."

"மைசூர் அரசாட்சியின் நன்மையையும் விருத்தியையும் உண்மையாகக் கோரியவரும், சமஸ்தான அரசாட்சியை விமரிசையோடு நடத்திக் கீர்த்திப் பெற்றவராக என்றென்றும் நினைக்கத்தக்கவரும், உயர்ந்த நீதிபதியாகவும் அன்பும் அரவணைப்புமுள்ள சிமானாகவும் மரியாதையோடும் ஆச்சரியத்தோடும் எண்ணத்தக்கவரும், சென்றகாலத்தில் அன்னியோன்யமாய்க் கூடிப் பழகிய உண்மையான நேசருமாகிய ஒருவரை, ஐயோ ! அச்சமஸ்தானம் இழந்துவிட்டது."

"அவருடைய நேசத்தைப்பெற்று பெருமையடைந்த என்னைப்போலொத்தவிறரும், அவர் பிரிவால் நேர்ந்தநஷ்டத்தை நினைந்து துக்கிப்பதல்லாது, எல்லோருடைய மரியாதைக்குப் பாத்திரராகவும், அரியஞானமும், தயாளகுணமும், பரிசுத்தநடையும், மனிதர்களுடைய தாரதம்மிய குறைகுணங்களைப் பகுத்தறியுஞ் சக்தியுங்கொண்டலங்கரிக்கப்பட்டவராகவும், நெடுநாள் துரைத்தன ஊழியஞ்செய்து அடைந்தகீர்த்தியை நிலைநாட்டித் தம்மை மற்றவர்கள் உதாரணமாகப் பின்பற்றத்தக்கவராகவும், எப்போதும் வந்திக்கத்தக்கவராகவு மிருந்தாரென்று எண்ணுவார்களென்பது திண்ணம்."

---

மேற்சொல்லிய ஐரோப்பிய கனவான்களல்லாது, இந்தியாவின் நாலாபக்கத்திலுள்ள சுதேச உத்தியோகஸ்தர்களும், பிரபுக்களும்,

எழுதிய கணக்கற்ற கடிதங்களில் சிலவற்றின் மாத்திரம் மொழி பெயர்ப்பு இங்கு அடியில் எழுதுகிறோம்.

மைசூர் சமஸ்தானத்து முன்னாள் திவான், கனம்பொருந்திய V. P. மாதவராவ், C.I.E., அவர்கள் எழுதிய கடிதம்:—

"எனதருமையான நேசரும் உமது தந்தையுமாகிய மிஸ்டர் தம்புசெட்டியாரின் தேகவியோகச் செய்தியை மிக்க வருத்தத்துடன் கேள்வியுற்றேன். நான் மைசூரில் உத்தியோகஞ் செய்யவந்தது முதல் அவரையறிந்து, சமீப காலங்களில் அவருடன் நெருங்கிய உத்தியோக சம்பந்த முடையவனாயிருந்தேன். குற்றமற்ற நல்லொழுக்கத்திலும், உத்தியோகவாழ்க்கையிலும், அவரின் விளங்கிய உயர்ந்த தன்மையிலே மதிக்கப்பட்டதாயிருந்து பிரகாசித்தது. உத்தியோகத்தைவிட்டு அவர் நீங்கிய பின்னும், இச்சமஸ்தானத்தை நடத்தும் வழிகாட்டியாகவும் கவுன்ஸிலில் சேர்ந்திருந்த மந்திரியாகவுமிருந்துகொண்டே யிருந்தனர். இச்சமஸ்தான ஆட்சியின் விருத்தியையும் நன்மையையுங் கோரிய எல்லோரும் அவருடைய ஆலோசனைகளை நாடிப்பெற்று வந்தார்கள். அவருடைய மரணத்தால் பொதுவில் இந்தியரெல்லோருக்கும் விசேஷமாய் எனக்கும் பெரிய நஷ்டம் நேர்ந்தது. உம்முடைய கௌரவம் பொருந்திய தாயாருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் என்னுடைய உருக்கமுள்ள அனுதாபங்களைப் பட்சத்துடன் தெரிவிக்கவேண்டுகிறேன்."

---

திருவாங்கூர் சமஸ்தான மாஜி திவான், திவான் பஹதூர் V. கிருஷ்ணசாமிராவ் C.I.E. அவர்கள் கடிதம்:—

"தாங்கள் நேற்று எழுதியகடிதத்தைக் கொண்டு மிஸ்டர் தம்புசெட்டியார் இம்மாதம் 19ௗ மரணமடைந்தா ரென்றறிய அதிகவருத்தமுற்றேன். அவருடைய பிரிவால் தாங்களும் தங்கள் குடும்பத்தினர்களு மாத்திரமல்ல, இந்தியதேச முழுவதுமே பரிகரிக்கக் கூடாத பெரிய நஷ்டத்தை யடைந்தது. இந்தயிக்கமான சமயத்தில், மரணமடைந்த செட்டியாரைப் போலொத்த யோக்கியதா பட்சமும் அநுபவமும் இராஜவிஸ்வாசமுங்கொண்ட கனவான்கள் இந்தியா தேசத்துக்குத் தேவையாயிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களால் மாத்திரமே ஐரோப்பியர்களுக்கும் சுதேசிகளுக்கும் இருக்கவேண்டிய நல்லுணர்ச்சிகளைப் புதுப்பிக்கக்கூடும். மதராஸில் கடைசியிலே நான் அவரைப் பார்த்தபோது இன்னும் நெடுங்காலம் ஜீவித்திருக்கக் கூடியவரானவராய்க் காணப்பட்டார். கடவுளின் வழிகளையறிய நம்மால் சாத்தியப்படாது. எல்லோராலும் விசேஷவகையில் மதிக்கப்பெற்று வந்திக்கப்பட்ட சரியனஅடைய தங்கள் தந்தையை யிழந்து தாங்களும் தங்கள் குடும்பத்தோரும் படும் பிரலாபத்தை அதியுருக்கமாயுணரும் என் அநுதாபங்களை யங்கீகரிக்கப் பிரார்த்திக்கிறேன்."

---

புதுக்கோட்டை சமஸ்தான திவான், திவான் பஹதூர் S. வெங்கடராமதாஸ நாயுடு அவர்கள் கடிதம்:—



"எனக்கு சென்றவருஷத்தில் சம்பவித்ததுபோல இப்போது தங்களுக்கு நேர்ந்த நிற்பாக்கியத்துக்காகத் தாங்கள் படுந்துயரம் எத்தன்மையதாயிருக்கு மென நன்ருய் உணரக்கூடுமாயிருக்கிறது. ஒருவனைப் பெற்றதந்தை பெரிய பேருங் கீர்த்தியுமடையாதவனாயினும், அத்தந்தையையிழப்பது அவனது ஜீவதசையில் ஒருபெரிய நிற்பாக்கிய சம்பவமாக எண்ணப்படுகிறதாயிருக்க, இராஜதர்மபிரவீணதம்புசெட்டியாரைப் போன்றஒரு அருமையான தந்தையின் பிரிவு அவருடைய குடும்பத்தினரைப் பெருந்துக்கசாகரத்திலமிழ்ந்தச் செய்யு மென்பது ஆச்சரியமல்ல. மகா கனம்பொருந்திய தங்கள் தந்தையின்மேலான பரிசுத்த ஜீவவாழ்க்கையைக்கண்டு மைசூரிலும் பிறவிடங்களிலுமுள்ள அநேகர்மதித்துப் புகழ்ந்து ஆச்சரியமுற்றார்கள். அவர்களில்நானுமொருவனே. தங்களைப்போலவே நானுமிப் பெரிய நஷ்டத்துக்காக வருந்துகிறேன். இப்பெரிய இடியால் பட்டவருத்தத்தை தாங்கத்தக்கச் சக்தியைக் கடவுள் உங்களுக்குத் தந்தருளுவாரென்று நம்புகிறேன்."

---

மைசூர் மகாராஜாவின் மந்திராலோசனைச் சங்கத்து மெம்பராகவிருந்த ராய்பஹதூர் C. மாதய்யா அவர்களிடமிருந்து வந்தகடிதம்:

"உமது பிரியதந்தையின் அசௌக்கியத்தைப் பற்றிக் கேள்விப்படாமல் இத்துக்ககரமான செய்தியைப் பெறக்கிஞ்சித்தேனும் எதிர்பாராதிருந்த நான் தங்களருமை தந்தையின் மரணச்செய்தியைத் திடீரென அறிந்ததால், அது என்னையொரு இடியைப் போல் தாக்கியது. அவர்பிரிவால் மைசூர் சமஸ்தானம் நம்பிக்கையும் திறமையுமுள்ள ஒரு ஆலோசனைக் கர்த்தரையிழந்து விட்டது. விசேஷமாய், மகாராஜா அவர்களைவிட அதிகமாய் யார் இதற்காக வருந்துவார்கள்? என் விஷயத்திலோ, எனக்கொருபெரிய நிற்பாக்கியம் சம்பவித்ததாக எண்ணுகிறேனாகையால், எனக்குண்டான சஞ்சலத்தையெடுத்துக் கூறுவது பிரயாசையாயிருக்கிறது. எங்களிருவருக்குள் பழக்கமுண்டாகி 32-வருஷங்களாகிறது. இந்த நீண்டகாலத்தில் நான் அவருடைய குடும்பத்தைச்சேர்ந்த ஒருவனாகப் பாவிக்கப்பட்டு வந்தேனல்லாது அன்னியனாகப் பாவிக்கப் படவில்லை. நான் எப்போதும் அவருடைய ஆலோசனையைப்பெறவும், புத்தியைக்கேட்கவும் நத்தியிருந்தேன். அவர் எப்போதும் மனமகிழ்ச்சியோடு எனக்குதவி புரிந்து வந்தார். இன்னுஞ் சிலவருஷங்கள் அவர் ஜீவித்திருந்தால் அநேகருக்கு அவரால் நன்மையுண்டாகும். எனக்கும் அப்படியே. இராஜ்ஜியத்தின் நன்மைக்கேதுவாகாத சில திருத்தங்களை மனம்போன போக்கிற்செய்யக்கருதிய சில அதிகாரிகளின் எத்தனங்களுக்குத் தடையாகவிருக்கும்படிச் செட்டியாருடைய ஊழியங்கள் இச்சமஸ்தானத்துக்குத் தேவையாயிருந்தன. தங்கள் தந்தையார் முதிர்ந்த வயதுவரையில், அதாவது 70 வருஷங்கள், ஜீவித்து 50 வருஷங்கள் மிக்க கீர்த்தியோடு உத்தியோகஞ்செய்துப் பிரபலமடைந்து, தமது புத்திரர்களெல்லோரும் நல்லந்தஸ்தில் வாழும்படியான ஏற்பாட்டைச்செய்து திருப்தி கொண்டு, பெற்றக்கடைசி சாதாரணமாய்எல்லோருக்குஞ் சித்திக்காத எல்லாப்பேறுக்கும் பாத்திரராக வரையில்பாக்கியவானாக இருந்தார். அவர் பிரிவாலுண்டான நஷ்டம் பரிகரிக்கக் கூடியதல்ல. இந்தப் பெருந்துன்பத்தைச் சகித்துக்கொள்ளத்தக்க தைரியத்தை உங்களுக்குத் தரும்படிக் கடவுளை மன்றாடுகிறேன்."

மைசூர் சீப்கோர்ட்டின் ஜட்ஜாகத் தம்புசெட்டியாருடன் கூடி உத்தியோகஞ்செய்து, பின்னால் அக்கோர்ட்டின் சீப் ஜட்ஜாகவிருந்த திவான் பஹதூர் A. இராமசந்திர ஐயரவர்கள் எழுதிய கடிதம்:—

"இந்தியதேசாபிமானி (*The Indian Patriot*) என்னும் வர்த்தமானப் பத்திரிகையின் சென்ற சுக்கிரவாரச்சஞ்சிகை மிஸ்டர் தம்புசெட்டியார் அவர்களின் துக்ககரமானசெய்தியை எனக்குக்கொண்டு வந்தது. என் சொந்த சகோதரரொருவரை யிழந்ததுபோல் வருந்தி சஞ்சலமுற்றேன். இனி பெங்களூரின் வசீகரம் எனக்குத் தப்பிப்போயிற்று. என்னுடைய ஜீவியகாலத்தில் அதிக மனமகிழ்ச்சியைத்தந்த சிலவருஷங்கள், செட்டியாருடன் கூடி மைசூர் சீப்கோர்ட்டில் உத்தியோகஞ்செய்த வருஷங்கள்தான். சீப்கோர்ட்டு ஜட்ஜாக நியமனம் பெற்றபோது நான் 35 வயதுள்ள வாலிபனாகவும் அவர் என்னிலும் 10 வருஷங்கள் அதிக வயதுள்ளவராகவிருந்தும், வேலைசெய்வதில் விளங்கிய அதிசயகரமான அவருடைய தீரத்வத்தினுக்கும், சுறுசுறுப்பினுக்கும், ஊக்கத்திற்கும் தகுந்தபடி அவருடன் நான் சரி சொக்கட்டான் போடுவது எனக்கு மகாபிரயாசையாய்த் தோன்றிற்று. அவருடைய ஆத்துமம் சமாதானத்தில் இளைப்பாறக்கடவதாக! அவருடைய மரணத்தால் அவர் குடும்பத்தார்க்குநேர்ந்த துன்பத்தை யுணர்ந்து நான் அனுதாபப் படுகிறேன்."

---

கபூர்த்தலா சமஸ்தானத்தைச்சேர்ந்த அலவேலியா மகாராஜாவின் சகோதரர் சர்-ஹர்மான்சிங், K.C.I.E., அவர்கள் கடிதம்:—

"மிக்க கீர்த்தி பெற்ற தங்கள் பிதாவின் மரணச்செய்தியையறிய அதிக துக்கமடைந்தோம். உங்களுக்குநேர்ந்த துன்பத்தை யுணர்ந்து நாங்கள் கொள்ளும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்க இதை எழுதுகிறேன். தங்கள் தந்தை எல்லோருக்குந் தெரிந்தவர். துரைத்தனத்தாருக்கும் இந்நாட்டுக்கும் அருமையான ஊழியங்கள் புரிந்தவர். தாங்கள் அவரைப் பின்பற்றி நடக்கப் பிரயாசைப்படுவீர்களென்று கோருகிறேன். அவர் பிரிவால் உங்களுக்கு மாத்திரமல்ல இந்தியர்களின் கூட்டத்துக்கே பெரிய நஷ்டமுண்டானது. நமக்கு எது நன்மையோ அதைத் தெரிந்து நடத்தும் கடவுளின் திருச்சித்தத்துக்கமைந்து நமது துன்பத்தைச் சகித்துக்கொள்வதே நமது கடமையாகும். உங்களுடைய சஞ்சலத்தை நோக்கிப் பரிதபிக்கும் எனது உணர்ச்சிகளை இன்னொருவிசையுந் தெரியப்படுத்துகிறேன்."

---

மைசூர் மகாராஜா அவர்களின் மந்திரா லோசனைச் சங்கத்து மெம்பர் மிஸ்டர் K. P. புட்டண்ண செட்டியார் எழுதிய கடிதம்:—

"கௌரவம் பொருந்திய தங்கள் பிதாவின் மரணத்தையறிய அதிக விசனமுற்றேன். எனதுமேலான மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த என்னுடைய ஒரு நேசரை நான் இழந்துவிட்டேனென்று எண்ணி வருந்துகிறேன். இந்த மைசூர் சமஸ்தானத்துக் கவர் புரிந்த கீர்த்திப் பிரதாபமுள்ள ஊழியங்களும் அவருடைய குற்றமற்றமேலான குணாதிசயங்களும் இச்சமஸ்தானப்



பிரஜைகளின் விசேஷமதிப்பைப் பெறச்செய்வித்தன. அவர்மரணம் இச்சமஸ்தானத்துக்குப் பெருந்துன்பத்தை வருத்தியது. உங்களுக்கு நேர்ந்த துக்கத்தை யுணர்ந்து நான்கொள்ளும் அனுதாபங்களை யங்கீகரிக்க வேண்டுகிறேன். நான் அந்த சமயத்தில் மைசூரிலிருந்தமையால் என்னுடைய கடைசி மரியாதைகளை மரணமடைந்த என் இனிய அன்பருக்குச்செலுத்தக் கூடாதவனாயினேனென்று சஞ்சலப்படுகிறேன். ஆயினும் என்னுடைய இருதயம் அவரிடத்திருந்ததென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்."

---

இந்தூர் சமஸ்தான திவானும், டிப்டி கலெக்டருமா யிருந்த திவான் பஹதூர் R. இரகுநாதராவ் அவர்கள் எழுதிய கடிதம்:—

"என்னுடைய பழயநேசரும் தங்கள் தந்தையுமாகிய இராஜ தர்மப்ரவீண தம்புசெட்டியார், C.I.E., அவர்களின் மரணச்செய்தியைத் தெரிவித்த தங்கள் கடிதத்தைப் பெற்றேன். மறுலோகத்தில் சந்தோஷத்துடன் அவருடைய ஆத்துமம் இளைப்பாற மாதேசுவரன் இம்மரணத்தினால் அவருக்குயாதொரு நஷ்டமுமில்லை. நாம் அவருடைய ஆதரவையிழந்தவர்களாய் கடவுளின் மெய்யான ஒரு ஊழியனின் சமுகத்தையும், புத்திமதிகளையும் அடையக்கூடாதவர்களாயினோம். என் அனுதாப உணர்ச்சிகளைத் தாங்கள் அங்கீகரிப்பதன்றி தங்கள் குடும்பத்தோர்க்கும் தெரிவிக்க வேண்டுகிறேன்."

---

மதராஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அப் ரெஜிஸ்ட்ரேஷன் (Inspector-General of Registration) ஆகவிருந்த திவான் பஹதூர் P. இராஜரத்தின முதலியார், C.I.E., அவர்கள் வரைந்த கடிதம்:—

"மிகவும் சங்கிக்கப் பெற்ற தங்கள் தந்தையின் மரணச்செய்தியை யறிய மிக்க சஞ்சலமுற்றேன். மைசூர் சமஸ்தானத்துக்கும், பொதுவாய் எல்லா ஜாதி சுதேசக் கூட்டத்தார்க்கும் பெரியநஷ்டமுண்டானது. நான்பார்த்த சுதேச கனவான்களில் இவர் முதன்மையான குணவிசேஷங்களை யுடைத்தானவராக இருந்தனர். தமதந்தரங்க ஜீவியத்திலும், உத்தியோக வாழ்க்கையிலும் பிறர் பின்பற்றத் தக்க உதாரண நடையுடையவராயிருந்தார். இவ்வித தாரதம்மிய முடையவர்கள் கொஞ்சம்பேர் மாத்திரம் கிடைக்கக்கூடும். அவர் இன்னுஞ் சில வருஷங்கள் ஜீவனோடிருந்திருக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. நமக்கு நன்மையான தெதுவோ அது கடவுளுக்குமாத்திரம் தெரியும். தாங்களும் தங்கள்சகோதரர் சகோதரிகளும்,தங்கள் நல்லதாயாரும் இப்பெருந்துன்பத்தை நல்லமனதோடு சகித்துக்கொள்ளப் பிரயாசைப்படுவீர்களெனக் கோருகிறேன், உங்களனைவருக்கும் என் மனப்பூர்வமான அனுதாப உணர்ச்சியைத் தெரிவிக்கிறேன்."

---

மைசூர் இராஜ்ஜியத்தைச்சேர்ந்த சிவமுகி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும், டெப்யுடி கம்மிஷனருமாயிருந்த M. S. நாராயணராவ் அவர்கள் எழுதிய கடிதம்:—

"மிகவுஞ் சங்கிக்கப்பெற்ற தங்கள் தந்தையாரின் மரணச்செய்தியைக் கேள்விப்பட்டு நான் மெத்தவும் துக்கித்தேன். அவர் அதிக வயதுள்ளவராய் ஜீவித்து அவருடைய புத்திரர்களெல்லாம் உத்தியோகவாழ்க்கையில் அமர்ந்திருக்கப்பார்த்து மரித்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. எல்லோரும் புகழத்தக்க விதத்தில் தம்முடைய வேத அநுஷ்டானங்களையும், தருமகாரியங்களையும் மிக்க அறிவோடும் விமரிசையோடும் நடத்திவந்தாரென்பது உண்மை. அப்படிச்செய்கிறவர்கள் இப்பூலோகத்தில் கொஞ்சம்பேர் மாத்திரமே. அவர் கடவுளால் நேசிக்கப்பட்டு அவருடைய திருச்சமுகத்தினருகில் தமதிடத்தைச் சம்பாதித்துக்கொண்டார். அவருடைய பிள்ளைகளெல்லாம் அவர் நடந்தவழியைப் பின்பற்றி அவருடைய குடும்பத்தின் கீர்த்தியை நிலைநிற்கச்செய்து வருகிறார்கள். அவர் பிரிவால் காலியாயின இடத்தை நிரப்பத்தகுதியான வேறொருவர் கிடைக்கமாட்டார். தங்களுடைய வயதுசென்ற தாயாரை ஆறுதல் படுத்துவது தங்களுக்குக் கஷ்டமுள்ளகாரியமாயிருக்கும். உங்களுக்கு நேர்ந்த இப்பெரிய துன்பத்தை நினைந்து வருந்தி அநுதாபப்படும் உங்கள் திரண்ட நேசர்களில் என்னையும் ஒருவனாகச் சேர்க்கும் பெருமையை யுடைத்தாயிருக்கின்றேன். உங்கள் சஞ்சலங்களை நன்மனதோடு சகித்துக்கொண்டு, இரக்கம் நிறைந்தகர்த்தாவின் திருச்சித்தத்துக்கமைந்து, உங்கள் துக்கத்தை அவருக்கு ஒப்புக் கொடுக்கும்படி வேண்டுகிறேன்."

---

பெங்களூர் டெப்டிகமிஷன (Deputy Commissioner) ராகவிருக்கும் D. தேவராஜ அரசு அவர்கள் வரைந்த கடிதம் :—

"கௌரவம்பொருந்திய எல்லோராலும் மதிக்கப்பெற்ற தங்கள் தந்தை இகலோக வாழ்வைவிட்டு நீங்கினரென்றறிய அதிக விசனமுற்றேன். இச்செய்தியாலுண்டாகிய துக்கத்தையும் இவர்பிரிவால் இச்சமஸ்தானத்துக்கு நேர்ந்த நஷ்டத்தையும் பற்றிச் சொல்லமுடியாது. கடவுள் இவரை இன்னுஞ் சிலகாலம் ஆயுளோடு வைத்திருந்தால் இச்சமஸ்தானத்தாரெல்லாருக்கும் மகிழ்ச்சியைத் தந்திருக்கும். ஆனால் தெய்வதிருவுளம் நிறைவேறுவது தப்பாது. இப்பெருந்துன்பத்தை தைரியத்தோடு சகித்துக்கொள்வீர்களென்று கோருகிறேன். உங்களுக்கு நேர்ந்த சஞ்சலத்துக்காக நான் கொள்ளும் அநுதாப உணர்ச்சிகளைத் தங்கள் சகோதரர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிக்கும்படியாய் வேண்டுகிறேன்."

---

மதராஸ் ஹைகோர்ட்டு வக்கீலும் பிரபுவுமாகிய இராமசந்திரராவ் சாஹேப் அவர்களின் கடிதம் :—

"தங்கள் கடிதம் பார்த்து மதிக்கப்பெற்ற தங்கள் தந்தையின் நிர்பாக்கிய மரணச்செய்தியறிந்து மிதமற்ற சஞ்சலமடைந்தேன். அவர் இந்தியகூட்டத்திற்கோர் ஆபரணமாகத் துலங்கி நின்றனர். அவர் மரணத்தால் நாம் பரிகரிக்கக்கூடாத நஷ்டத்தை யடைந்தோம். தங்கள் குடும்பத்துக்கு நேர்ந்த இப்பெரிய துன்பத்துக்காக மிகவும் வருந்தினது அநுதாப உணர்ச்சிகளைத் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் தெரிவிக்கின்றேன்."



சென்னைநகர் மாஜிஸ்ட்ரேட் கல்க்தான் மோஹிதீன் சாய்பு அவர்கள் கடிதம் :—

"தங்கள் 21வ கடிதம் கைக்கெட்டியது. என்றால் மிக மதிக்கப்பட்ட நேசராகிய தங்கள் தந்தையின் மரணச்செய்தியையறிய மெய்யாகவே பெருந்துக்கத்தை யடைந்தேன். தங்கள் கடிதம் வருமுன்னமே அவர் மரணத்தைப்பற்றியும் அடக்கச் சடங்கினைப்பற்றியும் இவ்வூர் வர்த்தமானப் பத்திரிகைகளில் வாசித்தறிந்தேன். இந்தசம்பவம் நிர்பாக்கியமுள்ள இடிபோல உங்களைத் தாக்கியதென்பதிற் சந்தேகமில்லை. பொறுமையோடும் தைரியத்தோடும் இதை நீங்கள் சகித்துக்கொள்ளவேண்டும். இவர் மரணம் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினர்களுக்கு மாத்திரமல்ல, சுதேசக் கிறிஸ்தவர்களின் கூட்டத்துக்கே பரிகரிக்கக்கூடாத நஷ்டத்தை யுண்டாக்கியது. உங்களுக்கு நேர்ந்த இப்பெருந் துன்பத்திற்காக மெத்த உருக்கத்தோடு அநுதாபப்படுகிறேன்."

---

இராஜா சர் சவலை இராமசாமி முதலியார் எழுதிய கடிதம் :—

"தங்கள் பிதாவின் மரணச்செய்தி என்னை பெருந்துக்கத்தில் மூழ்கவைத்தது. அவருடைய அசௌக்கியத்தைப்பற்றிச் சில தினங்களாக எனது நேசர்களை விசாரித்துக் கொண்டிருந்தேன். நான் எண்ணியபடி அவருக்குண்டான நோய் தீர்ந்து குணப்படாததற்காக விசனப்படுகிறேன். அவருடைய மரணம் உங்களெல்லோருக்குஞ் சொல்லொண்ணாத் துக்கத்தை வருத்தியிருக்கவேண்டும். தங்கள் தாயாருக்கு விசேஷமாய் தக்க ஆறுதல் சொல்லி தைரியப்படுத்தவேண்டும். அவர்களுக்கு எனது அநுதாப உணர்ச்சிகளைத் தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். கடவுள் உங்களுக்கு நல்லாறுதல் தந்து நேர்ந்த துன்பத்தைச் சகித்துக்கொள்ளச் செய்வாராக."

---

மதராஸ் ஹைகோர்ட்டு இன்டெர்பிரிட்டர் (Interpreter) ம-ா-ா-ஸ்ரீ இராமகிருஷ்ண பிள்ளை எழுதிய கடிதம் :—

"நேற்று இராத்திரி வெளிப்பட்ட மதராஸ் மெயில் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய இத்துக்கசெய்தி எங்களை ஒரு இடிபோல் தாக்கியது. தாங்கள் கடைசியில் எழுதிய கடிதம் தங்கள் தந்தைக்குண்டான நோயினின்று மீண்டு சௌக்கியமடைவாரென்றும் கோரிக்கை கொள்ளச் செய்தது. தங்கள் பிதாவின் மரணசமாசாரம் கொண்டுவந்த தங்கள்கடிதம் இன்றுகாலை என்னிடம் சேர்ந்தது. எனக்குண்டான சஞ்சலத்தைச் சரியாயெடுத்துரைக்கத் தகுதியான வார்த்தைகள் என்வசத்திலில்லை. மரணித்த மிஸ்டர் தம்புசெட்டியார் சத்தியவான்; சற்குணசொரூபி; பெரிய கனவான்; அவரைப்போலொத்த இன்னொருவரைக் கண்டுபிடிப்பது மகாபிரயாசை. இன்னும் விஸ்தரித்துப் புகழ என்னாற் சக்தியில்லை. செட்டியார் திவான் இரங்காசார்லு மரணத்தைப்பற்றிச் செய்த வியாசத்தின் முடிவிற் சொல்லிய அடியிற்கண்ட இரண்டொரு வாக்கியங்கள் செட்டியாருக்குஞ் சொல்லப் பொருந்துமாகையால் அவைகளை யெடுத்துக்காட்டி இக்கடிதத்தை முடித்து விடுகிறேன் :—

"ஜீவசமயத்தில் மரணித்தவரை எழுப்பி அவரைக்கேட்கும்படிச் செய்யக்கூடுமாகில், பெரிய வேத வித்துவான் சொல்லியபடி, நோயி முதலியவை சொல்லுந் காட்ட அவசியமில்லாத சால்வத அடையாளத்தினாலாக நீர் இருக்கிறீர். நீர் எழுதியவைகள் எவ்வளவு காலம் வரையிருந்ததோ அவ்வளவு காலமும் நீர் ஜீவித்தாற்போல் இருப்பீர். எங்களுக்கு அவைகளைப் படிக்கவும் புகழவும் அறிவுண்டு."

"இவ்வாக்கியங்கள் எவ்வளவு உரிமையாய் உண்மைக்குத்தரமாய் தம்பு செட்டியாரின் வையூரியங்களை எடுத்துக்காட்டுகிறதென்று நான் சொல்லவேண்டியதில்லை. ஆனால், ஓர் வருத்தத்திரம் தங்களையும் தங்கள் குடும்பத்தாரை மற்றவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது சேர்ந்த துன்பத்தை மனது துயர்ந்து வருந்த வேண்டாம். கடவுளின் சித்தமிதுவானபடியால் உங்களின் நன்மைக்காகவே இது இருக்குமென்பது இன்னணம். சிலநாட்களுக்குமுன் செட்டியாரின் ஞாபகார்த்தச் சின்னமொன்று அமைக்க முயற்சிசெய்து வருவதாகப் பிரஸ்தாபமாயிற்று. அப்படியிருக்குமாகில் அது விசேஷமாய்த் தாராளமாய் என்னையொப்பத் தொகையொன்று கொடுக்கச் சந்தோஷமாய்க் காத்திருக்கின்றேன்."

---

தக்ஷண தேச இந்து கத்தோலிக்குச் சங்கத்தின் பிரிவுகளில் ஒன்றான சென்னை அர்ச்: அடைக்கல நாயகி ஆலயக் கிளைச் சங்கத்தின் காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ V. S. ஞானசபிள்ளை யிடமிருந்து வந்த கடிதம்:—

"மகா கௌரவம் பொருந்திய தங்களுடைய பிதாவின் மரணச்செய்தி, தக்ஷண தேச இந்துக் கிறிஸ்துவர்களெல்லோரையும், விசேஷமாய், அர்ச்: அடைக்கல நாயகி யாலயத்தைச்சேர்ந்த கிறிஸ்துவர்கள் யாவரையும் துக்க சாகரத்தில் மூழ்கச்செய்தது. அக்கனவானை யலங்கரித்த அநேக சுகிர்த புண்ணியங்களையும் குணசிரேஷ்டங்களையும்பற்றி விரிவாயெடுத்துரைக்க வேண்டியதில்லை. அவர் பிரிவால் கத்தோலிக்கு கிறிஸ்துவக்கூட்டத்தினை யலங்கரித்த நம்பிக்கையுள்ள வொருதலைவனை நாமிழந்தோமென்று சொல்வதே போதுமானதாயிருக்கும். மயிலாப்பூர் மேற்றிராசனஞானஅதிகாரம் நிலைபெற்றுவரும் இடங்களில், முக்கியமாய் நம்முடைய கோவிலில், அவருடைய தயாளகுணத்தையும், தாதுத்துவத்தையும் ஞாபகத்தில் வருவிக்கத்தக்க அநேக அடையாளங்களிருக்கின்றன. அவைகளெல்லாம் நம்மெல்லோருடைய நன்றியறிதலைக்காட்டும்படி நம்மைத் தூண்டுகின்றன. அவரிடமிருந்து அடைந்த பலநன்மைகளுக்குப் பிரதிசெய்யக் கூடாத அந்தஸ்திலிருக்கும் நாங்களெல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து அவரினிய பத்தினியாருக்கும் அவர் குடும்பத்தைச்சேர்ந்த மற்றெல்லோருக்கும் நேர்ந்த துன்பத்தை மிக்க உருக்கத்தோடுணர்ந்து, எங்கள் மனப்பூர்வமான அனுதாபங்களை வெளியிட்டுத் தெரிவிப்பதுமன்றி, மரித்த உத்தமவானது ஆத்துமம் நித்தியமோட்சானந்தத்தை விளைப்பாரச்செய்யக் கிருபாநிதியாகிய கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்."

"இந்தமாதம் 23உ யன்று, மேற்படி சங்கத்தார் கூடிய கூட்டத்தில், உமது பிதாவின் பிரிவினால் உங்களுக்கு நேர்ந்த துக்கத்தை யுணர்ந்து வருந்தும்



இச்சங்கத்தாரது அனுதாப உணர்ச்சிகளை உங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமெனச் சர்வசம்மத யேகவாக்காய் செய்த தீர்மானத்தை உங்களுக்குத் தெரிவிப்பதோடு, மரணமடைந்த தங்கள் பிதாவின் ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பெரிய பூசை செய்வித்து இக்கோயிலைச் சேர்ந்த கிறிஸ்துவர்களெல்லோரும் வேண்டிக் கொண்டார்களென்றும் அறிவிக்கின்றேன்."

"செட்டியாரின் ஞாபகார்த்தமாக சாஸ்வத அடையாளமொன்று பெங்களூர் ஹைகோர்ட்டில் ஸ்தாபித்து வைப்பதற்கான முயற்சிசெய்ய ஆரம்பித்திருப்பார்களென இச்சபையார் கோருகின்றனர்."

---

மேற்படி இந்து கத்தோலிக்குச் சங்கத்தின் அர்ச்: சவேரியார் கோவில் கிளைச் சங்கத்தார் ஜூன்மீ 30உ கூடிய கூட்டத்தில், தம்பு செட்டியார் மரணத்தால் அவர் குடும்பத்தினருக்கு நேர்ந்த துன்பத்தை யுணர்ந்து அனுதாபப்படுகிறதாகத் தீர்மானஞ்செய்து, அத்தீர்மானத்தை அச்சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் A. C. அற்புதசாமி பிள்ளையைக் கொண்டு வரைந்தனுப்பினர்.

---

பெங்களூர் The Young Men's Christian Association என்னும் சங்கத்தார் ஜூன்மாதம், 22உ யன்று கூட்டங் கூடிச்செய்த தீர்மானத்தில், தம்புசெட்டியார் இறந்தமைக்காகத் தாங்கள்கொள்ளும் அனுதாப உணர்ச்சிகளை மேற்படி சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் A. A. Ward துரை மூலமாய்த் தெரியப்படுத்திக், காலஞ்சென்ற தம்பு செட்டியார் இச்சங்கத்தின் மீது வைத்திருந்த அபிமானத்தைப் போல் அவருடைய சந்ததியாரும் தங்கள் ஆதரணையையும் அன்பையும் இச்சங்கத்தின் மீதுவைத்திருப்பார்களென நம்பியிருப்பதாக வரைந்தனர்.

---

மங்களூரைச்சேர்ந்த கார்க்கல் என்னும் ஊரின் கத்தோலிக்குச் சங்கத்தின் காரியதரிசியும்,

மதராஸ் முத்தியாலுப்பேட்டை (Benevolent Refectory) என்னும் ஏழைகளுக்கு அன்னமும் ஆடையும் தந்தாதரிக்கும் உபகாரச் சங்கத்தின் காரியதரிசியும்,

பெங்களூர் செண்ட் மார்த்தா ஆஸ்பத்திரியிலுள்ள நல்ல ஆயன் சபைக் கன்னிகைகளின் கூட்டத்தின் சிரேஷ்டதாயாரும்,

கோலார் சாம்பியன் ரீப்ஸ் அர்ச். சூசையப்பர் மடத்துக் கன்னிகைகளும்,

பெங்களூர் சூளை (Little Sisters of the Poor) என்னும் ஏழைகளைப் போஷிக்குஞ் சபைக்கன்னியாஸ்திரிகளும்,

மைசூர் மகாராஜாவைச் சேர்ந்தவர்கள் [illegible] பிராமண [illegible] ஜாதி ஜனங்களின் சமுதாயங்களும்,

மைசூர் அரசாங்கப் பத்திரங்களில், தம்புசெட்டியாரின் பெருந் தன்மையையும், அவருடைய [illegible] குணங்களையும் பற்பல விதமாய் [illegible] புகழ்ந்தனர்.

---

இந்திய தேசத்திலும் வெளிதேசங்களிலும் பிரசுரிக்கப்படுகின்ற பலவிதமான பத்திரிகைகளில் தம்புசெட்டியாரின் மரணத்தை விளம்பரஞ்செய்து, அவர் தமது மேன்மையான உத்தியோக வாழ்க்கையில் [illegible], அவருடைய நற்குண செய்கைகளைப் பற்றியும் உயர்வாகக் கொண்டாடி, [illegible] வெளிப்படுத்தி அவரைப் பெருமையாய்ப் புகழ்ந்திருக்கின்றன. [illegible] இந்நூலில் [illegible] பத்திரிகையில் [illegible], வெளியாகும் இரண்டொரு பத்திரிகைகள் எழுதியவைகளை மாத்திரம் இங்கு மொழிபெயர்த்தெழுதுகிறோம்:—

மைசூர் நகரத்தில் பிரசுரிக்கப்படும் மைசூர் ஹெரால்டு (The Mysore Herald) என்னும் பத்திரிகை பின்வருமாறு கூறியது:—

"மைசூரின் மிக சிறப்புற்றோங்கிய பிரதானமடைந்த [illegible] ஓய்வுபெற்ற [illegible] தி. இரா. அ. தம்பு செட்டியார், C. I. E. அவர்களின் [illegible] (ஆம்) 19-ந் தேதி [illegible] இப்பத்திரிகையில் நாம் வெளிப்படுத்துகிறோம். இவர் மதராஸ் மாகாணத்தில் [illegible] உத்தியோகஞ் செய்து பெயர்பெற்று, மைசூர் அரசாங்கத்தின் சேவையில் [illegible] 33-வருஷகாலம் பற்பல அதிகாரமுள்ள உத்தியோகங்கள் செய்தனர். [illegible]



யிலும், பரிசுத்தத்தன்மையிலும் எவ்விதமாய் சிறந்து நின்றனரோ, அவ்விதமே யாதொரு தயை தாட்சண்யத்துக்கிடங்கொடாமல் தமது மனசாட்சிக்கேற்ப நடக்கும் நடையுடையவராய் விளங்கினர். உத்தியோகவாழ்க்கையில் யாவரையும் சீர்திருத்தி நலம்பெறச்செய்யும் சக்தியுடையவரா யிருந்ததுபோலவே, உத்தமகுணங்களைப் படிப்பித்து உதாரணநடையுடன் காட்டும் ஆசானை யொத்து விளங்கினர். சகலஜாதி ஜனங்களுடைய மரியாதையை ஏராளமாய்ப் பெற்றவர். இப்போது தம்புசெட்டியார் தம் முன்னோர்களுடன் சேர்ந்துக் கொண்டார். அவருடைய சரீரம் மாய்ந்ததற்காகமாத்திரம் நாம் விசனப்பட வேண்டியவர்களா யிருக்கிறோம். அவருடைய நல்லொழுக்கம், கல்வி, மறிவு முதலிய கீர்த்திப் பிரதாபங்கள் என்றென்றும் பிரகாசிக்குமாகையால் அவர் நம்மோடு எப்போதுமிருக்கிறாரென்றே சொல்லவேண்டும். துரைத்தன உத்தியோகத்தை நடத்தும்போதும் மற்றகாலங்களிலும் நீதிநெறியில் அவர் நடந்து காட்டிய உதாரணநடை உத்தியோகஸ்தர்களாலும், மற்றவர்களாலும் பின்பற்றத்தக்க சின்னங்களாக என்றென்றுமிருக்கும். மஹாராணியவர்கள் ரீஜெண்டாகவிருந்து மைசூர் அரசாட்சியை நடத்துங்காலத்தில், மைசூரில் பிரசுரிக்கப்பட்டு வந்த வர்த்தமானபத்திரிகைகளில் ஒன்றை துரைத்தனத்தார் உத்தரவுப்படி நிறுத்திவிடும்படியாயிருந்தது. தம்புசெட்டியார் அப்படிச்செய்வதற்கிடந்தரவில்லை. யாதொன்றையும் விருத்திப்படுத்திப் பலப்படச்செய்வதைவிட்டு அதை நாசப்படுத்துவது தமது கொள்கையல்லவென்று சொல்லினர். வழுவிய பத்திராதிபரை வரவழைத்து, அவருடன் உரையாடி, தர்க்கித்து, அவர் வழுவியதற்குப் பரிகாரமாகத் துரைத்தனத்திற்கு [illegible] விதத்தில், தான் வழுவியதற்காக விசனமுறுவதாயும் அதைத் துரைத்தனத்தார் க்ஷமிக்கவேண்டுமென்றும் பத்திரிகைமூலமா யெழுதிப் பிரசுரஞ்செய்யும்படிச் சொல்லினர். மிஸ்டர் மாதவராவ் மைசூர் திவானாக நியமிக்கப்பட்டபோது, செட்டியார் அவருக்கு நேசப்பற்றுதலோடு பின் வருமாறு புத்திகூறினர்:— "உத்தியோகபதவிகளை யளிக்கும் சுதந்தரமென்னுங் கற்பாறையில் சுதேசாதிகாரிகள் தங்களில் விளங்கிய பாரபட்சகுணத்தை மோதவைத்து தாங்களுடைய மதிப்பையும் கீர்த்தியையும் நஷ்டப்படுத்திக் கொள்ளுகிறார்கள். உம்முடைய நன்மையை விரும்பி நான் உமது மட்டில் கொண்டிருக்கும் சிநேகமானது, தேச அரசாட்சியை நடத்திப் பேர்பெற்று விளங்கமுற நீர் என்னசெய்ய வேண்டியதென்று நான் [illegible] உமக்குச் சொல்லும்படி என்னை யேவுகின்றது. உத்தரவாதமும் நம்பிக்கையுமுள்ள உத்தியோகஸ்தானங்களுக்கு மனுஷரைத் தெரிந்தெடுக்கையிலும், உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களை உயர்வுபடுத்துவதிலும், நமது சொந்த ஜாதியாரென்றும், உறவினரென்றும், சிநேகிதர்களென்றும் மனதிற் கொள்ளக்கூடாது. தெரிந்தெடுக்கப்பட்டவர்களது திறத்தையும் யோக்கியதா பட்சத்தை மட்டுமே முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இப்படி நாம் செய்வோமேயாகில், நம்மருகிலிருப்பவர்களும் நமதன்புக்குரியவர்களு மாத்திரமல்ல, நம்மைத் தெரியாதிருக்கிறவர்களும், நம்மை நேசிக்கத்தக்க காரணமின்றி யிருப்பவர்களும், நமக்கு முக்கியநேசர்களாகவும், நமது முயற்சியையும் செய்கைகளையும் சாதிப்பவர்களாகவுமாவார்கள்." தம்புசெட்டியார் மிஸ்டர் மாதவராயருக்குணர்த்திய மேற்சொன்ன வழிப்பாடுகளின்படியே தாம் நடந்தவராகையால் அவைகளை யப்படியே மிஸ்டர் மாதவராயருக்கு உபதேசித்தனர். இந்த புத்தியை சொன்னவர்

போய்விட்டாலும் சொன்ன புத்தி நின்றிருக்கிறது. இதனையேயாயினும் மிஸ்டர் மாதவராயர் மெய்சொன்ன புத்திமதிபோலேயும் நடந்து காட்டவில்லை. இனிமேலாகிலும் அதைப் பின்செல்வாரிருப்பாரென்று நாம் எப்படிச் சொல்லலாம்? தங்கள் பிரபல்யம் பிறரைப் பாலிக்கும் எல்லா அதிகாரஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களும் பின்பற்றும்படி தக்கதான மேற்கூறிய புத்தி அவர்கள் மனத்தில் பதிவதற்குச் சமயமே கிட்டவில்லை. இக்கனவான் வாழ்க்கையைச் சிறப்பித்த அநேக சந்தர்ப்பங்களைப் பற்றிச் சொல்லவேண்டும்; இப்பத்திரிகையிலுள்ள இடம் போதாதாகையால், அவைகளை விவரிக்காமல் விட்டுவிடுகிறோம். ஆயினும் மைசூர் அரசாட்சியை நடத்திய அதிகாரஸ்தர்களின் அட்டவணையில் வந்தவிடத்தில் தம்பு செட்டியார் ஓர் மேன்மைப்படியைப் பாத்திரம் பெற்றாரென்று பாரபட்சமின்றி யோசித்துச் சொல்லவேண்டுமெனில், மிஸ்டர் ரங்காசார்லு, மிஸ்டர் சேஷாத்ரி ஐயர் இவர்களின் அருகில் அவரைச் சேர்க்கலாமென்று யாம் சொல்லத் துணிகிறோம். மேற்சொன்ன இருகனவான்களும், செல்வத்தாலும் செட்டியாரைப்போலவே உண்மையிலும், நன்னெறியிலும் மேன்மைபெற்று உயர்ந்து நின்ற மனிதர்களாகும். செட்டியாரின் சரீர அடக்க சம்பவம் ஒன்றே ஜனங்கள் அவர்மீது எவ்வளவு மதிப்பும் மரியாதையுங் கொண்டவர்களாயிருந்தார்களென்று காட்டியது. அவருடைய பிரேதம் கல்லறைக்குக் கொண்டுபோகப்பட்ட வைபவத்தைப்போல் வேறொன்று இனிமேல் காணபதரிது. ஆங்கில ராஜாங்கப் பிரதிநிதியாக மைசூரில் வீற்றிருக்கும் ரெஸிடெண்ட் ஆனரபிள் மிஸ்டர் வில்லியம்ஸ் (British Resident, the Honorable Mr. A. Williams) அவர்களும் கணக்கற்ற பெருங் கூட்டமாகச் சேர்ந்த ஐரோப்பிய கனவான்களும், சுதேச அதிகாரிகள் முதலியோரும், செட்டியாரின் பிரேதத்தைக்கொண்ட பல்லக்கைச் சூழ்ந்து நடந்துவந்து அவரைக் கவுரவப்படுத்தினார்கள். செட்டியாரின் மரணச்செய்தி மைசூருக் கெட்டியபோதே மஹாராஜா அவர்களும் இராஜகுடும்பத்தவர்களெல்லோருஞ் சந்தாபத்திலாழ்ந்தனர். உத்தியோகசாலைகளும், கோர்ட்டு கச்சேரிகளும், வித்தியாசாலைகளும் புத்தகசாலைகள் முதலியவும் மூடப்பட்டன. பெங்களூரிலும் அவ்விதமே நடக்கும்படி மஹாராஜா அவர்கள் கட்டளையே ஆக்ஞாபித்தனர். செட்டியார் போதிய வயதுள்ளவராக ஜீவித்திருந்து மரித்தார். அவருடைய புத்திரர்களெல்லாம் நல்ல அந்தஸ்திலிருக்கிறார்கள். தமது முதுமைகாலத்தை மனசிம்மதியோடும், சந்தோஷத்தோடும் போக்கத்தக்கபடியாக ஒன்றும் அவருக்கிருக்கவில்லை. அவர் பாக்கியமான மரணத்தையடைந்தார்; என்றாலும், அவர் பிரிவால் அவர் குடும்பத்தார்களுக்கும், பொதுவாய் ஜனங்களெல்லோருக்கும், சேர்ந்த நஷ்டம் பரிகரிக்கக் கூடாததாயிற்று. மைசூர் இராச்சியத்திற்கு ஒரு சூரியனைப் போலிருந்து பிரகாசித்தார். அவரிடத்தில் வைக்கத்தக்க சரியான இன்னொருவரைக்காண்பது அரிது. இவ்வளவு பிரவீணராகிய அவரை ஜனங்கள் மதித்து மரியாதையைப் பக்தியுடனே இன்னொருவருக்குச் செய்வதரிதென்பதும், சட்டதகாரியமென்று கிடைக்கிறோம். செட்டியாருடைய குடும்பத்தார் யாவும் துக்கத்தை நினைத்து வருந்தி எமது அனுதாப உணர்ச்சியை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்."

---

பெங்களூரில் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகிற மைசூர் வெற்றிக்கொடியோன் (The Mysore Standard) என்னும் பத்திரிகையின்



ஜூன்மாதம் 22வ. சனிவார சஞ்சிகையில் செட்டியாரின் மரணச் செய்தியைப் பிரசித்தஞ்செய்து, அவர் சென்னபட்டணத்தில் ஆரம்பித்த உத்தியோகவாழ்க்கை மைசூர் திவான் பதவியோடு முடிவு பெற்றசரிதையைச் சங்கிரகமாகக் கூறி அவ்வாழ்க்கையில் அவர் அடைந்த கீர்த்தியையும் வெற்றியையும் பற்றிப்புகழ்ந்து பின்வருமாறு வரைந்தது:—

"தம்பு செட்டியாரின் சரீர அடக்கச் சடங்கு குருவாரம் நடந்தது. அடக்கத்திற்கு வந்திருந்தவர்களின் தொகை எண்ணிமுடியாது. பிரிட்டிஷ் ரெஸிடெண்டு முதல் துரைத்தன அதிகாரர்களும், உத்தியோகஸ்தர்களும் பெருங்கும்பலாக வந்திருந்ததல்லாது, இவரது பிரிவுக்காகத் தாக்கப்பட்டு அநுதாப உணர்ச்சிகளைத் தெரிவித்த தந்தி செய்திகளும், கடிதங்களும் எல்லாத் திசைகளிலிருந்தும் திரண்டுவந்தன. இஃதொன்றே, மரித்த செட்டியாரை எவ்வளவுமேன்மையோடும், மதிப்போடும், மரியாதையோடும் ஜனங்களெண்ணினார்களென்பதை விளக்கிக்காட்டுகின்றது. இவருடைய மரணத்துக்காகப் பட்டுப் பெருந்துக்கமும் இவரது மேலான ஜீவியத்தையும் உத்தியோக வாழ்க்கையின் மேன்மையையும் எண்ணிப்படும் ஆச்சரியமும்போல், பொது ஜனங்களின் அநுதாபமும் மதிப்பும் பெறப்பாத்திரமுள்ள வேறொருவர் இச்சமஸ்தானத்தில் இக்காலத்திலில்லையெனச் சொல்லலாம். கட்சிவாதங்களுக்கும், பொறுமைக்கும் இடங்கொடாமல், பொதுக்காரியங்களில் உண்மையையும், பரிசுத்தத்தனத்தையும் கைப்பிடித்து மைசூர் ஜனங்களின் நன்மைக்காக எப்போதும் மனமாறப் பாடுபட்டுழைத்தவரும், எந்த விஷயத்திலும் பாரபட்சமின்றி நடுநிலைமையாக அபிப்பிராயஞ் சொல்லத்தக்கவராகப் பிரஜைகளால் எதிர்பார்க்கப்பட்டவரும் இவர் ஒருவரே. சாதாரணமாய் உத்தியோகஸ்தர்களில் வழங்கிவரும் துஇரோபாய நெறிதப்பிய நிருத்தியங்களுக்கு ஒருக்காலும் உடன்படாது நின்றவர் இவரே. இவர் சாந்தசொரூபியாதலால் அதிகாரஞ் செலுத்துவதில் கடினமாய்ப் பிரவர்த்திக்குந் தன்மை இவரிடத்திலில்லாதிருந்தாலும், நீதிபதியென்னு முறையில் இவர் கொடுத்த அபிப்பிராயங்களும் செய்த தீர்மானங்களும் சரிநிறையாய் முதிர்ந்த யோசனையோடும் பிறர் குற்றங்கூற இடந்தராவகையிலுமிருந்து இவருடைய கீர்த்தியைப் பிரகாசிக்கச்செய்தன. மந்திராலோசனைச் சங்கத்தின் அங்கியாக விருந்து இவர் கொடுத்த அபிப்பிராயங்கள் இவருடைய விவேகத்தின் உன்னதத்தை எடுத்துக் காட்டத்தக்கவையாயிருந்தன. மைசூர் சிவில் செர்விஸ் பரீட்சையை ஸ்தாபிக்கும்பொருண்டு வரும் விஷயத்தில் மந்திர சங்கத்தில் நடந்த வாதத்தில், இவர் சென்னபட்டணத்தாராயினும், மைசூரார் பட்சத்தையே தாங்கிப்பேசினார். இவருடைய இல்லறவாழ்க்கையில், இவரைப்போன்ற பெரிய பதவியை வகித்த உத்தியோகஸ்தர்களிடத்தில் விளங்கிய அக்கிரமங்களினின்று நீங்கியிருந்தனர். இவர் கிறிஸ்துவரென்கிலும் உயர்ந்த ஜாதி ஹிந்துவைப்போல் ஆசாரசீலராய் ஒழுகினார். இவர் அநேக தருமங்கள் செய்தவர். அவைகள் பிறர் அறியவும் மதிக்கவும்படும் விதத்தில் வெளிகாட்டாமல் இரகசியமாகவே செய்து வந்தார். இவர் எல்லோரையும் அவரவர்கள் தராதரமறிந்து தக்கமரியாதையோடு நடத்திவந்தனர். கோபத்தைக் காட்டத்தக்க சந்தர்ப்பங்களிலும் கடினமான வார்த்தைகள் அவர் நாவினின்று வெளிப்பட யாம் பார்த்ததில்லை. இவரின் உயர்ந்து வளர்ந்த கெம்பீர தேகத்தின் முகச்சாயலும் அவையவங்களின் லட்ச

[illegible] குணத்
[illegible] விருந்தன. [illegible]
[illegible] இருந்தாலன்றி [illegible]
[illegible] இச்சமஸ்தானத்துக்கினி
கிடைப்பதரிது.

---

புதுவை மகா வித்வான் ம-ள-ள-ஸ்ரீ செ. சவராயலு நாயகர் கூறின

சரமகவிகள்.

—⁂—

விருத்தம்.

தம்புசெட்டியார் என்னும் [illegible] புண்ணியரே தயாளரே இவ்
[illegible] அநேகமுந் தெய்வமே [illegible]
[illegible] பரிசுதந்த நல்லோரே இவ்
[illegible] ஐயோ. (1)

உம்மைப்போல் [illegible] உயர்பேர் பெற்றோர்
[illegible] தவித்து வாடும்
[illegible] இல்லையே எமக்கை விட்டு
[illegible] வியக்கின்றேமே.

அரியகலை [illegible] அறிவும் கல்வி இயல்லாம் ஆய்ந்து தேர்ந்தோர்
அரியவெளி [illegible] காதலித்துக் [illegible] அமைந்துயர்ந்தோர்
அரியர் [illegible] அநேகபெரும் பட்டங்கள் அடையப் பெற்றோர்
அரியரெல்லாம் அமைந்த தம்பு செட்டியா [illegible] யாரே. (3)

மன்னருந்தக் குணமுடைய [illegible] பாரியாளும்
[illegible] தம்பும்
[illegible]
[illegible] இருகுடை. (4)

[illegible] பெத்திமார் [illegible] நல்ல
[illegible] செட்டியார் [illegible]
[illegible] கனிக்கச் செய்த
[illegible] தம்புசெட்டி யாரே [illegible] நாடிநிற்க. (5)

மண்ணுலக [illegible] வாழ்க்கையெல்லாம் பெற்றின்று [illegible]
விண்ணுலக [illegible] இன்று [illegible]
[illegible] வாழ்த்த
[illegible] தம்புசெட்டி யாரே [illegible]

---



பெங்களூர் சேன்ட் ஜோசெப் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
ம-ள-ள-ஸ்ரீ, அ. வேங்கட சுப்புப்பிள்ளை யவர்கள் கூறிய

## இரங்கற் பாக்கள்.

—⁂—

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

மண்ணுலக வாழ்வைமதித் தனுபவித்துப் பின்வெறுப்புண் மருவியேயோ
விண்ணுலக மதித்துணர நினைந்தேயோ மெய்ஞ்ஞான மிகுத்த சீரால்
எண்ணுலகப் பெரியோர்கள் பணிந்தேத்துஞ் சேசுபா ணிடைவிடாம
னண்ணுலகம் புகற்கேயோ வெதுகருதித் தம்பு மன்னு நடந்த யிங்ஙன். (1)

குடம்பையது தனித்தொழியப் புட்பறந்து சென்றதுபோற் குலவிவாழ்ந்த
வுடம்பைவிடுத் துறவினரை நண்பர்தமை விடுத்துயிருங் குறுதியான
விடம்பெரிய சேசுகுரு நாதனிரு மலரடிகளெனப் பிடித்தே
விடம்பரிசிலாதகன்றாய் தம்புமன்னு நீள்வதுண்டோ விளம்புவாயே. (2)

தந்தைமகற் காற்றுநன்றி யவைமுதன்மை யுறக்கல்வி தருதலாகும்
மைந்தனவற் காற்றுநன்றி யவன்றவச்சீ ருலகுசொல வைத்தலாகும்
இந்தவகை யிரண்டாலுஞ் சிறிதேனுங் குறைவின்றி யிலகியார்க்கும்
முந்தியிருந் தனைதம்பு மன்னுநின் திறனென்னென் மொழிதற் பாற்றே. (3)

கற்பவையீங் கிவையெனவே கசடறநீ கற்றுணர்ந்தாய் கற்றவாறே
நிற்பதுதான் பயனெனமற் றவர்க்கெடுத்துக் காட்டாக நின்றாய் சொற்றேர்
விற்பனருண் [illegible]வரும் வென்றிதரு சொல்லாற்றன் மிகப்படைத்தாய்
நிற்பெறுமின் னுரைகேட்கத் தம்புமன்னு விம்பருக்கு நேருங் கொல்லோ. (4)

நண்பரையே படைத்ததல்லாற் பகைவரைநீ படைத்தறியாய் நள்ளாரேனும்
பண்புறுநின் சமுகமுறிற் பகைமையறக் கேண்மைபுரி பான்மையோராய்
ஒண்பருவ மருவிநிற்பா ரியற்றவல்ல முதுக்குறைவா லோங்கினின்றாய்
கண்புரையுந் தம்புப்பேர்க் குணமலையே யென்றுனையாங் காண்கிற்போமே. (5)

ஆங்கிலமுஞ் செந்தமிழு மாந்திரமுங் கன்னடமு மான்றோர் மெச்சப்
பாங்கினொடு கற்றுணர்ந்தாயுணர்ந்தவற்றாற் பயனுறவும் பழகினின்றாய்
ஓங்கியபல் சட்டமுணர்ந் துயர்நீதி யதிபதியா வுயர்ந்தப் பெற்றாய்
தீங்கிழையாச் சுகுணனெனுந் தம்பு மன்னு வென்றுனையாந் தரிசிப்போமே()

அகத்திருந்த கருணைநிரம் பியதாக விளங்கியதின் னருளின் பார்வை
முகத்திருந்த விழிக்கமல மலர்காட்ட வின்சொல்வாய் முளரிகாட்ட
சகத்திருந்த வாதுலர்க்குக் கைக்கமலங் கொடைகாட்டத் தருமப்பைங்கூழ்
மிகத்திருந்து நெறிவளர்த்த தம்புமன்னு நின்பிரிவால் வெம்புற்றேமே. (7)

காவலருக் கிருகண்போற் சிறந்தன்றோர் குறிப்புணர்ந்து கருமமாற்றி
மாவலநல் மந்திரியாய்த் தந்திரியாய் விளங்கியவா வாழ்த்தப் பெற்றாய்
ஏவலுமன் பொருளிடமுந் தழைத்தோங்கத் தனதனையொத் திருந்தாயந்தோ
பாவலரின் குணத்தேடத் தம்புகண்பா லெங்ககன்றாய் பகருவாயே. (8)

இல்லையென வந்தடுத்தார் குறையகலப் பெருமகிழ்ச்சி யிரயம்பூப்ப
கல்வைருள் பாராட்டி யுயர்கினைகியிட்டோ கவிஞருரானம்
வல்லகீரா விசாரக்கக் கோயிலுக்குப் பெரும்பொருளை வாரியீந்தாய்
சொல்லரிய புகழ்த்தம்பு வேளே நின் பிரிவெண்ணித் துயராரியாரே. (9)

யானேயின் னுடலாக நீயேயென் னுயிராக வென்றுன் வாழ்ந்த
கோனேயெம் குற்றமோ வெனைப்பிரிந்து செல்லுமனங் கொண்டதென்றே
மானேநின் னினம்பிரிந்தாற் போலானே னென்றனது மனையாள்வாட
வானேறி யிருந்தனையோ தம்புமன்ன வுன்மையுந்து வறந்தனையோ. (10)

எனைப்பயந்தாய் கல்வியுது கற்பித்தாய் பொருள்செயலிங் கெனக்குத்தியோகந்
தினைப்பயந்தாய் மணம்புரிவித் தாயெனது விருத்திதனை தினமுநோக்கி
யினைப்பயந்த மோகமோ வருள்புரிந்தா யுன்பிரிவை யினநா னுற்றேன்
எனைப்பரின் றிரயலுமின் மகன்புலம்பத் தம்புமன்ன வெங்குற்றாயோ. (11)

தருமராஜப் பெயரோன் சத்யராஜப் பெயரோ னென்போர் தாங்கும்
பெருமைசா லினர்குமரன் பரிவிலுறும் நின்பிரிவைப் பெரிது முன்னி
இருமையிலு மீடேற வைப்புரந்த விறைவாவென் றுருகியன்றோ
யருமைமிகப் பாராட்டி யகம்வாடப் பிரிந்ததென்றே வருளலிங்கோனே. (12)

தனசாமி யெனும்பெயரைத் தந்தையெனக் கிட்டனையான் சனிந்தவந்நாள்
கனசாமி நீயெனக்குப் பெயர்நிசமா யிடவைத்த கருணை காட்டி
மனசாலென் னன்றை வென்றுனைக்காண்பே னென்றுதம்பி வருந்தல் காணாய்
அனசாமி சேசுபத மடைந்ததென்னே தம்புநம்பி யறைகுவாயே. (13)

நின்னருமைப் புத்திரிக ளவருள்ளும் பகவதிநின் னினைந்து தேம்பிப்
பொன்னருமை பெருமையடைத் ததுபோலச் சிறந்தவப்பா புண்யவானே
மன்னருமை குராண்ட ஸ்ரீசாமராஜேந்த்ரன் மற்று மன்றேன்
பன்னருமந்திரி முதலோர்க் கிருகண்ணே யெனவிரங்கல் பாராய் தப்பு. (14)

மன்னவன்ஸ்ரீ கிருட்டினராஜேந்திரனு மற்றவன்றன் மந்த்ரிமாரும்
நின்னருமை நன்மதியா லோசனைக ளவைநினைந்து நினைந்து தம்முள்
துன்னரிய துயர்படைந்த விசுதீந்துப் பரஞ்சார்ந்தீர் பகருங்காலை
புண்ணியனைச் சேசுபெரு மானுகனி யருளவையு முளதோ தப்பு. (15)

பெரிய நின்றன் குடும்பத்து மருகர்களு மருகிகளும் பிறகேனரும்
தூரியபர லோகமுற்ற நின்கொடையு நன்னடையுஞ் சொல்லியந்தோ
வரியகுண மேருவையா மினிக்காணு நாளெதுவென் றரற்றநீத்தாய்
உரியபரம் பொருளுறவாற் றம்புகம்பீ யிவ்வுறவை யுன்னுவாயோ. (16)

அன்றொருநா ளென்னுடனேர் நண்பகலில் வசனித்தே யமர்ந்த காலை
நன்றெனது குலாங்கவி யுளாங்கவில் வீற்றிருக்கு ஞானரூபம்
ஒன்றுபாரீந் சோதியினைக் கண்டுகொண்டேன் குறைவிலனென் றுரைத்தாய் [நீயே
இன்றும்மதை மறக்கிலேன் தம்புவுனை ஞானியென வெண்ணினேனே. (17)

எத்தனைபேர் சிறப்படைந்தோ ரிருந்தாலு நின்போல்வா ரிசமேல்யாரே
முத்தனையாய் நினையொப்பார் தமிழருமை கண்டறிந்த முது ஞானத்தோய்



வித்தமிகப் பாவலர்க்குத் தந்தமகிழ்ந் தவர்கேண்மை விழைந்திட்டோனே
பத்தருனைச் சூழ்ந்துவரத் தம்புமன்னு விண்புகுந்த பரிசியாதே. (18)

ஆசனங்கள் பலவுள நின் மாளிகைவந் துனைக்காணு மன்பரான
மாசனங்க ளவற்றமரத் தாரகைநாப் பண்மதிபோல் வயங்கினின்றாய்
பேசனங்க ளோன்று யவையனைத்தும் விடுத்தனையாய்ப் பிரமாண்டத்தே
யீசனங்க ணமருலகா சனமடைந்தாய் தம்புமன்னு விதற்கீ டுண்டோ. (19)

நின்னருஞ்சோ தரனவன்றன் மகண்மருகர் நின்குடும்ப நின்மாணில்லாள்
பின்னருநின் பேராசி தனைநினைந்து வாழ்ந்தலகிற் பிறங்கா நிற்க
வன்னவருக் காசிவழங் கினைநினது குருவாசி யது நீ பெற்றே
துன்னுபர மண்டலவாழ் வடைந்தனையே தம்புமன்னு சுகவானீயே. (20)

---

## இராயபுரம் வித்வான் A. S. ஜெகராவு முதலியார் கூறிய

## ச ர ம க வி.

### ஆறுசீராசிரிய விருத்தம்.

வான்வழங்கு நலமுழுது மன்பதைக ளினிதருந்த வழிசெய் நாதன்
ஊன்வழங்கு முருக்கொண்ட பத்தொன்பா னூற்றேழி னுயர்சூன்மாதந்
தான்வழங்கு மீத்தொன்பான் றேதிபுதவாரத்துத் தானடைந்தான்
தேன்வழங்கு திருமொழியான் தம்புசெட்டி யெனும்பெயரான் றெய்வநாடே.()

இத்தகையான் யாவனெனி லியம்புதுமோ திமப்பெடைக ளினவண்டார்ப்ப
முத்தனைய சினைகாக்கு முண்டரிகத் தடவாவி முயங்குஞ்சோலைக்
கொத்தமருந் திரிசிராப் பள்ளிநகர்க் கௌரிகுலக் கொழுகொம்பானோன்
உத்தமன்சீர் தேசாயி ராயலு செட்டித்தவமே யுருவாய் வந்தோன். (2)

அன்னையெனுங் கித்தேரி யம்மாளுக் காருவ தாயமைந்தன்
கன்னனிகர் கொடையாளன் தனசாமிக் குடன்பிறந்த காவலாளன்
தன்னிகரில் ராயலுவேள் தருமராஜப்பிரபு சத்யராஜ
மின்னுதம்பு செட்டியிவர் நால்வரையும் புத்திரரா விழைந்தமேலோன். (3)

புத்திரப்பே றினுமதிக மில்லையெனும் வள்ளுவர்சொல் பொய்யா வண்ணம்
இத்தலத்தி லுயர்பொன்னு செட்டி யெனும் மெய்ப்புகழோ னினிதுநோற்ற
மெய்த்தவமே பெண்ணுருவாய் மண்ணுலகில் வந்ததென வியந்து போற்ற
மொய்த்தமலர்க் குழலழகி சின்னம்மாட் கொருமகளா முளைத்துத் தோன்றி. (4)

கற்பினுக்கோ ரிலக்கான ராஜம்மை தெய்வமெனக் கருதுகொண்கன்
பொற்பினுக்கோ ரிலக்காக வரும்அமரா வதியம்மை பூங்கோல்போலுஞ்
சிற்றிடையாள் சத்யவதி செய்யதன வதிசுகுண செல்வ மெல்லாம்
முற்றுடைய பகவதியா மிந்நால்வர் செல்விகளா மொழிய வாழ்ந்தோன். (5)

இந்தியா பெருமாட்டி விக்டோரியாளம்மை யினிமை கூர்ந்
ஈந்ததொரு சி. ஐ. இ. பட்டமுடன் லார்ட் ரிப்ப னென்னும் பூபன்
ஆய்ந்துதரு பொன்னெடிக்போ லொப்பிலாப் பதமெடில்க ளளிப்பப்பெற்றேன்
சார்ந்தவரை யாதர்க்குங் காணிக்சோர் கற்பகமாந் தழைத்துநின்றேன். (6)

சேவைதரு மெய்ஞ்ஞானச் சுவேரியார் திருவுருவைச் சேவை செய்யக்
கோவைநகர் சென்றங்கே யத்தியட்ச குருமுகமன் கூறக்கேட்டோன்
பாவைபெறு மணிமாட மிலிலிநகர் தர்பாரிற் பயன்மிக்குற்றேன்
தேவைபெறு முனிருளை நற்றேப்பா வென்றுநாலைச் சிந்தை செய்வோன். (7)

பரிசுத்த பாப்புகுரு சன்னுருவப் பொற்பதக்கம் பரிசிலீய
வருசுத்த மகாராணி ரீஜெண்டு தருவரிசை மகிமையேவப்
பெருசுத்த முவராஜ தர்மப்ர வீணனெனும் பெயரேசாவத்
தருசுத்த குருமார்கள் பெரியோர்கள் நட்பெல்லாந்தழுவப் பெற்றேன். (8)

செப்பரிய எட்வர்ட்டு ஆல்பர்ட்டு விக்டரெனுஞ் செம்மலோரை
ஒப்பில்லா லார்ட்கர்ஜன் முதலாய துரைமாரை யுவப்பக்கண்டோன்
அப்பின்றி வடநாட்டிற் பர்க்கியினில் நேர்பஞ்ச மனைத்துந் தீர்த்தோன்
முப்பொழுதுஞ் சேசுமரி சூசையடி மறவாத முழுநெஞ்சுள்ளோன். (9)

மைசூரி னரசுரிமை மந்திரியாப் புவிமுழுதும் புகழ்செய்தோன்
மைசூரின் முதல்நீதித் தல்முதன்மை நீதிபுரி மாண்பு பூண்டோன்
மைசூரின் மந்திரசங் கத்துமுத லங்கியென மதிக்கப் பெற்றேன்
மைசூரின் வேந்தரிரு கண்மணிபோல் நீங்காத வாழ்க்கை கொண்டோன். (10)

கிடைக்கரிய மீன்முடியுங் கதிருடையு மதியடியுங் கிழமை தோன்றக்
கடைக்கணருள் சுரந்தன்பு மீதூர வடியவரைக் காக்குஞ்சென்னை
அடைக்கல நாயகியன்னை திருவடிக்கே யன்புசெய்த வருமையாலே
அடைக்கலநா யகியடியே யடைக்கலமாக் கொண்டெழுந்தானறைவ தென்னே.

---

திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த மணவைமாநகரம் ம-ள-ள-ஸ்ரீ
மனுவேல் பிரான்சீஸ் உருதிர்க் அவர்கள் கூறிய

சரமகவி.

பதினென்கு சீரடி இரட்டை ஆசிரிய விருத்தம்.

சீரணியுலகைப் புரந்திட மறுவாத்
　தேவர் தோன்றிதித்த வாயிரத்திற்
சேர் தொளாயிரந் தேழ் வற்சரந்திங்கள்
　தென்னிய வானியத் தொன்பான்
திகதியாம் புந்தி வாரநள் ளிரவிற்
　செல்பத நாற்பத்து நான்கில்
ஜெகமெலாம் விளங்கு சிறப்பினன் மாண்பன்
　திரிசிர புரத்தின்மா வள்ளல்.



சீரணி வெள்ளி குலவதிபதியாய்
　நின்றராயது தவத் துதித்தோன்
நிகழ்த்தருந் தலயாரு குத்சீயத்தாய்
　நிமல பொன்னடிமுடி சூடி
நியமமாய் வாழ்ந்தோன் அடைக்கலத்தாய்க் கோர்
　நிகரிலாத் தமனியப் பீடம்
நெறியொடு அமைத்தோன் மயிலை மேற்றாணி
　நேசமுறுயுற்ற மா செல்வன்.

ஏரணி சென்னை ராஜதானியுமற்
　றெங்கணுமுள கிறிஸ்துவர்க் கோர்
இன்புறு திலகம் போன்றவன் மைசூர்
　இராஜ்ஜியத் தெழில்பெறு மந்த்ரி
இந்தியராஜாங்கத்தினற் சபைக்கே
　இயைந்தவோர் தோழன் சி. ஐ. இ.
என்னுமோர் பட்ட வர்த்தனப் பிரபு
　இணையிலாக் குணநல முடையான்.

பேரணிகற்பு செறி மனையாளும்
　பெட்புறு புத்ர பௌத்திரரும்
பெருமிதச் செல்வ பாக்யமும் பந்து
　பேதமிற் காவலே வரும்
பெற்றுயர் தெவரு மதிக்கவே சிறந்தும்
　பெரிதல விவையெனா நீத்துப்
பேறுதப்பு பூயன் வான் செல்வப்
　பேருல கடைந்தனன் மாதோ.

---

இச்சரித்திர நாயகரின் இளைய சகோதரரும் இச்சரித்திரத்தை
எழுதியவருமாகிய ம-ள-ள-ஸ்ரீ, தி. இரா. தனசாமி செட்டியார் இயற்றிய

இரங்கற்பாமாலை.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருமருவுங் வெளிகுல திலகமாய்ச் சிராப்பளியில் ஜெனித்துச் சென்னை
மருவியங்கு வாழ்ந்த இராயலுசெட்டி யாரொனுகம் வண்போர்த் தாதை
அரியகுண வதியார்கள் கித்தேரியம்மாள் தனைமணந்துசெய் தகில மீதிற்
பிரியமுற வினையெனையு நான்குசகோ தரிகளையும் பெற்றா ரன்றே. (1)

பெற்றெடுத்த மக்கடமிற் கொண்டம்மாள் சின்னம்மாள் பெரியம் மாயிக்
குற்றமணை வாளர்களைத் தெரிந்துதந்தை மணஞ்செய்தா ருளங்களித்தே
மற்றெனையு மென்னுடனே சின்னம்மாய் தன்னையுமிம் மண்மேல் விட்டு
நற்றவர்சேர் வான்பதிநம் மன்னைபிதா விருவருமே நாடிச் சென்றார். (2

அதிபால பருவத்தே யிருந்தவனை கம்பீரிலிகாண் டாதரித்த
குடுச்சன்னமைத் யூனார்வயாள்று செட்டிச்சன்னம் மாளுற்செய் தூய்தவத்து
பிழமோதும் பயிர்த்திடா, யுமாரின நீவளர்த்து வலமிர் தனமோர்
பழமேய்பாக் யோமாரு வாழ்த்துபத்தும் பரிகாசமோப் பயர்தா யர்மே. (3)

இன்னவரும் என்றமியா மென்மருமே புத்திரர் திருவ ராஜூர்
முன்னவனே நம்தாவத ஜீராயபுயமே கொண்டழைக்க மொழிந்தாயன்மேறு
ம்லனவர்க்குத் திருமாபூ சித்தயரா ஜேனவமாங்கும் பெயரைச் சூட்டி
மன்றுமாடயமபுமெனுயுமேயனை மோகனிட்டன் கொண்டேபாங்கச் செய்தாய். (

வல்லயுமராபதிசத் தியவல்ரம் நனவதியாய் வாய்த்த காமம்
சொல்லிமுன்மூ வையயனுதா பிம்மூன்று புத்ரிகளின் றேன்றிறற்கு
நல்லபக வதியவன்றும் நாமமதைத் தந்தவட்கு நன்மை செய்தாய்
எல்லவர்க்கு மனைடபுரிந்த பிதிபயர்த மக்களுக்கு மிக்காய் காய்ந். (5)

உன்னிலிருத் ஆம்பயிர்த்த புதமிட் பொனத்தா நிகளிய் வலமக் குனிகளில்
மின்னுமப் ராங்கேரித்தம் போலவரியா மெருந்ரான்று மிளிரும் விண்மீன்
என்னவிளங் குவழிகலிக் குலப்பத்தன் பராப்பிதா மென்று உன்னே
பண்ணுமப்பாக் வயமுலைக்குப் பரமனளித் தாரிற்தப் பர்மன் ரமே.

இம்மட்டோ கீயவைத்த அபாக்யமனை ஞா அன்றவுகன் மன்புக்கிர் தம்பியல்வே
எம்மட்டோ உனதிகளித்தா பிகுத்தலவ்ல் பாதுவனேன எய்துாகித்த்து
தம்மட்டோ டேவாது தங்குமனையமே மேனைதீர்க்க தரிசனம் போல்
நம்மட்டோ டேவாது நல்லயார்காவலை லவ்து பலர்கான் நயக்துமைத்தாய்.

உன்மேனுமூக வாசாலை தனிற்கல்வி கற்றவரி துயர்ந்து விளாய்
மன்னுமுயாத் யாயர்தங்கள் மனமகிழ நன்னலைடையில் வயர்மே நின்று
தன்னரிகரி வாழுதலை குப்பீன்ற தாற்பரிசு தரவும் பெற்றாய்
பின்னுமுன்லவ் வித்திறமும் ஒழுக்கமுங்கண் டுனேமேனோர் மெச்சிறுரே. (8)

உற்றபுதி குருவரிடில் கலாசாலை சேய்ப்பயல்லா உயிர்வாழ் தற்கே
மற்றவாக ருதவியின்றி பரிட்சையிற்றேம் துற்போகம் வாய்க்கப்பெற்றாய்
சற்றுமய வாசமின்றி உகைமுத்செலவனால் வேலைதீர் அளரா ஜுக்க
முற்றுமுறைக் கிறக்தேமி முடிக்துமேனவு மாணாக்கப் புமுமுதும் பெற்றாய். (9)

இப்படியுன் னுமையபாலும் உயர்கல்வி பிறத்தாலும் ஊக்கத் தாலும்
தப்பல்லா பெசதயுகுமேயயல் சதுராலும் மிக்குயரந் தக்கோனென்ன
ஒப்பிலாதற் றுமேமார்கள் படிப்படியா யுனை யுயர்த்தி உவந்து தமமை
பொப்பமிட்டு நற்சாக்ஷிப் பத்திரங்க ளெழுதிதங் ஆனம் களித்தார். (10)

நல்லதுமலர மார்வழுத்தும் சுற்சாக்ஷிப் பத்திரங்கள் கவின்ற வண்ணம்
வல்லவீ மொனக்கண்டு உனக்குமென்லீப் அதிகார மளித்துத் தந்தார்
எல்லவர்க்கும் பேதமின்றிச் சாரிபு செயுமுன்றன் இயல்பைக் கண்டு
சொல்லரிய புகட்சிகளைக் கூறியுன்னே உயர்ந்தோர்கள் துதித்திட்டாரே. (11)

நீதிபுரி கின்றிறமும் செறிவுங்கண் டாசயித்து யிபுனை வுவளர
மேதகுமை சூர்ஜுடிஷல் கமிஷனரின் டார்ஸ்வி துணை விரும்பியுன்னைக்



தலுட னழைத்துத்தம் கோர்ட்டுஹெட் சிரஸ்தாவாக் களிக்கவைத்தார்
வதியார்கள் நிறைந்தவந்தத் துறையில்நீ யடைந்தவெற்றி விளம்பற் பாற்றே. ()
ன்னரிய மனுமுறைமற் றுஞ்சட்ட முறைதேர்ந்த பாவலோனென்
ன்னியுனை நியாயாதி பதிதுறையில் படிப்படியா யுயர்த்திப் பின்னர்
ன்னியசிப் கமிஷனரா பீஸ் அசிஸ்டண்ட் செக்ரடெரியா வைத்தாரன்றே
ன்னபடி மைசூராட் சியிலுமீ மேன்மைபெற்று யிதுவேயன்றி. (13)

யமைசூ ராட்சியையாங் கிலவரசர் ஆண்டபின்பவ் வரசினுக்கே
பவரா யின்றஶ்ரீ சாமரா ஜேந்த்ரரதை ஒப்புக்கொண்டே
சியலே நடத்தியகா லத்துமஹா ராணிரீஜெண்ட் ஆண்ட போதும்
ரியுநீ இத்தலத்துத் தலைமைஜட்ஜா வீற்றிருந்து பேர்பெற் றுயே. (14)

குநீ பெற்றுயெ ருங்கீர்த்தி யுமன்று விசைக்கப்போமோ
கமன்ன னுனக்களித்த இராஜதர்ம ப்ரவீணனெனும் தூய பட்டம்
ஊமே பரவிநின்கீர்த் தியையெவர்க்கு மெருஞான்று மெடுத்தியம்பத்
யோர் சாசனமா யிருக்குமெனில் வேறென்ன சாட்சி வேண்டும். (15)

ன்றியுநீ இராஜமந்த்ரா லோசனைச்சங் கத்துமுத லங்கி யாக
ாறுஇராஜ் ஜியபரிபா லனம்புரிந்து பலநலங்கள் நிலைக்கச் செய்தாய்
னறரசன் பற்பலகால் பதில்மந்த்ரி வேலையுனக் கீந்த தல்லால்
விசெறி நன்முகமன் கூறியுனை நண்பனைப்போல் நடத்தினுரே. (16)

தியோ கத்தைவிட்டு நீங்கிஷ வடையனெனுமம உன்றேகத்தை
திசையும் புகழ்ராஜப் ப்ரதிநிதிலார்ட் கர்ஸனுமே இனிதறிந்து
யுடன் மைசூராட் சியில்முப்பா ஞன்காண்டு பார்த்து நீசெய்
தமஹ ஜீவனத்தக்கா வுனைவியந்து மெச்சினன்கேட் டுளங் களித்தாய். (17)

வரமை நடத்தியவாங் லேயகமி ஷனரெஸிடண்ட் டிருபதின்மர்க்
வ்விதவொத தாலையுந்தங் தவாமதிக்கப் பெற்றாய்நீ யிதல்லாமல்
வ்வியவிங் தியராஜப் ப்ரதிநிதிக ளறுவர்தமை தெரிசித்தேபின்
வவேரா ரையாடி உன்திறத்தை யவரறிய மதர்ஷ்டம் பெற்றாய். (18)

மேன்மை யோடரச னூழியஞ்செய் தனைகருளத் தன்பு கொண்டாய்
யோருன் றனைவாழ்த்தப் பொதுநலங்கட் காயுழைக்கும் பான்மையுற்றாய்
மேவுந் தருமவைத் தியசாலை யுன்பெயரால் றுலங்கச் செய்தாய்
ந்து பெண்கல்விச் சாலையுன்பத் தினிபெயரால் நிலவவைத்தாய். (19)

பணி விடைக்காய்பூ ஜைக்காயுற் சவத்துக்காய் திரவியத்தைத்
சோரா மற்கொடுத்து யனமுவந்தாய் மடாஹபார்க்குங் கன்னியர்க்கும்
மெடுத் துண்பவர்க்கும் அனுதபிள்ளை கட்குமிக்க அதிதிகட்கும்
யுதவி கொஞ்சமோ அவைபல்லா முனையிழந்து அயங்கலானுர். (20)

வழியிற் பொருளீட்டி நல்வழியிற் செலவழித்து நன்மைபெற்றாய்
ல்லரிய பந்துமித் திரர்தமையா தரித்தவர்கள் சுபாசுபத்துக்
லையென்று மறியாருள் தந் துதவினாய் நாவலர்க்கு மீந்தா யார்க்கும்
லதந்தை தாய்போன்று யினியவர்கள் யாரைப்போய் நாடு வார்கள். (21)

இத்தனை [illegible] சமஸ்தானத் தார்களுமே சக்ர[illegible]தோ லிக்கர் தம்மில்
முக்கியதா [illegible] [illegible] கண்ணோரியில் முயன்ற தாலே
[illegible] சத்[illegible] தலைபெயரா லிக்குரிற் சிறக்கப் பெற்ற
அந்தமுறா மாலைத்[illegible] [illegible] தனையடைக்கும் அதிர்ஷ்டம் பெற்றாய். (22)

சொன்னவிவ்வா லயத்துள்ளே தொழுதெரிந்த விடத்தருகே தோன்றவைத்த
என்றுடைய [illegible] யாருமிட்ட சரிதைய வெழிற்சொரூபம்
[illegible] விடமேவின் மேனிதக்கும் கல்லறையா மேவிற் றன்றோ
இன்னபாக் கியமெவர்க்குங் கிடைப்பதரி தரிதெனயா னியம்பு வேனே. (23)

வேறு - தேவாரப்பண்.

இத்தரு சிறுப்பெரும் இகத்தினி லடைத்தாகல்ல
[illegible] வாழுந்தா [illegible] [illegible]
அத்தனை [illegible] காலம் [illegible] தென்றறிந்தே
சித்தமாய்க் காத்திருந்தாய் செவ்வந்தன் மணி யண்ணாலே. (24)

வந்தநோய் வாதைமுற்று மனைந்ததிக் தொழுத்தில் வாழ்வின்
பந்தம [illegible] பரிகாரம் சர்ப்ப [illegible]
அந்த [illegible] செய்யும் அவஸ்தை பூசுதலும் பெற்றுச்
சுந்தர சேசுபாதந் துணையெனக் கொண்டு நின்றாய். (25)

ஆத்துமம் [illegible] மந்திரத்தென் றறிந்தே உன்றன்
ஆத்தம குருசர்வாத்தோம் அருகுற அழைத்திருத்தித்
தோத்திரம் [illegible] துணைக்கரத் தாங்கியென்று
மோர்த்தியாய்க் கேட்டவைத்தங் [illegible] உடலை நீத்தாய். (26)

பத்தொன்பா [illegible] பரவுஜன் [illegible] தன்னில்
பத்தொன்பானெ [illegible] [illegible]
பத்தொன்றே [illegible] பரகதி சேர்ந்தா யந்தோ
பத்தொன்றே [illegible] பண்டத்தகற் பாக்கியவானே. (27)

பத்தினியுமா [illegible] பரிவே [illegible]
புத்திரத் [illegible] புலம்பினெரு [illegible]
[illegible]
[illegible] வாழ்வை [illegible] சேர்க்க யண்ணா. (28)

இப்படி [illegible] இருந்தவின் றுயிர்வைத்திருந்
[illegible] வாழ்வோம் அண்ணா [illegible]
இப்படி [illegible] இதமுறக் காத்திருந்தாய்
[illegible] (29)

வேறு.

அண்ணனையென் றுறுப்போ அரியதன் [illegible]
கண்ணனையென் [illegible] கல்விமாளிகை [illegible]
விண்ணனைக் [illegible] மெய்யைத் தன்பால்
மண்ணனை தாண்மறைத் [illegible] கொண்டாடிவுன் சீர்மறைத் தற்பாற்றே



எங்களுயிருக் கியிராய் எங்கள்குல மணிவிளக்கா யென்றும் வற்றா
துங்கநிதிச் சாகரமாய்த் தூயகல்விக் களஞ்சியமாய்த் தூகளிலாத
அங்கமுள வடிவனு யரசர்சபா லங்க்ருதனு யறநெறிச்சீர்
தங்கியவோர்பாத்திரமாய் விளங்கிய வுன்றனையிழந்து தவிக்கின்றேமே. (31)

சரிநீதி அரசுபுரிந் திட்ட அமைச் சென்றவனே. ஸ்ரீ. சாமராஜன்
கரிசனமாயுன்னியுளங் களித்துனக்கே யளித்தபெருங் கௌரவப்பேர்
அரியதென உலகோர்கள் கண்டுமதித் திடப் பெற்று யதுபோல் விண்ணோர்
தெரிந்துனைக்கொண் டாடுதற்கோ தேவுலகஞ் சென்றுயென் செல்வ அண்ணா.

அரியருல கிடைக்கற்றோர் அவருளங்கற் றறிந்தபடி யமைந்த நிற்போர்
அரியரவ ருளுமதிகா ரம்படைத்தே யறநெறியின் றமைதி வாய்ந்தோர்
அரியரவ ருளுடம்பத் தினிபுத்ர பௌத்ரரைக்கண் டகம கிழ்ந்தோர்
அரியரெலா மமைந்தவென்றன் கண்மணி யண்ணாவுனை யொப்பாவார்யாரே.

வெண்பா.

தந்தைதாய் நீயே சகோதரனு நீயேயென்
சிந்தவுலகி லிருந்தேனே-சிந்தைசெய
வீட்டேகி னயக்கர்ண மேலுலகை வாழ்வதனின்
மட்டே யிலாமகி மையை. (34)

உன்னுல்யான் சீர்பெற்றே உன்னைப் பிடிமண்கொண்
டந்நாட்டுக் கேக அருகனென்-உன்னியவா
றுகாமலே அண்ணா அவ்வுலகஞ் சேர்ந்தனைநீ
சோதரக்கு உள்ளமெப்போ தும். (35)

உன்னைப்போ லெங்கட்கோ ருற்றதுணை யாருலகில்
உன்னைக்கொண் டல்லோவிங் குற்றேஞ்சீர்-உன்னைப்
பிரிந்துவிட்ட போதே பிரிந்ததெல்லாச் சீரும்
தெரிந்துகொண்டோம் நின்னருமை தேர்ந்து. (36)

தனசாமி யென்பெயரைத் தாதையெனக் கிட்டார்
தனசாமி யாகவெனைத் தான்செய்-தினமா
னெனக்குநீ செய்திட்ட எண்ணிலுப காரம்
நினைக்குந் தரமோசொல் நீ. (37)

தீர்க்கநோய் கொண்டு தினமும் வருந்துமென்றன்
மார்க்க முனக்கு மறைவல்வே-பார்க்குளெனக்
காதரவு தந்துன் னருகிற்சேர்க் கப்பரம
வேதனிட மென்றனக்கீ வேண்டு. (38)

செட்டியார் இறந்தபின்னும் அவரது பத்தினியாரும் புத்திரர் முதலியோரும் முன்போலவே ஒருமித்து அன்னியோன்னிய பட்சத்துடன் ஏகசமுசார சகிதராய் வாழ்ந்திருக்கின்றனர். செட்டியா

சிங்லாக்குறைபோயன்றி வேறுகுறை அவர்களுக்கிருக்கவில்லை. புத்திரர் நான்குபேர்களும் மைசூர் அரசாங்கத்தில் அஸிஸ்டெண்ட் கமிஷனர் (Deputy Collector) உத்தியோகத்தை வகித்து கன்னடையில் வர்த்திக்கும் தங்களுடைய பிதாவின் கீர்த்தியுடனும் அமைதியோடு வாழ்ந்திருக்கின்றனர். தங்கள் தகப்பனு் இருக்கும்போது எவ்வகையாய்த் தங்கள் தாயார் சொற்கமைந்து அந்தம்மாளுக்குச் சிஞ்சித்தேனும் மனவருத்தந் தராமல் தங்கள் குடும்ப எஜமானியாகப் பாவித்து நடந்தார்களோ, அப்படியே இப்போதும் அவர்களைமதித்து அவர்கள் மனோபீஷ்டப்படி எல்லாக்காரியங்களையும் நடத்திக்கொண்டு சுகமாய் வாழ்கின்றார்கள். இப்படியே கடைசிவரையுமிருந்து இப்புத்திரர்கள் இன்னுமேலான பதவிகள் பெற்றுச் சந்ததி விர்த்தித்து தந்தையின் பேரும்பெரும் பிரகாசிக்கச் சுகசம்பன்னராய் நீண்டகாலம் ஜீவித்திருக்க எல்லாம் வல்ல கடவுளையாம் பிரார்த்திப்பதுபோல இச்சரிதத்தை வாசிக்கும் ஸ்ரீமான்கள் யாவரும் பிரார்த்திப்பார்களெனக் கோருகின்றோம்.

---

## [illegible]த விருத்தம்.

---

வாழ்க மைசூர் அரசர் மஹாராணி
வாழ்க மந்திரி சேனாபதி மாந்தர்கள்
வாழ்கத் தம்பு வேள் மைந்தர் மாமினர்
வாழ்க இக்கதை வாசிப்போர் வாழ்கவே.

---

தம்பு செட்டியார் சரித்திரம் முற்றிற்று.

PRINTERS, MADRAS.